
# மனதினிலே உறுதி வேண்டும்



ச. அருளானந்தம்

20776

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ICT

நகராட்சி
மன்றம்
திருக்கோணமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனதினிலே உறுதி வேண்டும்

894.8111
20796

சிறுவர் நாவல்

பொது நூலகம்
நகராட்சி மன்றம்
திருக்கோணமலை

Tsunami Library Development Project
This book is donated by
The National Library and Documentation Services Board
with assistance from
Book Aid International, UK

ச. அருளானந்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலானது தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையின் அனுசரணையுடன் வெளியிடப்பட்டுள்ளது. இந் நூலின் உள்ளடக்கமானது தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையின் கருத்துக்களை பிரதிபலிக்கவில்லை என்பது கவனத்திற் கொள்ளப்படவேண்டும்.

இலங்கை தேசிய நூலகம் - வெளியீட்டில் உள்ள பட்டியல் தரவு
National Library of Sri Lanka - Cataloguing - in Publication Data

அருளானந்தம். ச.,
மனதிலே உறுதி வேண்டும் / ச. அருளானந்தம் - ஆசிரியர்
திருகோணமலை: அருள் வெளியீட்டகம், 2006-
ப : vi + 159 ; ச.மீ. 21
ISBN : 955-97106-6-4 விலை : 175.00
i. 894.8113 டிடிசி 21 ii. தலைப்பு
1. சிறுவர் நாவல் 2. நாவல் - தமிழ்

## நூல் விபரப் பட்டியல்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | மனதினிலே உறுதி வேண்டும். |
| வகை | : | சிறுவர் ஆக்க இலக்கியம். |
| ஆசிரியர் | : | ச. அருளானந்தம் (கேணிப்பித்தன்) |
| உரிமை | : | ஆசிரியருக்கு. |
| முதற்பதிப்பு | : | 24-01-2006 |
| எழுத்து | : | 12 பொயின்ட் |
| அட்டைப்படமும் ஓவியங்களும் | : | ச. அ. அருள்பாஸ்கரன். |
| வெளியீடு | : | அருள் வெளியீட்டகம்<br>37 / 7, மத்திய வீதி<br>உவர்மலை, திருகோணமலை. |
| பதிப்பகம் | : | கிறிப்ஸ் பிரின்டேஸ் பிறைவற் லிமிடெட்<br>70/7, கனல் வீதி, ஹெந்தளை, வத்தளை<br>060-2194584, 077 7722185 |
| கிடைக்குமிடம் | : | லங்கா புத்தகசாலை.<br>F.L.1.14, டயஸ் பிளேஸ்,<br>குணசிங்கபுர, கொழும்பு - 12. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அணிந்துரை

திரு.ச.அருளானந்தம் நாடறிந்த எழுத்தாளர். கேணிப்பித்தன், ஆலன் எனப் பல புனைபெயர்களில் எழுதுபவர். திருகோணமலை மாவட்டத் திலுள்ள ஆலங்கேணியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். ஆசிரியராக, அதிபராக, கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றியவர். வன்னி மாவட்டத்தில் 65 புதிய பாடசாலைகள் உருவாக உழைத்தவர். ஆலங்கேணியில் மகாவித்தியாலயம், அதனைத் தொடர்ந்து உயர்தர வகுப்புக்கள் தொடங்கி மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்வதற்கு வழிவகுத்தவர். அவரது கல்விப் பணி எண்ணிலடங்காதது.

அவரால் திருகோணமலை மாவட்டமும் சிறப்பாக அவர் பிறந்த ஆலங்கேணிக் கிராமமும் பெருமை அடைகிறது. அரசசேவையில் இருந்து ஓய்வு பெற்றாலும் இன்றும் இளைஞனைப் போல் உழைத்துக் கொண்டிருக்கிறார். எழுதிக் கொண்டிருக்கிறார். அவரது இரண்டு சிறுவர் இலக்கிய நூல்கள் அகில இலங்கை சாகித்திய விருதுகளைப் பெற்றுள்ளன. வடக்கு - கிழக்கு மாகாண சாகித்திய விருதினை ஒரு நூல் பெற்றுள்ளது. "சிறுவர் இலக்கிய வித்தகர்" என வவுனியா நண்பர்கள் கலைஇலக்கிய வட்டம் பட்டமளித்துப் பாராட்டியுள்ளது. கலாசார அமைச்சு "கலாபூஷணம்" விருதினை வழங்கிக் கௌரவித் துள்ளது.

இதுவரை சுமார் இருபத்தொரு நூல்களை வெளியிட்டுள்ள அருளானந்தம் அவர்கள் இந்த 'மனதினிலே உறுதி வேண்டும்' என்ற நாவலினையும் எழுதியுள்ளார். இந்த நாவலில் மூவின மாந்தர்களும் உலா வருகிறார்கள். இன ஒற்றுமையை வலியுறுத்துகிறார். மலையக மாந்தர்தம் வாழ்க்கையைப் படம் பிடிக்கிறார். மலையகப் பண்பாட்டி னைக் கூறுகிறார். சிறுவயதிலேயே பிறரது துயர்களைக் கண்ணுற்று அவைகளுக்கான உதவிகளைச் செய்யும் கதாபாத்திரங்களைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தரித்துள்ளார். பொதுவாக இந்நூல் நல்லனவற்றை சமூகத்திடையே பரப்பும் நோக்குடன் எழுதப்பட்டுள்ளது. இத்தகைய நூல்களே இன்றைய காலகட்டத்தில் தேவைப்படுகின்றன.

இவ்வகை நூல்கள் பல எழுதப்பட வேண்டும். சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை, சகலரும் படிக்க வேண்டும். வாசிப்பதைக் கருத்தில் கொண்டு ''வாசிப்பதால் நாம் நமது அறிவை அகண்டமாக்கிக் கொள்கிறோம்'' என்பதை நினைவில் கொண்டு ஆசிரியர்களும் பெற்றார்களும் சிறுவர்களிடையே வாசிக்கும் கலாசாரத்தை ஏற்படுத்த வேண்டும். இது இன்றைய கட்டாய தேவை என்பதை வலியுறுத்து கின்றேன்.

அவரது நூல்களுக்கு இச்சமூகம் மதிப்பளிக்க வேண்டும். வாங்கிப் படித்துப் பயனடைய வேண்டும். அவரது இலக்கியச் சேவை தொடர வாழ்த்துகிறேன். நன்றி.

**க.தங்கராசா**
**(ஆலையூரன்)**

1976 - 1980 ஆண்டுகளில் மலையகத்தில் கண்டியிலுள்ள கலஹா நகரில் மலையகச் சிறார்களின் கல்வியில் நாட்டங்கொண்டு கல்விப்பயிர் செழிக்க வித்திட்ட பெரிய முதலாளி அமரர். எஸ். எம். கந்தசாமி J.P. அவர்களுக்கும், அக்கால கட்டத்தில் பங்குகொண்டு உழைத்த கலஹா இந்து இளைஞர் சங்கத்தின் சகல உறுப்பினர் களுக்கும், கலஹா தமிழ் மகாவித்தியாலயத்தில் (இன்றைய இராம கிருஸ்ணா கல்லூரி) சேவையாற்றிய ஆசிரியமணிகளுக்கும், கற்ற மாணவ மாணவியருக்கும், அனைத்துத் தோட்டத்தின் பெரு மக்களுக்கும் நலன் விரும்பிகளுக்கும் இந்நூல் படையலாகும்.

– ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனது உரை

சிறுவர் இலக்கியம் என்பது யாது? சிறுவர்கள் என்பவர்கள் யார்? இவற்றிற்கு விடை காண்பது சாலச் சிறந்தது. தமிழில் சிறுவர் இலக்கியம் வளரவில்லை என்று கூக்குரல் எழுப்பும் அறிஞர்கள் பலருளர். அவர்கள் இலங்கையில் வெளிவரும் சிறுவர் இலக்கியங்களைப் படிக்கின்றார்களா? என்பது கேள்விக்கு உரியது. ஏதோ நூல்களுக்கு முகவுரை எழுதும் சந்தர்ப்பங்கள் ஏற்பட்டால் மட்டும் எழுதவேண்டும் என்பதற்காக "நமது நாட்டில் சிறுவர் இலக்கியங்கள் போதியதாக இல்லை" என எழுதிவிடுகிறார்கள். சிறுவர் இலக்கியகர்த்தாக்களைத் தூக்கிவிடும் முனைப்பில் யாரும் இல்லை.

பாடசாலைக் கல்வி தொடக்கம் பல்கலைக்கழகம் வரை கற்கும் வயதுடையோர்கள் அனைவரையும் "சிறுவர்கள்" என்ற வரையறையுள் அடக்குவார்கள். இந்தக் காலகட்டத்து வாழ்க்கையில் பல பிரச்சனைகள் சவாலாக அமைகின்றன. அந்தப் பிரச்சினைகளைச் சிறுவர்கள் இனங்கண்டு அவர்களே தீர்வு காண்பது துணிச்சலான விடயம். எனவே இவர்களது மனதில் தோன்றும் அற்புத ஆற்றல்களைப் புடம் போட்டுக் காட்ட வேண்டியது எழுத்தாளர்களது கடமையாகின்றது. அதனை நான் செய்கிறேன். இந்த அடிப்படையில் பல நாவல்களையும் சிறுகதைகளையும், பாடல்களையும் எழுதி வெளியிட்டுள்ளேன். சில நூல்களுக்கு இலங்கைச் சாகித்திய விருதுகள் கிடைத்தன.

பாடசாலைகளில் சிறுவர்களை ஊக்குவிக்க இன்று யாரும் இல்லை. விரல் விட்டு எண்ணும் அளவிலேயே சிறுவர்களைச் சிந்திக்கவும் செயற்படவும் தூண்டும் ஆசிரியர்கள் உள்ளனர். பிள்ளைகளை ஒலிப்பதிவு நாடாவாக ஆக்கி விட்டார்கள். இதனை ஆசிரியர்கள் செய்யவில்லை. அப்படியான கட்டமைப்பினைச் சமூகம் ஆக்கி விட்டது. வாழ்க்கை இன்று போட்டிக் களமாக மாறிவிட்டது. பரீட்சையில் சித்தியடைவதையே நோக்காகக் கொண்டு ஆசிரியர்களும், கல்வி உலகமும் செயற்படுவதைக் காணலாம். நமது ஊடகத் துறையினரும் சினிமாவையும் நாடகங்களையும் தொலைக்காட்சியில் புகுத்திச் சிறுவர்களின் சிந்தனா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்தியை மழுங்கடிக்கிறார்கள். பாடப் புத்தகங்களை நமது தேசிய கல்வி நிறுவனம் எழுதுகிறது. கல்வி வெளியீட்டுத் திணைக்களம் வெளியிடு கிறது. தமிழ்ப் பாடப் புத்தகங்களில் எழுத்துப் பிழைகளையும், இலக்கணப் பிழைகளையும் காணலாம். இவற்றை யாரும் கண்டு கொள் வதில்லை. சிறுவர்களைச் சிந்திக்க வைக்க வேண்டும். அவர்களை வாசிப்பதில் வழிகாட்ட வேண்டும். எழுதவும் தூண்டவேண்டும். எழுதும் போதுதான் சிந்தனை சிறகடிக்கும். அவரகளது ஆளுமை விருத்தி யடையும்.

இந்த நாவலில் மனிதவிழுமியங்களைச் சுட்டிக் காட்டியுள்ளேன். அவர்களது மனித நேயங்களை எடுத்து விளக்கியுள்ளேன். மனிதர்களை மனிதர்களாக மதிக்கும் பண்பினையும், கலாசார விழுமியங்களையும் காட்டியுள்ளேன். அதிபர், ஆசிரியர்களது அர்ப்பணிப்புக்களையும், அவர்களது சேவை மனப்பாங்கினையும், சிறுவர்களது துணிச்சலையும் அதன் விளைவுகளையும் விளக்கியுள்ளேன். வாசகர்கள் மனங்களில் எனது கதாபாத்திரங்கள் தாக்கத்தினை ஏற்பாடுத்துவார்கள் என்பது உறுதி.

இந்த நூலினை ஏற்று வெளிவர உதவிய தேசிய நூலக ஆவண வாக்கல் சேவைகள் சபையினருக்கும், அதன் தலைவர், பணிப்பாளர் நாயகம், மற்றும் உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றி கூறுகின்றேன். அணிந்துரை மனமுவந்து தந்த திரு. தங்கராசா (ஆலையூரன்) அவர்கள் இன்று எம்மிடையே இல்லை. அது என் மனதைப் பெரிதும் வாட்டுகிறது. அமரர் தங்கராஜா அவர்களுக்கும் அழகான படங்களை வரைந்து உதவுவதோடு நூலாக்கத்துக்கு வேண்டிய உதவிகளைச் செய்யும் எனது மகன் ச. அ. அருள்பாஸ்கரன் அவர்களுக்கும், தேசிய நூலக ஆவண வாக்கல் சேவைகள் சபைக்குச் சமர்ப்பிப்பதற்காக அழகாக அச்சாக்கித் தந்த றெயின்போ அச்சகத்தின் இயக்குனர் திரு. சி. சிவபாலன் அவர் களுக்கும் அவரது அச்சக உதவியாளர்கள் அனைவருக்கும் நன்றி. இந்த நூலினை அழகுறப் பதிப்பித்துத் தந்த கிறிப்ஸ் பதிப்பகத்தின் அதிபர் திரு. எஸ். கிருஷ்ணமூர்த்தி, அவரது துணைவி திருமதி பவானி அவரது உதவியாளர்கள் அனைவருக்கும் எனது நன்றி. இந்நூலை வாங்கிப் படிக்கும் உங்கள் அனைவருக்கும் எனது நன்றி.

நன்றி.

**ச. அருளானந்தம்.**
(கேணிப்பித்தன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1

"அண்ணா! போவோமா"? நிமேசிக்கா ஓடி வந்தாள். "நேரம் போகுது. எங்கே நிரூஸ் அண்ணன். அவன் அப்படித்தான். எங்காவது கதைத்துக் கொண்டு நிற்பான்." ரதீபன் அலுத்துக் கொண்டான். நிரூசன் மெல்ல நடந்து வந்தான். அனுசியனுக்குக் கோபம் வந்தது. "கெதியாக வா." கட்டளை இட்டான். இன்றோடு பரீட்சை முடிந்து விட்டது. பிள்ளைகளின் முகத்தில் சந்தோசம். வீட்டுக்குப் போகவேண்டும். சைக்கிளைத் தள்ளினார்கள். வீட்டை நோக்கி ஓடினார்கள். அனுசியன் நிரூசனை ஏற்றி வந்தான். ரதீபனோடு நிமேசிக்கா வந்தாள். வெயில் கொழுத்தியது. களைத்து வியர்த்து வந்தார்கள். புத்தகப் பையைத் தூக்கிப் போட்டார்கள். பாடப் புத்தகங்கள் மூலையில் ஓய்வெடுத்தன.

"அம்மா.. சோதனை முடிந்து விட்டது. நாளை முதல் எங்களுக்கு விடுமுறை. இனி ஒரே குதூகலந்தான்" வீட்டினுள் நுழையும் போதே சத்தமிட்டு வந்தனர். அவர்களது சத்தம் சுலக்சிகாவின் காதில் விழுந்தது. விபூசனோடு வெளியில் வந்தாள். வீடு கலகலத்தது. தண்ணீரை எடுத்துக் குடித்தனர். சீருடைகளைக் களைந்தனர். வேறு உடைகளை மாற்றிக் கொண்டனர். மணி பன்னிரெண்டைக் காட்டியது.

அனுசியன் எல்லோரையும் அழைத்தான். அவன்தான் மூத்தவன். ரதீபன் நிமேசிக்காவைக் கூப்பிட்டான். நிரூசன் பின்னால் தொடர்ந்தான். சுலக்சிக்காவும் ஓடி வந்தாள். விபூசனும் சேர்ந்து கொண்டான். அவர்கள் தோட்டத்துக்குள் சென்றனர். மாமரத்தின் கீழ் இருந்தனர். அம்மா அழைக்கும் வரை காத்திருந்தார்கள். அதுவரை வினாவிடைப் போட்டி விளையாட்டு. "பத்து உப்பு மூட்டை மேல் ஆறு போனால் எத்தனை உப்பு மூட்டை"? நிரூசன் வினாவைக் கேட்டான். பதில் சிரிப்பை ஏற்படுத்தியது. "பத்தில் ஆறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போனால் நான்கு." விடை வந்தது. "உப்பு மூடையில் ஆறு போனால் கரைந்து விடும்". பதில்கள் பலவாறு வந்தன. விளையாடினார்கள்.

அம்மா உணவுக்காக அழைத்தார். வீட்டினுள் ஓடினார்கள். உணவு தயாராக இருந்தது. அம்மா பரிமாறினார். வயிறார உண்டனர். பாத்திரங்களைக் கழுவி வைத்தனர். மீண்டும் தோட்டத்துக்குச் சென்றனர். மாமரம் செழித்து வளர்ந்து நின்றது. அதன் பக்கத்தில் வேப்பமரம். அது கிளைவிட்டு ஆடியது. வேப்பை மரத்தைப் பார்த்தனர். அனுசியன் கிளையில் தாவி ஏறினான். ரதீபன் பழைய துணிகளைக் கொடுத்தான். கிளையில் துணியால் சுற்றிக் கட்டினான். நிரூசன் கயிற்றைக் கொடுத்தான். அளவாகக் கயிறு கீழே வந்தது. அதில் பலகையைக் கொழுவினார்கள். ஊஞ்சல் உருவாகி விட்டது.


சுலக்சிக்காவும் விபூசனும் ஊஞ்சலில் இருந்தனர். நிரூசன் பக்கத்தில் சுலக்சிக்கா அமர்ந்தாள். நிமேசிக்கா பக்கத்தில் விபூசன். ஆயத்தமாக இருந்தார்கள். ரதீபன் ஊஞ்சல் பலகையில் ஏறினான். அனுசியன் ஊஞ்சலை ஆட்டினான். ஆட்டியதும் ஏறிக்கொண்டான். ஊஞ்சல் காற்றைக் கிழித்தது. விரைந்து ஆடியது. ஆட்டம் குறை யாது ஊஞ்சல் ஆடியது. உந்தி உந்தி ஊஞ்சலை ஆட்டினார்கள். சேர்ந்து ஊஞ்சல் பாட்டுப் பாடினார்கள். அனுசியன் தொடங்கினான்.

ஊஞ்சல் ஆடுவோம் - நாம்
ஊஞ்சல் ஆடுவோம்
உந்தி உந்தி ஆடி - நாம்
உள்ளம் மகிழுவோம்.

எல்லோரும் சேர்ந்து பாடினார்கள்.

நாடு வாழ வேண்டும் - இங்கு
நல்ல மனிதர் வேண்டும்.
தேடு கல்வி தன்னை - இந்தத்
தேசம் காண வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரதீபன் கையில் புத்தகம் இருந்தது. அது பாரதி பாடல். புத்தகத்தை விரித்தான்.

அந்தப் பாடலை ரதீபன் பாடத்தொடங்கினான்.

''மனதில் உறுதி வேண்டும்.
வாக்கினிலே இனிமை வேண்டும்.
நினைவு நல்லது வேண்டும்.
நெருங்கிய பொருள் கைப்படவேண்டும்.''

பாரதியின் பாடல் இனிக்கிறது. ரதீபன் இசையோடு பாடினான். நிமேசிக்கா இப்போது பாடினாள். எல்லோரும் சேர்ந்தார்கள். தாளம் போட்டுப் பாடினார்கள். ஊஞ்சல் ஆடியபடியே சந்தோசித்தார்கள். அம்மா வசந்தி வேலைகளை முடித்தார். நேரத்தைப் பார்த்தார். மாலை நான்கு மணி. தேநீர் தயாரித்தார். பிள்ளைகளோடு வந்து சேர்ந்து கொண்டார். அவரது கையில் தேநீர் இருந்தது. தேநீரைப் பிள்ளைகளுக்குக் கொடுத்தார். குடித்துக் கொண்டும் பாடினார்கள். பாடல் காற்றில் பரவி சிலிர்த்தது. பரவசம் ஊட்டியது. இந்தப் பாடலில் அற்புதம் இருக்கிறது. இப்பாடலைத் தினமும் பாடு வார்கள். அந்தப் பாடல் பிள்ளைகள் வாயில் இனிக்கிறது. மனதில் உறுதி பிறக்கிறது. அதனால்தான் ஆனந்தபாஸ்கரன் வீட்டில் ஒலிக்கிறது. பிள்ளைகள் நல்லவர்களாக வளரவேண்டும். இது அப்பா அம்மாவின் விருப்பம். அப்பா பிள்ளைகளுக்கு ஆர்வமூட்டி னார். அம்மா உற்சாகம் தந்தார்.

நிரூசன் கோப்பைகளை ஒன்று சேர்த்தான். நிமேசிக்கா கோப்பை களைக் கழுவினாள். சுலக்சிகா கோப்பைகளைத் தட்டில் அடுக் கினாள். விபூசன் தட்டோடு தூக்கினான். குசினியில் வைத்துவிட்டு வந்தான். ''அச்சாக் குட்டி'' அம்மா பாராட்டினார். 'விடுமுறையை எப்படிக் கழிப்பது?'அவர்கள் திட்டம் போட்டனர். 'விடுமுறையில் கல்விச் சுற்றுலாதான்.' ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேறியது. அம்மா தனக்குள் சிரித்துக் கொண்டார். பெற்றோர் ஏற்கனவே முடிவெடுத்து விட்டார்கள். அப்பா தீர்மானித்தபடியே பிள்ளைகளும் தீர்மானித்தனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசந்திக்கு ஆச்சரியமாக இருந்தது. ஏற்கனவே ஆனந்த பாஸ்கரன் வசந்தியோடு பேசியிருந்தார். அருளாளன் ஆனந்த பாஸ்கரனின் மைத்துனர். கண்டியில் அதிபராக இருக்கிறார். கண்டிக்கு வரும்படி பலமுறை அழைத்திருந்தார். இம்முறை வருவதாக அருளாளனுக்கு அறிவித்தார். அதனைப் பிள்ளை களுக்குச் சொல்லவில்லை. பிள்ளைகளுக்கு இன்ப அதிர்ச்சியாக இருக்கவேண்டும். இதுதான் அவர்களது ஆசையாக இருந்தது.

"அம்மா! அப்பா இன்னுமேன் வரவில்லை? நேரம் போய் விட்டது" நிமேசிக்கா அம்மாவிடம் கேட்டாள்.

"அப்பா வரும் நேரந்தான். வரும்வரை விளையாடுங்கள்" அம்மா கூறிவிட்டுச் சென்று விட்டார். நேரம் மாலை நான்கு மணி. ரதீபன் கிணற்றடிக்குச் சென்றான். நீரிறைக்கும் பம்பை இயக்கினான். அது விரைந்து இயங்கியது. தண்ணீரை இறைத்தது. தொட்டியில் தண்ணீர் நிறைந்தது. நிரூசன் நீர்க்குழாயைப் பொருத்தினான். விபூசன் மண்வெட்டியோடு வந்தான். பாத்திகளைச் சரிசெய்தான். நிமேசிக்கா நீர்க்குழாயை எடுத்தாள். பூமரங்களின் பாத்திகளில் பிடித்தாள். நீர் பிசிறிப் பாய்ந்தது. பாத்திகளில் நீர் நிரம்பியது. அனுசியன் நீரைக் கால்வாய் ஊடாகப் பாய்ச்சினான். பூமரங்கள் நீரில் ஆடின. மரக்கறித் தோட்டம் கலகலத்தது. கத்தரி வெண்டி பூத்துக் காய்த்திருந்தன. பல புடோல் பந்தல்கள் இருந்தன. அவற்றில் காய்கள் தொங்கின. மிளகாய்ச் செடிகள் காய்த்திருந்தன. காய்களும் பழங்களும் நிறைந்திருந்தன.

"அண்ணா வேலையை கெதியாய் செய்வோம். அப்பா வருமுன் முடிப்போம். முடிந்ததும் பேசாமல் வீட்டுக்குள் போய் இருப்போம். அவர் கண்டு பிடிக்கட்டும். அப்பா வந்து பாராட்டுவார்". நிரூசன் கூறினான். எல்லோரும் ஏற்றுக் கொண்டனர். சுறுசுறுப்பாக இயங் கினர். தாங்களாகவே இயங்குவதால் சந்தோசமாக ஈடுபட்டனர். அப்பாவின் மனதைப் புரிந்து வைத்திருந்தனர். அப்பா பலமுறை பாராட்டி இருக்கிறார். அந்தப் பாராட்டுக்கள் அவர்களை ஊக்குவித்தன. வசந்தி அடிக்கடி வழியைப் பார்த்தார். சின்னக் குட்டி சுலக்சிகா ஓடித் திரிந்தாள். விபூசன் சுற்றித் திரிந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகள் சுதந்திரமாக இயங்கவேண்டும். நல்ல அனுபவங் களைப் பெறவேண்டும். நல்லனவற்றைச் சிந்திக்க வேண்டும். பிறருக்கு உதவவேண்டும். வாழ்க்கையில் வெற்றி பெறவேண்டும். இதற்கு உரிய வழிமுறைகளைக் காட்டவேண்டும். இது ஆனந்த பாஸ்கரனது பெருநோக்கமாகும். அதற்கு ஏற்ப மனைவி வசந்தியும் வழிகாட்டினார். நல்லதொரு குடும்பமாக விளங்கியது. நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம் அல்லவா? இதற்குச் சான்றாக வாழ்ந்தார்கள்.

அவர்களது வீடு அழகானது. அது உவர்மலையில் உள்ளது. உவர்மலை திருகோணமலையில் துறைமுகத்தை அண்டி இருக்கிறது. மாடியில் இரண்டு அறைகள். ஒரு மண்டபம். மண்டபத் தினை ஒட்டினாற்போல் நூலகம். நூலகம் நிறையப் புத்தகங்கள். அழகான ஓவியங்கள். அற்புதமான சிற்பங்கள். எல்லாம் ஆனந்த பாஸ்கரனின் கைவண்ணத்தில் எழுந்தவை. சனி ஞாயிறு நாட்கள் சந்தோசமானவை. உறவினர்கள் வருவார்கள். நண்பர்கள் உலா வருவார்கள். வீடு கலகலப்பாக இருக்கும். ஆட்டமும் பாட்டமும் குடிகொள்ளும்.

வீட்டில் சிரமதானம் நடக்கும். தங்களது உடைகளைத் தாங்களே கழுவுவார்கள். அப்பாவோடு சந்தைக்குப் போவார்கள். அம்மாவோடு சேர்ந்து சமைப்பார்கள். அனுசியன் விறகு எடுப்பான். ரதீபன் தேங்காய் துருவுவான். நீரூசன் நீர் நிறைத்துக் கொடுப்பான். நிமேசிக்கா மரக்கறி வெட்டுவாள். விபூசன் பாத்திரங்களைக் கழுவு வான். சுலக்சிகா வெங்காயம் உரிப்பாள். கண்களைக் கசக்குவாள். கண்ணீர் வரும். சுற்றிச் சுற்றி ஓடித் திரிவாள். அம்மாவுக்குச் சந்தோசமாக இருக்கும். அம்மா பிள்ளைகளைத் தடுப்பதில்லை. பிள்ளைகள் நிறையக் கற்கவேண்டும். அனுபவத்தைப் பெற வேண்டும். அது வாழ்க்கையில் முன்னேற இடமளிக்கும். தன்னம்பிக்கை வளரும். இது அவர்களின் நம்பிக்கை. பிள்ளை களை உற்சாகப்படுத்துவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலைப் பொழுதுதான் இன்பமானது. அதுதான் எல்லோரும் சந்திக்கும் நேரம். வீடு கலகலக்கும். சந்தோசமாகக் கழியும்.

ஆறு மணிக்குச் சாம்பிராணிப் புகை வீட்டினுள் பரவும். இறை வழிபாடு நடக்கும். கற்ற பாடங்கள் பற்றிய விவாதங்கள் தூள் பறக்கும். பலவற்றையும் பேசி மகிழ்வார்கள். ஒவ்வொரு விடுமுறை நாட்களிலும் புதுமைகள் இருக்கும். புதிய அனுபவங்களைப் பெற வாய்ப்புக்கள் கிடைக்கும். இம்முறை மலைநாடு செல்லும் திட்டம் இருந்தது. விடுமுறையை எதிர்பார்த்து இருந்தனர். விடுமுறை வந்து விட்டது. அதுபற்றிய சிந்தனையில் இருந்தனர். இப்போதிருந்தே தங்களைத் தயார்ப்படுத்தினர். வேலை செய்யும்போதே பேசிக் கொண்டனர். அப்பாவை எதிர்பார்த்து இருந்தனர்.

''அண்ணா மாமா ஏன் இன்னும் வரவில்லை.? மாமா வரா விட்டால் எப்படிப் போவது''? நிரூசன் கேட்டான். விடை கூற யாருக்கும் தெரியாது. யோசித்தார்கள். நிமேசிக்கா கொடுப்புக்குள் சிரித்துக் கொண்டாள். அப்போது வசந்தி வந்தார். பிள்ளைகள் வேலை செய்வதைப் பார்த்தார். சந்தோசமாக இருந்தது. ''அம்மா! மாமா எப்போது வருவார்''? நிரூசன் வசந்தியிடம் கேட்டான். ''மாமா வருவார்தானே. வரும்போது வரட்டும். இப்போது என்ன அவசரம்''? சிரித்துக் கொண்டே பதிலளித்தார்.

''அதுக்கில்லை அம்மா. மாமா வந்தால் தானே கண்டிக்குப் போகலாம். இந்த விடுமுறையில் கண்டிக்குத்தானே போகிறோம். இல்லையா அம்மா''? நிரூசன் கேட்டான். "அப்பா வந்ததும் அவரிடம் கேட்போம். சரிதானே? இப்போது விளையாடுங்கள்''. கூறிவிட்டு வசந்தி வீட்டினுள் சென்றுவிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2

தண்ணீர் பாயச்சும் வேலைகள் முடிந்துவிட்டன. சுலக்சிக்கா ஒரு பெட்டியை எடுத்தாள். அதற்குள் பல பொருட்கள் இருந்தன. அவை யாவும் பாவித்த பொருட்கள். அவற்றிலிருந்து மீளாக்கப் பொருட்கள் செய்யலாம். வெற்றுத் தீப்பெட்டிகளை எடுத்தாள். தென்னைகளின் கீழ் சென்றாள். அங்கு குரும்பட்டிகள் கிடந்தன. அவற்றைப் பொறுக்கி எடுத்தாள். ஈக்கிள்களையும் தேடி வந்தாள். ரதீபன் அவளது குறிப்பை அறிந்தான். அவளது பக்கம் வந்தான். ''பிள்ளைக்கு என்னம்மா வேண்டும்''? அன்போடு கேட்டான். ''எனக்கு வண்டி செய்து தாருங்கள்.'' சுலக்சிக்கா மழலை மொழி பேசினாள். ரதீபன் வண்டி செய்யத் தொடங்கினான்.

நிரூசன் உதவி செய்தான். வெற்றுத் தீப்பெட்டிகளை எடுத்தான். அவற்றின் உள்ளூறைகளைப் பார்த்தான். ஒன்றின் உள்ளூறையை வெளியில் இழுத்தான். பாதி வெளியில் வந்தது. அதன் பாதி தீப்பெட்டியோடு இருந்தது. இரண்டையும் சேர்த்துத் துளையிட்டான். அளவாக ஈக்கிள் குச்சியை வெட்டினான். துளையூடாக ஈக்கிளைத் திணித்தான். வண்டியின் அச்சு தயார். குச்சியின் இரு முனை களிலும் குரும்பட்டியைச் செருகினான். குரும்பட்டிகள் வண்டியின் சில்லுகள் ஆகின.

வெளியில் தெரிந்த உள்ளூறையில் ஒரு துளையிட்டான். தென்னை ஓலையை எடுத்தான். ஓலையின் ஓரங்களைப் பார்த்தான். விளிம்பு தடித்து இருந்தது. தடித்த பகுதியை நகத்தால் கிழித்தான். உறுதியான நூலாய் வந்தது. அதனை நூலாம்பு என்று அம்மா கூறினார். அந்த நூலாம்பினை எடுத்தான். ஒரு நுனியை தீப்பெட்டித் துளையில் கட்டினான். நூலாம்பின் மறு நுனியைப் பிடித்தான். சுலக்சிகாவின் கையில் கொடுத்தான். சுலக்சிகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனைப் பிடித்து இழுத்தாள். வண்டி உருண்டு சென்றது. அவள் முகத்தில் சந்தோசம் துள்ளியது.

வண்டி வருகுது - சின்ன
வண்டி வருகுது
கண்ட மனம் துள்ளியாட
வண்டி வருகுது.

நிரூசன் பாடினான். அவனோடு எல்லோரும் சேர்ந்து கொண்டனர். சுலக்சிகா வண்டியை இழுத்தாள். விபூசன் சிறு சுள்ளிகளைப் பொறுக்கினான். வண்டியில் வைத்தான். வண்டியை இழுத்து விளையாடினார்கள். எல்லோரும் பார்த்துச் சிரித்தனர். சிரிப்போடு சுலக்சிக்கா உலா வந்தாள். அம்மா வீட்டினுள் சென்றார். பிள்ளைகள் ஆட்டம் பாட்டத்தில் இறங்கினர். அவர்களோடு மரஞ் செடிகளும் சேர்ந்து கொண்டன. காற்றில் அவைகளும் அசைந் தாடின. பாட்டும் பிறந்தது. மாறிமாறிப் பாடினார்கள். கை தட்டி ஆடினார்கள்.

மெல்லக் காற்று வீசும் - எங்கள்
மேனி தொட்டுப் போகும்.
உள்ளம் மகிழ்து ஆடும் - எம்
உணர்வு பொங்கிப் பாடும்.

தென்னை குலையோ டாடும் - தேன்
சிந்தும் மலர்கள் பேசும்.
அன்னை தேநீர் தருவார் - உடன்
அன்பு மழை பொழிவார்.

அம்மா பாடலைக் கேட்டார். ஓடி வந்தார். ரசித்துச் சந்தோசப் பட்டார். தேநீர் வேண்டும் அல்லவா? புரிந்து கொண்டார். சுலக்சிகா வண்டியை இழுத்துச் சிரித்தாள். வண்டியினுள் சாமான்கள் இருந்தன. விறகுத்துண்டு. சிறிய பழந் துணிகள். கடதாசித் துண்டுகள் இருந்தன. சிப்பிதான் அவர்களது காசு. சாமான்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுபடும். சிப்பிகள் பரிமாறப்படும். "ஏய் வண்டிக்காரா, வண்டியில் என்ன இருக்கிறது"?

"விறகு, உடுபுடவை, எல்லாம் இருக்கின்றன. என்ன வேண்டும்.? கடன் கேட்கக்கூடாது. சரிதானே"?. விளையாட்டுத் தூள் பறக்கும். பாட்டும் தொடர்ந்து கேட்டது.

தங்கை வண்டி வருமாம் - அதில்
சாமான் கூட வருமாம்.
எங்கள் கையில் தருவாள் - காசு
எடுத்துக் கொடுக்க மகிழ்வாள்.

அப்பா வந்து பார்ப்பார் - கையில்
அப்பிள் பழம் தருவார்.
எப்போ கண்டி போவோம் - என்று
எடுத்துச் சொல்லச் சிரிப்போம்.

பாடலின் பொருள் அருமையானது. அம்மா உணர்ந்து கொண்டார். பாடலிலும் தங்கள் விருப்பத்தைத் தெரிவித்தனர். தாங்கள் போட்ட திட்டத்தை வெளியிடவில்லை. அமைதியாகவே இருந்தார்.

தென்னைகள் குலையோடு ஆடின. மல்லிகை நறுமணத்தைக் காற்றில் கலந்துவிட்டது. அம்மா மீண்டும் தேநீரோடு வந்தார். "ஓடி வாங்கோ.. தேநீர் குடியுங்கோ" அம்மா அழைத்தார். ஓடி வந்து தேநீரை எடுத்தார்கள். பச்சைப் பசேல் புற்தரை. அதில் சிமெந்து இருக்கைகள். அவற்றில் இருந்தனர். அவர்கள் ருசித்துக் குடிப்பதை அம்மா பார்த்து ரசித்தார்.

நிரூசன் அம்மாவைப் பார்த்தான். "அம்மா! மாமா எப்போது வருவார்"? நிரூசன் தொடங்கினான். 'தொடங்கி விட்டீர்களா'? அம்மா மனதில் கூறிக்கொண்டார். சத்தம் வெளியில் வரவில்லை. "லீவு விட்டாச்சு நாங்கள் எப்போது போவது"? ரதீபன் கேட்டான். இம்முறை மலைநாடு செல்லும் திட்டம். பிள்ளைகளின் மனதில் குடிகொண்டு விட்டது. அந்த எதிர்பார்ப்புக்கள் கேள்விகளாக முளைத்தன. வேடிக்கையான பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அண்ணா நான் சொல்லவா...? மாமா வரமாட்டார்." நிமேசிக்கா திடீரெனக் கூறினாள். அதனைக் கேட்டதும் அதிர்ச்சி அடைந்தார்கள். "நிமேசி.. பொய் பேசாதே. உண்மையாகவா சொல்கிறாய்"? அனுசியன் நிமேசிக்காவிடம் கேட்டான். "ஓம் அண்ணா உண்மையாகத்தான்". நிமேசிக்கா பதில் சொன்னாள். "உனக்கு எப்படித் தெரியும். சொல்லு"? ரதீபன் கேட்டான். "நேற்று அப்பா சொன்னார்" நிமேசிக்கா கூறினாள். "அப்படியா..? நாங்கள் கண்டிக்கு எப்படிப் போவது"? ஆளையாள் கேட்டுக் கொண்டனர்.

படலையில் மோட்டார் சைக்கிளின் சத்தம் கேட்டது. வாசலை நோக்கி எல்லோரும் ஓடினார்கள். ஆனந்தபாஸ்கரன் புன்னகையோடு நின்றிருந்தார். அப்பாவை நிமேசிக்கா கட்டிக் கொண்டாள். அனுசியன் மோட்டார் சைக்கிளைப் பெற்றுக்கொண்டான். தலைக் கவசத்தை ரதீபன் எடுத்துக் கொண்டான். ஆளுக்கொரு பொதிகளைத் தூக்கிக் கொண்டனர். சின்னக் குட்டி சுலக்சிக்கா ஓடி வந்தாள். அவளது கையில் தீப்பெட்டி வண்டி இருந்தது. அவளை அப்பா தூக்கிக் கொண்டார். விபூசன் துள்ளி வந்தான். அப்பாவின் சுட்டு விரலைப் பற்றினான். அம்மா மெதுவாக வந்தார். அவரது முகத்தில் மகிழ்ச்சி தவழ்ந்தது. அன்போடு இன்முகம் காட்டி வரவேற்றார். வீட்டுக்குள் நடந்தார்கள்.

அப்பாவைச் சூழ்ந்து கொண்டார்கள். அம்மா பக்கத்தில் வந்தார். "வசந்தி இரண்டு கிழமைக்கு லீவு" அப்பா கூறினார். அம்மா புன்னகைத்தார். பிள்ளைகள் ஒரே குரலில் "ஹேய்ய்ய் .. .." என்று சத்தமிட்டார்கள். ஒரே மகிழ்ச்சி. ஆனாலும் அவர்களுக்குச் சந்தேகம். மெதுவாகத் தொற்றிக் கொண்டது. ஒரு மூலையில் ஒன்று கூடினர். ஆளையாள் பார்த்துக் கொண்டனர்.

"மாமா வராவிட்டால் எப்படிப் போவது."? தங்களுக்குள் முணுமுணுத்துக் கொண்டனர். ஒன்றும் விளங்கவில்லை. "என்ன முணுமுணுப்பு". அப்பாதான் கேட்டார். "அப்பா மாமா வர மாட்டாரா"? நிருசன் பயமில்லாது கேட்டான். அவன் அப்பாவின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லப் பிள்ளை. "மாமா வரமாட்டார்". அப்பா பதில் கூறினார். "அப்படியென்றால் நாங்கள் எப்படிப் போவது"? அழுவது போல் அனுசியன் கேட்டான். "நாங்கள் கண்டிக்குப் போவதில்லையா"? ரதீபன் குறுக்கிட்டான். அப்பா சிரித்தார். "மாமா வரமாட்டார். நாமெல்லோரும் அங்கே போகிறோம்". அப்பா சொல்லி முடிக்கவில்லை. சத்தமிட்டார்கள். பாய்ந்து துள்ளினார்கள். அப்பாவைச் சேர்த்துக் கட்டிப் பிடித்தார்கள். பாசத்தால் அப்பா மெய்மறந்து போனார். அம்மாவுக்குக் கொள்ளை மகிழ்ச்சி. குசினிக்குள் சென்றார்.

அம்மா தேநீர் கொண்டு வந்தார். "அப்பா களைத்து வந்திருக்கிறார். அவரை விடுங்கள். தேநீர் குடிக்கட்டும்" அம்மா தேநீரைக் கொடுத்தார். அப்பா குடிக்கும் வரை சூழ்ந்து நின்றனர். அவர் புன்னகையோடு குடித்தார். பிள்ளைகளின் செயலைப் பார்த்து ரசித்தார். எல்லோர் முகத்திலும் சிரிப்பு பளிச்சிட்டது. "அப்பா.. அப்பா.. எப்போது புறப்படுகிறோம்"? ஆவல் ததும்ப ஒரே குரலில் ஒலித்தனர். அப்பாவுக்கு ஒரே சிரிப்பு. அம்மாவுக்கு ஏதோ சைகை காட்டினார். அவர் இல்லையென்று தலையாட்டினார். பின் தொடர்ந்து பேசினார்.

"வசந்தி இன்னும் இரண்டு நாட்கழித்துப் புறப்படுவோம். சரி தானே"? கூறிவிட்டு பிள்ளைகளின் முகத்தைப் பார்த்தார். அகத்தின் அழகு முகத்தில் தெரிந்தது. ஆனந்தபாஸ்கரன் உளவியல் படித்தவர். பிள்ளைகளின் உள்ளத்தைப் புரிந்து கொண்டார். முகங்களைத் தொங்கப் போட்டிருந்தனர். அழுவது போல் காட்சி தந்தனர். அவர் கலகலவெனச் சிரித்தார்.

"வசந்தி நாளைக் காலை கண்டி போகிறோம். ஆயத்தம் செய்." அப்பா கூறினார். பிள்ளைகள் தலைகால் தெரியாது துள்ளினார்கள். ஒரே கொண்டாட்டம். ஓடியோடித் துணிமணிகளை அடுக்கத் தொடங்கி விட்டனர். ஆனந்தபாஸ்கரன் குளித்தார். உடையை மாற்றிக் கொண்டு வந்தார். இருக்கையில் அமர்ந்து பத்திரிகையில் மூழ்கினார். பிள்ளைகள் அப்பாவைச் சூழ்ந்து கொண்டனர். அவரை நோக்கி வினாக்கள் பறந்தன. அதனை ரசித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்பா எப்படி நாங்கள் போகிறோம்? கோச்சியிலா? அல்லது வஸ்சிலா"? நிமேசிக்கா கேட்டாள். "காலையில் பார்ப்போமே. இப்பொழுது என்ன அவசரம்"? அப்பா பத்திரிகையைப் பார்த்த வாறே கூறினார். ஒவ்வொருவரும் ஒவ்வொரு வினாக்களைக் கேட்டனர். "அப்பா மலைநாடு எப்படி இருக்கும்"? "அப்பா! நிறையத் தேயிலைத் தோட்டங்கள் உண்டாமே? தேயிலைத் தொழிற்சாலை யைப் பார்க்கலாம்தானே"? சளைக்காது ஆளுக்காள் கேட்டனர். "நாளை நேரே சென்று கண்களால் பார்ப்போம்". ஆனந்தபாஸ்கரன் முற்றுப் புள்ளி வைத்தார்.

அனுசியன் தனது வகுப்பாசிரியரை நினைத்தான். ஆசிரியர் இலங்கையின் தரைத் தோற்றத்தை விளக்கியிருந்தார். அது படமாக விரிந்தது. மத்தியில் உயர்ந்த மலைநாடு. உயர்ந்த சிகரங்கள். பரந்த சமவெளிகள். மலைநாட்டில் இருந்து வழிந் தோடும் நதிகள். படிப்படியாகச் சரிந்த தாழ்நிலங்கள். அனுசிய னுக்கு வியப்பாக இருந்தது. அவன் கற்பனையில் இருந்தான். "அண்ணா எப்படி மலைகள் தோன்றின"? அதிசயமாக ரதீபன் கேட்டான். "அண்ணா, மாமாவிடம் கேட்போம்." நிரூசன் கூறினான்.

20796.

"அண்ணா, மலைகள் உயரமானவை. எப்படி நதிகள் உச்சியில் ஊற்றெடுக்கும்? தண்ணீர் ஆழமான நிலத்தில்தானே இருக்கும்"? நிமேசிக்கா யோசித்தவாறு கேட்டாள். எல்லோரும் கேள்விகளே கேட்டார்கள். தனது பிள்ளைகள் கெட்டிக்காரர்கள். அவர்கள் கற்கத் தொடங்கி விட்டார்கள். கேள்வி கேட்கத் தொடங்கினால் பதில் கிடைக்கும். விடைகள் காணும்போது அறிவு பெருகும். குழந்தைகள்தான் சிறந்த விஞ்ஞானிகள். அல்லவா? குழந்தைகள் எப்போதும் கற்க விரும்புவார்கள். தெரியாதவற்றைத் தேடிக் கேட்பார்கள். அறிய விரும்புவார்கள். அவர்கள்தான் அறிவின் சுரங்கம். இது ஆனந்தபாஸ்கரனின் முடிவாகும். விஞ்ஞானம் அறிவின் தேடலாகும். தனது குழந்தைகளை எண்ணி மகிழ்ந்தார்.

இரவு வந்தது. பிள்ளைகள் தங்கள் துணிமணிகளைப் பொதி செய்தனர். உணவு முடிந்தது. பயணம் பற்றியே உரையாடினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுக்கு உறக்கமே வரவில்லை. உறங்க மனமும் இல்லை. இலங்கைப் படத்தைத் தேடினார்கள். பாதையைப் பார்த்தார்கள். மலைநாட்டைப் படித்தார்கள். காலநிலையை ஆராய்ந்தார்கள். கற்பனையில் மலையில் ஏறினார்கள். வானத்தைத் தொட்டு வந்தார்கள். எப்போது விடியும் எனக் காத்திருந்தனர். நேரம் மெது வாகவே சென்றது. எப்போது உறங்கினார்கள்? அவர்களுக்குத் தெரியவில்லை. உறங்கி விட்டார்கள். கனவெல்லாம் பயண மாகவே இருந்தது.

# 3

கோழிகள் சிறகடித்துக் கூவின. காகங்கள் கரைந்தன. குயிலோசை காற்றில் பரவியது. மனதில் பரவசமூட்டியது. கரிக் குருவியின் குரல் இனிமையாக இருந்தது. கன்றைத் தேடும் பசுக்களின் அழைப்பு. கோயில் மணிகள் ஒலித்தன. இனிய காலைப்பொழுது எட்டிப்பார்த்தது. பறவைகளின் ஆரவாரம். திருகோணமலை சிலிர்த்துக் கொண்டிருந்தது. கிழக்கு வானில் மெலிதான வெளிச்சம். மெல்லப் பரந்தது. இருள் மெதுவாக விலகத் தொடங்கியது. காலைப் பொழுது அற்புதமானது. அதனை அனுபவிக்க வேண்டும். அப்பொழுதுதான் அதன் சுகம் தெரியும்.

கிழக்கே திருக்கோணேஸ்வரம் இருக்கிறது. கிழக்குக் கடல் நெளிந்தது. காற்று அலைகளைத் தள்ளியது. அலைகள் கரையில் மோதின. திருப்பள்ளி எழுச்சி பாடின. இரைந்து ஒலியெழுப்பி ஊதின. ''நிரைகழல் அரவம் சிலம்பொலி அலம்பும்'', ''குடிகளை நெருக்கி நெருக்கமாய்த் தோன்றும். திருக்கோணமாமலை'' புகழ் பரவும் அந்த அடிகள் மனங்களில் பரவசமூட்டும். இது திருஞான சம்பந்தர் வாயினால் பாடப்பெற்ற திருத்தலம். புராண இதிகாசங்களில் இடம் பெற்ற தலம். புத்தர் இலங்கைக்கு வருமுன்பே புகழோடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்கியது. நிமலர் உறையும் புண்ணிய பதி. தேவநம்பிய தீசனால் புனருத்தாரணம் செய்யப் பெற்றது. ஈழத்தின் ஐந்து ஈச்சரங்கள் இருந்தன. அதில் கோணேஸ்வரமும் ஒன்று. காலத்துக்குக் காலம் இப்பதி அழிக்கப்பட்டது. அதே போல் புனர்நிர்மாணமும் செய்யப் பட்டது. இறுதியில் போர்த்துக்கீசரால் அழிக்கப்பட்டது. மீண்டும் கட்டியெழுப்பப்பட்டுவிட்டது.

பிள்ளைகளை யாரும் எழுப்பவில்லை. அவர்களே விழித்துக் கொண்டார்கள். பயணத்துக்குத் தயாராகிக் கொண்டிருந்தனர். அம்மாவுக்கு அதிசயம். ஆனால் மகிழ்ச்சியாக இருந்தது. அம்மா நேரத்துக்கே எழுந்து விட்டார். சமையலை முடித்து விட்டார். உணவுப் பொதிகள் தயார். குளித்து உடையும் மாற்றிவிட்டார். "தேநீர் தயார். எல்லோரும் வாங்கோ". அம்மா குரல் கொடுத்தார். அம்மாவின் அழைப்பைக் கேட்டார்கள். அம்மாவிடம் ஓடினார்கள்.

ஆனந்தபாஸ்கரன் குளித்து வெளியில் வந்தார். முற்றத்தில் நித்திய கல்யாணி. பூச்சூடி இருந்தது. மல்லிகைப் பூக்கள் விரிந் திருந்தன. மணம் பரப்பின. பூக்களைச் சுற்றி வண்டுகள் வட்டமிட்டன. கோணேசப் பெருமானின் திருக்கோயில் தெரிந்தது. கோபுர மணிமுடியின் மின்விளக்குகள் மின்னின. இடப்பக்கமாக குழந்தை ஜேசு கோவில். அங்கிருந்து மணியோசை பரவியது. வந்து காதில் மோதியது. திரும்பிப் பார்த்தார். சிலுவை ஒளி பிரகாசித்துக் கொண்டிருந்தது. அந்த விடிகாலைப் பொழுது இனிமையாக இருந்தது. மனித வாழ்க்கை இனிமையானது. மனதுக்கு அமைதியைத் தருவது. நன்நெறியை உணரவைப்பது. அதற்குச் சமயங்கள் துணை போகின்றன.

தேநீரைக் கையில் எடுத்தார்கள். மொட்டை மாடிக்குப் போனார்கள். இருக்கைகளில் இருந்து குடித்தார்கள். குடித்துக் கொண்டே இயற்கையை ரசித்தார்கள். கடற்காற்று உடலுக்கு உற்சாகம் தந்தது. பறவைகளின் இசைக் கோலம். வானொலிகளில் இருந்து பரவிவரும் இன்னிசை. கோயில்களில் இருந்து பக்தியிசை பரவியது. அவர்களுக்கு இன்பத்தைக் கொடுத்தது. அதைவிடவும் இன்றைய நாள் மகிழ்ச்சியானது. எல்லாமே மகிழ்ச்சியை ஊட்டின.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாடியில் இருந்து பார்த்தார்கள். திருகோணமலை அழகாகத் தெரிந்தது. அதனை நன்றாகப் பார்த்தார்கள். புதுமையாக இருந்தது. கிழக்காகக் கோணேசர் திருக்கோயில். அதற்கப்பால் நீலக்கடல் நெளியும். அலைகளை வீசி விளையாடும். வலப்பக்கம் துறைமுகம். கப்பல்கள் நங்கூரமிட்டு நிற்கும். சில அசைந்து திரியும். படகுகள் போவதும் வருவதுமாக இருக்கும். பிறிமா ஆலை தூரத்தே தெரியும். பார்ப்போரைப் பரவசப்படுத்தும். அவர்களுக்கு அதனை இப்போது ரசிப்பதற்குப் பொறுமையில்லை. எனினும் அதனைப் பார்த்தார்கள். பயணம் போவது சந்தோசமானது. அவர்கள் கற்பனையில் மிதந்தார்கள். மாடியிலிருந்து உரையாடினார்கள். பிள்ளைகளது சந்தோசத்தால் வீடு கலகலத்தது. ஒரே ஆரவாரம்.

''வசந்தி இப்போது ஆறரை மணி. சரியாக ஏழு மணிக்குப் புறப்பட வேண்டும். ஆயத்தமா?'' அப்பாவின் குரல் அவர்களைத் துரிதப் படுத்தியது. மளமளவென்று கீழே இறங்கி வந்தார்கள். கோப்பை களைக் கழுவி வைத்தார்கள். உடையணிந்தார்கள். தங்கள் பொதிகளை எடுத்தார்கள். முன் மண்டபத்துக்கு வந்து விட்டார்கள். ''நாங்கள் ரெடி''. ஏகோபித்த குரலில் பிள்ளைகளின் பதில். ''அப்பா தான் இன்னும் வெளிக்கிடவில்லை. ஆயத்தமாய் இல்லை''. நிரூசன் சத்தமிட்டான். ''அம்மா ஆயத்தமாகி விட்டார். அப்பா நீங்கள் ரெடியா''? நிமேசிக்கா குரல் கொடுத்தாள். அப்பாவிடம் இருந்து பதில் இல்லை. ''அது சரி நாங்கள் எப்படிப் போகிறோம்?. கோச்சியிலா அல்லது வஸ்சிலா''? அனுசியன் மீண்டும் கேட்டான். ஆனந்தபாஸ்கரன் அவர்களது ஆர்வத்தைப் பார்த்தார். ''எப்படியோ போகிறோம்''. பிடிபடாது விடையளித்தார். அப்பொழுது வீட்டின் முன்கதவு தட்டப்பட்டது. அனுசியன் ஓடிப்போய்த் திறந்தான். அங்கே நிசோத்மன் நின்றான்.

''அப்பா! நிசோ வந்திருக்கிறான்''. அப்பாவுக்குத் தெரிவிக்கப் பட்டது. ''நிசோ ! நாங்கள் கண்டிக்குப் போகிறோமே. இங்கே பார்! புறப்படத் தயார்''. ரதீபன் கூறிக்கொண்டே ஓடி வந்தான். ''நாங்களும் கண்டிக்குத்தான் போகிறோம்.'' நிசோ பதிலளித்தான். ரதீபனுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிசயமாகவும் ஆச்சரியமாகவும் இருந்தது. "உண்மையாகவா? நீங்களும் கண்டிக்கு போறீர்களா? யார் யார் போறீர்கள் நிசோ"? சந்தோசத்துடன் கேட்டான்.

"நிசோ வா உள்ளே." நிமேசிக்கா வரவேற்று அழைத்தாள். வரவேற்பதில் பெண்கள்தான் தனித்துவமானவர்கள். அப்பா மனதில் எண்ணிக் கொண்டார். "நிசோ! எல்லாரும் வந்து விட்டார் களா"? ஆனந்த பாஸ்கரன் வினா எழுப்பினார். நிரூசனுக்கு இருப்புக் கொள்ளவில்லை. அவன் வெளியே ஓடினான். அவன் கண்களில் வாகனம் தெரிந்தது. அது முரளிச் சித்தப்பாவின் வாகனம். போன வேகத்தில் திரும்பினான்.

"அண்ணா நாங்கள் வேனில்தான் போகிறோம். அப்பா ஒன்றும் சொல்லவில்லை. சித்தப்பாவின் வேன் வெளியில் நிற்குது." நிரூசன் மகிழ்ச்சியோடு கூறினான். அனைவருக்கும் ஆச்சரியம். ஆனால் கொள்ளை மகிழ்ச்சி. அவர்கள் துள்ளினார்கள். பிள்ளைகளது செயல் அம்மாவுக்குச் சந்தோசத்தைக் கொடுத்தது. அப்பா எல்லா வற்றையும் மறைத்து வைத்திருந்தார். மெதுவாக ரசித்தார்.

பிள்ளைகள் தங்களது உடைமைகளைத் தூக்கினர். அப்பா கவனித்தார். "அப்படியே எல்லாவற்றையும் வையுங்கள்." அப்பாவின் கட்டளை பிறந்தது. அப்படியே வைத்தனர். அப்பாவின் பதிலுக்காகக் காத்திருந்தனர். "இன்னும் புறப்படவில்லையா"? குரல் கேட்டுத் திரும்பினார்கள். அங்கே முரளி நின்றிருந்தார். பின்னால் அனுஜாவும் வந்தார். "உள்ளே வாருங்கள். இதோ புறப்பட்டு விட்டோம்." அம்மா பதில் கொடுத்தார். "அப்படி இருங்கள். தேநீர் தயார். குடித்ததும் புறப்படலாம்." வசந்தி கூறிவிட்டு அடுக்களைப் பக்கம் சென்றார். தேநீரோடு வந்தார். எல்லோரும் குடித்தார்கள். "நல்ல ருசியான தேநீர்" முரளி தேநீரைக் குடித்த வாறே சொன்னார். கோப்பைகளைப் பிள்ளைகள் கழுவி வைத் தார்கள். பிள்ளைகள் இளமையிலேயே நல்ல பழக்கங்களைப் பழகி யிருந்தனர். அதனை முரளி பாராட்டினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகள் தமது கால்களில் நிற்கவேண்டும். எதற்கும் யாரை யும் எதிர்பார்க்கக்கூடாது. இது பெற்றோர்களது கொள்கையாகும். அதற்கேற்பப் பிள்ளைகள் செயற்பட்டு வருகின்றனர். "சரி, எல்லா வற்றையும் எடுத்துக் கொண்டீர்களா? குறிப்புக் கொப்பி, பேனா எடுத்தீர்களா"? அப்பா எல்லோரையும் பார்த்துக் கேட்டார். "எடுத்துக் கொண்டோம்." எல்லோரும் சேர்ந்து சட்டெனப் பதில் கூறினர். "சரி, உங்கள் பொதிகளை எடுங்கள். கொண்டுபோய் வாகனத்தில் ஏற்றுங்கள்." அப்பாவின் குரல் கேட்டது. பிள்ளைகள் காற்றாகச் செயற்பட்டனர். தங்கள் பொதிகளைத் தூக்கிக் கொண்டனர். வாகனம் வீதியில் நின்றது. வாகனத்தை நோக்கி ஓடிச் சென்றனர்.

ஆனந்தபாஸ்கரன் வீட்டைப் பூட்டினார். வீதிக்கு வந்தார். பொருட்களை ஏற்றிக் கொண்டனர். ஒவ்வொருவராக வாகனத்தில் ஏறினார்கள். ஒரே குதூகலம். சந்திரன் மாமாவோடு கலா மாமியும் வந்திருந்தார். அவர்கள் வவுனியாவில் இருப்பவர்கள். அவர்க ளோடு சசாங்கனும், மதுவும் வந்திருந்தார்கள். சனோ, தனுஸ், நிசோ, அபிஷேக், நுஷாந்தன், உள்ளே இருந்தனர். "அண்ணா அப்பா சரியான ஆள். என்ன"? நிரூஷன் ரதீபனிடம் கூறினான். ''அம்மாவும் சொல்லவில்லையே''. அனுசியன் வியப்போடு சொன்னான். "சொல்லாததும் நல்லதுதான். அப்பா எப்போதும் இப்படித்தான். நமக்குத் திடீர்ச் சந்தோசத்தை ஏற்படுத்துவார். நல்ல அப்பா. அப்பாவுக்கு நன்றி சொல்ல வேண்டும்'' நிமேசிக்கா மெதுவாகக் கூறினாள்.

சந்தோசம் துள்ளி விளையாடியது. வாகனத்தைச் சந்திரன் மாமா இயக்கினார். அது இரைந்து கொண்டு புறப்பட்டது. உவர்மலை மத்திய வீதியால் வாகனம் சென்றது. திருகோணமலை நகர் சுறுசுறுப்பாகியது. குழந்தை ஜேசு கோவில் பளீச்சிட்டது. சிலுவை மெல்ல மறையத் தொடங்கியது. நேரே கோணேசர் கோயில் காட்சி யாகியது. உவர்மலை உயரமானது. அங்கிருந்து திருகோண மலையின் அழகை ரசிக்கலாம். வலது புறம் துறைமுகம். இடது புறம் விவேகானந்தாக் கல்லூரி உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவேகானந்தாக் கல்லூரி எடுப்பாக நின்றது. பல கட்டிடங்கள் தெரிந்தன. ஒரு பல்கலைக்கழகம் போல் காட்சியுளித்தது. மதிற் சுவருக்கு மேலால் பலவகைப் பூக்கள். எட்டிப் பார்த்துத் தலை யசைத்தன. "இது எந்தக் கல்லூரி? எப்படிப் படிப்பு."? சந்திரன் மாமா கேட்டார். "மாமா! இது எனது கல்லூரி. இங்குதான் நான் படிக்கிறேன்." சுலக்சிக்கா கூறினாள்.

விவேகானந்தாக் கல்லூரியின் வளர்ச்சி துரிதமானது. அது ஆனந்த பாஸ்கரன் மனதில் தெரிந்தது. இந்தக் கல்லூரியின் வளர்ச்சியில் அதிபர் எடுத்த முயற்சிகள் விரிந்தன. ஒரு கல்லூரி யின் வளர்ச்சி அதன் தலைமையில் தங்கியுள்ளது. தலைமைத் துவம் என்பது ஒரு கலை. அதில் நன்கு அனுபவம் வேண்டும். பாடசாலையை நேசிக்க வேண்டும். பலர் தங்களையே நேசிக்கி றார்கள். அதனால் பாடசாலைகள் வளர்ச்சி பெறுவதில்லை. அனுபவசாலிகள் தேவை. அனுபவம்தான் சிறந்த ஆசான்.

"இது மிகவும் தரமான பாடசாலைகளில் ஒன்று" வேண்டிய போது கைகளைக் காட்டி விளக்கினார். "இந்த இடத்தில் மலைக் காடு இருந்தது. கிரேவல் எடுக்கும் பூமியாகக் கிடந்தது. அந்த இடத்தில் சிறிய பாடசாலையை அமைத்தனர். பல அதிபர்களின் முயற்சியால் படிப்படியாக உயர்ந்தது. அதிபர் நவரத்தினம்தான் குப்பையில் குன்றிமணியைக் கண்டவர். நல்லதொரு சிந்தனை யாளன். இரவு பகலாக பாடசாலையிலேயே கிடப்பார். அதனை வளர்க்க நினைந்து உழைத்தவர். கிரேவல் மலைகளைத் தகர்த் தவர். குழிகளை மூடியவர். யாரைப் பிடித்தால் பாடசாலைக்குத் தேவையான வசதிகள் கிடைக்கும்.? எந்தப் பெற்றோர் பாடசாலை யில் அக்கறை உள்ளவர்கள். என்று விசாரித்து அறிந்து விடுவார். பிறகென்ன? அவர்களைப் பிடித்து உதவிகளைப் பெறுவதில் வல்லவர். அதனால் மாடிக் கட்டிடங்கள் அமைந்தன. கல்வியின் தரத்தை உயர்த்த முயன்றவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல மாணவர்கள் இன்று பல்கலைக்கழகத்தில் உயர்கல்வி பெறுகின்றனர். இப்போது முதற்தரக் கல்லூரியாக விளங்குகிறது. உள்ளே போய்ப் பார்த்தால் பேராதனைப் பூங்காவைப் பார்க்கலாம். ஒரு பல்கலைக்கழகம்தான்''. ஆனந்தபாஸ்கரன் விளக்கிக் கொண்டே சென்றார். உவர்மலைச் சந்தியில் ''செக்பொயின்ற்' இருந்தது. அது இராணுவச் சோதனை நிலையம். போர்க்காலச் சூழலில் இலங்கையில் எங்கும் இது இருக்கிறது. சிறப்பாக வடக்கு கிழக்கு மாநிலம் எங்கும் நிறையவே உண்டு. வாகனங்களைப் பதிவு செய்ய வேண்டும். அடையாள அட்டைகளைக் காட்ட வேண்டும். பயணப்பொதிகளைத் திறந்து பரிசோதனை நடக்கும். அதன் பின்னர்தான் செல்ல அனுமதி கிடைக்கும்.

வாகனம் சோதனை நிலையத்தில் தரித்தது. சோதனைகள் முடிந்ததும் புறப்பட்டது. செக்பொயின்றைத் தாண்டியது. இடப் பக்கமாகத் திரும்பியது. இடப்பக்கமாக மாகாணக் கல்வி அமைச்சு. அதனைத்தாண்ட வலப்பக்கம் திருகோணமலை பொலிஸ் நிலையம். அதன் முன்னால் சந்தி வந்தது.

சந்தியில் மீண்டும் இடப்பக்கம் திரும்பியது. அடுத்த செக் பொயின்ற் குறுக்கிட்டது. சோதனையின் பின் வாகனம் புறப்பட்டது. மட்டிக்களி பரவைக்கடல் அலையசைத்தது. மெல்லிய உப்புக் காற்று படபடத்தது. யன்னல்கள் ஊடாக உட்புகுந்தது. அனை வரையும் தழுவி உற்சாகம் ஊட்டியது. வலப்பக்கம் நிலப்பரப்பு. நிலப் பகுதியின் உள்ளும் உப்புநீர் புகுவதற்கு முயற்சித்தது. இடப்பக்கம் பரவைக் கடல். அது துறைமுகம்வரை பரந்திருந்தது. இருபுறங்களையும் பார்த்து ரசித்தனர். கலகலப்பாகப் பேசி மகிழ்ந் தனர். வாகனம் லிங்கநகரைத் தாண்டியது. திருகோணமலை நகர் பின் நோக்கி நகர்ந்தது. வாகனம் அனுராதபுரச் சந்தியை அடைந்தது.

இந்தச் சந்தியிலிருந்து ஒரு வீதி அனுராதபுரம் செல்கிறது. அங்கிருந்து யாழ்ப்பாணம் செல்கிறது. மறு வீதி கண்டி வீதியாகும். அந்த வீதியால் வாகனம் சென்றது. இது ஆண்டான்குளம். குடிநீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேகரிப்பு நிலையம் வந்தது. பிரித்தானியரின் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்டதாகும். இங்கிருந்துதான் கடற்படைத் தளத்திற்குத் தண்ணீர் செல்கிறது. வாகனம் நாலாம் கட்டைச் சந்தியை அடைந்தது. அந்தச் சந்தியைப் பற்றிய கதைகளை ஆனந்த பாஸ்கரன் நினைத்துக் கொண்டார். அவரது தந்தை கூறிய தகவல்கள் அவை.

## 4

நாலாம் கட்டைச் சந்தியில் வனத் திணைக்களம் இருந்தது. ஒரு சிங்கள ஆசிரியர் இருந்தார். அவர் வாகனம் திருத்தும் 'கறாஜ்ஜை'' நடத்தினார். அதனைச் சூழ மூன்று சிங்களக் குடும்பங்கள் இருந்தன. முதிரை மரங்கள் நிறைந்த அடர்ந்த காடு. பழமுதிர் சோலையல்ல. அது பல முதிரைச் சோலை. பகலிலும் யானைகள் உலா வரும். காட்டுக் கோழிகள் ஓடித்திரியும். பாலம்போட்டாறு வரை காடு பரந்திருந்தது. ஆறாம் கட்டையில் ஒரு பிள்ளையார் கோவில். வெள்ளிக்கிழமை தோறும் பூசை நடக்கும். பல இடங்களில் இருந்தும் மக்கள் வருவார்கள். பொங்கல் செய்வார்கள். அந்தக் கோயிலுக்கு அண்மையில் ஒரு அரச கட்டிடம். அது பொதுவீதி அமைக்கும் திணைக்களத்துக்குச் சொந்தமானது. வனத் திணைக்களம் மீள் காடாக்கம் செய்தது. தேக்கு மரக் காடுகளை உருவாக்கியது. இன்று நிலை மாறிவிட்டது. இப்போது காடுகள் இல்லை. எங்கும் பெரும்பான்மை இன மக்கள் குடியேறி விட்டனர். அரசமரங்களும் புத்தர் கோவில்களும் எழுந்து விட்டன.

வாகனம் ''மங்கிபிறிஜ்ஜை'' அடைந்து விட்டது. ''இதுதான் குரங்குப் பாலம். அதாவது ''மங்கி பிறிஜ்'' ஆனந்தபாஸ்கரன் காட்டினார். ''குரங்குகள் கட்டிய பாலமா? எந்தச் சீதைக்காகக் கட்டிய பாலம்? பாலத்தைக் காணவில்லையே. எங்கே பாலம்''?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரதீபன் விநோதமாகப் பார்த்தபடி கேட்டான். "இங்கு கற்களால் கட்டப்பட்ட பாலமில்லை. பெரிய மரங்களடர்ந்த காடு இருந்தது. மரங்களைப் பற்றிக் கொடிகள் படர்ந்திருந்தன. வீதியின் இரண்டு பக்கமும் உயர்ந்த மரங்கள். மரங்களை இணைத்துக் கொடிகள். பரந்து படர்ந்து இருந்தன. அது கொடிகளாலான இயற்கையான பந்தல். பந்தலின் கீழ் தார்வீதி செல்கிறது. மேலே பாலம்போல் தெரியும்.

குரங்குகள் கொடிகளைப் பிடித்தபடி வீதியைக் கடக்கும். அவை தொங்கிக் கொண்டு கைகளை மாற்றி மாற்றிப் போகும். மேலாலும் பாய்ந்து தொங்கிச் செல்லும். குட்டிக் கரணங்கள் அடித்து மகிழும். கீழே வாகனங்கள் செல்லும். கொழும்பில் மேம்பாலம் கட்டியுள் ளார்கள். பார்த்துள்ளீர்களா? கீழால் கோச்சி இரைந்து செல்லும். மேலால் பேருந்துகள் போகும். அதனைப் போல்தான் இந்தக் குரங்குப்பாலம். கீழே இறங்க வேண்டியதில்லை. யானைகளின் அட்டகாசம் அதிகமாக இருந்தது. பிரித்தானியரின் படைத்தளம் இங்கு இருந்தது. அவர்கள் குரங்குகளின் "சர்கஸ்" செயல்களை அவதானித்தனர். இந்த இடத்திற்கு "மங்கிபிறிஜ்" என்றனர். தமிழில் "குரங்குப்பாலம்" என்று அழைத்தார்கள்".

"அப்பா! இலங்கையில் முக்கிய பாலங்கள் இரண்டு. ஒன்று இராமர் அணை. அது இந்தியாவையும் இலங்கையையும் இணைக்கும் பாலம். கற்களால் கட்டப்பட்டது. அது கடலினுள் இருக்கிறது. மற்றது இந்தக் குரங்குப்பாலம். இது கொடிகளால் அமைக்கப்பட்டது. குரங்குகள்தான் மேம்பாலம் அமைக்க வழி காட்டின. இல்லையா அப்பா"? ரதீபனின் இந்தப் பதில் வேடிக்கை யாக இருந்தது. விவேகமாகவும் இருந்தது. ஆனந்தபாஸ்கரன் சிரித்துக் கொண்டார். எல்லோரும் அதனை ரசித்துச் சிரித்தனர். அவர் தொடர்ந்து விளக்கம் அளித்தார்.

இங்கு நிறையக் கட்டிடங்கள் இருக்கின்றன. அவற்றைச் சுற்றி கம்பிவேலி. இன்றும் வேலியிருக்கிறது. பிரித்தானியர் இரவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலியில் மின்சாரத்தைத் தொடுத்து விடுவார்கள். யானைகளின் அட்டகாசம் குறைந்து விடும். பிரித்தானியர் நிம்மதியாக இருந்தனர். இது பிரித்தானியர் தம்மைப் பாதுகாக்கச் செய்த தந்திரமாகும். நமக்குச் சுதந்திரம் வந்தது. பிரித்தானியர் நமது நாட்டை விட்டுச் சென்றனர். இன்று ஸ்ரீலங்காப் பாதுகாப்புப் படை உள்ளது''. ஆனந்தபாஸ்கரன் கூறிவந்தார்.

வாகனம் பாலம்போட்டாற்றை அடைந்து விட்டது. எதிரே ''செக்பொயின்ற்'' வந்தது. இறங்கினார்கள். சோதனை முடிந்தது. குறுக்காக ஓடும் ஆற்றின் மேல் பாலம் இருந்தது. பாலத்துக்கும் இராணுவக் காவலுண்டு. பாலத்தின் மேல் ஓரமாகப் பிள்ளையார் சிலை. அதன் அருகே பயணிகள் தேங்காய் உடைத்து வணங்கு வார்கள். பாலத்தின் கீழ் ஆற்றோரமாகப் பழமை வாய்ந்த கோயில். ''அது பத்தினி அம்மன் கோயில். அது கஜபாகு மன்னனால் புதுப்பிக்கப்பட்டதாகக் கதைகள் உண்டு. இராமர் கதை தெரியுமா? அவர் படையோடு இலங்கைக்கு வந்தார். அவரது படை சல்லியில் தங்கியிருந்தது. போருக்கு முதல்நாள் களப்பலி கொடுப்பார்கள். அங்கு வெள்ளைமலை உண்டு. அங்குதான் சல்லியம்மன் ஆலயம் இருக்கிறது. சல்லியம்மன் இராமரால் நிறுவப்பட்டதாகக் கதை யுண்டு. அது சக்திவாய்ந்த தெய்வம். அதன் உக்கிரத்தைத் தணிப்ப தற்காக அமைக்கப்பட்டதே இந்தக் கோயில். இது கர்ண பரம்பரக் கதை.'' ஆனந்தபாஸ்கரன் விளக்கினார்.

பாலத்தின் கீழ் தெளிந்தநீர் ஓடிக்கொண்டிருந்தது. உற்சவ காலங்களில் பக்தர்கள் கூடுவார்கள். பொங்கல் வைத்துப் பூசைகள் செய்வார்கள். வைகாசிப் பூரணை சிறப்பானது. பொங்கல் சிறப்பாக நடைபெறும். திருகோணமலை மாவட்டச் சனங்கள் கூடுவார்கள். காவடிகளின் பவனி அற்புதமாக இருக்கும். இந்நிகழ்வு ஆண்டு தோறும் நடைபெறும்.

பாலம்போட்டாற்றில் குடியிருப்பு இருந்தது. இன்று அது இல்லை. பாழாய்க் கிடக்கிறது. அதைப் பார்த்து வசந்தி பெருமூச்சு விட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கலகலப்பாக இருந்த இடம் போரினால் பாழடைந்து விட்டது". சொல்லிக் கவலைப்பட்டார். "அம்மா இது என்ன கோவில்".? நிரூசன் கேட்டான். "இது பத்தினி அம்மன் கோவில்". வசந்தி பதிலளித்தார். கேள்விகள் வரும் என்பது தெரியும். விடைகளை விளங்கும்படி கூறவேண்டும். இதனை எல்லோருக்கும் ஆனந்த பாஸ்கரன் சொல்லியிருந்தார். கேள்விகள் வந்தால் பயணம் அலுப் பிருக்காது. பிள்ளைகள் நிறையக் கற்றுக் கொள்வார்கள். மனதிலும் இலகுவாகப் பதியும். கல்வி அனுபவம் ஆகிவிடும். வாழ்க்கைப் பிரச்சினைகளைத் தீர்க்கப் பயன்படும். அனுபவம் தானே உண்மை யான ஆசான். இது அனைவரதும் கருத்தாகும்.

"பத்தினி அம்மன் கண்ணகி அம்மன்தானே"? அனுசியன் கேள்வியும் பதிலுமாகக் கூறினான். "ஓமோம்" முரளி பதிலளித்தார். "கண்ணகி ஏன் மதுரையை எரித்தார்?" நிசோ கேள்வி தொடுத்தான்.

அதனைக் கதையாக ஆனந்தபாஸ்கரன் தொடங்கினார். "நமது அண்டைய நாடு எது"? கேள்வியாகக் கேட்டார். "இந்தியா" ஏகோபித்த பதில் வந்தது. "இந்தியாவில்தான் தமிழ் நாடு இருக் கிறது. முன்னர் அதனை மூவேந்தர்கள் ஆண்டார்கள். சங்கம் அமைத்துத் தமிழை வளர்த்தார்கள்." அவர் கூறிக்கொண்டே போனார். அபிஷேக் குறுக்கிட்டான். "மூவேந்தர்கள் சேர சோழ பாண்டியர். சரிதானே" சொல்லிவிட்டுச் சிரித்தான். "சரியான விடையை அபிஷேக் கூறினார். அவருக்கு எமது பாராட்டுக்கள்". நிரூஷன் உற்சாகமாகக் கூறிக் கைதட்டினான். எல்லோரும் சிரித்துக் கொண்டனர். ஆனந்தபாஸ்கரன் சுருக்கமாக விளக்கினார்.

"சோழநாட்டில் பூம்புகார் நகரம் இருந்தது. அங்கே கோவலனும் கண்ணகியும் வாழ்ந்தனர். அங்குதான் மாதவியும் இருந்தாள். மாதவி நடனத்தில் வல்லவள். முறையாக நடனம் பழகியவள். சோழ மன்னன் தலைமையில் மாதவியின் நடனம் அரங்கேறியது. அரசன் அவளைப் பாராட்டிப் பரிசுகள் கொடுத்தான். மாதவிக்கு மாலையும் வழங்கப்பட்டது. மாதவியின் பாட்டி சித்திராபதி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளுக்குப் பணம்தான் தேவை. அவள் மாலையை ஏலம் போட்டாள். மாலையை வாங்குபவர்களுக்கு மாதவி சொந்தம். இப்படி அறிவிக்கப்பட்டது. கோவலன் மாலையை வாங்கினான். மாதவியோடு வாழ்ந்தான். மாதவியின் வீட்டிலேயே அடைந்து கிடந்தான். மாதவியின் பாட்டி பொல்லாதவர். கோவலனது செல்வங் களைப் பிடுங்கினார்.

கோவலனின் செல்வம் குறைந்தது. பூம்புகாரில் இந்திரவிழா நடந்தது. இந்த விழாவை சிலப்பதிகாரம் அழகாகக் கூறும். சிலப்பதிகாரம் அருமையான நூல். அதனை இயற்றியது யார்"?. கேள்வியைத் தொடுத்து விட்டு எல்லோரையும் பார்த்தார். சற்று அமைதி நிலவியது. "இளங்கோ அடிகள்" சட்டென நிமேசிக்கா கூறினாள். "சரியான விடை" என்று ஆனந்தபாஸ்கரன் கூறினார். "நிமேசிக்கா சரியான விடையைச் சொன்னார். அவர் கெட்டிக்காரி. கைதட்டுங்கள் பார்ப்போம்." நுஷாந்தன் உற்சாகப்படுத்தினான். அனைவரும் ஆரவாரித்துக் கைதட்டினார்கள். ஆனந்தபாஸ்கரன் கதையைத் தொடர்ந்தார்.

இந்திரவிழா கோலாகலமாக நடைபெறுவது வழக்கம். நிறைவு நாளில் கடற்கரையில் பெருவிழா நடக்கும். பெருந்திரளாக மக்கள் கூடுவார்கள். செல்வந்தர்கள் கூடாரங்கள் அமைப்பார்கள். குடும்ப மாக வந்து தங்குவார்கள். கோவலனும் மாதவியும் வந்து தங்கி யிருந்தனர். கோவலன் யாழ் வாசிப்பதில் வல்லவன். யாழை எடுத்து வாசித்தான். மாதவியும் வாசித்தாள். அவள் வாசித்த இசையின் பொருளை பிழையாக விளங்கிக் கொண்டான். தன்னை ஏளனம் செய்வதாக எண்ணினான். அவளைத் தனியே விட்டுப் பிரிந்தான். நேரே கண்ணகியிடம் சென்றான்.

கோவலனைக் கண்டதும் கண்ணகி சந்தோசப்பட்டாள். அன்போடு வரவேற்றாள். கண்ணகியை விட்டுப் பிரிந்ததற்காக வருந்தினான். அவளிடம் மன்னிப்புக் கேட்டான். புதுவாழ்க்கை தொடங்க வேண்டும் என்றான். இருவரும் பாண்டிய நாட்டுக்குச் சென்றனர். வழியில் அறவண அடிகளின் உதவி கிடைத்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயர்சேரியில் இடம் கிடைத்தது. கண்ணகி தனது காற்சிலம்பைக் கொடுத்தாள். அதனை விற்பதற்காக் மதுரைமா நகருக்கு வந்தான். ஒரு பொற் கொல்லனைச் சந்தித்தான். தான் வந்த செய்தியைக் கூறினான். அந்தப் பொற்கொல்லன் பொல்லாதவன். சிலம்பை விற்றுத் தருவாதாகச் சொன்னான்.

பாண்டிமா தேவியின் காற்சிலம்பு பொற் கொல்லனிடம் சிக்கி யிருந்தது. அது திருட்டுப் போய்விட்டதாகக் கூறியிருந்தான். இப்போது அவனது மூளை வேலைசெய்தது. பொற்கொல்லன் சதியில் ஈடுபட்டான். நேரே மன்னனிடம் சென்றான். "சிலம்பைத் திருடிய கள்வனைக் கண்டேன். அவனைப் பிடித்து வைத்துள் ளேன்" என்று கூறினான். அரசன் விசாரிக்காமல் கட்டளை இட்டான். "கள்வனைக் கொன்று சிலம்பைக் கொணர்க" என்றான். கோவலனைக் கள்வன் என்றனர். குற்றம் சுமத்தினர். கோவல னைக் கொலைக்களப்படுத்தினான். செய்தி கேட்ட கண்ணகி கலங்கினாள். மன்னனிடம் நீதி கேட்டு வழக்குரைத்தாள். மன்னன் சபையிலே வாதாடினாள். தனது கணவன் கள்வன் இல்லை என்றாள். தனது காற் சிலம்மை உடைத்து நிரூபித்தாள். பாண்டிய மன்னன் தனது தவறை உணர்ந்தான். ஆராயாது தான் தீர்ப்பை அளித்தது கொடுமை. தான் குற்றவாளி என்று உயிர் நீத்தான். பாண்டிமாதேவி மன்னனின் பிரிவால் உயிர் நீத்தாள்.

கண்ணகி கோபத்தோடு எழுந்தாள். "அரசியல் பிழைத்தார்க்கு அறம் கூற்றம் ஆகட்டும்" என்றாள். மதுரை வீதிக்கு வந்தாள். "பார்ப்பார், பசு, பத்தினிப் பெண்டிர். முதியோர், சிறார்களை விடுத்துத் தீயவர் பக்கம் சேர்" என்று தீயை ஏவினாள். மதுரை மாநகர் எரிந்து அழிந்தது. கோபம் அடங்கி சேரநாட்டுக்குச் சென்றாள். அங்கே வேங்கை மரத்தடியில் தெய்வமானாள்." ஆனந்தபாஸ்கரன் கதையை முடித்தார். எல்லோரும் மெய்மறந்து கேட்டார்கள். இடை யில் வினாக்களே வரவில்லை. கதையில் லயித்து விட்டார்கள்.

தூரத்தே வலப்பக்கமாக ஊர் தெரிந்தது. அது பத்தினிபுரம். வயல் வெளிகளும் குடியிருப்புக்களும் தெரிந்தன. வாகனம் போய்க்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்தது. தம்பலகாமம் சந்தி தெரிந்தது. "அதுதான் பதின்மூன்றாம் கட்டைச் சந்தி" முரளி கூறினார். இடப்பக்கமாக வீதியொன்று சென்றது. அனுஜா முரளியிடம் ஏதோ கூறினார். அவர் ஆனந்த பாஸ்கரனிடம் சொன்னார். அவர் "அதற்கென்ன போய் வருவோம்" என்றார். சந்திரன் மாமா வாகனத்தை இடப்பக்கம் திருப்பினார். "ஆதிகோணநாதர் கோவிலைப் பார்ப்போம்" என்றார். வாகனம் தம்பலகாமம் நோக்கிச் சென்றது. கரிய தார்வீதி வயற் பரப்பைக் கிழித்துச் சென்றது. வயல் பசுமை போர்த்தி அழகூட்டியது. "பச்சைக் கம்பளத்தில் கரிய கோடு. எவ்வளவு அழகு" தனுஸ் கூறினான். "தனுஸ் கவிஞனாகி விட்டான். கைதட்டுங்கள்" சுலக்சிக்கா சொல்லிச் சிரித்தாள். எங்கும் பச்சைப்பசேல் என்றிருந்தது. தூரத்தில் ஆதிகோணநாதர் ஆலயம் தெரிந்தது.

## 5

மெல்லிய காற்று வீசி விளையாடியது. காற்றில் வேளாண்மை சலசலத்தது. அந்தச் சலசலப்பில் வேளாண்மை அசைந்தது. நறுமணம் வீசியது. வேளாண்மையில் இருந்து வெளிவரும் மணம் புதுமையானது. உழவருக்கு உவகை ஊட்டுவது. கந்தளாய்க் குளம் தம்பலகாமத்துக்கு நீரை வழங்குகிறது. தொட்டம் தொட்டமாகக் குடியிருப்புக்கள். அவை தீவுக் கூட்டங்களாகத் தெரிந்தன. வயற்பரப்பின் மத்தியில் குட்டித் தீவுகள். அவற்றைத் திடல்கள் என்று கூறுவார்கள். ஒவ்வொரு திடலுக்கும் ஒவ்வொரு பெயர். கோயில்குடியிருப்பில் கோணநாதர் கோவில் இருக்கிறது. குலைகளோடு தென்னைகள். ஓங்கி வளர்ந்து காற்றில் அசைந்தன. பாளைகள் வெடித்துச் சிரித்து அழைத்தன. இளநீரும் தேங்காய்களும் தொங்கின. கிளிகளின் கிக்கீ ஒலி. மைனாக்களின் இரைச்சல். குயில்களின் இடைவிடாத கூவல்கள். வாய்க்கால்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒற்றைக்காலில் தவமிருக்கும் கொக்குகள். சேற்றில் குதூகலிக்கும் எருமைகள். அற்புதமான காட்சிகள் மனதைக் கவர்ந்தன.

ஆதிகோணநாதர் கோயில் கோபுரம் பளிச்சிட்டது. கால்வாய் நீர் சிற்றாறாக ஓடியது. கோயிலின் மேற்குப் பக்கமாக வளைந்து சென்றது. கோயில் புறவீதி விரிந்து கிடந்தது. கோயிலைச் சுற்றி மதில். புறவீதியில் வாகனம் நின்றது. இறங்கினார்கள். கிழக்கு நோக்கிய வாசல் அழகாயிருந்தது. அது "வாருங்கள்" என அழைத் தது. முன்னால் இருந்த கிணற்றில் தண்ணீரை அள்ளினார்கள். கால்களைக் கழுவினர். கோயிலினுள் சென்றனர். அவர்கள் சென்ற நேரம் நல்லது. பூசை நடந்து கொண்டிருந்தது.

பயபக்தியோடு வணங்கினார்கள். கோயிலை வலம் வந்தார்கள். உட்சுவர்களில் அழகான பழங்கால ஓவியங்கள். மிக அற்புதமாக வரையப்பட்டிருந்தன. இலங்கையில் அந்நியர் படையெடுப்பால் அனர்த்தங்கள் நடந்தன. பறங்கியரால் கோணேசர் ஆலயம் அழிக்கப்பட்டது. அதனால் தம்பலகாமத்தில் ஆலயம் அமைக்கப் பட்டது. இப்போதய வன்செயல்களினாலும் பல கோயில்கள் அழிக்கப்பட்டிருந்தன. இந்தக் கோயில் கட்டிடமும் சிதைக்கப் பட்டது. ஆனாலும் ஊர்மக்கள் விழித்துக் கொண்டார்கள். ஒன்று கூடி முயன்றனர். இந்தக் கோயில் எமது பாரம்பரிய சொத்து; நமது பண்பாட்டைக் கூறுவது; நமது பெரியோர் நமக்கு விட்டுச் சென்ற செல்வம்; கூடி ஆராய்ந்தனர். மனதில் உறுதி கொண்டனர். இடிபாடு களைச் செப்பனிட்டார்கள். கோபுரத்தை அழகாக அமைத்து விட்டார்கள். அது முன்போன்று நிமிர்ந்து நிற்கிறது. சித்திரங்களும் கோபுரமும் அவர்களைக் கவர்ந்தது. பூசை முடிந்தது. வெளியில் வந்தார்கள். கோயிலின் முன்னால் நின்றனர். புகைப்படமும் எடுத் தனர். நின்றவாறே சுற்றிப் பார்த்தனர்.

நேரே கையைச் சுட்டிக் காட்டினார். "நேர் கிழக்கே பாருங்கள். அங்கே எங்கள் கிராமம் ஆலங்கேணி உள்ளது. இங்கிருந்து ஒன்பது கிலோ மீற்றர் செல்லவேண்டும். அங்குதான் நானும் பிறந்து வளர்ந் தேன். ஆலங்கேணி அழகான கிராமம். ஆலங்கேணியைப் பற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பாடல் உண்டு. கவிஞர் கேணிப்பித்தன் பாடியது. அதனைப் பிறகு சொல்கிறேன். இந்தக் கோயிலின் பதினோராவது திருவிழா ஆலங்கேணி மக்களுடையது. மாட்டுவண்டிகள் பவனி வரும். சூரங் கல் வெளியில் வண்டிச்சவாரிகள் தூள்பறக்கும். மிதிவண்டிகள் உலாவரும். மக்கள் நடந்தும் திருவிழாவுக்கு வருவார்கள். அதிலே ஒரு சுகமிருக்கும். பதினான்காம் நாள் திருவிழா அற்புதமானது. அன்றுதான் நேர்த்திக் கடன் செலுத்தும் நாள். விரதம் காத்துப் பயபக்தியாக வருவார்கள். கிராமங்களில் இருந்து காவடிகள் வரும். கூட்டங் கூட்டமாக காவடியின் பின்னால் பக்தர்கள் கூடுவார்கள்.

திருவிழா கிராமங்களை இணைக்கும் விழாவாகும். கிராமத்து மக்கள் வந்து குவிவார்கள். ஒரே குதூகலம்தான். காவடி ஆட்டம் நடக்கும். காவடிச் சிந்துகள் முழங்கும். மாறிமாறிப் பாடுவார்கள். ஒருவர் விட்ட இடத்திலிருந்து மற்றவர் பாடுவார். பிழையாகப் பாடி விட்டால் பக்கத்தில் உள்ளவர் திருத்திப் பாடுவார். உடுக்கு, பறை, சங்கு, நாதஸ்வரம், மேளம் இசையெழுப்பும். காவடிப் பாடல்கள் அற்புதமானவை. இசையைக் கேட்டுக் கொண்டே நடப்பார்கள். இசையும் பொருளும் மனதில் பதியும். அடுத்த வருடம் திருவிழா வரும்வரை காதில் இனிக்கும். சிறுவர்களுக்குக் கொண்டாட்டம். அவர்களும் சேர்ந்து பாடுவார்கள். பாடுபவர்களுக்குக் களைப்பு ஏற்படும். அதனைப் போக்கப் பாணக்கம் கொடுப்பார்கள். எலுமிச்சம் பழச்சாறு, வெங்காயம், சர்க்கரை, சேர்ந்து ருசிக்கும். அதனைக் குடிப்பதற்காகவே சிறுவர்கள் துணை போவார்கள். நொடிப் பொழுதில் கோயில் வந்து விடும். தூரமே தெரியாது.

திருவிழாக் காலத்தில் இந்த இடம் சொர்க்கம். கலை நிகழ்ச்சிகள் மகிழ்ச்சி ஊட்டும். சின்னமேளம் சிறப்பான நிகழ்ச்சி யாகும். அதனைப் பார்ப்பதற்காகக் கிண்ணியா முஸ்லிம் மக்களும் கூடுவார்கள். இப்போது எல்லாம் கனவாகிப் போய்விட்டன''. பெரு மூச்சோடு கூறினார். "ஏனப்பா கனவாகிப் போய்விட்டன?" சின்னக் குட்டி சுலக்சிக்கா கேட்டாள். அவளுக்கு இவைகள் விளங்காதவை. அரசியல்வாதிகளின் செப்படி வித்தைகள். அதிகாரத்தைப் பிடிக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனவாதத்தை விதைத்து விட்டனர். அதில் மதவாதிகளும் சேர்ந்து விட்டனர். மக்களைப் பிரித்துத் தங்கள் பிழைப்பை நடத்துகிறார்கள்.

கோயிலை அடுத்து மருத்துவமனை இருக்கிறது. அதனருகில் ஆதிகோணநாயகர் மகா வித்தியாலயம் அமைந்து உள்ளது. அது எடுப்பாக இருந்தது. பாடசாலையைச் சுட்டிக் காட்டினார். "இந்தப் பாடசாலை முக்கியமானது. நமது காசிநாதர் ஐயா அதிபராக இருந்தார்." ஆனந்தபாஸ்கரன் கூறினார். அவர் கற்பித்த காலத்தை விளக்கினார். அவர் ஒரு அற்புத மனிதர். சிலர் சேவைக்கு என்றே பிறக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களில் காசிநாதரும் ஒருவர். அவர் சென்ற இடமெல்லாம் செழிப்பாக மாறின.

ஆலங்கேணிக்கு அருகிலேயே கிண்ணியா இருக்கிறது. கிண்ணியாவைத் தம்பலகாமக் குடாக்கடல் அணைக்கிறது. குடாக்கடல் முத்துவிளையும் இடம். நமது நாட்டில் இரண்டு இடங் களில் முத்து விளைகிறது. ஒன்று தம்பலகாமக் குடாக்கடல் பகுதி. அதுதான் கிண்ணியா. மற்றது சிலாவத்துறை. அது மன்னார் மாவட்டத்தில் இருக்கிறது. புராண காலத்தில் முத்து வெளிநாடு களுக்கு இங்கிருந்து அனுப்பட்டது. திருகோணமலை ஊடாக பாய்மரக் கப்பல்கள் வரும். கப்பல்துறையில் தரித்து நிற்கும். கப்பல் துறை பாதுகாப்பன இடம். இங்கு உள்நாட்டுக்குத் தேவையான பொருட்கள் வந்திறங்கும். முத்தும் யானைத் தந்தங்களும் ஏற்றுமதி செய்யப்படும். ஆடகசவுந்தரி இத்துறை முகத்தைப் பயன்படுத் தினாள். குளக்கோட்டன் பயன்படுத்தியதும் இத்துறைமுகமே. முதலாம் பராக்கிரமபாகு தங்கிய மாளிகை காட்டினுள் உள்ளது. அரசபரம்பரையினர் இத்துறைமுகம் ஊடாகவே போய்வந்தனர். சகல போக்கு வரத்துக்களும் நடைபெற்றன. கப்பல் துறைமுகமே பாவனையில் இருந்தது. பாய்மரக் கப்பல்கள் தங்குவதற்கு பொருத் தமானது. கிண்ணியா தம்பலகாமப் பற்றோடுதான் இருந்தது. அந்நியர் ஆட்சியின் போதும் அப்படித்தான் இருந்தது. கிண்ணியா மணல் செறிந்த அழகான ஊர். இன்று முஸ்லிம்கள் செறிந்து வாழ்கிறார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலவினிலே கிண்ணியா பிரகாசிக்கும். ஒருபுறம் கடல் சூழ்ந்திருக்கும். மறுபுறம் கட்டையாறு ஊடறுத்து ஓடும். பெரிய கிண்ணியாவையும் சின்னக்கிண்ணி யாவையும் உப்புநீர் சிற்றாறு பிரிக்கிறது. பதினாறாம் நூற்றாண்டில் முஸ்லீம்கள் இங்கு குடியேறினார்கள். சின்னக்கிண்ணியாவில் பெருமளவு தமிழர்கள் வாழ்ந்தார்கள். நீரோட்டுமுனைப் பிள்ளையார் கோவில் பிரசித்தமானது. கோயிலின் பின்புறம் கிருஸ்ணபிள்ளை உடையாரின் வீடு. அங்குதான் முதலாவது பாடசாலை தொடங்கப்பட்டது.

கறுவல்தம்பி வைத்தியர் புகழ் பெற்றவர். இராசையா வைத்தியர் பேர்போனவர். அந்தக் காலத்தில் கிண்ணியா அம்மன் கோயில் பிரசித்தமானது. கோயிலின் முன்னால் பெரிய வெளி இருந்தது. அந்த வெளியில் கரீம்பாய், தாமோதரம்பிள்ளை, கணபதிப்பிள்ளை அண்ணாவிமார்களது நாடகம் நடக்கும். இப்போது காலம் மாறி விட்டது. தமிழ் மக்கள் இடம்பெயர்ந்து வாழநேர்ந்து விட்டது. காசிநாதர் கிண்ணியாவில் பிறந்து வளர்ந்தவர். அத்தோடு கல்விப் பயிர் வளர்த்தவர். அதிகாலையில் வெள்ளை உடையில் ஊர்வலம் வருவார். அவரது வாலாமணிப் "பொக்கற்" நிறைந்து மிட்டாய் இருக்கும். தெருவில் நடப்பார். வீட்டுப் படலையில் நிற்பார். பிள்ளைகளை அழைப்பார். மிட்டாய் கொடுப்பார். பிள்ளைகள் அவர் பின்னால் போவார்கள். பிள்ளைகள் பாடசாலையை நிறைப்பார்கள். கற்பித்தல் நடைபெறும். கிண்ணியா மக்கள் மிகவும் நல்லவர்கள். அவர்களது மொழிநடை கேட்பதற்கு இனிமையானது. உவமையணி புகுந்து விளையாடும். மக்கள் காசிநாதர்மேல் மதிப்பு வைத்திருந்தனர்.

இன்று கிண்ணியா கல்வியில் முன்னேறியுள்ளது. அதற்குக் காலானவர் காசிநாதர்தான். அவரால்தான் கிண்ணியாவில் படித்த சமூகம் தோன்றியது. அவரை இன்றும் நினைக்கின்றனர். அவரது மனைவியும் அதிபராகப் பணி புரிந்தவர். மகளும் மருமகனும் சிறந்த ஆசிரியர்கள். மகன்தான் உங்கள் மாமா சட்டத்தரணி சிவபாலன். மனிதநேயம் கொண்டவர். அவர் ஒரு சட்டத்தரணி. அத்துடன் அவர் சிறந்த கலைஞர். கலா ரசிகர். இலக்கிய அறிவு கைவரப் பெற்றவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு குறுந்திரைப்படத்தைத் தயாரித்து நெறிப்படுத்தியவர். சமூக சேவையில் தன்னை அர்ப்பணித்துச் சேவையாற்றுகிறார்". ஆனந்த பாஸ்கரன் சொல்லிக் கொண்டே சென்றார். வாகனத்தில் ஏற ஆயத்தமாகினர். மீண்டும் தொடர்ந்தார்.

''தம்பலகாமம் மிகச்சிறந்த கிராமம். தம்பலகாமத்தில்தான் தங்கம்மா பிறந்தார். அவர் ஒரு கிராமத்துப் பெண். தங்கம்மா ஒரு தீர்க்கதரிசி. அத்துடன் மிகப் புரட்சிகரப் பெண்ணாகவும் விளங் கினார். திருகோணமலையில் பெண்களின் எதிர்காலம் பற்றிச் சிந்தித்தவர். பெண் கல்வியைப் போற்றியவர். அவரது கணவர் சண்முகம். கணவர் இறந்ததும் கவலையடைந்தார். தனது கணவனை நினைந்து உருகினார். திருகோணமலையில் கல்விக் கான வித்தை ஊன்றினார். ஒரு கிராமத்துப் பெண் நட்ட வித்து பெரிய ஆலமரமாகி விட்டது. அதன் நிழலில் பல்லாயிரக்கணக் கான மாணவியர் பயின்றனர். இன்றும் பயில்கின்றனர். கல்வி அறுவடை செய்கின்றனர். ஆண்களுக்குச் சமமாகத் திகழ்கின் றனர். திருகோணமலையின் பிரபலமான மகளிர் கல்லூரியாக அது விளங்குகிறது. அது எந்தக் கல்லூரி? சொல்லுங்கள் பார்ப்போம்.'' கேட்டுவிட்டுப் பிள்ளைகளைப் பார்த்தார்.

''அப்பா அது எங்கள் கல்லூரி'' நிமேசிக்கா ஆர்வத்தோடு துள்ளினாள். ''தங்கம்மாவின் புகழை ஸ்ரீசண்முகா இந்து மகளிர் கல்லூரி பறைசாற்றுகிறது.'' ஆனந்தபாஸ்கரனது விளக்கம் இனித்தது. அனைவரது கவனமும் தம்பலகாமத்தில் இருந்தது. ''அப்பா! இங்கே படித்தவர்கள் நிறையவே இருக்கிறார்களா?'' அனுசியன் கண்களைச் சுழற்றிக் கேட்டான். ''இருக்கிறார் களாவா?'' ரதீபன் விழிகளை உயர்த்திக் கூறினான். நமது சித்திரவேல் அதிபர் தம்பலகாமம். விஞ்ஞானக் கல்விப் பணிப்பாளர் கணேஷபிள்ளை இருக்கிறார். அவர் தம்பலகாமம். நமது வலயக் கல்விப் பணிப்பாளர் திலகரத்தினமும் இந்த ஊர்தான். பண்டிதர் சரவணமுத்து இந்தவூர். இன்னும் பலர் இருக்கிறார்கள்" அடுக்கிக் கொண்டே போனான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6

முரளி இடையில் புகுந்தார். "கலை வளர்த்த இடம் தம்பல காமம். அண்ணாவிமார் கூத்துக் கலையை வளர்த்தார்கள். சண்முகலிங்கம் அண்ணர் பாடினால் அற்புதமாக இருக்கும். அமரர் பற்குணத்தார் உதவி அரசாங்க அதிபராக இருந்தார். அவர் காலத்தில் சண்முகலிங்கத்தார் கொடிகட்டிப் பறந்தவர். "ஈழத்துச் சௌந்தரராசன்" என்று போற்றப்பட்டவர். கிராமியப் பாடல்களுக்குப் பேர்போன இடம் தம்பலகாமம். இசையுணர்வும் இயற்கையாக இங்குண்டு". முரளி கூறிக் கொண்டார். எதிரே தம்பலகாமம் வேலாயுதம் தோன்றினார். அவர் பல விடயங்களை அறிந்தவர். எழுத்தாளர். சங்க இலக்கியங்களைக் கற்றவர். பழைய பாடல்களை இசையோடு பாடுபவர். அவரோடு உரையாடுவது சந்தோசமானது. ஆனந்தபாஸ்கரன் அவரது கைகளைப் பற்றினார். அன்போடு உரையாடினார். நன்றி கூறிப் புறப்பட்டனர். வாகனம் நகர்ந்தது. நிமேசிக்காவின் கவனம் கோயிலைச் சுற்றியிருந்தது. அவள் அப்பாவைப் பார்த்தாள்.

"அப்பா கோயிலின் கோபுரம் அழகானது. இந்தக் கோயில் அண்மையிலா திருத்தப்பட்டது"? நிமேசிக்கா கேட்டாள். "ஓம்" என்று ஆனந்தபாஸ்கரன் பதிலளித்தார். இந்தக் கோயில் எப்போது கட்டப்பட்டது? சந்திரன் கேட்டார். "இது பறங்கியர் படையெடுப்பின் போது கட்டப்பட்டது என்பார்கள். குளக்கோட்டன் கட்டியாதகவும் கதை. கந்தளாய்க் குளத்தையும் அவர்தான் கட்டியதாகக் கதைகள் உண்டு. ஆனால் மகாவம்சத்தில் வேறுபல செய்திகளும் உண்டு". இப்போது சிறுவர்கள் ஒன்று சேர்ந்து விட்டனர். சிலர் எழுந்து ஆட முயன்றனர். சமனநிலை தவறியது. சாய்ந்து சிரித்தனர். சிலர் பாடினர்.

"இலங்கை எவ்வளவு அழகான நாடு. ஆனால் நமது நாட்டில் ஒற்றுமை இல்லை. இது நமது நாடு. இந்த உணர்வு எல்லோர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளத்திலும் உதிக்கவேண்டும். சரி பாடுவோமா'' நிமேசிக்கா தொடங்கினாள். சேர்ந்து எல்லோரும் பாடினார்கள். பாடல் இனித்தது. பிள்ளைகளின் உள்ளங்களில் ஒரு உத்வேகம். முரளி மனதினில் இசைமீட்டிக் கொண்டார்.

இலங்கை என்பது எம்நாடு - நாம்
இலங்கையர் என்றே பண்பாடு.
இலங்கிடும் செல்வம் உளநாடு - எவரும்
இசைந்து புகழும் திருநாடு.

மத்தியில் உயர்ந்த மலைமுடிகள் - இடை
மகிழ்ந்து வழியும் சிறுநதிகள்.
தத்தித் தாவிடும் குரங்கினங்கள் - கை
தவறி உருளும் பலாக்கனிகள்.

பசுமைக் கம்பளி போர்த்திருக்கும் - கண்டி
பனியில் குளித்து வேர்த்திருக்கும்.
பசுந்தளிர் பூக்கள் விரிந்திருக்கும் - எங்கும்
பாடும் தென்றல் பாட்டவிழ்க்கும்.

தேயிலைச் செடிகள் தலைநிமிரும் - அதைத்
தேடிச் சென்றே கைபறிக்கும்.
பாயும் நதிகள் விழுந்தெழும்பும் - அங்கே
பதுங்கும் மின்வலு மேலெழும்பும்.

பாடுவதும் தாளம் போடுவதுமாக மகிழ்ந்தனர். வாகனம் ஓடிக் கொண்டிருந்தது. சந்திரன் கதைகளைக் கேட்பார். ஆனாலும் அவரது கவனம் வாகனத்தில் இருந்தது. பார்வை வீதியில் ஊர்ந்தது. மாமி உசார்ப்படுத்துவார். மற்றப் பயணங்களை விடவும் இது இன்ப மாக இருந்தது. கலா மாமியும், அனுஜா சித்தியும் வந்திருந்தனர். அது பிள்ளைகளுக்கு சந்தோசத்தைக் கொடுத்தது. வாகனம் கந்தளாயை நெருங்கியது.

பாடலை மெய்மறந்து ரசித்தார்கள். கைதட்டி ஆரவாரம் செய்தார்கள். கந்தளாய் வந்ததும் எட்டிப் பார்த்தனர். கந்தளாய்க்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளம் பரந்து விரிந்து கிடந்தது. தண்ணீர் ததும்பி அலை புரண்டது. அது கண்ணுக்கு எட்டிய தூரம்வரை பரந்திருந்தது. குளக்கட்டின் மீது பெரிய தார்வீதி. வாகனங்கள் போவதும் வருவதுமாக இருந்தன. குளக்கட்டு உயர்ந்திருந்தது. கட்டின் இரு பக்கமும் பெரிய மரங்கள். மரங்கள் குதூகலித்தன. புளிய மரங்கள் குடை விரித்திருந்தன. பூவும் பிஞ்சும் காயுமாய்க் காட்சி தந்தன. பரந்து விரிந்த புளிய மரத்தைப் பார்த்தனர். அதன் கீழ் வாகனம் நின்றது. அதனோரமாகப் பனையொன்று காற்றில் ஆடியது. பனையோலைகள் சரசரத்தன. அவற்றைத் தூக்கிக் காற்று விளையாடியது. தண்ணிரைக் காற்று அழுத்தி அமுக்கியது. அழுத்தம் அலைகளாக வெளியேறின. வாகனத்தை விட்டு இறங்கினார்கள். உணவுப் பொட்டலங்கள் எடுக்கப்பட்டன. மரத்தின் கீழ் வந்திருந்தனர்.

அவர்களைச் சூழ்ந்து குரங்குகள். சுற்றி அமர்ந்து கொண்டன. குட்டிகளும் வந்து துள்ளிவிளையாடின. உணவு பரிமாறப்பட்டது. உண்டனர். உண்ணும்போது குரங்குகளுக்கும் கொடுத்தனர். அவை பாய்ந்தெடுத்து உண்டன. அங்கும் இங்கும் துள்ளிப் பாய்ந்தன. மகிழ்ந்து துள்ளின. மரங்களில் தாவியேறின. குட்டிக் கரணங்கள் போட்டன. குளக்கரையைப் பார்த்தனர். மண்ணரிப் பைத் தவிர்க்கப் பெருங்கற்கள் அடுக்கப்பட்டிருந்தன. ஒரு பத்து நிமிடங்கள் அங்கு செலவழித்தனர். நேரம் பொன்னானது. போனால் திரும்பி வராதது. பயனுள்ள வழிகளில் செலவிட்டனர். குளத்தைப் பார்வையிட்டனர். எவ்வளவு பெரிய குளம். எப்படி இந்தக் குளத் தைக் கட்டினார்கள்? வியப்பாக இருந்தது.

“அப்பா இந்தக் குளத்தை அக்ரபோதிதானே கட்டினான். சமூகக் கல்விப் பாடத்தில் படித்தேன். குளக்கோட்டன் கட்டியது பிழை தானே?” அனுசியன் சொன்னான். அவனோடு ரதீபனும் சேர்ந்து கொண்டான். “அதுதானே” நுசாந்தனும் பக்கம் பாடினான். “குளக் கோட்டன் கட்டினான். அக்ரபோதி திருத்தி அமைத்தான். இப்படியும் வரலாறு கூறுகிறது.” முரளி கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"யார் குளக்கோட்டன்? யார் அக்ரபோதி? இது இப்போது நமக்கு வேண்டாம். ஆனால் குளங் கட்டிய கதை மட்டும் எனக்குத் தெரியும். எனக்கு எங்கள் பாட்டி சொன்னவர். இது கர்ணபரம்பரைக் கதை தான். அது உண்மையாகவும் இருக்கலாம்." ஆனந்தபாஸ்கரன் சொன்னார். "கதையா? அப்பா அதைச் சொல்லுங்கள். ஆசையாக இருக்கிறது." நிமேசிக்கா கெஞ்சினாள். பிள்ளைகள் ஆரவாரித் தனர். கட்டின் அமைப்பை விளக்கினார். துரிசைக் காண்பித்தார். இந்தப் பெரிய குளக்கட்டைப் பூதங்கள்தான் கட்டின. ஆனந்த பாஸ்கரன் தொடங்கினார். "பூதங்களா? உண்மையாகவா"? ஆச்சரியத்தோடு வினாவினர். "ஆம் உண்மைதான். எனக்குப் பாட்டி சொன்னவர்." என்று விளக்கினார்.

இராவணன் இயக்க குலத்து மன்னன். திருக்கோணேஸ்வரம் அவன் காலத்துக்கு முன்னமேயே இருந்தது. இராவணன் காலத்தில் இந்தக் குளமும் இருந்தது. குளக்கோட்டன் அவன் வழிவந்தவன். இந்தக் குளத்தை விரிவுபடுத்திக் கட்டினான். அவனது மனைவி ஆடகசௌந்தரி. அவளிடம் பூதப் படை இருந்தது. வேலைகள் உள்ளபோது மட்டும் பூதங்களை அழைப்பார்கள். வேலைகள் முடிந்ததும் அவை போய்விடும். குளம் அமைக்கும் பகுதியை மன்னன் பார்வையிட்டான். குளக்கட்டு அமைய வேண்டிய இடத்தையும் தேர்ந்தெடுத்தான். இரண்டு மலைகள் இருந்தன. இரண்டையும் இணைத்தால் குளம் உருவாகிவிடும். அதற்குரிய நிதி வளத்தையும் தேடிக்கொண்டான். குளம் கட்டு வதற்குரிய வேலைகள் தொடங்கின. தங்கள் பூதப் படைகளை அழைத்தான். அவை அவன்முன் நின்றன. கட்டளை இட்டான். பூதங்கள் கூடைகளில் கல்லும் மண்ணும் சுமந்தன. குளக்கட்டில் கொண்டு வந்து கொட்டின. குளக்கட்டு உருவாகியது. கட்டும் வேலை விரைவில் முடிந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகராட்சி மன்றம்

# 7

பூதங்களுக்கு அதிகளவு உணவு வேண்டும். பூதங்கள் வேலை யில்லாது அலைந்தன. அவற்றுக்குரிய காலக்கெடு முடியவில்லை. அவற்றைப் போகச் சொல்லவும் முடியவில்லை. அவை காலையில் வந்து வேலைகள் கேட்கும். உணவும் கேட்கும். இந்தத் தொல்லை நீடித்தது. பூதங்கள் போவதாக இல்லை. அரசன் கவலைப்பட்டான். அரசனின் கவலை அதிகரித்தது. அரசி அரசனை உற்றுப் பார்த்தாள். "ஏன் கவலை?" என்றாள். அவன் பூதங்களைப் பற்றிச் சொன்னான். "இதற்குப் போய் கலங்கலாமா? கவலை வேண்டாம். மனதினிலே உறுதி வேண்டும். அறிவும் வேண்டும். அறிவை உரிய நேரத்தில் வேகமாகப் பயன்படுத்தவும் வேண்டும். அதுதான் விவேகம். பூதங்களை நான் பார்த்துக் கொள்கிறேன். நீங்கள் நிம்மதியாய் இருங்கள்." என்று அரசி கூறினாள்.

அரசனுக்கு ஒன்றும் புரியவில்லை. அரசி என்ன செய்யப் போகிறாள்? அவனுக்கு புதிராக இருந்தது. மறுநாள் காலை பூதங்கள் வந்தன. "வேலை வேண்டும்" என்றன. "தேவி நீயே இவைகளுக்கு உரிய வேலைகளைச் சொல்." அரசன் அரசியிடம் கூறினார். அரசி எழுந்து வந்தார். "வேலைதானே. இருக்கிறது. பத்து முதிரை மரங்கள் வேண்டும். அரசி முடிக்கவில்லை. "இதோ ஒரு நொடியில் கொண்டு வருகிறோம்." கூறிப் புறப்பட்டன. "நில்லுங்கள். நான் சொல்வதைக் கவனியுங்கள். பிறகு உங்கள் வேலைகளைச் செய்யுங்கள்" அரசி கட்டளை இட்டாள். பூதங்கள் திரும்பி நின்றன. "பத்து முதிரை மரங்களைத் தறியுங்கள். அவற்றைக் குளத்தினுள் போடுங்கள். ஒரு கிழமை கழித்துத் தூக்கிக் கொண்டு வாருங்கள். இந்த இடத்தில் அடுக்க வேண்டும். சரிதானே"? கூறி இடத்தையும் காட்டினாள். பூதங்கள் "சரி" என்று கூறின. "சொன்னபடி செய்யாது விட்டால் தண்டனை கிடைக்கும்." அரசி கடுமையாகக் கூறினார். "பூ.. இவ்வளவுதானா"? என்று பூதங்கள் கூறிச் சென்றன. மரங்களைத் தறித்துக் குளத்தில் போட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு கிழமை கழித்துப் பூதங்கள் வந்தன. நீரில் ஊறிய மரங் களைப் பார்த்தன. அட்டகாசமாகச் சிரித்தன. மரங்களைப் புரட்டின. மரங்களின் பட்டைகள் கழன்று விட்டன. பூதங்கள் மரங்களைத் தூக்கின. பூதங்களுக்குக் கைவிரல்கள் கட்டையானவை. மரங்கள் வழுக்கி வழுக்கி விழுந்தன. பலமுறை தூக்க முயன்றன. தூக்கித் தூக்கிக் களைத்து விட்டன. அரசியின் தண்டனைக்குப் பயந்தன. சொல்லாமல் கொள்ளாமல் ஓடிவிட்டன. அரசியின் மதிநுட்பத்தை அரசன் போற்றினார். நீதான் எனது "திருமதி" என்றான். ஒரு கணவனுக்கு மதியுரைப்பவள்தான் மனைவி. அவள்தான் திருமதி. மனைவியைத் "திருவாட்டி" என்றும் கூறுவர். திருவாட்டி அகப்பை யைக் கையில் எடுப்பவர். அதுதான் அவரது ஆயுதம். கணவனை ஆட்டி வைப்பவள்.'' என்று ஆனந்தபாஸ்கரன் சொன்னார். எல்லோரும் கலகலத்துச் சிரித்தார்கள்.

''அப்பா! அம்மா திருவாட்டியா? திருமதியா? அப்பா, நீங்கள் சொல்லுங்கள்.'' நிரூஷன் திடீரென அப்பாவைப் பார்த்துக் கேட்டான். அப்பா திணறிப் போனார். அவர் எதிர்பார்க்காத கேள்வி. பெண்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். பதிலை எதிர்பார்த்துக் காத்திருந்தனர். விவாதம் தொடங்கலாம் அல்லவா?. கலாமாமி பார்த்திருந்தார். "அம்மா மட்டுமல்ல. எல்லாப் பெண்களும் பல நேரங்களில் திருமதிகள்தான். சில நேரங்களில் திருவாட்டிகளா கவும் இருக்கவேண்டும். அப்பொழுது தான் குடும்பம் நன்றாக இருக்கும்'' இந்தப் பதிலை எல்லோரும் வரவேற்றனர். ஆனந்த பாஸ்கரன் கதையைத் தொடங்கினார்.

''பூதங்களில் ஒரு முடப்பூதமும் இருந்தது. அதனால் ஓடமுடிய வில்லை. அது ஒரு மலையிடுக்கில் ஒழிந்து கொண்டது. மலை யிடுக்கில் ஒருவர் தடியை விட்டார். அந்தத் தடியைப் பூதம் பிடித்துக் கொண்டது. அவர் போகும்வரை தடியை விடவில்லை. இன்றும் அந்த முடப்பூதம் அங்கு இருக்கிறதாம்.'' அவர் சொல்லி முடித்தார். அதிசயமாகக் கதையைக் கேட்டனர். தங்களைச் சுதாகரித்துக் கொண்டனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளக்கட்டில் இருந்து கிழக்குப் புறம் பார்த்தனர். கண்ணுக்கு எட்டிய தூரம்வரை வயற்பரப்பு. தென்னைகளும் பல்வேறு மரங் களுமாய் காட்சியானது. சீனித் தொழிற்சாலை தூரத்தே தெரிந்தது. அது இப்போது இயங்கவில்லை. குளத்தின் மதகு ஊடாக நீர் பாய்ந்தது. நுரைகள் மிதந்து கொண்டிருந்தன. மதகின் அருகே சென்றனர். துரிசு தெரிந்தது. துரிசுதான் குளத்தின் கதவு. துரிசு திறந்தால்தான் நீர் வெளியேறும். தண்ணீர் சலசலத்துப் பாயந்தது. ஓடும் வேகத்தால் நுரை பரந்தது. நீர்க்குமிழிகள் மிதந்து அசைந்து உடைந்தன. தண்ணீர் ஒலி எழுப்பிப் பாய்ந்தது. சிலப்பதிகாரத்தில் காவிரி ஆறு பாய்வதை நினைவூட்டியது.

கால்வாயைப் பார்த்தனர். அதன் ஊடாகத் தண்ணீர் பாய்ந்தது. சலசலத்து ஓடியது. அடையல்களை அள்ளிக் கொண்டு சென்றது. அடையல்கள் கால்வாய் ஓரங்களில் படிந்தன. நுரையும் அடை யலும் மாலையாக விரிந்தது. அற்புதமான காட்சி உருவாகியது. "தண்ணீர் பாயும் ஒலியைக் கவனியுங்கள்." ஆனந்தபாஸ்கரன் கூறினார். அனைவரும் காது கொடுத்து அவதானித்தனர். தண்ணீர் பாயும் ஒலிக்கு ஏற்றவாறு ஒலித்தனர்.

"கலீர் கலீர்" என்று நிமேசிக்கா ஒலித்தாள். "தானதன தானதன" என்று வசந்தி குரல் கொடுத்தார். "கலகல கலகல" என்று கலா மாமி ஒலியெழுப்பினார். "சரிகம, மபதநி" என்று அனுஜா இசை பாடினார். ஒவ்வொருவரும் ஒவ்வொரு மாதிரி இசை எழுப்பினார் கள். எல்லோரும் விழுந்து சிரித்தார்கள். சந்தோசமாக இருந்தது. சந்திரன் கையைப் புரட்டிப் பார்த்தார். "நேரம் போகிறது. புறப்படு வோமா"? என்றார். விழுந்தடித்து வாகனத்தில் ஏறினார்கள். வாகனம் புறப்பட்டது.

துரிசைத் தாண்டி வாகனம் சென்றது. வலப்பக்கம் பாறைத் தொடர் இருந்தது. பாறைத் தொடர் உயர்ந்து வளைந்து சென்றது. ஒரு வளைவில் பத்தினித் தெய்வத்தின் கோயில். உயரத்தில் இருந்தது. வீதி வளைந்து ஓடியது. வலப்பக்கமாகக் குளப்பரப்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரிந்து கிடந்தது. கண்ணுக்கெட்டிய தூரம்வரை தண்ணீர்தான். சூரிய வெப்பத்தில் ஆவியாக்கம் தெரிந்தது. தண்ணீரின் மேல் புகைமூட்டம் பரவி இருந்தது. அதனால் தூரத்துப் பச்சை கருமையாகத் தெரிந்தது. குளத்தின் ''வான்வழி'' தெரிந்தது. ஆங்கிலத்தில் ''ஸ்பில் வே'' என்பார்கள். குளம் நிரம்பினால் நீர் வழிந்தோட வழிவேண்டும். இல்லாவிட்டால் குளம் உடைப் பெடுக்கும். வான் பாயும் இடத்தில் பாலம் இருந்தது. பாலத்தைத் தாண்டி வாகனம் சென்றது. பாதையின் இருபக்கமும் மந்தைக் கூட்டம். எவ்வளவு அமைதியாக அவை வாழ்கின்றன. கன்றுகள் துள்ளிப் பாய்ந்து ஓடித்திரிந்தன. அவர்களது மனமும் துள்ளியது. கைதட்டி ரசித்து மகிழ்ந்தார்கள்.

''அப்பா! தண்ணீர் மதகால் இரைந்து ஓடியது. அதன் ஓசை உங்களுக்கு எப்படி இருந்தது.? நீங்கள் கூறவில்லையே. கூறுங் களேன்.'' நிமேசிக்கா அப்பாவிடம் கேட்டாள். அவளைக் கேட்கும் படி மற்றவர்கள் தூண்டினார்கள். ஆனந்தபாஸ்கரன் அவர்களைப் பார்த்தார். ''சரி கூறுகிறேன். எனக்கு 'அம்மான் கண்' 'அம்மான் கண்' என்று கேட்டது. இங்குள்ளவர்களுக்கும் அப்படித்தான் கேட்கும். அப்படித்தான் கூறுவார்கள்.'' என்று தொடங்கினார். ''ஏன் அப்படிக் கேட்கிறது''? நிரூஷன் வினா தொடுத்தான். ''அது பெரிய கதை. மனதை உருக்கும் கதை. கர்ணபரம்பரைக் கதை.'' என்றார்.

''அப்பா... அப்பா... சொல்லுங்கள். ஆசையாக இருக்கிறது.'' அனைவரும் ஒத்தூதினர். ''அடுத்த கதை தயார். இதோ வருகிறது. கவனமாகக் கேளுங்கள்''. அனுசியன் எல்லோர் கவனத்தையும் ஈர்த்தான். ஆனந்த பாஸ்கரன் ஒரு கனைப்போடு கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8

''குளம் கட்டிய கதை கூறினேன் அல்லவா? நினைவில் இருக்கிறதா''? பிள்ளைகளைப் பார்த்துக் கேட்டார். அவர்கள் ஒரே குரலில் ''ஆமாம்'' போட்டார்கள். ''பூதங்கள் கல்லும் மண்ணும் போட்டன. அவற்றை வெகுதூரத்தில் இருந்து கொண்டு வந்தன. பெரிய கூடைகளில் சுமந்து வந்தன. குளக்கட்டில் கூடைகளைக் கவிழ்த்துக் கொட்டின. போகும் வழியில் கூடைகளைக் கவிழ்த்துத் தட்டின. எஞ்சியிருந்தவை அந்த இடங்களில் குவியலாகின. அவை பின்னர் திடல்களாயின. அவை குட்டித் தீவுகள்போல் தெரியும். அந்தத் திடல்களை மக்கள் தமது குடியிருப்புக்களாக மாற்றிக் கொண்டனர். ஒவ்வொரு திடலுக்கும் ஒவ்வொரு பெயர். ஒன்று நடுப்பிரப்பன் திடல். நாயன்மார் திடல் இன்னுமொன்று. அதுபோல் குஞ்சரப்பான் திடல், சிப்பித்திடல் போன்றன அவற்றுள் சிலவாகும்.

கோயிற் குடியிருப்பில் ஆதிகோணநாதர் கோயில் இருக்கிறது. அது நாங்கள் பார்த்து வந்த கோயில். குளக்கட்டில் துருசி முக்கிய மானது.'' நிமேசிக்கா குறுக்கிட்டாள். ''அதுதான் குளத்தின் கதவாகும். இல்லையா அப்பா''? அப்பாவுக்கு சந்தோசம். ''கெட்டிக்காரி'' என்று சொன்னார். பின் தொடர்ந்து விளக்கினார். துருசியைத் திறந்தால் மதகு ஊடாகத் தண்ணீர் பாயும். துருசி வைக்கும் இடத்தில் பிரச்சினை காத்திருந்தது. தண்ணீர் உடைப்பெடுத்துப் பாய்ந்தது. பலமுறை முயன்றும் பயனில்லை.

குளக்கோட்டு மன்னன் வருந்தினான். பலர் பல வழிகளைக் கூறினர். அந்த வழிகளில் ஒன்றை அனைவரும் ஆமோதித் தார்கள். அதனைக் கவலையோடு வலியுறுத்தினார்கள். மன்னன் இடியேறுண்ட நாகம் போலானான். கதிகலங்கி அப்படியே அமர்ந்து விட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னன் மிகவும் கவலை அடைந்தான். வேறு வழி தெரிய வில்லை. செய்வதறியாது தவித்தான். நடைப்பிணமாக உலாவினான். சிந்தித்துச் சிந்தித்துக் களைத்து விட்டான். அமைதியும் நிம்மதியும் அவனை விட்டு ஓடின. அவனுக்கு நித்திரை யும் வரவில்லை. கண்கள் சிவந்து குழி விழுந்தன. குளத்தினால் மக்களுக்கு வாழ்வு கிடைக்கும். வயல் விளையும். உணவு எல்லோ ருக்கும் கிடைக்கும். குடிநீர்ப் பஞ்சம் நீங்கும். நாடு செழிக்கும். நல்லன நடக்கும். மன்னனது மனதினிலே உறுதி உருவாகியது. "எனது பாசம் முக்கியம் இல்லை" என மெல்ல எழுந்தான். நேரே தங்கையிடம் சென்றான்

தங்கை, ஆசை மகனை கட்டித்தழுவினாள். கொஞ்சி விளை யாடினாள். அவன் ஓடும் அழகைப் பார்த்தாள். சிரித்து மகிழ்ந்து கொண்டிருந்தாள். அந்தக் காட்சி அவனை சோகத்தில் ஆழ்த்தியது. தனது மனதை உறுதிப்படுத்திக் கொண்டான். பெரியவர்கள் எடுத்த முடிவை நினைந்தான். சோகத்தோடு விளக்கினான். அப்படியே கூனிக் குறுகி நின்றான். தங்கை விக்கித்துப் போனாள். அரண் மனை சோகத்தில் ஆழ்ந்தது. அரச குடும்பம் ஒன்று சேர்ந்தது. எல்லோர் முகத்திலும் சோகம் குடிகொண்டது. நாட்டு மக்களை எண்ணிப் பார்த்தனர். இரவு முழுவதும் விவாதித்தனர்.

"நமக்கு நாடும் நம் மக்களும் முக்கியம். மக்களைக் காப்பது அரச குடும்பத்தினரது கடமை. நாம் தியாகம் செய்யத் தயங்கக் கூடாது. நாம் வாழ்வது இந்த நாட்டு மக்களுக்காகத்தான். நமது முடிவில்தான் நாட்டின் தலைவிதி உள்ளது. குளம் இருந்தால்தான் மனித குலம் வாழும். தியாகமும் அர்ப்பணிப்பும் நமக்குத் தேவை." ஒரே கருத்தாகவே அரச குடும்பம் இருந்தது. அந்த முடிவுக்கு வந்து விட்டனர். எனினும் மன்னன் கண்களிலே கண்ணீர். "மன்னா நமது கடமையைச் செய்வோம். நாம் செய்வதெல்லாம் இந்நாட்டு மக்களின் நன்மைக்காகத்தான். மனதை ஒருநிலைப்படுத்துங்கள். மனதினிலே உறுதியை நிறுத்துங்கள்." விவாதம் முடிந்தது. அனைவரும் கலைந்து சென்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழக்கில் மெல்லிய வெளிச்சம் படர்ந்தது. சேவல்கள் கூவின. அந்தக் கூவல் வழமைபோல் இருக்கவில்லை. குருவிகள் பாடின. காகங்கள் கரைந்தன. பறவைகள் இனிய இசையெழுப்பின. ஆனால் இவற்றை ரசிக்கும் நிலையில் மக்கள் இல்லை. யாவும் சோக மயமாகவே இருந்தன. சூரியக் கோளம் சிவந்து கிளம்பியது. அரச குடும்பத்தவர்களது கண்களும் சிவந்தே கிடந்தன. பொழுது யாருக்காகவும் காத்து நிற்பதில்லை. அது புறப்பட்டுவிட்டது.

குளக்கட்டு எங்கும் சனக்கூட்டம். பெருந்திரளான மக்கள் திரண்டு விட்டார்கள். குளக்கோட்டன் துரிசு அமைக்கும் இடத்தில் நின்றான். குளத்தைச் சுற்றி ஒருமுறை பார்த்தான். சனங்களையும் பார்த்தான். அவர்களது முகங்களைப் பார்த்தான். குளத்தைச் சூழ்ந்துள்ள வயற் பரப்பையும் பார்த்தான். மன்னனைச் சூழ்ந்து அமைச்சர்கள். மன்னன் பக்கம் அவனது தங்கை வந்தாள். அவளது முகத்தை மன்னனால் பார்க்க முடியவில்லை. அவனுக்குத் தைரியம் இல்லை. ஆனால் அவள் உறுதியாகவே இருந்தாள். "அண்ணா! இப்போதுதான் மனதினிலே உறுதி வேண்டும். நமது நாட்டு மக்களுக்காகத்தான் நாமிருக்கிறோம். கடமை முக்கியம். கவலையை விடுங்கள்." தனது ஒரே மகனான குழந்தையைத் தூக்கினாள். "அண்ணா! இதோ குழந்தை" மன்னனிடம் நீட்டி னாள். அந்த அழகான குழந்தையை இருகைகளாலும் ஏந்தினான். குழந்தையைக் கொடுத்தாள். திரும்பிப் பார்க்காது சென்றுவிட்டாள்.

குழந்தையை வாரியணைத்துக் கொண்டான். கண்கள் மாரி பொழிந்தன. கண்ணீரோடு முத்தமிட்டான். அந்தக் குழந்தையை குளத்தில் நீராட்டினர். மலர்மாலைகள் அணிவித்தனர். அணிகலன் களால் அலங்கரித்தனர். சிறுவன் சிரித்துக் கொண்டிருந்தான். சமயச் சடங்குகள் முடிந்தன. சிறுவனைக் குளக்கட்டில் குறுக்காகக் கிடத்தினர். மக்கள் கண்கலங்கி நின்றனர். முதலில் அவன்மேல் மலர்களைத் தூவினர். அணிவகுத்து மக்களும் வந்தனர். மலர் களைத் தூவினர். அந்தச் சிறுவன் சிரித்துக்கொண்டே இருந்தான். அவனை மலர்கள் மூடிக் கொண்டன. எனினும் அவனது முகம் மட்டும் தெரிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளக்கோட்டன் தனது கைகளால் மண்ணை அள்ளினான். கண்களை மூடினான். மண்ணைத் தூவினான். சிறுவனின் வாயிலிருந்து ஒலி பிறந்து வந்தது. அவனது காதுகளில் அறைந்தது. ''அம்மான் கண்'' என்ற ஒலி அவனது காதுகளில் பட்டது. அரசன் சிலையானான். சிறுவன் குளக்கட்டினுள் சங்கமித்து விட்டான். உடைப்பெடுக்கும் இடத்தில் உரமாகிவிட்டான். மக்கள் கண்ணீரைக் காணிக்கையாக்கினர். இந்தச் சிறுவனின் தியாகத்தை வியந்தனர். அந்த இளந் தாயின் மனவலிமையைப் போற்றினர். குளக்கட்டு உறுதி அடைந்து விட்டது. இன்றும் தண்ணீர் மதகின் ஊடாகப் பாய்கிறது. அப்போது ''அம்மான் கண். அம்மான் கண்'' என்றே ஒலித்துப் பாய்கிறது''. ஆனந்தபாஸ்கரன் கதையை முடித்தார்.

பிள்ளைகள் மௌனம் காத்தனர். ''என்ன பேசாது இருக்கிறீர்கள்.''? அவரே தொடர்ந்தார். ''பாவம் அப்பா. அந்தச் சிறுவன்''. அவர்கள் மனதில் சிறியதொரு சோகம் குடிகொண்டு விட்டது. அதன் பிரதிபலிப்பாக அந்த வார்த்தைகள் வந்தன. ''அப்பா இது உண்மையில் நடந்த கதையா? எப்போது நடந்தது.''? ரதீபன் கேட்டான். ''உண்மைக் கதையா? இல்லையா? என்பது எனக்குத் தெரியாது. உண்மையாகவும் இருக்கலாம். இல்லாமலும் இருக்கலாம். எனக்கும் எங்கள் பாட்டிதான் சொன்னார். அவருக்கும் அவரது பாட்டிதான் சொல்லி இருப்பார். இது கர்ணபரம்பரைக் கதை. ஆனாலும் இதில் ஒரு உண்மை உள்ளது. அதுதான் மனதினிலே உறுதி வேண்டும். மனதில் உறுதி இருந்தால்தான் எதனையும் சாதிக்கலாம்''. அப்பா கூறினார்.

''கர்ணபரம்பரைக் கதை என்றால் என்ன?'' நிசோ கேட்டான். ''பரம்பரை பரம்பரையாக தொடர்வது. வாய்வழி வந்த கதை. மிகப்பழங் காலத்தில் இருந்தே சொல்லி வந்த கதை''. அனுசியன் விளக்கினான். அன்றைய அரச குடும்பத்தினரை நினைந்தனர். இன்றைய அரசியல்வாதிகளின் குடும்பங்களையும் நினைத்தனர். எவ்வளவு வேற்றுமைகள். வாகனம் இப்போது எலகரக் கால்வாயை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைந்தது. எலகரக் கால்வாய் மன்னர்களின் ஆட்சியின்போது கட்டப்பட்டது. கந்தளாய்க் குளத்துக்கு நீரைப் பாய்ச்சுகிறது.

மகாவலி வடக்கு நோக்கிப் பாயவேண்டும். நாடு செழிக்க நல்ல தொரு திட்டம். மகாவலி நீரினால் மின்னேரியாக் குளம் நிறையும். நிறைந்த நீரை எலகராக் கால்வாய் எடுத்துச் செல்லும். கால்வாய் வீதியைக் குறுக்கறுக்கிறது. அந்த இடத்தில் பாலம் இருக்கிறது. பாலத்தின் கீழ் கால்வாய் ஓடுகிறது. நீரினால் கந்தளாய்க் குளம் நிறையும். தண்ணீர் வயல்களுக்குப் பாயும். திருகோணமலை மக்களின் வீடுகளுக்கும் பாயும். வாகனம் நிறுத்தப்பட்டது. ஆனந்த பாஸ்கரன் இறங்கினார். அவரைத் தொடர்ந்து மற்றவர்களும் இறங்கினர். செக்பொயின்ற் பொறுப்பாளரின் அனுமதி கிடைத்தது. பாலத்தில் நின்று கால்வாயைக் காட்டினார். மகாவலி திசைதிருப்புத் திட்டம் பற்றிச் சொன்னார். "முதன்முதல் மகாவலி நீர் இந்தக் கால்வாய் ஊடாக வரும்நாள். மக்களுக்கு அறிவிக்கப்பட்டது. திருகோணமலை மாவட்ட மக்கள் திரண்டு இருந்தனர். அவர்கள் கைகளில் பாத்திரங்கள். பாத்திரங்களில் பால் நிறைந்திருந்தது.

மகாவலி நீர் மின்னேரியாக் குளத்தில் சேரும். பின் அங்கிருந்து கந்தளாய்க்கு வரும். தண்ணீர் திறந்து விடும்போது அறிவித்தனர். தண்ணீரை வரவேற்க ஆயிரக்கணக்கில் சனக்கூட்டம். பாலத் திலும் மக்கள். கால்வாய்க் கரையின் ஓரங்களிலும் நிறைந்திருந் தனர். எங்கள் அப்பாவும் நண்பர்களும் நின்றிருந்தனர். தண்ணீர் உருண்டு புரண்டு வந்தது. வரும்வழியில் பாலை ஊற்றினார்கள். நீரும் பாலும் சேர்ந்து ஓடியது. மக்கள் ஆரவாரித்து மகிழ்ந்தனர். கந்தளாய்க் குளம் நிறைந்தது."ஆனந்தபாஸ்கரன் விளக்கினார். வாகனத்தில் ஏறினார்கள்.

வாகனம் கல்லோயாவைத் தாண்டிச் சென்றது. அபிஷேக் "அம்மான் கண்" என்று கூறினான். நிரூஷனும் "அம்மான் கண்" என்று சொல்லிப் பார்த்தான். பிள்ளைகள் அனைவரும் அதனை உச்சரித்தனர். தண்ணீர் பாயும் ஒலியை ஒப்பிட்டனர். சரியாக ஒலித்தது. பலமுறை தமக்குள் சொல்லிப் பார்த்தனர். வாய்விட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்னார்கள். கலகல எனச் சிரித்தார்கள். "அப்பா! ஆலங்கேணிப் பாடலைச் சொல்லுங்கள். நிமேசிக்கா நினைவூட்டினாள். ஆனந்த பாஸ்கரன் உற்சாகமானார். "நான் சொல்லித் தருகிறேன். சேர்ந்து பாடுவோம். சரியா?" பாடத்தொடங்கினார்.

உப்புநீர் சிற்றாறு ஊரும் - தென்றல்
ஓடிவந்து மரஞ்செடியில் சாரும்.
செப்பலியும் மீனினமும் கூடும் - ஊரி
சேர்ந்து ஊதச் சில்வண்டு பாடும்.


கண்ணாவேர் மூச்செறிந்து வெடிக்கும் - கேட்ட
கான்குருவி மேலெழுந்து நடிக்கும்.
மண்ணளைந்து நண்டு விளையாடும் - மேதி
மாவலியின் தண்கரையை நாடும்.

தென்னையோடு மாபலாவும் ஆடும் - நாவில்
செந்தமிழும் கலைச்சுவையும் கூடும்.
புன்னை பனை பூச்சொரிந்து வீசும் -பசு
புற்தரையில் மேய்ந்து சுகம் பேசும்.

வயல்விளைந்து வண்டியிலே ஏறும் - மனம்
வானுயரும் கலையினிலே மூழ்கும்.
செயல்நிறைந்து ஆலங்கேணி கிடக்கும்-சனம்
செய்தொழிலில் ஈடுபட்டு உழைக்கும்.

இசையோடு பாடி மகிழ்ந்தனர். கைதட்டி ரசித்தனர். யன்னல் ஊடாகப் பார்த்தனர். இருபுறமும் அடர்ந்த காடுகள். குளிர்ந்த காற்று வாகனத்தில் மோதியது. யன்னலூடாகப் பாய்ந்தது. எல்லோரை யும் தழுவிச் சென்றது. காட்டின் பக்கம் கண்கள் பாய்ந்தன. "அதோ அங்கே பாருங்கள்." சனோ சத்தமிட்டான். தூரத்தே யானைக் கூட்டம் தெரிந்தது. மான்கள் வெருண்டு ஓடின. மயில்கள் கூட்டங் கூட்டமாகத் திரிந்தன. அழகான நீண்ட தோகைகளுடன் மயில்கள். தோகைகள் இல்லாத மயில்களும் திரிந்தன. "ஏன் சில மயில் களுக்குத் தோகைகள் இல்லை"? நிசோ கேட்டான். "ஆண்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயிலுக்குத்தான் தோகை வளரும். பெண் மயில்களுக்குத் தோகை வளர்வதில்லை. அது இயற்கையின் நியதி.'' அனுஜா விளக்கினார். வீதிகளில் குரங்குகள் பாய்ந்து திரிந்தன. இயற்கை அழகை ஊட்டியது. ''ஏன் இங்கு குரங்குப்பாலம் இல்லை''. சசாங்கன் விளாசினான். கொல்லென்று சிரித்தார்கள்.

வசந்தியின் மனம் ஆனந்தபாஸ்கரனின் கதையில் இருந்தது. அன்றே நாட்டு மக்களைக் காக்கச் சிறுவர்கள் தியாகிகளாகினர். அன்று இனப் பூசல் இல்லை. பேரினவாதிகளால் வரலாறுகளே தலைகீழாகி விட்டன. இன்றும் மண்ணைக் காக்கும் தியாகம் தொடர்கிறது. எத்தனை இளந்தளிர்கள் விதைகளாக விதைக்கப் பட்டுள்ளனர். வசந்தியின் மனம் கனத்தது. வாகனம் ஹபரணைச் சந்தியில் நின்றது. சந்திரன் இறங்கி கைகால்களை நிமிர்த்தினார். ஐந்து நிமிடங்கள் ஓய்வு. வெந்நீர்க் குடுவையில் தேநீர் இருந்தது. குடித்தார்கள். பின் வாகனம் புறப்பட்டது.

ஹபரணைச் சந்தியில் பிள்ளையார் கோயில். இங்கெல்லாம் இந்துசமயம் இன்றும் தொடர்கிறது. சந்தியைத் தாண்டியது. சந்தியில் 'செக்பொயின்ற்' இருந்தது. ஆனால், கெடுபிடிகள் இல்லை. தமிழர்கள் வாழும் பகுதிகளில் மட்டும் கெடுபிடிகள் அதிகம். க்டைகள் வீதி ஓரங்களில் இருந்தன. கண்டி வீதி எப்போதும் நெரிசலாகவே இருக்கும். வாகனங்கள் போவதும் வருவதுமாய் இருக்கும். அது முக்கியமான வீதி. உல்லாசப் பயணிகள் வருவார்கள். யானைச் சவாரி செய்வார்கள். ஏராளமான யானைகளை வளர்க்கிறார்கள். வெளிநாட்டவர் யானைச் சவாரி செய்ய இங்கு வருகிறார்கள். அதற்கு ஏற்ற வகையில் யானை களைப் பயிற்றியுள்ளார்கள். இங்குள்ளவர்கள் நல்ல வருவாயை உழைக்கிறார்கள்.

யானைகள் அசைந்து நடப்பது அழகாக இருக்கும். பெரிய காதுகளை ஆட்டும். அடிமேல் அடிவைத்து நடக்கும். முதுகில் அம்பாரி கட்டியிருக்கும். அதில் இருந்து சவாரி செய்வார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யானைப்பாகன் அருகில் நடந்து போவான். யானைகளின் சவாரி களைக் கண்டனர். சந்தோசமாக ரசித்தனர். அவற்றைக் கடந்து வாகனம் சென்றது. "அதோ சிகிரியா தெரிகிறது." முரளி கையைக் காண்பித்துக் கூறினார். "அது இலங்கையின் கலைக்கூடம். காசியப்பனின் கலைத்துவத்தை அது காட்டுகிறது. மலைக் கோட்டை வாசலில் இரு சிங்கச் சிலைகள். மலை உச்சியில் தனது மாளிகையை அமைத்து இருந்தான். சிகிரியா உச்சியில் இருந்து பார்க்க வேண்டும். மனதைக் கவரும் காட்சிகளைக் காணலாம். "குபுகுபு" எனக் காற்றுக் குடைந்து வீசும். இலங்கையின் புராதனச் சின்னமாக விளங்குகிறது. சுற்றுலா மையமாகவும் உள்ளது. மலைச் சுவர்களில் அழகான ஓவியங்கள். பார்ப்போரைப் பரவசப் படுத்தும். அந்த ஓவியங்களால் காசியப்பன் புகழ் நிலைக்கிறது." முரளி விபரமாகச் சொன்னார்.

## 9

வாகனம் தம்புள்ளச் சந்தியை அடைந்தது. தம்புள்ளச் சந்தி எப்போதும் பரபரப்பாகவே இருக்கும். சனநெரிசலும் அதிகம். மணிக் கூட்டுக் கோபுரத்தின் இடப் பக்கமாகத் திரும்பிச் சென்றது. "இங்கு கொஞ்சம் ஓய்வெடுப்போம்" சந்திரன் வாகனத்தை நிறுத்திக் கூறினார். எல்லோரும் இறங்கினார்கள். "சரி வாருங்கள். அந்த மலைக்கோட்டையில் ஒரு அற்புதமான விகாரை இருக்கிறது. அதனைப் பார்ப்போம்." ஆனந்தபாஸ்கரன் அழைத்தார். அவர் முன்னே சென்றார். எல்லோரும் பின் தொடர்ந்தனர். அது மலை யைக் குடைந்து செப்பனிட்ட விகாரை. அழகான ஓவியங்களும் சிற்பங்களும் இருந்தன. ஓவியங்கள் குகைச் சுவர்களில் அற்புத மாகச் சிரித்தன. எவ்வளவு அழகான ஓவியங்கள். எல்லாம் இயற்கையான சாயங்கள். உற்றுப் பார்த்தனர். அவற்றை வரைந்தவர்கள் யார்? அந்த ஓவியர்களை மனதால் போற்றி னார்கள். கண்களால் பேசிக் கொண்டனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விகாரையின் நடுமண்டபத்தில் பெரிய பாத்திரம் இருந்தது. அதனைக் "கிடாரம்" என்று கூறுவார்கள். அந்தக் கிடாரத்தைக் காட்டினார். நன்றாக விளக்கிக் கூறினார். "இதற்குள் சொட்டுச் சொட்டாக நீர் விழுகிறது. கிடாரம் நிறைவதற்கு ஒரு ஆண்டு வேண்டும். கிடாரம் நிறைந்ததும் உற்சவம் நடைபெறும். ஒவ்வொரு வருடமும் குறித்த காலத்தில் உற்சவம் நடைபெறும். இது இங்குள்ள முக்கிய அம்சம்.'' ஆனந்தபாஸ்கரன் கூறியதை நன்றாகக் கவனித்தனர். எல்லோரும் கிடாரத்தை எட்டிப் பார்த்தனர். அதற்குள் தண்ணீர் தெரிந்தது. ஒரு சொட்டுத் தண்ணீர் விழுந்தது. அந்த ஓசை காதுகளில் பாய்ந்தது. அது ஒரு இன்னிசை யாகப் பரவியது. புராதன காலத்து மக்கள் சக்திவாய்ந்தவர்கள். சிறந்த விஞ்ஞானிகள். பொறியியலாளர்கள். எப்படி இவற்றைச் சாதித்தனர்.? மலையைக் குடைந்து கலையை வளர்த்தார்கள்.

வெளியில் வந்ததும் வாகனத்தில் ஏறினார்கள். வாகனம் புறப்பட்டது. சற்றுத் தூரம் சென்றது. அனுசியன் கண்கள் சூழலை அவதானித்தன. அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. "இங்கே நன்றாகக் கவனியுங்கள். இவ்வளவு நேரமும் அப்பாதான் கதை சொன்னார். சுமூகக்கல்விப் பாடம் தொடங்கப் போகுது. நாம் படித்த வற்றை நேரில் பார்க்கப் போகிறோம். குறிப்புப் புத்தகத்தில் குறியுங்கள். சரியா?'' அனுசியன் கட்டளைபோல் கூறினான். பிள்ளைகள் செயற்பட்டனர். "அனுசியன்தான் கப்ரனோ"? கலா மாமி சிரித்துக் கொண்டே சீண்டினார். எல்லோரும் சேர்ந்து சிரித்தனர். சிறுவர்கள் தொடங்கி விட்டார்கள்.

பல ஊர்கள் வந்தன. பெயர்ப்பலகைகள் படிக்கப் பட்டன. பிள்ளைகளின் குரல்கள் ஒலித்தன. பெரிய ஆவாரமாக இருந்தது. செம்மண் பரந்து கிடந்தது. செழிப்பான தாவரங்கள். சுறுசுறுப்பான மக்கள். வளைந்து வளைந்து செல்லும் வீதிகள். நக்கிள்ஸ் மலைத் தொடர்கள் காட்சியாகின. அழகாக அமைந்து வரவேற்றன. ரதீபன் கைவிரல்களை மடக்கினான். கையை நீட்டினான். "எனது மொழி களைப் பாருங்கள். அந்த மலைத் தொடர்களையும் பாருங்கள். இந்த மொழிகளைப் போல் தெரிகின்றன அல்லவா? அதனால்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நக்கிள்ஸ் என்று பெயர். ஆசிரியர் சொன்னது நினைவுக்கு வருகின் றனவா''? ரதீபன் புன்சிரிபோடு நினைவூட்டினான். நிமேசிக்கா கைதட்டினாள். ''ரதீஸ் அண்ணாவுக்கு எமது பாராட்டுக்கள். எல்லோரும் அவரை உற்சாகப்படுத்துங்கள்.'' அவள் சிரித்துச் சிரித்துச் சொன்னாள். அதனை எல்லோரும் ரசித்தனர்.

''நாங்கள் நாவுல எனும் ஊரைத் தாண்டுகிறோம்''. நிரூஷன் குரல் ஒலித்தது. ''இப்போது நாங்கள் நாலந்த நகருக்குள் நுழை கிறோம்.'' சனோ முந்திக் கொண்டான். ஒரு புறம் மலைத் தொடர்கள். சிறிய பள்ளத்தாக்குகள். அவற்றின் ஊடாகச் சிற்றாறு களின் கலகலப்பு. தென்னந்தோப்புகள். வயற்பரப்புகள். புகை யிலைத் தோட்டங்கள். காய்கறிப் பயிர்களின் விளை நிலங்கள். எங்கும் பசுமையின் அரசாட்சி. வீதியோரங்களில் உயர்ந்த இலவ மரங்கள். அவற்றில் நிறைந்து தொங்கும் காய்கள். காற்றில் ஆடும் முற்றிய காய்கள். அவற்றுக்கு வெடித்துப் பறக்க ஆசை. வெடித்து எட்டிப்பார்க்கும் வெண்பஞ்சு. காற்றில் பறக்கும் பஞ்சுக் கூட்டம். நீலவானில் நீந்தும் வெண்மேகம். மேகத்துக்கும் பஞ்சுக் கூட்டத் துக்கும் போட்டி. கொள்ளை அழகின் குவியல். பாடல் ஊற்றெடுத்துப் பாய்ந்தது. பாடினார்கள்.

கொள்ளை அழகு கொட்டிக்கிடக்குது
கோடி இன்பம் முளைத்துக் குவியுது.
அள்ளி மகிழ ஆசைதுடிக்குது
அத்தனையும் எம்மை ஈர்க்குது.

காற்றில் இலவம் பஞ்சுபறக்குது
கண்ணைப் பறித்து மேகம்மிதக்குது.
ஊற்றுப் பெருகித் தண்ணீர் பாயுது.
உயர்ந்து மரங்கள் வானைப் பார்க்குது

உயர்ந்தும் தாழ்ந்தும் அமைந்த தரையமைப்பு. தண்ணீர் வடிந்தோடும் நிலம். செம்மண் ஊடாக எட்டிப்பார்க்கும் வெள்ளைக் கற்கள். அவை பளிங்குரு சுண்ணக்கற் பாறைகள். இக்கற் பாறைகள் சிதைவுறும். பின் செம்மண்ணாக மாற்றம் அடையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செம்மண் பயிர்ச் செய்கைக்கு வளம் சேர்ப்பது. இலவமரங்கள் வேலியாக உள்ளன. அப்பால் றப்பர் மரங்கள். திட்டமிட்ட பயிர்ச் செய்கை. இவையே இலங்கைக்கு அந்நிய செலாவணியைத் தருகின்றன.

றப்பர் மரங்கள் ஓங்கி வளர்வன. ஏழெட்டு அடிகளுக்கு மேல்தான் கிளைகளைக் காணலாம். மரங்களின் கிளைகள் போர்வையாக மூடியிருக்கும். அடிமரங்களில் இருந்து றப்பர்பால் எடுக்கப்படும். றப்பர் பால் எடுப்பதற்குத் தொழில்நுட்பம் தேவை. மரத்தின் பட்டை யில் கூரிய கத்தியால் சீவுவர். அந்த வெட்டு மரத்தில் பதியாது. வெட்டுவாயில் சிரட்டைகளைக் கட்டுவார்கள். சிரட்டைகளில் பால் வடிந்து சேரும். அவற்றைச் சேகரித்து எடுப்பார்கள். மரங்களில் சிரட்டைகள் தொங்கின. அவற்றைப் பார்த்தனர். அங்கு தொழில் நடைபெறுவதையும் அவதானித்தனர்.

றப்பர் மரங்களின் கீழ் கொக்கோ பயிரிடப்படுகிறது. கொக்கோச் செடிகளில் காய்கள் தொங்கும். அடிமரம் தொட்டுக் கிளைகள் வரை தென்படும். அவை பல்வேறு நிறங்களில் காணப்படும். பப்பாளிக் காய்களினை நினைவூட்டின. காய்கள் முற்றியதும் பிடுங்குவார்கள். அவற்றின் விதைகள்தான் சொக்லேற்றின் மூலப்பொருள். சொக்லேற் என்றதும் நாவில் நீர் ஊறியது.

சிறுவர்களுக்குப் புதிய அனுபவம். தாவர வளர்ச்சியை அவதானித்தனர். காலநிலை தாவர வளர்ச்சியைக் கட்டுப்படுத்தும். தரையின் உயரத்துக்கு ஏற்ப வெப்பநிலை மாறுபடும். வகுப்பில் கற்றதை நினைவு கூர்ந்தனர். பார்த்துக் கொண்டே சென்றனர். வெயிலாக இருந்தாலும் குளிர்ந்தது. "மாத்தளை நகர் வந்து விட்டது. இறங்குவோமா? சந்திரன் கூறி வாகனத்தை நிறுத்தினார். "இது தான் மாத்தளை முத்துமாரி அம்மன் கோயில். இறங்குங்கள். கோயிலைப் பார்த்து வருவோம்." ஆனந்தபாஸ்கரன் இறங்கிக் கொண்டே சொன்னார். எல்லோரும் இறங்கிக் கோயிலினுள் சென்றார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயிலை நிமிர்ந்து பார்த்தார்கள். கைகால் முகங்களைக் கழுவினார்கள். கோயிலினுள் சென்றார்கள். வணங்கினார்கள். சித்திர வேலைப்பாடுகளைப் பார்த்தார்கள். உள்ளம் மகிழ்ந்தார்கள். கோயிலைச் சுற்றி வந்தார்கள். சித்திரத் தேர் சிறுவர்களைக் கவர்ந்தது. அதனைத் தொட்டுப் பார்த்தார்கள். வெளியே வந்து வாகனத்தில் ஏறினார்கள். வாகனம் புறப்பட்டது. மாத்தளைச் சிறுவர் பூங்கா அவர்களை வரவேற்றது. பூங்காவினுள் வாகனம் நுழைந்தது. வாகனம் நின்றது. இறங்கினார்கள். இருக்கைகள் இருந்தன. அவற்றில் அமர்ந்தார்கள். பகல் உணவைச் சுவைத்து உண்டார்கள். சற்று ஓய்வெடுத்தார்கள். எங்கும் அழகுச் செடிகள். வண்ண வண்ணப் பூக்கள். இயற்கை அழகில் மெய்மறந்தனர். வாகனம் இரைந்து புறப்பட்டது.

தரையமைப்பு உயர்ந்து சென்றது. அதற்கேற்ப வாகனம் உறுமிச் சென்றது. மகாவலியின் சிற்றருவிகள் சலசலத்தன. மெல்லப் பாய்ந்து வெருண்டோடின. மலைச் சரிவுகளில் மக்கள் குடியிருப்புக்கள். ஒருபுறம் கிடுகிடு பள்ளத்தாக்கு. பயமாக இருந்தது. மலைத் தொடர்களைத் தாண்டி சமவெளிகள். சமவெளி களில் சிறிய நகரங்கள். கமுகுகளில் பச்சையும் மஞ்சள் நிறத்திலும் காய்கள். குலை குலையாய்க் காய்த்துத் தொங்கின. கித்துள் மரங்கள் பாளைதள்ளிச் சிரித்தன. யானைகள் அசைவது போல் அசைந்தன. அவற்றின் பூக்கம்பாளை சோடித்துத் தொங்கின. அங்குமிங்கும் தேயிலைத் தோட்டங்கள். தூரத்தில் தொழிற் சாலைகள் தெரிந்தன. "அண்ணா அந்தப் பலாமரத்தைப் பார்." ரதீபன் சத்தமிட்டான். அனுசியன் பலாமரத்தின் வளர்ச்சியைப் பார்த்தான். அது ஓங்கி உயர்ந்து வளர்ந்து இருந்தது.

"அப்பா! நமது பலாமரம் இப்படி வளரவில்லை. ஏன்"? நிரூஷன் வினவினான். "நமது பிரதேசம் வறள் வலயத்தில் உள்ளது. அங்கு மழைவீழ்ச்சி குறைவு. வெப்பம் அதிகம். மரங்களும் அதற்கேற்ற வாறே வளரும். உயரம் குறைவு. அகன்ற இலைகள் இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைநாடு ஈரவலயத்தில் இருக்கிறது. மழைவீழ்ச்சி அதிகம். மரங்களும் செழித்து உயர்ந்து வளரும். ஆனந்தபாஸ்கரன் விளக்கம் அளித்தார். "அப்பா! வீதிகள் ஏன் வளைந்து செல்கின்றன?" நிமேசிக்கா எட்டிப் பார்த்துக் கேட்டாள். முரளி முந்திக் கொண்டார்.

நிமேசிக்காவின் கொப்பியை வாங்கினார். ஒரு மலையை வரைந்தார். அதன் அடியிலிருந்து உச்சிக்குக் கோடு கீறினார். இன்னுமொரு மலையை வரைந்தார். அதனைச் சுற்றி ஏறுவது போல் கோடு வரைந்தார். அதனை எல்லோருக்கும் காண்பித்தார். "மலை உச்சிக்கு எப்படி ஏறுவது சுலபம்?" வினாவைக் கேட்டார். அவர்களைச் சிந்திக்க விட்டார். சற்று அமைதி நிலவியது "நேரே ஏறமுடியாது. விழுந்து விடுவோம். சுற்றிச் சுற்றி ஏறுவது சுலபம்". அவர்களே பதிலளித்தார்கள். "கெட்டிக்காரர்கள்" முரளி அவர்களை உற்சாகப்படுத்தினார்.

உயர்ந்த மலை முடிகள் தெரிந்தன. எத்தனை மலை முடிகள்? நமது நாடு அற்புதமானது. பல்லின மக்கள் வாழுகிறார்கள். பாட்டு வந்தது. பாடினார்கள்.

மத்தியில் உயர்ந்து புடைத்திருக்கும்
மலைமுடி சூழ்ந்து நிமிர்ந்திருக்கும்.
நித்திய நதிகள் ஊற்றெடுக்கும்.
நிறைபயிர் விளைந்து பாட்டெடுக்கும்.

இந்து இஸ்லாம் பௌத்தர்களும் நல்
இனிய கிறிஸ்த்து மதத்தவரும்
இந்த மண்ணின் மைந்தர்களே எனின்
ஏனிந்த வேற்றுமை நமக்குள்ளே.

"அண்ணா நமது இலங்கை அற்புதமானது. அழகானது. இல்லை என்பது இங்கில்லை. ஒற்றுமையாக வாழ்ந்தால் சொர்க்கம்தான். நிமேசிக்கா இடையே கூறினாள். பாடல் தொடர்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெங்கொடு பனையும் பணப்பயிர்கள்
தேங்கி விளைந்தொன்றாய் ஆடுநிலம்
இந்தொடு பௌத்தர் கிறிஸ்தவரும்
இஸ்லாம் மக்களும் வாழுநிலம்.

வாகனம் வளைந்து வீதியில் சென்றது. மலைகள் மனதைக் கவர்ந்தன. மலைச் சிகரங்கள் எட்டியெட்டிப் பார்த்தன. பள்ளத் தாக்குகள் இடையிடையே மின்னின. மேகக்கூட்டம் மலைகளைத் தழுவிச் சென்றன. மலையிடுக்குகளில் ஒளிந்து விளையாடின. மேகத்தைப் போல் பறக்க வேண்டும். மலை முகட்டைத் தொட்டுப் பார்க்க வேண்டும். சலசலத்து ஓடும் நீரில் நீந்தவேண்டும். பால் போல் வழியும் நீர்வீழ்ச்சியைத் தொடவேண்டும். அதில் குளிக்க வேண்டும். கற்பனைகளில் திளைத்தனர்.

அம்மாவுக்கு அடிவயிற்றில் கலக்கம். யன்னல் வழியாக எட்டிப் பார்த்தார். கிடுகிடு பாதாளம். பார்க்கப் பயமாக இருந்தது. கலா மாமியிடம் சொல்லிக் கொண்டிருந்தார். பாம்பு நெளிவாக வீதிகள் படுத்திருந்தன. அக்குரணை ஓடிவந்தது. “இதுதான் அக்குரணை.” முரளி கூறினார். மலைச்சரிவுகளில் அழகான வீடுகள். சலசலத்து ஓடிக்கொண்டிருக்கும் அருவிகள். கமுகுச் சோலைகள். வீதியோரங் களில் வரிசையாகக் கடைகள். பிரமாண்டமான மசூதி காட்சியா கியது. முஸ்லிம் மக்கள் செறிந்து வாழும் பிரதேசம். சுறுசுறுப்பாக அக்குரணை இயங்கிக் கொண்டிருந்தது. அக்குரணையைத் தாண்டி வாகனம் சென்றது. பார்க்கும் இடமெல்லாம் பசுமை போர்த்திருந்தது. தரைத்தோற்றம் சிறுவர்களுக்குப் பிரமிப்பை ஊட்டியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலகம் மன்றம் கோணமலை

# 10

பல ஊர்கள் ஓடிமறைந்தன. கட்டுகஸ்தோட்டை வந்து விட்டது. சிறுவர்கள் குசுகுசுத்தனர். மகாவலி குதித்து ஓடிக்கொண்டு இருந்தது. கரையோரங்களில் மக்கள் கூட்டம். நீராடிக் கொண்டிருந்தனர். பொல்கொல்லைப் பக்கமாக வாகனம் சென்றது. சந்திரன் மாமாவிடம் ஆனந்தபாஸ்கரன் கூறியிருந்தார். அங்கே மகாவலி யின் குறுக்காக அணையிருந்தது. இறங்கிப் பார்த்தனர். இடப் பக்கமாக சுருங்கை வழி. இது மகாவலி வடக்கு நோக்கிப் பாயும் குடைவழி. மலைத்தொடரைக் குடைந்து சுருங்கை அமைக்கப் பட்டது. சுருங்கை வழியாக நீர் பாய்ந்தது. "மகாவலி திசை திருப்பும் திட்டத்தின் தொடக்கம் இங்குதான்'' ஆனந்த பாஸ்கரன் விளக்கினார்.

"தண்ணீர் விவசாயத்துக்கு உதவவேண்டும். பயிர் செழிக்க வேண்டும். ஒரு சொட்டு நீரும் கடலுள் செல்ல அனுமதியோம். அது இந்நாட்டு மக்களுக்குப் பயன்பட வேண்டும்." என்றானாம் பராக்கிரம பாகு மன்னன். படித்த பாடத்தை மீட்டுக் கொண்டனர். மகாவலித் திட்டம் அனுராதபுரத்தோடு நிற்கிறது. அதனை தொண்டமானாறு வரை இணைத்து விட்டால்? யாழ்க்குடாநாடு வளம் பெற்றுவிடும். இலங்கை செல்வந்த நாடாகும். உலகின் உன்னத நாடாக விளங்கும். வடக்கு கிழக்கில் வளம் பெருகும். ஆனால் அங்கு 'ஷெல்' வந்த நாடாக மாறிக் கிடக்கிறது. ஆனந்தபாஸ்கரன் மனதில் வேதனை புகுந்தது. அது அடிமனதில் பதிந்து கொண்டது. பார்த்து விட்டுத் திரும்பினர்.

வாகனம் கட்டுகஸ்தோட்டைப் பாலத்தைத் தாண்டியது. வலப் பக்கமாகச் சென்றது. சற்றுத் தூரத்தில் சனக்கூட்டம். அங்கு யானைகள் குளித்துக் கொண்டிருந்தன. அவை யாவும் மனிதர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்க்கும் யானைகள். யானை மனிதனின் கட்டளைக்கு அடி பணிகிறது. தண்ணீரில் புரள்கிறது. தண்ணீரை துதிக்கையால் உறிஞ்சுகிறது. துதிக்கையை உயர்த்துகிறது. தனது முதுகில் கொட்டுகிறது. தண்ணீர் வடிந்து வழிகிறது. ''எவ்வளவு தண்ணீர்'' ஆச்சரியத்தோடு பார்த்தார்கள். சற்று நேரம் நின்று கவனித்தார்கள். சந்தோசமாக இருந்தது. அருகில் நின்று படமெடுத்துக் கொண் டனர். வாகனம் நகர்ந்தது. ''அதோ பாருங்கள். சிறிய குடைவழி தெரிகிறது.'' நிசோ சுட்டிக் காட்டினான். ''அதுதான் கண்டி நகரின் புகுவழி'' நிரூஷன் தனிவழியில் கூறினான்.

கண்டி நகரம் அவர்களை வரவேற்றது. சுற்றிவர அமைந்த இயற்கையான மலையரண்கள், அழகிய உயர்ந்த சிகரங்கள், நடுவினிலே கண்டிநகர் அமைதியாகச் சிலிர்த்தது. மக்களின் நெரிசல். வாகனங்களின் இரைச்சல். ஒழுங்காக அமைந்த கட்டிடங்கள். ஏற்றமும் இறக்கமும் உள்ள வீதிகள். கண்களை எறிந்து பார்த்தனர். மனங்களைக் கவரும் இயற்கை அழகு. பார்ப்பதற்குக் குளிர்ச்சியாக இருந்தது. கண்டி பசுமை போர்த்துச் சிரித்தது. கண்டியின் பொதுச்சந்தை கமகமத்தது. திட்டமிட்டுக் கட்டிடம் அமைக்கப்பட்டிருந்தது. பழவகைகள் அழகாக அடுக்கப் பட்டிருந்தன. வாகனம் மெதுவாகச் சென்றது.

''சந்தையை வேறு எப்படி அழைக்கலாம்?'' ரதீபன் வினா எழுப்பினான். பிள்ளைகளின் கண்கள் கண்டியை ரசித்தன. வினா செவிகளில் மோதிச் சென்றது. ''அங்காடி என்பதுதான் நல்ல தமிழ்ச் சொல்'' ஆனந்தபாஸ்கரன் கூறினார். பழங்காலத்தில் அங்காடிகள் இருந்தன. இரவிலும் பகலிலும் செயற்பட்டன. வாகனம் கண்டி வாவி யோரம் நின்றது. ''இதுதான் கண்டி வாவி. அவர் சுட்டிக் காட்டினார். இங்கே சற்றுத் தாமதிப்போம். மாமா இங்கு வருவார்.'' ஆனந்த பாஸ்கரன் கூறினார். வாகனம் ஓரமாக நிறுத்தப் பட்டது. எதிரே குயீன்ஸ் ஹொட்டேல் தெரிந்தது. எல்லோரும் இறங்கினார்கள். வாவியின் பக்கம் போனார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகான மேடையமைப்பு. பெரிய அகலமான தாங்கு சுவர்கள். திட்டமிட்டு நடப்பட்ட மரங்கள். பூச்சொரிந்து வரவேற்றன. கண்டி மன்னனால் கட்டப்பட்ட வாவி. வாவியினுள் சிறிய தீவு. சிறிய கட்டிடம் தெரிந்தது. ஓரிரு தென்னைகள். பூஞ்செடிகள் தெரிந்தன. அங்குதான் கண்டி அரசன் ஓய்வெடுப்பான். ஒரு உல்லாசபுரியாகத் தென்பட்டது. வாவியினுள் உலாவரும் உல்லாசப் படகுகள். உயர்ந்த மலைத் தொடர்கள். அடுக்கடுக்கான கட்டிடங்கள். கண்டியரசனின் தலதா மாளிகை. இந்துக் கோயில்கள். இவற்றின் முற்றத்தில் அழகிய வாவி. வாவியைச் சுற்றிவரும் கரிய தார் வீதிகள். வாவியினுள் எட்டிப் பார்த்தனர். ஆச்சரியமாக இருந்தது.

பென்னம் பெரிய மீன்கள். கைகளில் அவித்த கடலைச் சுருள். கடலையை வாவியினுள் வீசினர். மீன்கள் திரண்டு குவிந்தன. பாய்ந்து கௌவின. அவற்றின் செயலினால் சிற்றலைகள் சிரித்தன. பெரிய வட்டங்கள் உருவாகின. ஒன்றன் பின் ஒன்றாகக் கரை யொதுங்கின. எவ்வளவு மீன்கள் பிள்ளைகளின் விழிகள் மலர்ந்தன. முகங்களில் மகிழ்ச்சி படர்ந்தது. மெல்லிய காற்றுச் சில்லிட்டது.

மெதுவாகச் சுற்றி நடந்தார்கள். பார்க்கும் இடமெல்லாம் வண்ணப் பூக்கள். தலதா மாளிகை 'வா' என அழைத்தது. அற்புதமான கட்டிடக் கலை. தலதா மாளிகை அமைந்த சுற்றுப்புறச் சூழலைப் பார்த்தனர். உயர்ந்து வளர்ந்த மரங்கள். இயற்கை அழகு கொஞ்சும் பசுமை. அதனை ரசித்துப் பார்த்தனர். போனதுபோல் திரும்பினார்கள். குயின்ஸ் ஹொட்டேல் கம்பீரமாய் நின்றது. வாகனத்தின் பக்கம் வந்தார்கள். அங்கே மாமா நின்றிருந்தார். பிள்ளைகள் துள்ளினார்கள். மாமா வந்து உரையாடினார். அருகே இருந்த குயீன்ஸ் ஹொட்டலுக்குள் நுழைந்தனர். அங்கே மாமா வின் நண்பர் பெருவழுதி காத்திருந்தார். அவர் ஒரு பல் டாக்டர். புதுமையான மனிதர். நகைச்சுவை மன்னர். அன்பாகப் பழகுவார். மாமா அருளாளன் வந்தார். முரளிச் சித்தப்பாவை அறிமுகம் செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லி வைத்ததுபோல் பஞ்சலிங்கம் வந்தார். பழகுவதற்கு நல்லவர். எல்லோரும் அறிமுகமாகினர். சேர்ந்து சிற்றுண்டி அருந்தினார்கள். சுடச்சுடத் தேநீர் வந்தது. தேநீரின் கமகமப்பில் மயங்கினர். "அருமையான தேநீர்" முரளி தேநீரை உறிஞ்சியவாறு கூறினார். குயீன்ஸ் ஹொட்டலில் இருந்து வெளியில் வந்தனர். அனைவரும் வாகனத்தில் ஏறிக்கொண்டனர். வாகனம் மெதுவாக அசைந்தது. எங்கும் மக்கள் கூட்டம். அறிமுகமற்ற முகங்கள். தலதா மாளிகையினுள் புகுந்தனர். அகழியைத் தாண்டினார்கள்.

பாலத்தில் நின்று எட்டிப் பார்த்தார்கள். கட்டிடத்தையும் வியப்போடு ரசித்தார்கள். எத்தனை படிகள். மரத்தூண்களைத் தடவிப் பார்த்தார்கள். மாடியில் உள்ள கருவறையை உற்று நோக்கினார்கள். மாளிகையின் கூரையைக் கூர்ந்து கவனித் தார்கள். கண்டிய மன்னர்களின் கலாரசனையைப் பாராட்டினார்கள். அங்கு பணியாற்றுபவர்களைக் கண்டனர். அவர்களோடு கதைத் தார்கள். கண்டிய நடன அலங்காரப் பொருட்களையும் தொட்டுப் பார்த்தார்கள். அற்புதமான வேலைப்பாடுகள். வெளியில் வந்தனர்.

ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கனைப் பற்றி உரையாடினார்கள். அவன் தான் கண்டி இராச்சியத்தின் கடைசி மன்னன். இலங்கை மூன்று இராசதானிகளைக் கொண்டிருந்தது. இலங்கையின் வரலாறு பெரியது. இந்த நாட்டு மக்கள் அனைவரும் இலங்கையர்தான். ஆனால் இந்நாட்டு மன்னர்கள் யார்? அந்த வரலாற்றை இலங்கை யர்கள் உணரவேண்டும். இந்த வரலாற்றை உணர்ந்தால் அமைதி உலா வரும். இந்த நிலை தோன்றினால் நாடு செழிக்கும். முரளி மனதினிலே நினைந்து கொண்டார். நேரத்தைப் பார்த்தனர். விரைந்து புறப்பட்டனர். வாகனம் பேராதனை வீதியூடாகப் பயணித்தது. பேராதனைப் பூங்கா அழைத்துக் கொண்டது. உள்ளே நுழைந்தார்கள்.

அம்புக் குறிகளை அவதானித்தனர். அதற்கேற்ப சென்றனர். துள்ளிக் குதித்து ஓடினார்கள். மரங்களின் பெயர்களைப் பார்த்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறித்துக் கொண்டனர். அழகான பூஞ்செடிகள். குலுங்கும் வண்ண வண்ணப் பூக்கள். உயர்ந்து வளர்ந்த மூங்கிற் புதர்கள். பரந்த புல்வெளியில் ஓடித்திரிந்தனர். நாகலிங்க மரம் உயர்ந்து வளர்ந் திருந்தது. பத்தடி உயரத்தில் அழகிய பூக்கள் அசைந்தன. இங்கிலாந்து இளவரசரால் 1902 இல் நடப்பட்டது. அதனைக் குறித்துக் கொண்டனர். ஜாவா நாட்டிலிருந்து வந்த மரத்தைப் பார்த் தனர். அது கிளை பரப்பி வளர்ந்திருந்தது. அதன் கிளைகள் நிலத் தில் படர்ந்திருந்தன. அதற்கு வயது 148 ஆகும். அதில் இருந்து படமெடுத்தார்கள். மகாவலியின் தொங்கு பாலம் ஈர்த்தது. அதில் ஏறி உலாவந்தனர். வாழ்க்கையில் மறக்க முடியாத அனுபவங்கள்.

'இலங்கையின் சொர்க்கபுரிதான் மலையகம். எத்தனை வகை இன்பம் வைத்தாய் இறைவா! அத்தனையும் மலையகத்தில் அல்லவா வைத்தாய்? நீலவானம். பசுமை போர்த்திய பூமி. அற்புத மான புற்தரை. உயர்ந்து சரிந்த நில அமைப்பு. பல்வேறு மரஞ் செடிகள். மனதைக் கவரும் வண்ணப் பூக்கள். சலசலத் தோடும் சிற்றாறுகள். அப்பப்பா..' சந்திரன் மனதினிலே சொல்லிக் கொண் டார். ஐஸ்கிறீம் நாவில் விளையாடியது. வயிற்றை நிறைத்தது. சிறுவர்களோடு பெரியவர்களும் சேர்ந்து ரசித்தனர். நேரத்தைப் பார்த்துக் கொண்டனர். வாகனம் புறப்பட்டது.

வாகனம் பேராதனைச் சந்தியை அடைந்தது. வீதியின் இரு புறமும் அழகிய கட்டிடங்கள். உயர்ந்து விரிந்த மரங்கள். சாரணரின் வரவேற்பைக் காட்டி நின்றன. மஞ்சளும் சிவப்பு நிறத்திலும் மலர்கள். கொத்துக் கொத்தாய்ப் பூத்துக் குலுங்கின. புற்தரையை ஊடறுக்கும் கரிய தார் வீதி. "இந்தப் பெரிய கட்டிடங்கள் என்ன மாமா?" நிரூசன் வெளியில் பார்த்தவாறு கூறினான். "அங்கே பார். சரிவான மேடையில் பெரிய சிமெனற் எழுத்துக்கள். அதனை வாசித்துப் பார்". மாமா சுட்டிக் காட்டினார். நிரூசன் எட்டிப் பார்த்தான். "பேராதனைப் பல்கலைக்கழகம்" பெரிய எழுத்துக் களில் தெரிந்தது. "பேராதனைப் பல்கலைக்கழகம் இதுதான்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனதினில் மகிழ்ச்சி பொங்கியது. பல்கலைக்கழகம் அழகாகக் காட்சியாகியது.

''எதிரே தெரிவது மருத்துவ பீடம்.'' ஆனந்தபாஸ்கரன் விளக்கினார். வாகனம் நகரத் தொடங்கியது. "இது விஜயவர்த்தன மண்டபம். பெண்களுக்கான விடுதி. இடப்பக்கமாக ஜயதிலக மண்டபம். ஆண்களுக்கான விடுதி. வலப்பக்கமாக விஞ்ஞானபீடம். அதனைத்தாண்டி விளையாட்டரங்கு." அடுத்துப் பெரிய கட்டிடம் வந்தது. அழகான தோற்றத்தில் காட்சியாகியது. "இது கலைப்பீடம். இந்தக் கட்டிடத் தொகுதியில் நூலகமும் இருக்கிறது. இது உலகின் சிறந்த நூலகங்களில் ஒன்று." "அப்பா நீங்கள் படித்த பல்கலைக் கழகம்தானே?" நிமேசிக்கா குறுக்கிட்டாள். பதிலுக்கு ஆனந்த பாஸ்கரன் "ஆம்" என்று தலையசைத்தார். எல்லோர் கைகளிலும் குறிப்புப் புத்தகம். குறித்துக் கொண்டு வந்தனர்.

எதிரும் புதிருமாகப் பல்கலைக்கழக விடுதிகள். சாரிசாரியாக பல்கலைக்கழக மாணவர்கள். வண்ணக் குடைகளை ஏந்திய மாணவிகள். வருவதும் போவதுமாகச் சுறுசுறுப்பாக இருந்தனர். கல்வி அழகுடையது. அது ஒருவரது மனதை அழகுபடுத்தும். கற்றவர் முகங்களில் தானாகவே வந்து குந்தியிருக்கும். கற்ப வர்கள் முகங்களும் அழகாக இருக்கும். பலகலைக்கழக மாணவர் களும் அழகாகத் தெரிந்தனர். தங்களுக்கு முன்னால் ஒரு சொர்க்க புரியா? நாங்களும் பல்கலைக்கழகம் செல்லவேண்டும். சென்று படிக்க வேண்டும். படித்து நாட்டுக்காக உழைக்க வேண்டும். நல்லனவற்றைச் செய்ய வேண்டும். பிள்ளைகள் மனதில் உறுதி கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11

வாகனம் பல்கலைக்கழக வளாகத்தைத் தாண்டியது. எத்தனை வளைவுகள். எத்தனை ஏற்ற இறக்கங்கள். இப்படித்தானே மனித வாழ்க்கையும். ஏற்ற இறக்கங்களைக் கொண்டது. இடப்புறம் உயர் மலைகள். வலப்புறம் சரிந்த தாழ்நிலங்கள். வாகனம் செல்லும்போது மலைச்சுவர்கள் முன்நிற்கும். சிற்றருவிகள் சலசலக்கும். தூரத்து மலை முகடுகளில் மேகம் விளையாடும். தேயிலைத் தோட்டங்கள் பளிச்சிடும். பரட்டைத் தலையில் வகிடு எடுத்ததுபோல் சிற்றதர்கள். வாகனத்தின் யன்னல்கள் திறந்து கிடந்தன. யன்னலூடாக சில்லிட்ட காற்றின் விசிறல். வளைவுகளைத் தாண்டி வாகனம் சென்றது.

''மலைநாட்டின் அழகைப் பார்த்துக் கொண்டே இருக்கலாம்.'' கலா மாமி ரசனையோடு சொன்னார். ''அண்ணா அங்கே பார்.. மலைச் சரிவுகளில் நெல்வயல். தட்டுத் தட்டாகப் பரந்திருக்கிறது.'' நிமேசிக்கா சுட்டிக் காட்டினாள். ரதீபன் எட்டிப் பார்த்தான். ''நமது வயல்நிலம் சமநிலத்தில் இருக்கிறது. கண்ணெறியும் தூரம்வரை பரந்திருக்கும். ஆனால் மலைநாட்டில் அப்படி இல்லை. இது ஒரு வகை நெற்பயிர்ச் செய்கை. இதனைப் படிமுறைச் செய்கை என்பார்கள்.'' நிரூசன் முந்திக் கொண்டு பதிலளித்தான். வாகனம் ஒரு வளைவில் திரும்பியது. ''அதோ கலஹா தெரிகிறது.'' மாமா கையை நீட்டினார். கை நீட்டிய பக்கம் கண்கள் பாய்ந்தன. ''எங்கே எங்கே..?'' ஒருமித்த குரலில் ஒலித்தனர். தூரத்தே சிறு பாலம் தெரிந்தது.

பாலத்தின் கீழ் தெளிந்த நீர். சலசலத்து ஓடியது. வாகனம் பாலத்தைக் கடந்தது. வலப்பக்கமாகத் திரும்பியது. இடப் பக்கமாகத் தேயிலைத் தொழிற்சாலை. குப்பென்று தேயிலை கமகமத்தது. தேயிலைமணம் மூக்குவழியால் சென்றது. மூச்சுப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பையை நிறைத்தது. உள்ளிழுத்து அதை அனுபவித்தனர். இது அவர்களுக்குப் புது அனுபவம். ''அப்பா தேயிலை பச்சையாக இருக்கிறது. எப்படி கறுப்பாக மாறுகிறது.? தேநீர் சிவப்பாக இருக்கிறது''? நிரூஸ் வினாவினான். ''நேரே போய்ப் பார்த்தால் விளங்கிவிடும். நாளை தொழிற்சாலை சென்று பார்ப்போம்.'' மாமா பதிலிறுத்தார். கலஹா நகர் வந்து விட்டது.

வாகனம் விடுதியை அடைந்தது. விடுதிக் கதவுகள் திறந்து கொண்டன. வாகனத்தைக் கண்டதும் சிறுமிகள் ஓடி வந்தார்கள். சிந்து பாய்ந்து வந்தாள். மனோகரி ரீச்சர் முன்னால் வந்தார். பல ஆசிரியர்களும், ஆசிரியைகளும் சேர்ந்தனர். முகம் மலர வரவேற் றார்கள். வாகனத்தின் கதவுகள் திறந்து கொண்டன. பயணப் பொதிகள் விடுதியினுள் சென்றன. விடுதி அமர்க்களப்பட்டது. பெரிய ஆரவாரம் வானை முட்டியது. புது உலகத்தில் இருப்பது போன்ற பிரமை. நன்கு இருட்டியிருந்தது. வானம் நீலம் போர்த்திருந்தது. இடையிடையே வெண்முகில் கூட்டம். மலை முகடுகளில் ஒழிந்து விளையாடின. தங்கநிறத்தில் விண்மீன்கள் பளிச்சிட்டன. வான் முட்டும் மலை முகடுகளிலும் வீடுகள். எங்கும் மின்விளக்குகள். பார்த்துப் பார்த்து ரசித்தனர். ஒவ்வொருவராகக் குளித்து வந்தனர். பிரயாணக் களைப்பே தெரியவில்லை.

பாடசாலைப் பிள்ளைகள் பலர் திரண்டிருந்தனர். இவர்களது வருகையை எதிர்பார்த்திருந்தனர். எல்லோரும் சேர்ந்து கொண்டனர். ஆளுக்காள் அறிமுகமாகினர். புது உறவு இறுகத் தொடங்கியது. சிறுவர்கள் ஒரு குழுவாகக் குழுமினார்கள். சிறுமிகள் இன்னொரு புறமிருந்தனர். ருக்மணியும், செந்தில்ராணியும் பூமணியும் சேர்ந்து கொண்டனர். அவர்கள் இவ்வித்தியாலயத்தின் ஆசிரியர்கள். இங்கு ஆசிரியர்கள் ஒற்றுமையைப் பேணினார்கள். ஒன்றாகவே சமையல் நடக்கும். வேற்றுமை இருக்காது. மௌலானா சமையலில் கெட்டிக்காரர். போட்டி போட்டுச் சமைப்பார். சனி,ஞாயிறு நாட்களில் விசேஷம் இருக்கும். அன்றுதான் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் வருவார்கள். பட்டப் படிப்பும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபெறும். ஒருபுறம் ஆசிரியர்களுக்குப் பாடம் நடைபெறும். மறுபுறம் மாணவர்களுக்கு வகுப்புக்கள் நடைபெறும்.

ஆசிரியர்களைக் கண்டதும் கூட்டம் ஒன்றாகியது. மலையகச் சிறார்களது பேச்சு வழக்குப் புதுமையானது. கேட்பதற்கு இன்பமாக இருந்தது. சிரிப்பும் கும்மாளமும் சேர்ந்து கொண்டன. எங்கும் மின்மினிப் பூச்சிகள். அவை பறந்து திரிந்தன. பளிச் பளிச்செனப் பிரகாசித்துப் பறந்தன. இவை அந்தரத்தில் பறக்கும் மின் விளக்குகளா? இருளில் அவற்றின் மினுக்கம் அற்புதமாயிருந்தது. கொள்ளை அழகு. மெய்மறந்து ரசித்தனர்.

நிமேசிக்கா மூச்சைப் பெரிதாக உள்ளிழுத்தாள். மெதுவாக வெளிவிட்டாள். என்ன இன்பமான வாசம். "இது எந்தப் பூக்களின் வாசம்"? நிமேசிக்கா அதிசயமாகக் கேட்டாள். இவ்வகை வாசத்தை அவள் அனுபவிக்கவில்லை. "இதுவா? இவை "நைற்குயீன்" பூக்களின் வாசம். அதாவது இரவு ராணிப் பூக்களின் வாசம். நன்றாக இருக்கின்றதா"? தோழிகளின் குயிலின் குரல்கள் சேர்ந்து ஒலித்தன. "இனிமையாக, அற்புதமாக இருக்கிறது. அத்துடன் சுகமாகவும் இருக்கிறது." நிமேசிக்கா பதில் கொடுத்தாள். மலையகம் பற்றிய கதைகள் தொடர்ந்தன. மனோகரி ரீச்சரின் குரல் அழைத்தது. உணவு பரிமாறப்பட்டது. உண்ட பின்னும் உரையாடல் தொடர்ந்தது. ஆசிரிய விடுதிகள் கலகலத்தது. உறங்குவதற்கு வெகு நேரமாகியது. எப்பொழுது உறங்கினார்கள். அவர்களுக்கே தெரியாது.

அதிகாலையிலேயே விழித்துக் கொண்டனர். குளிர் நடுக்கியது. இன்னும் இருள் கலையவில்லை. எங்கும் புகை மண்டலமாக இருந்தது. மூடுபனியைக் கண்டதில்லை. வெளிக்கதவைத் திறந்தனர். சில்லென்று குளிர் காற்று அறைந்தது. மின்விளக்குகள் மின்னின. புகை மூட்டத்துள் இருந்தது போன்ற உணர்வு. பனிப் புகார் உள்ளே நுழைந்தது. அவர்களைத் தடவியது. அவர்களுக்கிடையே திரையிட்டது. உடலோடிக் குளிர்ந்தது. பக்கத்தில் இருப்பவரையும் மறைத்துவிடும். கண்களுக்குத் தெரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்ப்பில்லை. புதுமையான அனுபவத்தைப் பெற்றனர். கலகலவெனச் சிரித்தனர். கதவை மெல்ல மூடினர்.

உட்கதவு தட்டப்பட்டது. நிமேசிக்கா திறந்தாள். மனோகரி சிந்துவோடு நின்றார். மனோ மிகவும் நல்லவர். தனராஜ் ஆசிரியரின் துணைவி. இருவரும் ஆசிரியர்கள். தனராஜ் இக்கல்லூரியின் துணையதிபர். அதிபர் அருளாளனின் வலது கை. மனோவை மாமி என்றே உரிமையோடு அழைத்தார்கள். "மாமி உங்களுக்குக் குளிர வில்லையா? கைகளெல்லாம் நடுங்குவதைப் பாருங்கள்''. சொல்லும்போதே அவள் நடுங்கினாள். "மாமி நிமேசிக்காவின் வாய் ''ரைப்செற்றிங்'' செய்யுது. பாருங்கள்''. நிரூசன் கூறிச் சிரித்தான். ''அம்மாவுக்குப் பழக்கம். குளிர் அவரை அசைக்காது. அதிகாலை யிலேயே குளித்து விடுவார்'' சிந்து தனது தாயாரைப் புகழ்ந்தாள். மனோ சிரித்தார். சிரிப்போடு தேநீரைக் கொடுத்தார். வந்தவழியே சென்றுவிட்டார். தேநீரைப் பெற்றுக் கொண்டனர். வாயைக் கொப்பளித்தனர். உறிஞ்சி உள்ளிழுத்தனர்.

சுடுதேநீர் சுகத்தைக் கொடுத்தது. சுறுசுறுப்பையும் கொடுத்தது. "என்ன சுகம். இந்தச் சுகம்." முணுமுணுத்தாள் நிமேசிக்கா. காலை எட்டுமணியாகி விட்டது. சூரியக் கதிர்கள் பனிப்படலத்தை விரட்டும் காட்சி. பனிப்புகார் திரளும். சூரியக்கதிர்கள் ஊடறுக்கும். வண்ணக் காட்சிகள் புலனாகும். காற்று, பனியை இறைத்து விசிறும். குளிர் முகத்தில் அறையும். பற்கள் கடகடக்கும். நிமேசிக்கா வாயைத் திறந்து ''ஹா'' என்றாள். ஆவி புகை மண்டல மாகப் பரவியது. எல்லோரும் அப்படிச் செய்தார்கள். வேடிக்கையாக இருந்தது.

''விளையாடியது போதும். குளியுங்கள். இன்றைக்கு முக்கிய கூட்டம் இருக்கிறது'' கட்டளைகள் வந்தன. ''இந்தக் குளிரில் குளிப்பதா? ஐயோ! என்னால் முடியாது.'' அனுசியன் தலையை ஆட்டியவாறே கூறினான். ''குளித்தால் குளிரவே செய்யாது.'' புது நண்பர்களின் குரல்கள் ஒலித்தன. ''அப்படியா எங்கே குளிப்பது.? குழாயடியிலா''? சிரித்துக் கொண்டே ரதீபன் கூறினான். ''சிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோரையும் பீலிக்குக் கூட்டிப் போங்கள்.'' மனோ மாமியின் கட்டளை வந்தது. ''பீலிக்கா? அது என்ன? எங்கே இருக்கிறது''? நிமேசிக்கா வினோதமாகக் கேட்டாள். "போய்ப் பார்த்தால் தெரிந்து விடும். போவோம் வாருங்கள். அழகான காட்சிகள் பார்க்கலாம்'' சிந்து துரிதப்படுத்தினாள்.

''நாங்கள் தயார். நீங்கள் தயாரா''? ரதீபனின் குரல் ஒலித்தது. "நாங்கள் ரெடி. நீங்கள் ரெடியா"? சிந்து பதில் அளித்தாள். ஆங்கிலத் தையும் தமிழையும் கலந்து பேசினாள். "இப்படித் திரைப்படப் பாடல் இருக்கிறது. இந்தியத் திரைப்படங்கள் எங்களைக் கெடுத்து விடும். படிக்கின்ற இளவயதினரை நடிக்க வைக்கிறார்கள். கல்லூரியை அசிங்கப்படுத்துகிறார்கள். பெற்றாரை நையாண்டி செய்து படமெடுக் கிறார்கள். எமது நாட்டவரும் இறக்குமதி செய்கிறார்கள். விளம்பரம் கொடுத்து வெளியிடுகிறார்கள். இவற்றைத் தடை செய்தால் நல்லது'' முரளி மனதில் எண்ணிக் கொண்டார்.

குளிப்பதற்குப் பீலிக்கு நடந்தார்கள். தனராஜ் முன்னே சென்றார். தொடர்ந்து ஏனையோரும் சென்றனர். அனுஜாவுக்கும் கலாவுக்கும் பெரும் சந்தோசம். வசந்தி கலஹாவில் ஆசிரியையாக இருந்தவர். இந்த அனுபவம் அவருக்குப் புதிதல்ல. ஆனந்தபாஸ்கரனும் கண்டி யில் கடமையாற்றியவர். முரளியும் இடையிடையே கண்டியில் இருந்தவர். ஆனாலும் இது புதிய அனுபவம். உரையாடிக் கொண்டே சென்றார்கள். பீலி அரை கிலோ மீற்றர் தூரத்தில் இருந்தது.

பீலியின் அழகை ரசித்தார்கள். தண்ணீர் உயரமான இடத்தில் இருந்து வழிந்தது. அது சிறிய நீர்வீழ்ச்சி போலிருந்தது. கைகளில் பற்தூரிகைகள் விளையாடின. ஆண்களுக்குப் புறம்பான இடம் இருந்தது. பெண்களுக்கு வேறிடம் இருந்தது. சலசலத்துப் பீலிநீர் ஓடிவந்தது. அந்த ஓட்டத்தில் ஒரு இசை பிறந்தது. தண்ணீரை கைகளில் ஏந்தி பிசிறினார்கள். சில்லிட்ட குளிர். முதலில் குளிர்ந்தது. பிறகு தண்ணீர் சுகத்தை வீசியது. கைகால்களைத் தேய்த்தார்கள். குதூகலத்தோடு குளித்தார்கள். கூட்டமாக இப்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீராடியது இல்லை. சிறுவர்கள் சேர்ந்தால் சொல்லவா வேண்டும்?. பெரிய கொண்டாட்டமாக இருந்தது. அவர்களது மகிழ்ச்சி அளவிட முடியாதது. பாடல் பிறந்தது. மெட்டெடுத்தார்கள்.பாடிப் பாடி நீராடினார்கள்.

தலலல் தலலல் தாலலல்லா.
தலலல் தலலல் தாலலல்லா.
தலலல் தலலல் தாலலல்லா.
தலலல் தலலல் தாலலல்லா.

இலங்கை அன்னையின் நெஞ்சறையாம்
இனிக்கும் மத்திய மலையகமாம்.
துலங்கும் இயற்கை கொலுவிருக்கும்
சொர்க்கம் இங்கே குடியிருக்கும்.

மேகத்தைக் காற்று கலைத்துவரும்.
மலையின் முகடுகள் தடுத்துநிற்கும்
மேகம் போர்வை ஆகிவிடும்
மலைகள் நனைந்து ஊற்றெடுக்கும்.

குளிர்ந்து தண்ணீர் விழுகிறது
குளிரைப் போக்கி நனைக்கிறது.
களித்து உள்ளம் மகிழ்கிறது.
கவலை எல்லாம் பறக்கிறது.

சலசல இசையைச் சுரக்கிறது.
சரிகம பதநி இசைக்கிறது.
கலகல சதங்கை முழங்கிறது.
காற்றும் இசையில் மயங்கிறது.

மலைமகள் மகிழ்ந்து சிரிக்கின்றாள்.
மயக்கத்தில் மேகத்தை சொருகிறாள்.
கலைத்துக் காற்றுத் துரத்துவதைக்
கண்டும் சிரித்தே மயங்குகிறாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேக நிரையை நிறுத்துகிறாள்.
மழையைக் கறந்து ஊற்றுகிறாள்.
தாகம் தீர்க்கும் நதிதந்தாள்
தரணி போற்றும் தாயானாள்.

பாடலோடு குளிப்பும் முடிந்தது. குளிரே இல்லை. உற்சாகம் பிறந்து விட்டது. விடுதிக்குச் செல்ல வழியைப் பார்த்தார்கள். தோட்டத்து மக்கள் சூழ நின்றிருந்தனர். அவர்களுக்கு விநோத மாக இருந்தது. அதிபர் அருளாளனைக் கண்டதும் வணக்கம் கூறினார்கள். "எத்தனை மணிக்கையா கூட்டம்." மிகப் பணிவாகக் கேட்டார்கள். ''நீங்களெல்லாம் வந்தால் தொடங்கலாம்.'' அதிபர் கூறினார். "இதோ வந்துடுறோம் ஐயா''. பணிவோடு சொன்னார்கள். அந்த மக்களது செயல் மனதைத் தொட்டது. அவர்கள் வழிவிட்டு நின்றார்கள். வணக்கம் கூறி விடுதியை நோக்கி நடந்தார்கள். வழி நெடுகிலும் சூரியகாந்திப் பூக்கள். அவை சாமரம் வீசின. இடை யிடையே பல்வேறு நிறப் பூக்கள். விரிந்து சிரித்தன. காற்றில் நடன மாடிக் காட்டின. இலைகள் படபடத்தன.

கலஹா நகர் சுறுசுறுப்பாகி விட்டது. எங்கும் மக்கள் கூட்டம். பேருந்து நிலையம் பரபரப்பாக இருந்தது. வாகனங்களின் இரைச்சல் ஒருபுறம். சனங்களில் ஆரவாரம் மறுபுறம். வானைப் பிளந்து காதுகளை அடைத்தது. அதிபர் விடுதியைச் சூழ்ந்து கலகலப்பு. எங்கும் மாணவர் குழாம். கூடிக் கூடி நின்றனர். இது விடுமுறைக் காலம். எனினும் மாணவர்கள் வந்திருந்தனர். பல திட்டங்கள் இருந்தன. விடுமுறைக் காலத்தில் செயற்படுத்துவது இலகுவானது. பாடசாலையைச் செப்பனிடும் திட்டம் இருந்தது. ஆசிரியர்களும் வீடுகளுக்குச் செல்லவில்லை. மலையக மாண வரின் கல்வியில் கரிசனை காட்டினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12

கலஹறா தமிழ் வித்தியாலயம் ஒரு அதிபரைத் தேடிக் கொண்டிருந்தது. கல்விப் பணிப்பாளர் அருளாளனை அழைத்தார். அதிபர் பொறுப்பை ஏற்குமாறு கேட்டுக் கொண்டார். அதற்குரிய கடிதம் வழங்கப்பட்டது. அது ஒரு வைகாசி மாதம். அதிபராக அருளாளன் பொறுப்பேற்றுக் கொண்டார். பாடசாலையை வலம் வந்தார். ஒரே ஒரு அறை மட்டுமிருந்தது. அந்த அறையிலேயே தங்கிக் கொண்டார். அது ஒரு பலநோக்கு அறை. அந்த அறைதான் அதிபரின் அலுவலகம். பாடசாலை முடிந்ததும் அது அவரது வாழ்விடம்.

ஒரு இரவு கழிந்தது. விடியுமுன் எழுந்து விட்டார். காலாறப் பாடசாலையைச் சுற்றி வலம் வந்தார். கட்டிடங்களைப் பார்வையிட்டார். அவை சுமார் இருநூறு மாணவர்களுக்குப் போதுமானதாக இருந்தன. ஆனால் அறுநூறு மாணவர்களுக்கு மேல் வரவு காட்டியது. அலுவலகத்தின் அருகே உயரமான கருங்கல். வெளியில் தலைநீட்டி இருந்தது. பார்ப்பதற்கு அழகிய மேடைபோல் காட்சி தந்தது. அதில் நின்று கலஹறாச் சூழலை ரசித்தார். அதன் இயற்கை அழகில் மெய் மறந்தார்.

பார்க்கும் இடமெல்லாம் மலைத்தொடர்கள். மலைச் சரிவுகளில் குடியிருப்புக்கள். மலைச்சரிவுகள் பல வடிவங்களில் அமைந்திருந்தன. சில மென்சாய்வாக இருந்தன. சில குத்துச்சாய்வாகத் தெரிந்தன.கலஹறா நகரம் மென்சாய்வில் கொலுவிருந்தது. பாடசாலைக் கட்டிடம் சிதறிக் கிடந்தது. ஒரு பகுதி உயரமான இடத்திலிருந்தது. மறுபகுதி தாழ்வான இடத்தில் இருந்தது. இரண்டு பகுதிகளையும் வீதி பிரித்திருந்தது. இரண்டுக்குமிடையே ஒரு கிலோ மீற்றர் தூரம் இடைவெளி. அதிபரின் மேற்பார்வை சிக்கலானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பாடசாலைதான். ஆனால் அதன் அமைப்பு வித்தியாச மானது. இரண்டு பாடசாலைகள் போலிருந்தது. இந்த அமைப்பைப் பார்த்து அதிசயித்தார். ''இது என்ன அமைப்பு'' சலித்துக் கொண்டார். பிள்ளைகள் சாரிசாரியாய் வந்தனர். ஆசிரியர்களும் வந்துவிட்டனர். ஒன்றுகூடல் முடிந்தது. பிள்ளைகள் வகுப்பறை களுக்குச் சென்றனர். மழையிருள் சூழ்ந்து கொண்டது. காற்றுச் சுழன்றடித்தது. வானில் மின்னற் கொடியின் விளையாட்டு. இடியோசை காதைப் பிளந்தது. பயங்கர மழை கொட்டியது. அலுவலக அறையினுள் நுழைந்தார். தனது குடையை விரித்து எடுத்தார். வெளியில் வந்தார்.

பிள்ளைகளில் பாதிப்பேர் தாழ்வாரத்தில் ஒதுங்கி யிருந்தனர். இடமின்றி அல்லல் பட்டனர். பாதி நனைந்தும் நனையாமலும் அவதியுற்றனர். இடவசதி போதாது. இருநேர வகுப்புக்கள் நடந்து கொண்டிருப்பதை அறிந்து கொண்டார். காலை எட்டுமணி தொடக்கம் சில வகுப்புக்கள் நடைபெறும். பாடசாலை விடும். இவர்கள் வீடு செல்வார்கள். பின்னர் மிகுதி வகுப்புக்கள் நடைபெறும். பிள்ளைகள் காலையிலேயே வந்து விடுவார்கள். பலருக்கு உணவே இல்லை. வாடி வதங்கி இருப்பார்கள். அதிபரின் உள்ளம் துடித்தது. "இந்த இழிநிலை தொடர விடமாட்டேன். ஒரு முடிவு காணவேண்டும்.'' சபதம் எடுத்துக் கொண்டார்.

இரண்டு வாரங்கள் கழிந்து விட்டன. கல்வித் திணைக்கள அதிகாரிகளைக் கண்டார். நாடாளுமன்ற உறுப்பினர்களைப் போய்ப் பார்த்தார். பிள்ளைகளது துயரை எடுத்துரைத்தார். அவர்களது காதுகளில் அவை ஏறவில்லை. செவிடன் காதுகளில் இசை இனிக்குமா? செவிட்டுக் காதுகளில் ஊதிய நாதஸ்வரம் போலிருந்தது. அதிபருக்கு வேதனையும் விரக்தியும் பொங்கியது. இந்நாட்டின் உண்மைநிலையினைப் புரிந்து கொண்டார். "பெரும்பான்மை இனத்தவர்கள்தான் இந்நாட்டுக் குடிமக்களா? இந்த நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பு யார்? அவர்களது பிள்ளைகளுக்குக் கல்வி கற்க வாய்ப்பில்லையா?'' உரிமைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சினை உள்ளத்தைத் தொட்டது. அதிபரின் கண்கள் பனித்தன. இனி இவர்களை நம்புவதில் பயனில்லை. மலையகம் கூனிக் குறுகிக் கிடக்கிறது. அதனை நிமிரச் செய்யவேண்டும். இதற்கொரு முடிவு கட்டவேண்டும். தனியே இருந்து சிந்தித்தார். துணிவே துணை என நம்பினார். மனதில் துணிவை ஏற்படுத்தினார்.

பாரதியின் பாடல் காதுகளில் இடித்தது. பாடினார்.

சொல்லடி சிவசக்தி - எனைச்
சுடர்விடும் அறிவுடன் படைத்து விட்டாய்.
வல்லமை தாராயோ - இந்த
மானிலம் வகையுற வாழ்வதற்கே.

மனம் விட்டுப் பாடினார். மனதில் அமைதி வந்தது.
மனதில் உறுதி வேண்டும்.
வாக்கினிலே இனிமை வேண்டும்.

பாரதியின் அடிகள் தானாகவே வந்து புகுந்தன. கண்கள் பனித்திருந்தன. துடைத்துக் கொண்டார்.

மலையகச் சிறார்களை நினைந்தார். தனது ஆசிரியர்களை எடை போட்டார். கலஹாவில் வீட்டு வசதிகள் குறைவு. அதனால் ஆசிரியர்கள் சிரமப்பட்டார்கள். பாடசாலைக்கு வருவதற்குப் பலமணி நேரம் எடுத்தது. பலர் கண்டி நகரில் இருந்தே வந்தனர். ஆசிரியர்களுக்கு இருப்பிட வசதி தேவை. அதிபரின் சிந்தனை செயல் வடிவம் பெற்றது. அதிபரின் அலுவலக மண்டபம் விடுதி யாயிற்று. ஆசிரியர்கள் பாடசாலையிலேயே தங்கினர். ஆசிரியை களுக்குப் பலர் வீடுகளைக் கொடுத்து உதவினர். ஆசிரியர்கள் தங்கிக் கடுமையாக உழைத்தார்கள்.

பாடசாலை களை கட்டியது. பாடசாலை அனைவருக்கு மாகத் திறந்திருக்க வேண்டும். பாடசாலை சூழலின் வளத்தைப் பெற வேண்டும். சூழல் பாடசாலையின் பயனைப் பெறவேண்டும். இது அதிபரின் கொள்கையாக இருந்தது. அதனால் எந்தநேரமும் பாடசாலை திறந்திருந்தது. மக்கள் அனைவரது கவனமும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையின் பக்கம் திரும்பியது. பாடசாலை எழுச்சி பெறத் தொடங்கியது.

தனித்தனியே ஆசிரியர்களை அழைத்தார். பிள்ளைகளது துயரை எடுத்துரைத்தார். சிலர் "நமக்கெதுக்கு சேர் இதெல்லாம்." என்று ஒதுங்கினார்கள். பலர் ஆர்வத்துடன் ஏற்றுக் கொண்டார்கள். ஆசிரியர்களின் பக்கபலம் கிடைத்து விட்டது. பெற்றார் பலரையும் சந்தித்தார். இளைஞர்களைச் சந்தித்தார். பெற்றார் ஆசிரியர் சங்கம் வலுப்பெற்றது. பழைய மாணவர் சங்கம் உறுதியடைந்தது. அவர்களது வல்லமையை உணர்ந்து கொண்டார். அதிபர் தனது திட்டத்தை வரைந்தார். மனதில் உறுதியை வளர்த்தார். செயற்படத் தொடங்கி விட்டார்.

மாலைநேரங்களில் ஆசிரியர்களோடு உலாப் போனார். பத்மநாதன் பொதுச் சுகாதாரப் பரிசோதகர். மிக நல்ல மனிதர். பத்மநாதனும் சேர்ந்து கொள்வார். மௌலானா, லீலாரத்தினம், கபிரியேல் துணை போவார்கள். பெற்றார்களின் உதவி தேடிவந்தது. பழைய மாணவர்கள் துணைவந்தார்கள். தேயிலைத் தோட்டத்துக் குத் தொழிற்சாலை முக்கியமானது. தொழிற்சாலைகளில் தொழி லாளர்களைச் சந்திக்கலாம். தோட்டம் துரைமார்களின் கட்டுப் பாட்டில் இருந்தது. துரைமார்கள் அதிபரின் நண்பர்களாயினர்.

துரைமார்கள் மூலம் அதிபரின் திட்டம் சென்றது. மக்களிடமும் நேரில் உரையாடினார். பாடசாலையின் அவலநிலையை விளக்கினார். மக்களுக்குப் புரியும்படி எடுத்துரைத்தார். கரைப்பவர் கரைத்தால் கல்லும் கரையுமாம். தங்கள் பிள்ளைகளின் எதிர் காலத்தை நினைத்தனர். தோட்டத்து மக்கள் ஏகமனதாக ஏற்றனர். தொழிலாளர்கள் தமக்குள் முடிவெடுத்தனர். துரைமார்களும் உடனிருந்தனர். "ஒருநாள் சம்பளத்தைத் தருவோம்." என்றார்கள். அதிபர் நெகிழ்ந்து போனார். அவரது கண்களில் ஆனந்தக் கண்ணீர். தோட்டத் துரைமார் ஏற்பாடுகளைச் செய்தார்கள். அதிபரின் மனம் நிதானமாகச் சிந்தித்தது. நிதி சேர்வதற்கான வழிகளைக் கண்டுவிட்டார். செயற்படத் தொடங்கிவிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருளாளன் அந்தப் பாடசாலையின் அதிபர். அவரைச் சூழ துடிப்புள்ள ஆசிரியர்கள். வாழத்துடிக்கும் மலையகச் சிறார்கள். சிறார்களுக்கு என்ன வேண்டும்? அவர்களும் இந்த நாட்டில் வாழ வேண்டும். அவர்களுக்கு வசதிகள் வேண்டும். வசதிகள் இருந்தால் வாழ்க்கையில் பிரகாசிப்பார்கள். அவர்களை யாரும் ஏமாற்ற இயலாது. அதற்கு ஒரே வழி கல்விதான். இவர்களுக்குக் கல்விப் பணியாற்றவேண்டும். அந்த எண்ணம் மனதில் வேரூன்றி விட்டது.

அருளாளன் அவசரப்படுத்தினார். விரைவாக உணவினை உட்கொண்டனர். புறப்பட்டு வெளியில் வந்தனர். அவர்களுக்கு அதிசயமாக இருந்தது. பாடசாலைக் கட்டிடத்தின் முன்னால் சிறியதொரு மைதானம். அதில் பெருந்திரளாக மக்கள் குழுமியிருந் தனர். பலபக்கங்களிலும் இருந்து மக்கள் வந்தனர். அருளாளன் அந்த இடத்துக்கு விரைந்தார். அவரைத் தொடர்ந்து ஆசிரியர்கள் சென்றனர். சிறுவர்களும் பின் தொடர்ந்தனர். நடப்பதைப் பார்ப்பதில் அவர்களுக்கு ஆர்வம் இருந்தது.

பெருந்திரளாக மக்கள் குழுமியிருந்தனர். இவ்வளவு சனக் கூட்டத்தை அனுசியன் கண்டதில்லை. ரதீபனுக்கு ஆச்சரியம். ஒரு ஓரமாக நின்று நடப்பதை அவதானித்தனர். கண்ணைப் பறிக்கும் அற்புதக் காட்சி. மென்சாய்வான நிலம். படிப்படியாகச் சரிந்து சென்றது. தூரத்தே சலசலத்து ஓடும் அருவி. சரிவான நிலத்தில் நடப்பது ஒரு கலைதான். மலையகச் சிறுவர்கள் படுவேகமாக நடந்தார்கள். ஓடிப் பாய்ந்தார்கள். "நாங்களும் நடந்து பார்ப்போமா"? கண்களால் பேசினார்கள். மெதுவாக நடந்து பார்த்தார்கள். சரிவில் நடப்பது வேடிக்கையாக இருந்தது. ஓடிப்பார்த்தார்கள். ரதீபன் பாய்ந்து பார்த்தான். அனுசியனுக்கு முடியவில்லை. கீழ்நோக்கிப் பாய்வது இலகுவானது. மேல்நோக்கிப் பாயமுடியவில்லை. ரதீபன் காலிடறி உருண்டான். நண்பர்கள் அவனைத் தாங்கிப் பிடித்தனர். மெதுவாக நடந்தனர். கூட்டம் நடைபெறும் இடத்துக்கு வந்தனர்.

சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை நின்றனர். மைதானத் துக்கு அப்பால் புல்லும் புதர்களும் தென்பட்டன. மக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழுக்களாகப் பிரிந்தனர். அவர்கள் கைகளில் மண்வெட்டிகள் இருந்தன. கூடைகளும் வைத்திருந்தனர். அதிபர் ஆசிரியர்களோடு வந்தார். மக்கள் கூட்டத்தைப் பார்வையிட்டார். அவருக்குத் திருப்தி யாக இருந்தது. அவரது கண்கள் உயர்ந்தன. சரியாக எட்டு மணி. பெரிய முதலாளி வந்து கொண்டிருந்தார். அவரை அதிபர் வரவேற்றார். மக்கள் கூட்டம் கைதட்டி ஆரவாரித்தது. கைகளைக் கூப்பி வரவேற்றனர். நிலச் சரிவுக்கு ஏற்றாற்போல் நின்றிருந்தனர்.

மக்கள் கூட்டத்தை அதிபர் பார்த்தார். கைகளைக் கூப்பினார். ''எல்லோர்க்கும் வணக்கம்'' என்றார். பதிலுக்கு அவர்களும் வணக்கம் கூறினர். எல்லோர் முகத்திலும் ஆர்வம் தெரிந்தது. அதிபர் என்ன சொல்வார்.? ஆவலோடு காத்திருந்தனர். ''நீங்கள் எல்லோரும் பெருந்திரளாக வந்துள்ளீர்கள். உங்கள் அனை வருக்கும் நன்றி. நீங்கள் நமது பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு உதவுகிறீர்கள். ஒரு மகத்தான சாதனையைச் செய்கிறீர்கள். நமது பிள்ளைகளுக்குக் கல்வி வேண்டும். ஆனால் கற்க வசதிகள் இல்லை. நமது சிறார்களின் எதிர்காலம் ஒளிமயமாக இருக்கும். இந்த இடத்தில் மைதானத்தை அமைப்போம். அதில் கட்டிடங் களை அமைப்போம். இன்றைய சிரமதானம் முக்கியமானது. ஒரு மைதானம் விரிந்து கிடக்க வேண்டும். செய்வோமா?'' அதிபர் கூறி முடித்தார். பதிலை எதிர்பார்த்துக் காத்திருந்தார்.

## 13

சனங்களிடையே சலசலப்பு. அவர்கள் சுற்றிவரப் பார்த்தார்கள். நிலம் சரிந்து கிடந்தது. சிற்றாறை நோக்கி மென்சாய்வாகத் தெரிந்தது. சந்தேகக் கேள்விகள் மெல்ல முளைத்தன. அவை மெல்ல ஒலிக்கத் தொடங்கின. கருப்பையாவின் குரல் தெளிவாகக் கேட்டது. அவரது கைகள் அசைந்தன. ''இந்த இடத்தில் எப்படிங்கையா முடியும்?. முடியுமா நம்மால்?'' கூறி முடித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அதுதானே. அதுதானே?" பக்கச் சார்பாகப் பல குரல்கள் ஒலித்தன. பல சந்தேகக் கேள்விகள் தொடர்ந்தன. அதிபர் முகத்தில் புன்னகை தவழ்ந்தது. அவர் பெரிய முதலாளியைப் பார்த்தார்.

"நமது செல்வம் பிள்ளைகள்தானே? அவர்கள் படிக்கவேண்டும். படித்துச் சமூகத்தில் உயரவேண்டும். அடிமைகளாக வாழக்கூடாது. அவர்கள் தலை நிமிர்ந்து வாழவேண்டும். அதற்காக நாம்தான் முயலவேண்டும். முடியாதது என்று ஒன்றுமே இல்லை". பெரிய முதலாளி சலசலப்புக்குப் பதில் சொன்னார். பெரியதொரு அமைதி நிலவியது. அதிபர் அமைதியைக் கலைத்தார். "உங்களுக்கு ஒரு கதை கூறுகிறேன். விருப்பம் என்றால் கேளுங்கள்" கூறிவிட்டு அமைதியானார். "சொல்லுங்கள். சொல்லுங்கள்" கூட்டத்தில் இருந்து பல குரல்கள். "சரி கூறுகிறேன். கேளுங்கள்" அதிபர் தொடர்ந்தார்.

"இரண்டு கிராமங்கள் இருந்தன. ஒரு மலைத் தொடர் கிராமங்களைப் பிரித்தது. போக்குவரத்துக்குத் தடையாக இருந்தது. அடுத்த ஊருக்குச் செல்வது சிரமம். மலையைச் சுற்றித்தான் மக்கள் செல்ல வேண்டும். அதற்காக பல நாட்கள் நடக்கவேண்டும். பயணம் செய்ய முடியாது தவித்தனர். ஒருநாள் இரண்டு கிராமத்து மக்களும் கூடினார்கள். பெரியவர்கள் அறிவாளிகள். "இந்த மலையைத் தகர்ப்போம்." என்றார்கள். மக்களும் "முடியுமா"? என்றனர். "முடியுமாவா? முயன்று பார்ப்போம்." பெரியவர்கள் பதில் சொன்னார்கள்.

மலையடிவாரம் சென்றார்கள். மலையைப் பார்த்து மலைத்தார்கள். சிலர் பயந்தார்கள். பின்வாங்கினார்கள். ஆனால் பலர் துணிந்தார்கள். துணிவே துணையாகும். மனதினிலே உறுதி வேண்டும். எண்ணியது கைகூடும். "எடுங்கள் ஆயுதங்களை தகருங்கள் இந்த மலையை" பெரியவர்களின் ஆணைகள் பிறந்தன. பெரியவர்களது சொல்லைக் கேட்டார்கள். மக்களின் கைகள் மண்வெட்டிகளை ஏந்தின. கூடைகள் தகர்ந்த துண்டங்களைச் சுமந்தன. "நாம் ஒன்றுகூடி விளையாடுவோம். வாருங்கள்." பெரியவர்கள் அழைத்தார்கள். வேலை விளையாட்டாகியது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்வெட்டியால் வெட்டுவது விளையாட்டாகியது. கூடையில் மண்ணைச் சுமப்பது ஒரு விளையாட்டு. மண்ணைக் கொட்டுவதும் விளையாட்டாகியது. பயந்து விலகியவர்களும் வந்தார்கள். இரவு பகலாக விளையாடினார்கள். அலுப்பு இருக்க வில்லை. ஆர்வம் இருந்தது. இரண்டு கிராமத்து மக்களும் சேர்ந்து கொண்டனர். இடைவிடாது பாடுபட்டனர். பலநாட்களாக உழைத்தனர். தங்களை மறந்து ஆடிப்பாடி விளையாடினார்கள்.

ஒரு சிறுவன் ஓடிவந்தான். கைகளை விரித்தான். துள்ளிக் குதித்தான். வழி பிறந்தது. பாருங்கள். என்றான். அவனைத் தொடர்ந்து பல சிறுவர்கள் வந்தார்கள். அனைவரும் அப்போதுதான் பார்த்தார்கள். மலையைக் காணவில்லை. தடையாக இருந்த மலை எங்கே? எப்படி மறைந்தது.? மலைத்தார்கள். தங்களை மறந்து விளையாடினார்கள். விளையாட்டில் ஆர்வம் பிறந்தது. வேலை என்று அவர்கள் கருதவில்லை. பயணம் செய்ய பெரிய வழி தோன்றியது. தமது சந்ததியினருக்காக வழியைத் தேடி விட்டார்கள். இது பெரிய மலை அல்ல. சரிவு நிலம். ஒரு மட்டத் துக்குச் சமன் செய்வோம். அவ்வளவுதான்.'' கூறிமுடித்தார். அங்கு பெரிய அமைதி நிலவியது.

பெரிய முதலாளி மண்வெட்டியைக் கைகளில் எடுத்தார். "கட்டிடம் தேவை என்று இருக்கலாமா? உழைப்போம் வாருங்கள். எமது பிள்ளைகளின் எதிர்காலம் நம்மிடம் தரப்பட்டுள்ளது. நிலத்தை செப்பனிடுவோம். அல்லது செத்து மடிவோம்.'' அழைப்பு விடுத்தார். ஓங்கி மண்வெட்டியால் நிலத்தில் வெட்டினார். மக்கள் கைகளைத் தட்டி ஆரவாரித்தனர். ''இதோ நாங்கள் துணிந்து விட்டோம்.'' முருகேசபிள்ளை முன்னே வந்தார்.

மக்கள் அனைவரும் சேர்ந்து கொண்டனர். அந்த மலைச் சரிவில் பரந்து நின்றனர். அவர்களது ஆரவாரம் வானைப் பிளந்தது. மேகக் கூட்டம் மலையிடுக்குகளில் ஒழிந்து கொண்டன. குழுக்களாக மக்கள் குழுமி நின்றனர். குழுக்களுக்குப் பொறுப்பாகத் தலைவர்கள் நின்றனர். அதிபர் கைகளில் மண்வெட்டி இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சரி தொடங்குவோமா'' என்றார். ''சரி தொடங்குவோம்''. குரல்கள் ஒன்றாக ஒலித்தன. அதிபரையே பார்த்துக் கூட்டம் நின்றது. அதிபர் அருளாளன் மண்வெட்டியை ஓங்கினார். நிலத்தைக் கொத்தினார். மக்களும் சேர்ந்து கொண்டனர். மலைச்சரிவில் சிரமதானப் பணி தொடங்கியது. சுறுசுறுப்பாக இயங்கினார்கள்.

மாணவர்கள் கைகளிலும் மண்வெட்டி. மாணவியர் கைகளில் கூடைகள். ஆசிரியர்களும் சேர்ந்து கொண்டனர். அவர்கள் தனியே இயங்கவில்லை. மக்களோடு கலந்து நின்றனர். அது மக்களுக்கு உற்சாகத்தை அளித்தது. வேலை அங்கு இல்லை. விளையாட்டு நிகழ்ந்து கொண்டிருந்தது. பெரிய பிளாஸ்ரிக் பீப்பாக்களில் பால் வந்திறங்கியது. பாண் வந்து குவிந்தவண்ணம் இருந்தது. தேங்காய்கள் குவிந்தன. ஆசிரியைகள் சிலர் தேநீர் தயாரித்தனர்.

ருக்மணி ரீச்சர் அதற்குப் பொறுப்பாக இருந்தார். அனுஜாவும் கலாவும் சேர்ந்து கொண்டனர். வசந்தி மனோகரிக்கு உதவினார். சம்பல் செய்வதற்கு மனோகரி பொறுப்பாக இருந்தார். சுவையாகச் சம்பல் செய்தனர். பங்கீடு செய்வதற்கு செந்தில்ராணி தலைமை தாங்கினார். காலை உணவு தயாரிப்பதில் ஈடுபட்டனர். மைதானம் செப்பனிடும் பணி சுறுசுறுப்பாகியது.

பெரிய முதலாளியும் அதிபரோடு சுற்றி வந்தார். இடையிடையே உற்சாகம் ஊட்டினார்கள். மாணவர்கள் குசியானார்கள். சந்தோசமாக இயங்கினார்கள். எடுபிடி வேலைகளை விரைந்து செய்தனர். எல்லோரிடமும் மகிழ்ச்சியோடு பழகி வந்தனர். கண்ணுக்கு எட்டிய தூரம்வரை புதர்கள் இருந்தன. இப்போது புதர்கள் அங்கே இல்லை. ஒரே வெளியாகத் தெரிந்தது. அலுக்காது அனைவரும் பணியில் ஈடுபட்டனர்.

"அப்பா இந்த மலைச்சரிவை சமநிலம் ஆக்கலாமா?" வியப்போடு நிரூசன் கேட்டான். அப்பாவுக்கும் சந்தேகம்தான். எனினும் மக்கள் கூட்டத்தைப் பார்த்தார். இப்போது சந்தேகம் தீர்ந்தது. "ஆக்கலாம். ஆகும்." மறுமொழி கூறினார். "எப்படி ஆகும்."? மீண்டும் கேட்டான். பெரிய முதலாளி பக்கத்தில் நின்றிருந்தார். அவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவதானிக்கவில்லை. அவரே பதில் கூறினார். ''முயன்றால் முடியாதது ஒன்றுமில்லை. முயற்சி திருவினையாக்கும். மனம் சோர்ந்தால் வெற்றி வராது. மனதில் உறுதி வேண்டும். கடின உழைப்பு வேண்டும். ஒவ்வொரு மனிதனுக்கும் அது வேண்டும். மனதில் உறுதி இருந்தால் மலையும் பொடியாகும். ''நோ பெயின், நோ கெயின்'' (no pain, no gain) புன்னகையோடு பெரிய முதலாளி கூறினார். அவர் அனுபவசாலி. தனது அனுபவத்தை எடுத்துச் சொன்னார்.

வரிசையாக நின்று நிலத்தைச் சீராக்கினார்கள். மண்வெட்டிகள் விளையாடின. கூடைகள் அந்தரத்தில் சுழன்றன. வெற்றிலையும் சுண்ணாம்பும் கலந்த நிலை. பெரிய வெளியில் மலைமகள் சிவந்து கிடந்தாள். கிரேவல் தரை வானைப் பார்த்தது. இடையிடையே கருங்கற்கள் எட்டிப் பார்த்தன. சிறுவர்கள் சுறுசுறுப்பாக இயங்கினார்கள். ''சித்தாள் வேலை எட்டாள் வேலைக்குச் சமன்'' என்பது பழமொழி. ஒரு சிறுவனது வேலை எட்டுப் பெரியவர்களது வேலைக்குச் சமன். இது கிராமத்துப் பழமொழி. கற்களைப் புரட்டி எடுத்தனர். உருட்டி ஓரமாக்கினர். பெரிய கற்களை உடைத்து எடுத்தனர். அதனை ஆனந்தபாஸ்கரன் கண்டார்.

''கற்களை உடையாதீர்கள். கல்லுக்குள் தேவன் இருப்பார்.'' நகைச் சுவையோடு சொன்னார். ''கல்லுக்குள் தேவனா? என்னப்பா அது?'' ரதீபன் வினவினான். ''அது பெரிய கதை.'' அப்பா சொன்னார். ''அந்தக் கதையைக் கூறுங்கள் அப்பா''. நிரூசன் கெஞ்சினான். இடைவேளையின்போது கூறுகிறேன். இப்போது வேலையைக் கவனியுங்கள். சொல்லிக் கொண்டு வேலையில் ஈடுபட்டார்.

இடைவேளை நேரம் வந்தது. அனைவரும் களைப்பாறினார்கள். பாணும் சம்பலும் பரிமாறப்பட்டது. சுவைத்து உண்டார்கள். பசி சுவையறியாது. சம்பலில் மாசிக்கருவாடு சேர்த்திருந்தார்கள். அது சுவையைக் கூட்டியது. பால் தேநீர் சுடச்சுடக் கொடுக்கப்பட்டது. பதினைந்து நிமிடங்கள் பாய்ந்து சென்றன. மீண்டும் வேலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்கியது. இப்போது ஆனந்தபாஸ்கரனைச் சூழப் பலர் நின்றிருந்தனர். வேலை செய்து கொண்டே கதை கேட்பது சுவை யானது. கதையைக் கூறும்படி அடம்பிடித்தார்கள். ஆனந்த பாஸ்கரனுக்கு வேறு வழி தெரியவில்லை. கூறத் தொடங்கினார். முரளி பக்கத்தில் நின்றிருந்தார். அவருக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

மக்களுக்குப் போக்கு வரத்துக்கு வீதி வேண்டும். பல ஊர்களை இணைத்து வீதியை அமைத்தார்கள். வீதியின் குறுக்கே உயர்ந்த பெரிய கற்பாறை இருந்தது. அதனை உடைக்க முனைந்தனர். கல்லின் மேற்பகுதி இலகுவாக உடைந்தது. மையப்பகுதி வைரமான கருங்கல். உடைக்க முடியாதிருந்தது. அதனை வெடி வைத்துத் தகர்க்க முற்பட்டார்கள். அந்த வழியால் வழிப்போக்கன் வந்தான். நின்று நடப்பதை உற்றுப் பார்த்தான். அவன் முகம் பிரகாசித்தது. ஓடோடிச் சென்றான். கல்லைத் தடவிப் பார்த்தான். கல்லை உடைக்க வெடிமருந்தும் வந்தாயிற்று. தகர்க்க ஆயத்தங்கள் நடந்தன. திடீரெனக் கல்லைக் கட்டிக் கொண்டான். "இக்கல்லை உடைக்க வேண்டாம். இந்தக் கல்லுக்குள் தேவன் இருக்கிறார்." என்றான். பலர் அவனது செயலைப் "பைத்தியம்" என்றனர். "ஏய் பைத்தியம் விலகிச் செல்". என்றார்கள். அவன் உறுதியாக நின்றான். அதிகாரிகள் சங்கடப்பட்டார்கள். அவனை விலகிச் செல்லுமாறு கேட்டனர். ஆனால் அவன் விடவில்லை." கதையை நிறுத்தினார்.

சுற்றிவரப் பார்த்தார். கதையில் மெய்மறந்திருந்தனர். "வேலையையும் செய்ய வேண்டும். சரியா"? உசார்ப்படுத்தினார். "ஓமோம். செய்கிறோம். சொல்லுங்கள்." பதில் வந்தது. அவர் கதையைக் தொடர்ந்தார். "ஐயா, இன்று மட்டும் அவகாசம் . தாருங்கள். நாளை வந்து பாருங்கள். தேவனைக் காணலாம்." என்று அழுத்தமாக மன்றாடினான். மக்களும் அதிகாரிகளும் இணங்கிக் கொண்டனர். அவனை அப்படியே விட்டுக் கலைந்தனர். அவன் கிழிந்த பையினுள் கையை விட்டான். உளியும் சுத்தியலும் அகப்பட்டன. விடிய விடிய உழைத்தான். அயராது உழைத்தான். அவனது மனதில் உறுதி உருவாகியது. தேவனைக் காட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைராக்கியம். ஓய்வில்லாது அவன் கைகள் செயற்பட்டன. எப்போது தொடங்கினான்.? எப்போது முடித்தான்.? அவனுக்கே தெரியாது. சூரியனுக்கும் தேவனைக் காணும் அவசரம். விரைவாகப் பொழுது புலர்ந்து கொண்டு வந்தது.

விடிந்து விட்டது. அவசர அவசரமாக மக்கள் ஓடோடி வந்தனர். எங்கும் மக்கள் கூட்டம். கல்லைத் தேடினார்கள் கல்லைக் காணவில்லை. அந்த மனிதனைத் தேடினார்கள். காணவில்லை. அங்கே கடவுளின் சிலை அற்புதமாக நின்றது. அவர்களை அறியாமலேயே கைகள் கூப்பியபடி இருந்தன. முழங்காலிட்டு நின்றார்கள். வணங்கினார்கள். மக்கள் திரண்டு நின்றார்கள். அவர்கள் அந்தக் கலைஞனைத் தேடினார்கள். "கல்லுக்குள் தேவனைக் காட்டியவன் எங்கே"? தேடினார்கள். அவன் கற்செதுக்கல்களின் மத்தியில் சுருண்டு கிடந்தான். கல்லுக்குள் தேவனைக் காட்டிய கலைஞன் யார்? சொல்லுங்கள்." கதையோடு வினாவையும் கேட்டு முடித்தார். ஆளையாள் பார்த்தனர். கண்களால் பேசிக் கொண்டனர். விடை யாருக்கும் தெரியவில்லை. "நாங்கள் தோல்வியை ஒப்புக் கொள்கிறோம். அப்பா நீங்களே சொல்லுங்கள்." ஏகமனதாகக் கூறினார்கள். ஆனந்தபாஸ்கரன் சிரித்தார். "அந்தக் கலைஞன்தான் மைக்கல் அஞ்சலோ." என்றார்.

வேலை மும்முரமாக நடந்தது. அனைவரும் தமது வேலையாகக் கருதினார்கள். உடலும் உள்ளமும் இணைந்து செயற்பட்டன. கதையும் வேலையும் ஒன்று சேர்ந்து உற்சாகத்தை ஊட்டியது. ஒரே குதூகலமாக இருந்தது. மலையகத் தமிழைக் கேட்பதில் சுகமிருந்தது. ஒரு இன்பம் இருந்தது. மணி பன்னிரெண்டு இருக்கும். வேலை அனைத்தும் முடிந்து விட்டது. பெரியதொரு செம்மண் நிலப்பரப்பு பரந்து கிடந்தது. நூறு மீற்றர் அகலம். ஐந்நூறு மீற்றர் நீளத்தில் மைதானம் வானைப் பார்த்தது. கல்லுக்குள் தேவனைக் கண்ட சந்தோசம். மனிதமுயற்சியால் முடியாதது ஒன்றுமில்லை. பசுமையான மலைச்சரிவில் செம்மஞ்சள் நிறம். நிலத்துள் புதையுண்டு கிடந்த கிரேவல் மல்லாந்து கிடந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்கும் கண்களுக்குக் குளிர்ச்சியாய் தெரிந்தது. உழைத்த உடல்களில் கிரேவல் அடையாளமிட்டு மகிழ்ந்தது. சிறுவர்களது உழைப்புத் தெரிந்தது.

வேலை முடிந்ததும் மைதானத்துள் ஒன்று சேர்ந்தனர். குழுக்களாகவே திரண்டிருந்தனர். நுகுமான் மிக நல்ல முஸ்லிம் இளைஞன். அத்தநாயக்கா சிங்கள இளைஞன். அவரகளுக்குள் இனமத பேதமில்லை. அவர்கள் மனித இனத்தை நேசிப்பவர்கள். கணேசும், சுந்தரும், தர்மலிங்கமும் முன்னால் நின்றனர். இந்து இளைஞர் மன்றத் தொண்டர்கள் மகிழ்வோடு நின்றனர். பெரிய முதலாளியோடு பத்மநாதன் வந்தார். அவரும் ஆசிரியர்களோடு இணைந்து செயற்புடுபவர். மலையகச் சிறார்களின் கல்விக்காகக் கூடிநின்றார்கள். அதிபர் அருளாளன் முன்னால் வந்தார். அனைவரையும் அன்போடு வரவேற்றார். "இந்த மலையக மாணவர்களின் நலன் முக்கியமானது. அதில் அக்கறை கொண்ட உங்களுக்கு நன்றி கூறுகின்றேன். இந்தக் கைங்கரியத்தில் மூவின மக்களும் கலந்துள்ளீர்கள். நமது நாட்டில் மூவின மக்களும் சேர்ந்து வாழவேண்டும். நாம் இலங்கை மாதாவின் பிள்ளைகள். சகோதரர்கள். நமக்குள் ஒற்றுமை வேண்டும்." அவர் தொடர்ந்தார்.

"நம் முன்னோர்கள் ஒற்றுமை இல்லாது வாழ்ந்தார்கள். அரசர்களிடையே பதவி ஆசை நிலவியது. தங்கள் பேராசைக்காக மக்களைப் பலிக்கடாக்கள் ஆக்கினார்கள். ஆளையாள் காட்டிக் கொடுத்தார்கள். அதனால் அந்நியர்கள் நமது நாட்டைப் பிடித்தார்கள். நாம் அடிமைகள் ஆகினோம். பலநூறு ஆண்டுகளின் பின் சுதந்திரம் பெற்றோம். நம்மை நாம் ஆளும் நிலை வந்தது. பதவியாசை கொண்ட அரசியல்வாதிகள் மக்களைப் பிரித்தார்கள். இனங்களாகப் பிரித்து இனக் குரோதத்தை வளர்த்து விட்டார்கள். இன்று அதனை அனுபவிக்கிறோம். ஆனால் இங்கு நடந்த சிரமதானப் பணியில் அனைவரும் ஒன்று சேர்ந்திருக்கின்றோம். மூவின மக்களும் ஒன்று சேர்ந்துள்ளோம். இது தொடர வேண்டும். உங்கள் ஒத்துழைப்புக்கு மனமார்ந்த நன்றி. இன்று மாலை கட்டிடம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டும் பணி தொடரும். அனைவரையும் அழைக்கின்றோம். வாருங்கள்.'' கைகூப்பி விடை கொடுத்தார். மக்கள் கலைந்து சென்றனர்.

## 14

சரியாக நான்கு மணி. மீண்டும் மக்கள் குழுமி இருந்தனர். கலஹா முத்துமாரியம்மன் கோயில் ஐயர் வந்தார். அவரைச் சூழப் பல பிரமுகர்கள் வந்தனர். அப்புகாமி மேசன் புன்சிரிப்போடு நின்றார். அவர் நெற்றியில் திருநீற்றுப் பூச்சு. அதன்மேல் சந்தனப் பொட்டு. வாயிலே வெற்றிலையைக் கொதுப்பி இருந்தார். தலைப்பாகை மின்னியது. ஆட்டுக்கடா மீசையை ஒதுக்கி விட்டார். அப்புகாமி மேசன் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர். மனித நேயத்தைப் புரிந்தவர். மிக நல்ல மனிதர். அவர் நிலத்தை அளந்தார். கூனியை அடித்தார். கட்டிடம் கட்டுவதற்கு நிலம் தயாராய் இருந்தது. ஆசிரியர்களும் இளைஞர்களும் திரண்டிருந்தனர். பாடசாலை மாணவர்கள் குழுமி இருந்தனர். அடிக்கல் நாட்டும் நேரம் நெருங்கி வந்தது. அத்திவாரத் தளம் வெட்டப்பட்டது. மலைச்சரிவைச் செப்பனிடும்போது கற்கள் எட்டிப்பார்த்தன. கற்களைப் பெரிய குவியலாகக் குவித்தனர். அதனால் அத்திவாரத்துக்குத் தேவையான கற்கள் குவிந்தன.

ஐயர் பூசையை முடித்தார். மௌலவி காசிம் கிறாத் ஓதினார். பெரிய முதலாளி கந்தசாமிப் பிள்ளை புன்முறுவலோடு நின்றார். பெற்றோர்கள் புடைசூழ நின்றனர். அதிபர் பெரியமுதலாளியைப் பார்த்தார். ''உங்கள் தந்தை நிலத்தை அளித்தார். சிறிய கட்டிடத்தையும் கொடுத்தார். அவரால் கலஹாவில் தமிழ்ப் பாடசாலை கிடைத்தது. தோட்டப் பிள்ளைகளின் கல்விப் பயிருக்கு வித்திட்டார். அவர் விட்ட குறையை நீங்கள் தொட்டு நிறைவுசெய்ய வேண்டும். இந்தக் கட்டிடம் நிறைவுபெற உங்கள் ஆசி தேவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒத்தாசையும் உதவியும் வேண்டும். உங்கள் மேற்பார்வையில் கட்டிடம் வளரவேண்டும். முதற்கல்லை நீங்களே வையுங்கள்." என்றார்.

அதிபர் கல்லைத் தேர்ந்து எடுத்தார். அவரின் கண்கள் பனித்திருந்தன. கல்லைப் பெரிய முதலாளியிடம் கொடுத்தார். பெரிய முதலாளி அதனைப் பெற்றுக் கொண்டார். கல்லை இடுமாறு அன்புக் கட்டளையை விடுத்தார். முதற்கல்லை பெரிய முதலாளி வைத்தார். அவரது கண்களிலும் ஆனந்தக் கண்ணீர். மக்கள் ஆரவாரித்தனர். சூழ்ந்திருந்த பலர் ஆளுக்கொரு கல்லை வைத்தனர். கட்டுமான வேலை தொடங்கி விட்டது. அப்புகாமி தனது மகன்மாரையும் சேர்த்திருந்தார். குடும்பமே கட்டுவேலையில் பிரசித்த மானவர்கள். கட்டுமான வேலைகள் தொடங்கி விட்டன.

இலங்கை அழகான தீவு. இந்து சமுத்திரத்தில் இலங்குகின்றது. இலங்குவதால் இலங்கை என்றாகியதோ?. அது கேந்திர நிலையத்தில் அமைந்துள்ளது. கிழக்கும் மேற்கும் இணைய வசதியைக் கொண்டது. வல்லரசு நாடுகள் கண் வைத்துள்ளன. அவை தம்வசப்படுத்தக் கங்கணம் கட்டுகின்றன. ஏலம், கராம்பு, கறுவா, மிளகு விளையும் அற்புத நிலம். வாசனைத் திரவியங்கள் கிடைக்கும் நாடு. முத்தும் யானைத் தந்தமும் ஏற்றுமதி செய்யும் நாடு. ஈழத்துணவை அள்ளிக் கொடுத்துப் புகழ்பெற்ற நாடு. சலசலத்தோடும் வற்றாத ஜீவநதிகள் பல உண்டு. மத்தியில் மலை நாடு இடைவெப்பக் காலநிலையைக் கொண்டது. காலனித்துவ ஆட்சியாளரைக் கவர்ந்தது. அவர்களது படையெடுப்பால் அவர்கள் வசமானது. கோப்பியும், தேயிலையும், றப்பரும் பயிரிடப்பெற்றது. பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை மேலோங்கியது.

தோட்டங்களில் வேலை செய்வதற்காக இந்திய மக்கள் அழைக்கப்பட்டார்கள். அடக்கி ஒடுக்கி உழைப்பை உறிஞ்சினார் கள். ஒடுக்கப்பட்ட மக்களாக வாழ்க்கையைத் தொடங்க வைத் தார்கள். அவர்களது உரிமைகள் மறுக்கப்பட்டன. உதிரத்தை வெயர்வையாக்கி உழைத்தார்கள். அதனால் மிகக் கொடுமையான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையில் துன்புற்றார்கள். பொருளாதாரம் பெருக உழைத் தார்கள். அந்த மக்களுக்கு உதவ மனமிருக்கவில்லை. மலையகம் பொன்விளையும் பூமியாகியது.

அமெரிக்காவில் பருத்தி வலயங்கள் உள்ளன. வெள்ளையர்கள் ஆபிரிக்கா சென்றார்கள். ஆபிரிக்க மக்களை வேட்டையாடினார்கள். அவர்களை அடிமைகளாகப் பிடித்தனர். உலக சந்தையில் ஏலத்தில் விற்றார்கள். அவர்கள் அமெரிக்கப் பருத்தி வலயங்களில் உழைத்தார்கள். அதேபோல்தான் இலங்கையிலும் இந்திய மக்கள். இலங்கைப் பொருளாதாரத்தின் முதுகெலும்பு ஆனார்கள். தமது வயிற்றைப் பொத்தி உழைத்தார்கள். நாடு சுதந்திரம் பெற்றது. ஆனாலும் மலையக மக்களது வாழ்வில் மாற்றமில்லை. இன்றும் கைகட்டி வாய்புதைத்து வாழும் நிலை. அது மாறவில்லை. அவர்களுக்கு மாற்றம் வேண்டும். அதற்குக் கல்விதான் ஆதாரம்.

கல்விதான் மனிதனை வாழவைக்கிறது. கல்வி கற்றவர் நல்லவராகிறார். கல்வி வசதி மலையகத்தில் அரிது. கற்பதற்குரிய வசதிகள் இல்லை. வாய்ப்புகளும் இல்லை. சந்தர்ப்பங்கள் கிடைக்குமாயின் மலையகம் ஒளிவிட்டுப் பிரகாசிக்கும். உதய சூரியன்கள் உதயமாவார்கள். கலஹா மக்கள் துணிந்து விட்டார்கள். தூண்டிவிட அதிபர் கிடைத்து விட்டார். மக்கள் உணர்ந்து கொண்டனர். மலையகம் விழித்துக் கொள்ளும் நாள் நெருங்கி விட்டது. இவர்கள் சந்தர்ப்பவாதிகளிடம் இருந்து தப்ப வேண்டும். என்று மலையக மக்கள் விழித்துக் கொள்கிறார்களோ அன்றுதான் அவர்களுக்கு விடிவு கிட்டும்.

கல்வியில் நாட்டம் ஏற்பட்டு விட்டது. கட்டிடம் கட்டுவதில் ஆர்வம் பிறந்து விட்டது. மக்களது கவனமெல்லாம் பாடசாலைப் பக்கம் இருந்தது. கட்டிடம் நாளொரு வண்ணம் உயர்ந்தது. வளர்ந்தது. மக்கள் தினமும் வந்தனர். பார்த்து உதவிகள் செய்தனர். ஒவ்வொரு ஆசிரியரும் பொறுப்போடு செயற்பட்டனர். விடுமுறை நாட்கள் காற்றாய்ப் பறந்தன. மலைச்சரிவில் கட்டிடம் அழகாய் மின்னியது. மரங்கள் தயார். தச்சர்கள் வந்தனர். கூரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலைகள் முடிந்தன. கூரையில் மாணவர்களின் ஆரவாரம். ஓடு கொழுவும் பணி மாலை நேரத்தில் முடிந்தது. இரவிரவாக பூச்சு வேலைகள் நடந்தன. இனி திறப்புவிழாதான். வேலைகள் முடிந்த திருப்தியில் மகிழ்ந்தார்கள்.

ஒருநாளை உல்லாசமாகக் கழிக்கத் தீர்மானித்தனர். அதிபரது அனுமதி கிடைத்து விட்டது. ஆசிரியர்களும் சேர்ந்து கொண்டனர். அதிபர் போகும் இடத்தைத் தீர்மானித்தார். ஆனால் அதனைக் கூறவில்லை. "காலையில் புறப்படுவோம்" என்றார். எங்கு போவது?. புதுவித அனுபவம் பெறத் துடித்தனர். "சரி காலையில் பார்ப்போம். எந்த இடமென்றாலும் நமக்குப் புதிதுதானே. காலையில் சந்திப்போம்." அனைவரும் பிரிந்து சென்றனர்.

காலைப் பொழுது விரைவாகவே வந்து விட்டது. பனித்தூறல் குறைந்திருந்தது. நண்பர்கள் விடிகாலையிலேயே வந்து காத்திருந் தனர். கண்டி செல்லும் பேருந்து காத்திருந்தது. சாரதி முருகேசு புன்முறுவலோடு நின்றிருந்தார். முருகேசு மிக நல்ல மனிதர். பாடசாலையில் பற்றுடையவர். அதிபரையும் ஆசிரியர்களையும் மதித்து நடப்பவர். பாடசாலை வளர்ச்சிக்காக உழைப்பவர். ஆசிரியர் களும் வந்து விட்டார்கள். "புறப்படுவோமா?" கூறிக்கொண்டே அதிபர் வந்தார். அனைவரும் அணிவகுத்து நடந்தனர். வஸ் வண்டியில் ஏறினர். வஸ்வண்டி கண்டி நோக்கிப் புறப்பட்டது. முருகேசுவிடம் அதிபர் ஏதோ கூறினார். அவர் தலையை ஆட்டினார். "நான்கு மணிக்கு வருகிறேன் சார்." என்றார்.

நில்லம்பே பெயர்ப் பலகை தெரிந்தது. அதிபர் தீர்மானித்திருந்த இடம் அதுதான். அதனை முருகேசிடம் சொல்லியிருந்தார். மணி பேருந்து தரிப்பிடத்தில் நின்றான். அவனைச் சூழ்ந்து பல நண்பர்கள். "இறங்குங்கள்" அதிபரின் குரல் ஒலித்தது. தங்கள் பொட்டலங்களை எடுத்துக் கொண்டார்கள். ஒருவர்பின் ஒருவராக இறங்கினார்கள். நண்பர்களைக் கண்டதும் ஒரே குதூகலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைச் சரிவுகளில் நடப்பதை நினைந்தனர். மனதில் சங்கீதம் ஒலித்தது.

மணிதான் இப்போது தலைவன். அவன் முதல் எச்சரிக்கையை விடுத்தான். "நாங்கள் கீழிறங்கி நடக்கிறோம். வழியில் பள்ளம் படுகுழிகள் உண்டு. சில இடங்களில் நிலம் வழிக்கிவிடும். கவனமாகப் பார்த்து நடக்க வேண்டும். சரி நடப்போம்." மணி முன்னால் நடந்தான். நில்லம்பே அவனது சொந்த ஊர். எல்லா இடமும் தண்ணிபட்ட பாடம். அட்டைகள் பற்றி அவன் கூறவில்லை. நடந்தார்கள். திடீரெனச் சூரியன் மறைந்ததுபோல் இருந்தது. உயர்ந்த மரங்கள் சூரிய ஒளியை மறைத்தன. மேகக் கூட்டம் இறங்கியது. அவர்களைத் தழுவியது. சில்லிட்ட குளிர். அணைத்துக் கொண்டது. குசியாக இருந்தது. "ஹேய்.." கீச்சுக் குரல்கள் ஒலித்தன. சந்தோசத்தில் மிதந்தனர்.

ஆளையாள் மோதிக் கொண்டு நடந்தனர். நிசோத்மன் வீரிட்டுக் கத்தினான். எல்லோரும் பயந்து பார்த்தனர். அவனது காலிலிருந்து இரத்தம் வடிந்தது. மணி பாய்ந்து வந்தான். அவனிடம் புகையிலை இருந்தது. சுண்ணாம்பும் இருந்தது. "என்ன.. என்ன.."? பயந்து அலறிக் கேட்டனர். நிசோவின் காலைத் தடவினான். அவனுக்குத் தெரியும். அது அட்டையின் விளையாட்டு. அதனை அவன் கண்டு கொண்டான். "அட்டை கடித்துக் கொண்டது. அது ஒன்றும் செய்யாது. இதற்குப் பயப்படுவதா?" சிரிப்போடு மணி கூறினான். புகையிலையையும் சுண்ணாம்பையும் எடுத்தான். அட்டையின்மேல் வைத்தான். அட்டை கீழே விழுந்தது.

பயணம் தொடர்ந்தது. எங்கும் தேயிலைச் செடிகள். அவற்றிலிருந்து இளந்தளிர்கள் மின்னின. எட்டிப் பார்த்துச் சிரித்தன. கடும் பச்சைமேல் இளம் பசுமைத் தளிர்கள். ஈரமான தரை. மேகத்தை விரட்டும் குளிர்ந்த காற்று. கொழுந்து பறிக்கும் பெண்கள் கூட்டம். அவர்கள் கைகளில் தடிகள். பார்த்த வண்ணம் நடந்தனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


தேயிலை கொய்யும் பெண்களை அவதானித்தார்கள். அவர்கள் முக்காடு போட்டிருந்தனர். கூடை முதுகுப்புறம் தொங்கியது. கூடையின் கயிறு நெற்றிக்கு மேலிருந்தது. கூடை தலையில் மாட்டப் பட்டிருந்தது. செடிகளின் மேல் தடியை வைத்தார்கள். அவர்களது இருகைகளும் இயந்திரமாகின. செடிகளின் தளிர்களைக் கொய்தன. கைகள் நிறைந்ததும் பின்னால் வீசினர். தளிர்கள் சரியாகக் கூடையில் குறிதவறாது விழுந்தன. அனைவரும் அதனை விநோதமாகப் பார்த்தனர். ஆச்சரியமாக இருந்தது.

மணியின் தாயார் மாரியாத்தா வந்தாள். அவளைச் சூழந்து பல பெண்களும் வந்தனர். அதிபரைக் கண்டதில் அவர்களுக்குச் சந்தோசம். "கும்பிடுறமுங்க". கைகூப்பிக் கும்பிட்டார்கள். பதிலுக்கு இவர்கள் அனைவரும் கும்பிட்டார்கள். அதிபர் மாரியாத்தாவின் பக்கம் சென்றார். "அம்மா! இவர்களுக்குக் கொழுந்தெடுப்பதைக் காட்ட முடியுமா''? பிள்ளைகளைக் காட்டிக் கேட்டார். "அதுக்கென்ன காட்டுறோம் ஐயா. கொழந்தைங்க..! இப்படி வாங்க". மாரியாத்தா அழைத்தாள். அவள் பக்கம் சென்றார்கள். "இதோ பாருங்க.. இப்படித்தான் கொழுந்தெடுக்கிறது." கொய்து காட்டினாள். பிள்ளைகள் கொய்து பார்த்தனர்.

தூரத்தே கங்காணி வந்து கொண்டிருந்தார். அதனை மாரியாத்தா கண்டு கொண்டாள். "ஐயா கங்காணம் வாறாங்க. அவங்களுக்கு ஒருக்காச் சொல்லிப்புடுங்க". மாரியாத்தா அதிபரைக் கேட்டுக் கொண்டாள். "அதிபரையா வணக்கமுங்க" பசங்களோட ஆறு பாக்கப் போறிங்களா''? கங்காணி முத்தையா வந்து கொண்டே கேட்டார். "ஓம் முத்தையா. இவர்களுக்கு கொழுந் தெடுக்க ஆசை. ஒருக்காக் காட்டினால் நல்லது." அதிபர் முடிக்க வில்லை. "அவ்வளவு தானுங்களா? ஏய்.. மாரியாத்தா கொழுந் தெடுக்கிறதை காண்மி." முத்தையாவின் கட்டளை பிறந்தது. ஒரு சிரிப்போடு மாரியாத்தா செயலில் ஈடுபட்டாள். பிள்ளைகள் கவனமாகப் பார்த்தனர். அவர்கள் கைகளில் தேயிலைக் கொழுந்து. சிலர் கைகளில் கொப்புகளும் இருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஐயையோ.. அப்படி இல்லிங்க.. இந்தா..இப்படி.." மாரியாத்தா காண்பித்தாள். "மாரியாத்தா அதனைத் தாங்க." அதிபர் தேயிலைக் கொழுந்தை வாங்கினார். வடிவாகப் பார்த்தார். "இங்கே பாருங்கள்." எல்லோரையும் பார்க்கும்படி கூறினார். கொழுந்தைத் தூக்கிக் காட்டினார். "எத்தனை இலைகள் உண்டு"? அதிபர் வினாவினார். கலா மாமி முந்திக்கொண்டார்.

"இரண்டு இலைகள்"

"இல்லை. மூன்று இலைகள்."

பதில்கள் மாறிமாறி வந்தன. சிரிப்பு அலைமோதியது.

"ரூ லீவ்ஸ் அன்ட் ஏ பட்." "இரண்டு இலைகளும் ஒரு தளிரும்." அனுசியன் சிரிப்போடு கூறினான். "சரியான விடை சொன்ன வருக்குப் பாராட்டுக்கள். அத்துடன் இதோ இந்த பிஸ்கற்றும் பரிசு." ரதீபன் சிரிப்போடு பிஸ்கற்றைக் கொடுத்தான். எல்லோரும் கை தட்டினார்கள். சிரிப்பொலி பரவியது. தேயிலைத் தோட்டத்தில் எதிரொலித்தது. பிள்ளைகளின் செயலில் மாரியாத்தா மயங்கினார். "நல்ல பிள்ளைகள்" மனதார வாழ்த்தினர். "இரண்டு இலைகளும் ஒரு தளிரும்" அதிபர் கைகளைத் தூக்கிக் காட்டினார். பிள்ளை களின் கைகள் செடிகளில் மேய்ந்தன. தாங்கள் கொய்த கொழுந்தினைப் பார்த்தனர். பரவசம் அடைந்தனர். சரியாகக் கொழுந்தினைக் கொய்தனர். அவர்கள் மனங்கள் சந்தோசத்தில் பொங்கின. கொய்தவற்றை மாரியாத்தாவின் கூடையுள் திணித் தனர். அவருக்கு நன்றி கூறினார்கள். விடைபெற்று நடந்தனர். பயணம் தொடங்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15

மரங்கள் ஐதாகத் தெரிந்தன. வெயில் அடித்துத் தீய்த்தது. புழுக்கமாக இருந்தது. சடுதியாகக் குளிர் காற்று வீசியது. உயர்ந்த மரங்கள் நிழல் பரப்பின. தேப்பன்ரைன், கிளிசெறியா, சவுக்கு மரங்கள் வரிசையாக நின்றன. "இந்த மரங்களை ஏன் நட்டுள் ளார்கள்"?. அபிஸேக் கேட்டான். "இவை தேயிலைச் செடிகளுக்கு நிழல் தருபவை. தேயிலைச் செடிகள் வெப்பத்தைத் தாங்காதவை. வெப்பம் தாங்கும் சக்தி குறைவு. அதனால் நிழல் மரங்கள் நடப்படு கின்றன. பெரிய மரங்கள் மண்ணரிப்பையும் தடை செய்கின்றன." நிரூசன் விடையளித்தான்.

"அது சரி. நமது ஊரிலும் மலைகள் உண்டு. திருகோணமலை, உவர்மலை. எல்லாம் மலை மயம். ஏன் அங்கு தேயிலை வளர்வ தில்லை." அபிஸேக் மீண்டும் சிரிப்போடு வினாவினான். அதிபரோடு அனைவரும் சிரித்தனர். ஆனந்தபாஸ்கரன் வினாவொன்றைத் தூக்கிப் போட்டார். "தேயிலைக்கு ஏற்ற காலநிலை என்ன? சொல்லுங்கள் பார்ப்போம்." என்றார்.

"நல்ல மழை வேண்டும்". அனுசியன் கூறினான்.

"நீர் வடிந்தோடும் சரிவு நிலம் வேண்டும்". நிரூசன் சொன்னான். ரதீபன் இடையில் புகுந்தான். "நல்ல வெப்பமும் வேண்டும்". என்றான்.

நான் சொல்லட்டுமா? சிந்து ஆரம்பித்தாள். மலைநாட்டில் வருடம் முழுவதும் மழை உண்டு. மழைநீர் தேங்கி நிற்காது. சரிந்து செல்லும் நில அமைப்பு. நீர் வடிந்து ஓடும். நிலம் ஈரமாக இருக்கும். போதியளவு வெப்பமும் கிடைக்கிறது. அதனால் தேயிலை செழித்து வளர்கிறது. நல்ல பயனும் கிடைக்கிறது. விபரமாகச் சொல்லி முடித்தாள். "இந்த மரங்களை நிழலுக்காக மட்டுமா வளர்க் கிறார்கள்"? ஆனந்தபாஸ்கரன் சிந்தனையைக் கிளறி விட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மண்ணரிப்பைத் தடுப்பது மரங்களின் வேர்." மதுசாலி முந்திக் கொண்டாள். நடந்து வந்த தூரம் தெரியவில்லை. களைப்பும் இல்லை. நிலம் சரிந்து கொண்டே சென்றது. நடையில் வேகம் கூடியது. ஓடியோடி நடப்பது வேடிக்கையாக இருந்தது. ஆனால் மலையகச் சிறார்கள் சாதாரணமாகவே நடந்தனர்.

மணி "வந்துவிட்டோம்" என்று குதூகலித்தான். நாடுகாண் படலம் நினைவில் ஆடியது. கடலில் பல மாதங்கள் பயணிப்பார்கள். பயணம் நீண்டு கொண்டு போகும். நிலத்திணிவைக் கண்டதும் சத்தமிடுவார்கள். குதூகலித்துக் குதிப்பார்கள். கொலம்பஸ் பிரசித்தி பெற்றவர். அமெரிக்காவைக் கண்டுபிடித்தவர். அவரைப் பற்றிய சுவையான கதைகள் உண்டு. ஒருமுறை பாய்மரக்கப்பலில் பயணித்தார். அது காற்றைக் கிழித்துச் சென்றது. கடலில் மாதக் கணக்கில் சென்று கொண்டிருந்தது. பலர் நோய்வாய்ப்பட்டு இறந் தனர். எஞ்சியிருந்தவர்கள் கோபம் கொண்டார்கள். "கப்பலைத் திருப்பிச்செலுத்துவோம்." என்றார்கள். எச்சரித்தார்கள். கொலம்பஸ் தடுமாறினார். இன்றிரவு மட்டும் பொறுக்கும்படி கெஞ்சினார்.

"விடியும்போது கரையைக் காணவேண்டும். இல்லையேல் உன்னைக் கடலில் வீசுவோம்". என்றார்கள். கொலம்பஸ் சிந்தனையில் ஆழ்ந்தார். நித்திரை இல்லை. நினைவெல்லாம் தூரத்துக் கரையில் இருந்தது. கப்பல் சென்று கொண்டிருந்தது. கப்பலில் கொலம்பஸ் நடந்து கொண்டிருந்தார். நடுச்சாமம் வந்து போனது. பாய்மரக் கம்பத்தில் ஏறினார். கரையைப் பார்த்தார். எங்கும் கறுப்பாய் வெறிச்சுக் கிடந்தது. மனம் சோரும். இறங்கி நடைபோடுவார். பின் ஏறிப் பார்ப்பார். இப்படிப் பலமுறை முயன்றார். சாவைப்பற்றி அவர் கவலை கொள்ளவில்லை. முயற்சியில் தோல்வியைத் தழுவுவதா? மனதினிலே உறுதி வேண்டுமல்லவா? அந்தக் கவலையில் ஆழ்ந்திருந்தார். சோர்ந்து போய்ச் சுருண்டு கிடந்தார். கிழக்கிலே சூரியக் கதிரின் வெளிச்சம்.

கீழ்வானம் அமைதியாய்க் கிடந்தது. கம்பத்தில் அவரின் விசுவாசி கடமையில் இருந்தான். அவனது குரலின் சத்தத்தைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டுத் துள்ளினார். "கரை தெரிகிறது. ஓடி வாருங்கள்." சத்த மிட்டான். கொலம்பஸ் ஓடோடிப் போனார். தூரத்தே கருமையாய் நிலத்திணிவு தெரிந்தது. ஒரு குழந்தையைப் போல் துள்ளினார். அவ்வளவு சந்தோம் அவருக்கு. மாலுமிகள் ஒன்று சேர்ந்தனர். ஆளையாள் பார்த்தனர். அவர்களின் கண்களில் ஆனந்தக் கண்ணீர். கட்டித் தழுவிக் கூத்தாடினார்கள். விடிந்து விட்டது. கொலம்பஸை உற்றுப் பார்த்தனர். அவர்களுக்கு ஆச்சரியம். இளமையை அவர் இழந்திருந்தார். முதுமை அவரைத் தேடிவந்தது. தொற்றிக் கொண்டு விட்டது. அவர் களைத்து எலும்பாக இருந்தார். அவரது கறுத்தத் தலைமுடி வெண்மையாக இருந்தது.

கொலம்பஸ்ஸைப் போல் மணியும் துள்ளினான். "போகுமிடம் வந்து விட்டோம்." என்றான். எல்லோர் கண்களும் அகலமாய் விரிந்தன. நில்லம்பே ஆற்றுப் பள்ளத்தாக்கு வரவேற்றது. ஆற்றில் தெளிந்த நீர் சலசலத்தது. பளிங்கு போல் தெளிந்த நீர். ஆறு ஆழமாகத் தெரியவில்லை. "இதுதான் நில்லம்பே ஆறு." மணி விளக்கினான். நில்லம்பே என்ற பெயர் எப்படி வந்தது.? வினாக்கள் சொரிந்தன. விடைதான் வரமறுத்தது. ருக்மணி ரீச்சர் வேடிக்கை யானவர். நகைச்சுவையோடு பேசுவார். "தண்ணீர் ஓடுவதைப் பாருங்கள். அந்த ஓட்டத்தின் சத்தத்தைக் கேளுங்கள். ஒலி கேட்கிறதா?. "நில் அன்பே. நில் அன்பே". என்று ஒலித்துப் போகிறது. "நில் அன்பே" மருவி நில்லம்பே ஆகியது". ருக்மணி சொல்லிச் சிரித்தார்.

எல்லோரும் ஏற்றுக் கொண்டனர். "புதிய கண்டு பிடிப்பு இது. மிகச் சரியான விடை கிடைத்து விட்டது. ரீச்சருக்கு எங்கள் பாராட்டுக்கள். "ஹிப் ஹிப்.. குறே.." எல்லோரும் "குறே" போட்டனர். ருக்மணி நாணத்தில் மூழ்கினார். அனைவரும் கைதட்டி ஆரவாரித்தனர். ஆற்றின் கரையை அடைந்தனர். கரையோரத்தில் ராமகிருஷ்ணன் நின்றிருந்தான். அவன் பின்னால் வகுப்புத் தோழர்கள். பாடசாலைப் பிள்ளைகள் பலர் வந்திருந்தனர். இவர்களைக் கண்டதும் ஓடிவந்தனர். கைகுலுக்கிக் கொண்டனர். பிள்ளைகளுக்கு ஆச்சரியமாய் இருந்தது. வாழ்த்தி வரவேற்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களில் பலர் வெறுங்காலோடு வந்திருந்தனர். பாதணிகளே இல்லை. நிமேசிக்கா அதனை அவதானித்தாள். "அண்ணா அங்கே பாருங்கள். அவர்களது கால்களில் பாதணிகள் இல்லை. பாவம் அண்ணா. இதற்கு என்ன செய்யலாம்."? அண்ணன் மாருக்கு அதனைச் சுட்டிக் காட்டினாள்.

நண்பர்கள் சுறுசுறுப்பாகினர். தேநீரும் பிஸ்கற்றும் காத்திருந்தது. இந்த ஏற்பாட்டை யாரும் அறிந்திருக்கவில்லை. மாணவர்கள் தாமாகவே ஏற்பாடு செய்திருந்தனர். இக்கரையிலிருந்து அக்கரைக்குக் கற்களை வீசினார்கள். "பிறகு கற்களை வீசலாம். முதலில் பிஸ்கற்றும் தேநீரும்" சொல்லிக் கொண்டே ராம கிருஷ்ணன் பரிமாறினான். விருந்தோம்பும் பண்பு நாகரிகமானது. இதனைத்தான் வள்ளுவர் புகழ்ந்து பாடியுள்ளார். 'செல்விருந்து ஓம்பி வருவிருந்து காத்திருக்கும்' பண்பு. அது பெருமைக்கு உரியது. தங்கள் வறுமையிலும் அதனைப் போற்றுகின்றனர். இந்தப் பிள்ளைகளின் செயலை எண்ணி ஆனந்தபாஸ்கரன் நெக்குரு கினார். உபசரிப்பதில் தங்கள் வல்லமையைக் காட்டினார்கள். பிள்ளைகளின் உபசரிப்பில் அனைவரும் பிரமித்தனர். முரளியும் சந்திரனும் பிள்ளைகளுக்கு நன்றி கூறினார்கள். பிஸ்கற் சுவையாக இருந்தது. தேநீர் அருமையாகச் சுவைத்தது. ஆற்று மணலில் இருந்து சுவைத்தார்கள். சிற்றுண்டி முடிவுற்றது.

"சரி உலா வருவோம். தண்ணீரில் விளையாடுவோம். எழும்புங்கள்." சசாங்கன் உசார்ப்படுத்தினான். எழுந்து நடந்தனர். கரையில் மணல் பரவிக்கிடந்தது. உருண்டை உருண்டையாய் கற்கள். சிறிதும் பெரிதுமாய்த் தெரிந்தன. பல்வேறு வடிவங்களில் கிடந்தன. பளபளப்பாய், வழுவழுப்பாய் காட்சியாகின. "எப்படி இப்படி வழுவழுப்பாக இருக்கிறது."? கலா மாமி ஆச்சரியத்துடன் கேட்டார். "இது இயற்கையின் அற்புதம்". செந்தில்ராணி ரீச்சர் திருவாய் மலர்ந்தார். "இது வானிலையால் அழிதற் செயற்பாடு". மனோகரி புவியியல் மொழியில் கூறினார். எல்லோர் கைகளிலும் கற்கள். தட்டையான கற்களை நீரின்மேல் வீசினார்கள். அவை நீரின் விளிம்பில் தெத்திச் சென்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தண்ணீர் பொருட்களைக் கரைக்கக் கூடியது. வேகமாக ஓடும்போது கற்களை உருட்டிச் செல்லும். கற்கள் வேகமாக உருளும். ஒன்றுடன் ஒன்று மோதும். அதனால் தேய்ந்து அரைந்து தேயும். அதன் செயற்பாடுதான் இந்தக் கற்கள்." ரதீபன் விளக்கினான். தண்ணீரில் இறங்கினார்கள். கால்கள் சில்லிட்டுக் குளிர்ந்தன. ராமகிருஷ்ணன் அதிபர் பக்கம் வந்தான். "சேர், ஆற்றில் கவனமாகச் செல்ல வேண்டும். கருநீலமாகத் தெரியும் பகுதி ஆழமானது. அதில் இறங்கக் கூடாது. அது பெருங்குழியாக இருக்கும். அவை நீர் நிரம்பிய குகைகள். விழுந்தால் மீட்டு எடுக்க முடியாது." அவன் எச்சரிக்கை விடுத்தான்.

அதிபர் அனைவரையும் அருகில் அழைத்தார். கருநீலமான பகுதிகளைக் காண்பித்தார். பின் விபரமாக எடுத்துரைத்தார். ராமகிருஷ்ணன் நைலோன் நூலைக் கொண்டுவந்தான். ஒரு அளவான கல்லை எடுத்தான். நைலோன் நூலில் கட்டினான். ஆற்றில் நடந்தான். அவன் பின்னால் அனைவரும் சென்றனர். அவன் கூறியபடி நீலமான இடத்துக்குச் சென்றான். "சேர், இதனைப் பாருங்கள். சொல்லிக் கொண்டு கல்லை விட்டான். அது போய்க் கொண்டே இருந்தது. "சேர் இது இருபது மீற்றர் அளவான நூல். இன்னும் கல் தரையில் படவில்லை." என்றான். அதிபருக்கு அதிர்ச்சியாக இருந்தது. ஆனந்தபாஸ்கரன் நூலை வாங்கி அசைத்தார். கல் நீரில் அசைவதை உணர்ந்தார். கல்லை வெளியில் எடுத்தார். பிள்ளைகளை எச்சரித்தார். பிள்ளைகள் பயந்தனர். அவர்கள் ஆற்றில் கால் வைக்கத் தயங்கினர். "பயப்படத் தேவையில்லை. ஆற்றின் சில பகுதிகளுக்கு மட்டும் போகவேண்டாம். நான் அந்தப் பகுதிகளைக் காட்டுவேன்." ராமகிருஷ்ணன் தைரியமூட்டினான். இப்போது அவன்தான் கதாநாயகன்.

ஆற்றின் நடுவில் போய் நின்றார்கள். முழங்கால் அளவு தண்ணீர்தான் ஓடியது. கைகளால் அள்ளினர். ஆளுக்காள் பிசிறியடித்தனர். கூச்சலிட்டுத் துள்ளினார்கள். ஆறு அகலமாய் இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் ஐந்து மீற்றர் அகலத்தில்தான் நீர் இருந்தது. இருபுறமும் கரை உயர்ந்து இருந்தது. பசுமையான புதர்கள் காற்றில் ஆடின. அவற்றில் பலநிறப் பூக்கள். அலங்கரித்து விட்டதுபோல் காட்சி யளித்தன. புதர்களுக்கு அப்பால் உயர்ந்த மரங்கள். அதற்கப்பால் மலைத்தொடர்களின் ஆட்சி. தூரத்தில் பசுமை இல்லை. ஆவியாக் கத்தினால் கரிய நிறத்தில் தென்பட்டன. ஆற்றின் அமைப்பைப் பற்றி உரையாடினர்.

## 16

பிள்ளைகள் தம்மை மறந்து விளையாடினார்கள். ஆனந்த பாஸ்கரன் இடக்கையை உயர்த்தினார். விரல்களைப் பொத்திக் கொண்டார். பிள்ளைகள் அவதானித்து விட்டனர். "நமக்குத் தீனி கிடைக்கப் போகிறது." தமக்குள் குசுகுசுத்தனர். அதற்காகக் ஆயத்தமாகக் காத்திருந்தனர். சுட்டு விரலையும் மோதிர விரலையும் நிமிர்த்தினார். "இது என்ன?" அனைவரையும் பார்த்துக் கேட்டார். "விரல்கள்" நிரூசன் பதில் கொடுத்தான். "அது சரி. இது என்ன வடிவில் தெரிகிறது." அவரே தொடர்ந்து கேட்டார்.

"கவடு கிழிந்த பனைமட்டைபோல் தெரிகிறது". சசாங்கன் பதிலளித்தான். மதுசாலி விழுந்து சிரித்தாள். "ஆங்கில எழுத்து "வி" போல் தெரிகிறது. "வி போர் விக்ரறி" "V for victory" நிமேசிக்கா அதனை ஆங்கிலத்திலும் கூறினாள். அனைவரும் ஆமோதித்தனர். "கெட்டிக்காரர்கள். இந்த இடத்தில் இருந்து பாருங்கள். நாங்கள் எங்கே நிற்கிறோம்? இப்போது நிற்கும் இடத்தைக் கவனியுங்கள். இருபுறமும் உயர்ந்துள்ளது. ஆங்கில 'V' "வி" எழுத்தை நினைத்துப் பாருங்கள். இந்த ஆற்றின் இருபுறமும் உயர்ந்துள்ளது. மத்தியில் குழிபோல் உள்ளது. இதனை 'V' வடிவப் பள்ளத்தாக்கு என்பார்கள்." சொல்லி முடித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவரும் கற்பனையில் மிதந்தார்கள். நல்லதொரு அமைதி நிலவியது. சிந்தனையில் ஆழ்ந்துவிட்டார்கள். தாங்கள் நிற்கும் இடத்தின் சூழலை அவதானித்தார்கள். கரைகளின் இருபுறமும் பார்த்தார்கள். வானுயர்ந்த மலைத்தொடர் நிமிர்ந்து நின்றன. நடுவில் கோடுகிழித்துச் சிற்றாறு நெளிகிறது. கரைகளைச் சுரண்டிச் செல்கிறது. அவற்றைச் சீண்டி நகர்கிறது. அரித்து அள்ளிக் கொள்கிறது. அவற்றை எங்கோ படியவிடுகிறது. புதுப்புது நில உருவங்களை அமைத்து விளையாடுகிறது. ஆறுகளின் செயற்பாடு அற்புதமானவை. மனதுள் நினைந்து வியந்தனர்.

"ஹேய்.. எவ்வளவு உண்மை. 'V' 'வி' வடிவம்தான்". விரல்களை உயர்த்தியவாறே சசாங்கன் சத்தமிட்டான். அனைவரும் பேசியவாறே நடந்தனர். இருபத்தைந்து மீற்றர் நடந்திருப்பார்கள். நிமேசிக்கா தனது விரல்களை மடக்கினாள். சுட்டுவிரலை நிமிர்த்தினாள். பெருவிரலையும் விரித்தாள். நிமிர்த்திப் பிடித்தாள். ஆற்றுப் பள்ளத்தாக்கையும் பார்த்தாள். "அப்பா எனக்கு இப்படித் தெரிகிறது." தனது கையைக் காட்டியவாறு கூறினாள். "இந்த இடம் அவ்வாறுதான் இருக்கும்". ஆனந்தபாஸ்கரன் விளக்கினார். "வி' வடிவம் காலப்போக்கில் 'U' 'யு' வடிவமாகும். இது என்ன வடிவம்."? நிமேசிக்காவின் கையைக் காட்டிக் கேட்டார். "அது 'U' 'யு' வடிவம்". பதில் கூறினார்கள்.

"ஆற்றின் செயல் வியப்பானது. தண்ணீரின் அளவு கூடும். கரைகடந்து தண்ணீர் பரவும். ஓட்டம் விரைவாகும். அப்போது கரையை இடிக்கும். இடிபட்ட பொருட்களை அள்ளிச் செல்லும். இது தொடர்வதால் ஆறு அகலமாகும். விரைந்து ஓடுவதால் நிலம் குழிவுறும். இதனால் 'யு' வடிவம் ஏற்படுகிறது." அப்பாவின் விளக்கம் கவர்ந்தது. மனதில் பதிவாக்கினர். நடை தொடர்ந்தது. ஆற்றின் வலதுபுறம் ஒரு பாறை கவிழ்ந்திருந்தது. அதன் வடிவம் அழகா யிருந்தது. ஒரு வீடுபோல் தெரிந்தது. உள் வாயிலில் மணல் பரவி யிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சேர்.. இதுதான் கண்டியரசன் ஒழித்திருந்த இடம்.'' ராமக்கிருஷ்ணன் சுட்டிக் காட்டினான். அந்தப் பாறைப்பக்கம் சென்றார்கள். சுற்றிவரப் பார்த்தார்கள். குழுக்களாக உள்ளே நுழைந்தனர். நுழைந்து நோட்டம் விட்டனர். குந்தியிருந்து பார்த்தார்கள். பெரிய அறைபோல் தெரிந்தது. சுவரைத் தடவிப் பார்த்தார்கள். சுவர்கள் சலவைக் கற்கள் போன்றன. இதற்குள் பத்துப்பேர் இருக்கலாம். நீள அகலத்தை அளந்தனர். அளவை நாடாவை நிரூசன் எடுத்தான். ரதீபன் பிடித்தான். "பத்தடி நீளம். எட்டடி அகலம்." ரதீபன் அளவினைக் கூறினான். குறித்துக் கொண் டனர். சாணை பிடித்தது போல் தளம் இருந்தது. மறைந்திருந்தால் கண்டுபிடிப்பது சிரமம். அழகாக அமைந்திருந்தது. இயற்கைதான் அற்புதமான படைப்பாளி. அனைவரும் ஆர்வத்துடன் பார்த்தார்கள். அவர்களுக்கு ஆச்சரியமாக இருந்தது. வியப்பாகவும் இருந்தது. சில்லிட்ட காற்றுப் புகுந்து வந்தது. தழுவிச் சென்றது. கண்டி இராசதானியின் வரலாறு விரிந்தது.

"ஸ்ரீ விக்கிரம ராசசிங்கன் கண்டியை ஆண்டான்." ஆனந்த பாஸ்கரன் வரலாற்றைக் கூறத்தொடங்கினார். "அவனது பெயர் என்ன? சொல்லுங்கள்." அவர் கேட்குமுன் பிள்ளைகள் விடை யளித்தனர். ''ஸ்ரீவிக்கிரம ராசசிங்கன். இப்போதுதானே சொன்னீர்கள்." கூறினார்கள். "சரி கேளுங்கள்." அவர் தொடர்ந்தார். "அவன்தான் கண்டியின் கடைசி மன்னன். அதிகாரப் போட்டியால் நமது நாடு அந்நியர் வசமானது. கண்டி ராச்சியத்தைப் பிரித்தானியர் கைப்பற்றினர். ஸ்ரீராச சிங்கன் தப்பியோடினான். பல இடங்களில் ஒழிந்திருந்தான். இங்கும் ஒழிந்திருந்தான். அவனைப் பிரித்தானியர் சிறைப் பிடித்தனர். இந்தியாவுக்கு அனுப்பி சிறையில் வைத்தனர். அவன் அங்கேயே இறந்துவிட்டான்.'' வரலாறு சுருக்கமாகச் சென்றது. நேரம் ஒரு மணியாகிவிட்டது.

ஆற்றில் இறங்கி நீராடினார்கள். ஆளுக்காள் நீரைப் பிசிறி அடித்தார்கள். பிள்ளைகள் கூடினால் கேட்கவும் வேண்டுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கே சந்தோசம் குந்தியிருந்தது. கூத்தடித்தது. சிரிப்பொலி காற்றில் அலைந்தது. நீரினுள் கரணம் அடித்தார்கள். ஆறு கலகலத்து ஓடியது. ராமகிருஷ்ணனும் மணியும் உசாராக இருந்தனர். ஆழமான பகுதியை அண்மிக்க விடவில்லை. ஆற்றுக் குளிப்பு இதமாக இருந்தது.

குளியல் முடிந்தது. குகைப் பாறைக்குச் சென்றார்கள். உடைகளை மாற்றிக் கொண்டார்கள். ஈரமான உடைகளை உலர விட்டனர். உணவுப் பொட்டலங்கள் கைகளில் தாவின. மரங்கள் செழித்து வளர்ந்திருந்தன. நிழலை அள்ளி வீசின. நிழல்களில் குழுக்களாக அமர்ந்தனர். மரங்கள் அவர்களுக்குச் சாமரை வீசின. உணவுப் பொட்டலங்கள் நடுவில் குவிந்தன. பொட்டலங்கள் பிரிந்தன. கைகள் செயற்பட்டன. பசி ருசி அறியாது. "நல்ல ருசி". கூறிக்கொண்டே சாப்பிட்டனர். எஞ்சிய கழிவுகளை ஒரு இடத்தில் வைத்தனர். நாய்கள் சில காத்திருந்தன. அவை தமக்குள் சண்டை யிட்டு உண்டன. அவை சண்டையிடுவதை வேடிக்கை பார்த்தனர். உணவுக்காகத் தானே சண்டை. பசி உயிரினங்களை ஆட்டிப் படைக்கிறது. ஆற்றுநீரில் கைகளை அலம்பி வந்தனர். நிழலில் அமர்ந்து ஓய்வெடுத்தனர்.

சிறிய ஓய்வின் பின் சுறுசுறுப்பானார்கள். ஆற்றோரமாகச் சிறிது தூரம் நடந்தனர். ஆற்றின் இடதுபுறமாக மணல் பரந்திருந்தது. குழுக்களாகப் பிரிந்து செயற்பட்டனர். ஆசிரியர்கள் வழிகாட்டி நெறிப்படுத்தினார்கள். மணலில் சிலர் பாய்ந்து ஆடினார்கள். இடையிடையே கற்பாறைகள் தலைநீட்டி இருந்தன. அவற்றில் சிலர் ஏறியிறங்கிப் பார்த்தனர். சிலர் குறிப்புக்களை எழுதினர். ஆற்றின் வடிவங்களை வரைந்தனர். ஆற்றோரக் காட்சிகளையும் வரைந்தனர். மணல் வகைகளைச் சேர்த்தனர்.

ரதீபன் குழுவினர் ஒருபுறம் நகர்ந்தனர். ஓரமாகப் பெரிய பாறை தெரிந்தது. பாறையின் ஓரமாக ஆலமரம் வளர்ந்திருந்தது. பாறையில் ஏறிப்பார்த்தனர். பெரிய வெடிப்புத் தெரிந்தது. வெடிப்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று மீற்றர் அகலமாக இருந்தது. அதேபோல் ஆழமாகவும் இருந்தது. அதனை எட்டிப் பார்த்தனர். பாறை ஆழத்திற்கு இறங்கி யிருந்தது. ஆலமரத்தின் அடிவேர் பாறையோடு ஒட்டியிருந்தது. விழுதுகள் நீண்டு நிலத்தைத் தொட்டன. நிலம் தெளிவாகத் தெரிந்தது. வெண்மணல் செறிந்து கிடந்தது. அழகான காட்சி யாகவும் தெரிந்தது. விழுதினைப் பிடித்துக் கீழே இறங்கலாம். இறங்கிப் பார்த்தால் என்ன? இறங்கிப் பார்க்க ஆசையாக இருந்தது.

ராமகிருஷ்ணனும் இந்தப் பாறையைப் பார்த்ததில்லை. மணி கேள்விப் பட்டிருக்கிறான். ஆனால் பார்த்ததில்லை. மணிக்கு ஏதோ மனதில் பட்டது. அவன் யோசித்தான். தனது தாய் கூறியது செவியில் ஒலித்தது. ''மணி அந்தப் பக்கம் போகக்கூடாது.'' மாரியாத்தா சொன்னது நினைவில் பளிச்சிட்டது. அவன் உசாரானான். "ராமகிருஷ்ணா போவோம் வா." என்று இழுத்தான். ஆனால் உடன் வந்தவர்கள் சம்மதிக்கவில்லை. அவர்கள் கீழே இறங்கும் முயற்சியில் ஈடுபட்டனர். இக்குழுவில் ஏழுபேர் இருந்தனர். மணி அங்கிருந்து நழுவ முனைந்தான். நண்பர்கள் விடவில்லை. விழுதினைப் பிடித்துப் பார்த்தனர். அவை யானையின் துதிக்கைகள் போல் அசைந்தன. அவர்களுக்குச் சந்தோசம்.

கற்பாறையை உற்றுப் பார்த்தனர். "இது உருமாறிய பாறை. தின்னற் செயலுக்கு உள்ளாகியது. மேற்படை அரிபட்டுப் போயிற்று. பாறை இப்படி ஆயிற்று''. அனுசியன் விளக்கினான். மணலை எடுத்தான். பலவகை நிறத்தில் தென்பட்டன. அதிசயமாக இருந்தது. மண்ணாக்கம் பற்றிய கலந்துரையாடல் நடந்தது. உரையாடலுடன் பாறை வெடிப்பினை ஆராய்ந்தனர். கீழே போய்ப் பார்க்கத் துணிந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17

ரதீபன் கைகள் ஆலம் விழுதினைப் பற்றின. கண்ணிமைப் பொழுதில் தரையில் நின்றான். அவனைத் தொடர்ந்தான் அனுசியன். சரசர என்ற ஒலியெழுந்தது. ஒருவர் பின் ஒருவராக இறங்கினர். ஆறுபேரும் இறங்கி விட்டனர். மூன்று மீற்றர் ஆழத்துக்கு வந்து விட்டனர். பார்ப்பதற்கு அழகாக இருந்தது. சுற்றிவர நோட்டம் விட்டனர். மணி இறங்கவில்லை. அவனைத் தேடினார்கள். மணி அங்கு இல்லை. அவன் மெதுவாக நழுவி விட்டான். செய்தியைச் சொல்லக் கிளம்பி விட்டான். அவன் வருவதற்குள் பார்த்துவிட வேண்டும். ஆர்வம் மேலிட்டது. ஆறுபேரும் மெதுவாக நடந்தனர். சுற்றிவரச் சுவர் இருந்தது. பாதுகாப்பான கோட்டைபோல் விளங்கியது. வெண்மணல் விரிந்து கிடந்தது. ஆலஞ்சருகு பரந்து சரசரத்தது. கண்கள் சுழன்று துளாவின.

அந்த இடம் விசித்திரமானது. வீட்டின் கூரை போன்ற பாறை அமைப்பு. மழைநீரும் உட்புக முடியாது. மெதுவாக நடந்தனர். சனசந்ததி அற்ற தனியான இடம். கைவிடப்பட்ட கோட்டையா இது?. மனங்கள் பேசின. யாராவது இருப்பார்களா? எனப் பார்த்தனர். யாரும் இல்லை. அவர்கள் பயமற்ற சிறுவர்கள். தைரியத்தை வரவழைத்தனர். ரதீபன் முன்னால் சென்றான். அனுசியன் அவனைத் தொடர்ந்தான். பின்னால் நிரூசன். நிசோவின் பின்னால் மற்றவர்களும் தொடர்ந்தனர். அறிந்து கொள்வதில் அவா தள்ளியது. முன்னோக்கி நடந்தனர்.

ஏதோ சத்தம் சரசரத்தது. மெதுவாகப் பதுங்கிக் கொண்டனர். அது உடும்பு போன்றது. எட்டிப் பார்த்தது. "அது கபறக்கொயா" ராமகிருஷ்ணன் கூறினான். மணலை அள்ளி வீசினார்கள். கபறகொயா ஓடி மறைந்தது. எழுந்து நடந்தார்கள். நீண்ட பாறை குறுக்கிட்டது. பாறைச் சுவரில் கோடுகள். பலவித உருவங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓவியங்கள் வரையப்பட்டிருந்தன. ரதீபன் கண்கள் கவனமாகத் தேடின. ஒரு வரைபடம் தெரிந்தது. இது என்ன? உற்றுப் பார்த்தான். விளங்கவில்லை. அதனை அப்படியே கொப்பியில் வரைந்தான். எல்லாம் குறியீடுகள். எழுத்துக்கள் தெளிவில்லை. வட்டம் வட்டமான எழுத்துக்கள். அவற்றையும் பிரதியெடுத்தான்.

பாறைச்சுவர் நீண்டு சென்றது. படிப்படியாக உயர்ந்தும் சென்றது. தரையில் பலநிறக் கற்கள் தெரிந்தன. சிலவற்றை எடுத்துக் கொண்டனர். பாறைச் சுவரில் பாதை தெரிந்தது. அது உட்புகும் வழி. வழியால் நடந்தார்கள். சுவரில் கற்களாலான கதவு குறுக் கிட்டது. கதவு பூட்டப்பட்டிருந்தது. கதவினைத் தடவிப் பாத்தனர். தாழ்ப்பாழ் துளை தெரிந்தது. ரதீபன் இடுக்கினால் பார்த்தான். உள்ளே இருளாக இருந்தது. ஒன்றும் தெரியவில்லை. அதற்கப்பால் நடந்தனர். கால்களடியில் சுள்ளிகள் மிதிபட்டன. முறிந்து சத்த மிட்டன. அந்த ஒலி எதிரொலித்தது.

தூரத்தே அற்புதமான சிற்பங்கள் தெரிந்தன. அவற்றைப் பார்த்து விட எண்ணினார்கள். சிற்பங்களின் பக்கம் சென்றார்கள். ''ஒரு சிற்பத்தையாவது எடுப்போமா?'' பேசிக் கொண்டனர். அவற்றைத் தொட்டுப் பார்க்க ஆசை. தொடக் கைகளைத் தூக்கினார்கள். ''இஸ்ஸ்'' மூச்சு விடும் ஒலிகேட்டது. ''ரதீபன் அங்கே பார்.'' அனுசியன் பயத்தோடு சத்தமிட்டான். திரும்பிப் பார்த்தான். பயம் தொற்றிக் கொண்டது. அங்கே பெரியதொரு ராஜநாகம். படமெடுத்தபடி சீறிக் கொண்டு நின்றது. ''ரதீபன் ஒன்றையும் தொடவேண்டாம்.'' ராமமிருஷ்ணன் கூறினான். அனைவரும் பின்வாங்கினார்கள். நாகம் சாதுவாகியது. சுருண்டு படுத்துக் கொண்டது. "அது ஒன்றும் செய்யாது. சிலைகளைத் தொட்டுப் பார்த்தால் என்ன''?. ரதீபன் முன்னேறினான். ஒரு அடியெடுத்து வைத்தான். ராஜநாகம் நிமிர்ந்து நின்றது. கோபத்தோடு சீறியது. ரதீபன் முன்வைத்த காலைப் பின்னெடுத் தான். ராஜநாகம் அடங்கியது. சாதுவாகிச் சுருண்டு படுத்துக் கொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளவால்கள் ஓலமிட்டன. பறந்து திரிந்தன. சத்தம் அதிக மாயிற்று. இனிமேல் நிற்பது ஆபத்து. ராமகிருஷ்ணன் மனதில் கூறிக்கொண்டான். அவன் சுறுசுறுப்பானான். "அந்தப்பக்கம் போக வேண்டாம். வாங்க போவோம்.'' சொல்லிக் கொண்டு முன் நடந்தான். ராமகிருஷ்ணன் நடையில் விரைவு தெரிந்தது. அவன் பயந்து விட்டான். ஆனால் காட்டிக் கொள்ளவில்லை. வெளவால் களின் ஓலம் ஆபத்தை உணர்த்தின. எங்கோ பெரியதொரு சத்தம் கேட்டது. நடை ஓட்டமானது. விரைந்து ஓடினார்கள்.

ஆலமரத்தின் விழுதுகளைத் தாவிப் பிடித்தனர். விழுதுகள் நறுநறு வென்றன. மளமளவென்று ஏறினார்கள். இமைப் பொழுதி னுள் ஏறிவிட்டனர். பாறைச் சுவரருகே அலறல் சத்தம் கேட்டது. அது புலியின் உறுமல் போலிருந்தது. பயத்தால் நடுநடுங்கி விட்டனர். எனினும் துணிச்சலை வரவழைத்தனர். சத்தம் வந்த பக்கம் பார்த்தனர். ஒன்றும் தெரியவில்லை. வெளவால்களின் சத்தம் மெதுவாக ஓய்ந்தது. பாதாள உலகுக்குப் போய்வந்த உணர்வு. பாறையை விட்டு வெளியில் வந்தார்கள்.

மணியின் செய்தி அதிபரை அதிர வைத்தது. அதிபர் முன்னால் விரைந்தார். பின்னால் ஆசிரியர்களும் பிள்ளைகளுமாய் வந்தனர். செய்தி கேட்டதும் கங்காணி உசாரானார். பெரியண்ணனுக்குச் செய்தி யனுப்பினார். பெரியண்ணன் நல்ல வேட்டைக் காரன். துப்பாக்கியோடு ஓடி வந்தார். சனங்கள் சத்தமிட்டவாறு பின் தொடர்ந்தனர். பெரியதொரு சனத் தொடரை ரதீபன் கண்டான். மனம் அடித்துக் கொண்டது. மணியும் ஓடிவந்தான். மணியின் செயலை நினைத்தான். மணியில் தவறில்லை. மணி முன்னமேயே தடுத்தான். தாங்கள் கேட்கவில்லை. அதனால் வந்த வில்லங்கம் இது. மனதைத் தேற்றிக் கொண்டான். சமாளிப்போம். அவர்களை நோக்கி நடந்தார்கள்.

அதிபரின் கண்கள் சிவந்திருந்தன. கோபப் பார்வையை வீசின. மனதில் பயம் சூல் கொண்டது. மனதில் துணிச்சலை ஏற்றனர். உள்ளம் உறுதியானது. அதிபரை எதிர்கொண்டு வரவேற்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புன்னகையை வீசி வசீகரமாக உரையாடினார்கள். ரதீபன் சிரித்தான். மற்றவர்களும் சிரித்தார்கள். அந்தச் சிரிப்பில் அதிபர் கட்டுண்டார். கோபம் அன்பாய் மாறியது? "எங்கே சென்றீர்கள்." அதிபர் வினவினார். "அதோ அந்தப் பாறைப் பக்கம்" விடையளித்தார்கள். அங்கே அதிபரும் மற்றவர்களும் சென்றார்கள். பாறை வெடிப்பைப் பார்த்தார்கள். அதன் அழகைப் பார்த்து ரசித்தார்கள். விரிந்து கிடந்த மணற்பரப்பைக் கண்டனர்.

ஆலமரத்தின் வனப்புக் கவர்ந்தது. "அழகான இடம்தான். ஆனால் தனியே சென்றது தப்பு." அதிபர் எச்சரித்தார். பிள்ளைகள் ஆளையாள் பார்த்தார்கள் கண்களால் பேசினார்கள். "எங்களை மன்னித்துக் கொள்ளுங்கள். இனி இப்படிச் செய்யமாட்டோம்." அவர்கள் மன்னிப்புக் கோரினார்கள். "சரி சரி நடவுங்கள்." அதிபர் கூறி நடந்தார். மணியின் தாய் மாரியாத்தா பதறியடித்து ஓடிவந்தார்.

"டேய் மணி! நான் சொன்னேன்தானே? பாவி மகனே! ஏன் அந்தப் பக்கம் போகவிட்டாய்?. ஏதாச்சும் நடக்கக் கூடாதது நடந்திருந்தால்"? பதட்டத்தோடு பிதற்றினாள். மாரியாத்தாவின் பதட்டம் யாருக்கும் புரியாது. அவள் உடல் நடுங்கியது. அதிபர் மாரியாத்தாவுக்கு ஆறுதல் சொன்னார். "மாரியாத்தா என்ன பதட்டம்." ஆனந்தபாஸ்கரனும் கேட்டார். "பதட்டம் தேவையில்லை." அதிபரும் சேர்ந்து கொண்டார். "இல்லீங்கையா, அந்தப் பள்ளத்தில் பாம்பும் சிறுத்தையும் காவலிருக்கு. சிறுத்தை ஆக்களைப் பிடித்துத் தின்னுப்புடும்." மாரியாத்தா பயந்தபடியே சொன்னாள்.

மாரியாத்தாவின் குரலில் நடுக்கம் தெரிந்தது. "ஏன் ஐயா புள்ளயளப் போகவிட்டிங்க.? நான் பயந்தே போய்விட்டேன். பறந்தடிச்சி ஓடியாந்தேன்." பதறியபடியே கூறினாள். ரதீபனுக்கு திகீரென்று இருந்தது. "சிறுத்தையிடம் சிக்கியிருந்தால்.? இதைப் புரியாமல் சென்று விட்டோமே. ஆபத்தைத் தாண்டி விட்டோம்." தனக்குத் தானே ஆறுதல் கூறிக் கொண்டான். கங்காணியார் பெரியண்ணனோடு வந்தார். அவர்களது முகங்களிலே பயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குந்தியிருந்தது. ஊர்ச்சனங்கள் கூடி விட்டனர். எல்லோரது முகங்களிலும் வாட்டம் நிழலாடியது. பிள்ளைகளைக் கண்டார்கள். அவர்களது சந்தோசத்தைக் கண்டார்கள். உயிர்போய் உயிர்வந்த மாதிரி இருந்தது. மகிழ்ச்சியால் ஆரவரித்தனர். குரவையிட்டு மகிழ்ந்தனர். தங்கள் பிள்ளைகளைக் கட்டி உச்சி மோந்தனர். ரதீபனுக்கும் அனுசியனுக்கும் ஆச்சரியம். ராமகிருஷ்ணன் கண்களால் பேசினான். தொலைத்த பொருளை எடுத்ததுபோல் அதிர்ச்சி. பெரியதொரு விபத்திலிருந்து தப்பியதாக எண்ணி னார்கள். அந்த இடத்தை விட்டுத் திரும்பினார்கள்.

நடை தொடர்ந்தது. ரதீபன் கதையைத் தொடர்ந்தான். ''அப்பா, அங்கே ஒரு பாறைச் சுவர் இருக்கிறது. சுவரில் கோடுகள் உள்ளன. படங்களும் எழுத்துக்களும் உண்டு. உருவங்களும் சிலைகளும் காணப்படுகின்றன. எழுத்துக்களை வாசிக்க முடியவில்லை. வட்ட வட்ட எழுத்துக்கள். சில தமிழ் எழுத்துக்கள். சில சிங்கள எழுத்துக்கள். கலந்து எழுதியது போல் தெரிகிறது. எனக்குப் புரியவில்லை.'' தான் கண்ட அதிசயங்களைக் கூறினான். ''பெரிய ராஜநாகத்தையும் கண்டோம். சிலைகளைத் தொட்டுப் பார்க்க ஆசை. ஆனால் தொடமுடியவில்லை. ராஜநாகம் படமெடுத்துச் சீறியது. அதன் படம் பளபளத்தது. நல்ல அழகாய் இருந்தது. பயந்து திரும்பி விட்டோம்.'' அவன் விளக்கினான். ''நான்தான் ராஜ நாகத்தைக் கண்டேன்.'' அனுசியன் உற்சாகமாகச் சொன்னான். ''அப்பா அந்த இடத்தில் ஏதோ இருக்க வேண்டும். பாம்பு காவல் இருக்கிறது.'' நிரூசன் அதிசயத்துடன் கூறினான்.

''ஆமாங்க.. அந்தக் காலத்து ராசா இருந்த இடமுங்க. பெரிய புதையலும் இருக்காம். அதுக்குச் சிறுத்தையும் பாம்பும் காவலுங்க. அதுதான் சனங்கள் போவதில்லையாம். எங்க பாட்டி சொல்லும்.'' மாரியாத்தா நம்பிக்கையுடன் சொன்னாள். ''நம்ம புள்ளயள் திரும்பி வந்திட்டாங்க. அந்த முனியப்ப சாமிதான் காப்பாத்தினார்''. நன்றி கலந்த சொற்களை மாரியாத்தா இறக்கினாள். அவை அவளது இதயத்தில் இருந்து வந்தவை. கள்ளங் கபடமற்ற உள்ளத்தை தெளிவுபடுத்தின. நடை தொடர்ந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்பா! நாங்கள் சிலைகளைப் பார்த்தோம். அப்போது ராஜநாகம் சுருண்டு படுத்திருந்தது. சிலைகளைத் தொடுவதற்கு முயன்றோம். நாகம் படமெடுத்துச் சீறியது. பிறகுதான் வெளவால்களின் ஒலியெழுந்தது. அதைத் தொடர்ந்து பெரியதொரு அலறல் கேட்டது. பயந்து ஓடிவந்தோம். விழுதுகளைப் பிடித்து வெளியேறினோம். வெளியில் வந்து பார்த்தோம். புலியின் உறுமல் மட்டும் கேட்டது. ஆனால் புலியைக் காணவில்லை. வெளவால்களின் ஒலி மட்டும் கேட்டது." ரதீபன் விளக்கினான். ஆனந்தபாஸ்கரனின் உடல் சிலிர்த்தது. பிள்ளைகளுக்கு ஏதும் ஆகியிருந்தால்? அவரால் நினைத்துப் பார்க்க முடியவில்லை. சற்று நேரம் அமைதியானார். ஆனால் சிறுவர்கள் பயந்ததாகத் தெரியவில்லை. அவர்கள் மறந்து விட்டார்கள். கூடிக்கூடிக் கதையளந்தார்கள். கதையோடு கதையாக உரிய இடத்துக்கு வந்து விட்டார்கள். கங்காணியார் முன்னே நடந்தார். மற்றவர்கள் பின் தொடர்ந்தார்கள். இறங்கியது போல் இப்போது ஏறினார்கள். களைப்பாக இருந்தது. காலையில் இருந்த உற்சாகம் இப்போதில்லை. எல்லோரையும் களைப்பு ஆட் கொண்டது. பிரதான வீதிக்கு வந்து விட்டார்கள்.

ஆற்றங்கரைக்குச் செல்லும்போது சந்தோசமாக இருந்தனர். நல்ல நிறத்தோடும் காட்சியாகினர். ஆற்று நீரில் விளையாடினார்கள். வெயிலில் காய்ந்தார்கள். வெயில் சுட்டெடுத்தது. சற்றுக் கறுத்து இருந்தார்கள். ஆற்றோரத்திலேயே சந்தோசத்தை விட்டு விட்டனர். களைத்து வெயர்த்தனர். மனமில்லாது பிரதான வீதிக்கு வந்தார்கள். நில்லம்பே மக்கள் வாழ்த்துக் கூறினார்கள்.

## 18

முருகேசு வஸ்வண்டியோடு காத்திருந்தார். "வாங்க.. வாங்க.. மனந்திறந்து முருகேசு வரவேற்றார். "எப்படிப் பயணம்.? நன்றாக இருந்ததா"?. அவரே கேள்விகளைக் கேட்டார். "பரவாயில்லை." சலிப்போடு விடைகள் வந்தன. மனம் இல்லாது வஸ்ஸில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏறினார்கள். இருக்கைகளில் சாய்ந்தார்கள். சோர்ந்து காணப் பட்டார்கள். மாரியாத்தா வஸ்சினுள் ஏறினாள். "எல்லாரும் சந்தோச மாகப் போய் வாங்க. நான் வரட்டுமா''?. கைகூப்பி நின்றாள். "நல்லது. உங்கள் உதவிக்கு எங்கள் நன்றி." ருக்கு ரீச்சரின் வாயி லிருந்து உதிர்ந்தன. மாரியாத்தா விடைபெற்று இறங்கினாள். கையசைத்து வழியனுப்பி வைத்தார். வஸ் உறுமியது. பிள்ளைகள் கைகளை அசைத்தனர். வஸ் இரைந்து புறப்பட்டது.

சந்திரன் பிள்ளைகளைப் பார்த்தார். அவர்களை சுறுசுறுப்பாக்க நினைத்தார். "என்ன களைப்பா''? என்று சிரித்தார். அவரது சிரிப்பு விநோதமானது. அவரை அனைவரும் நோக்கினர். "சரி நானொரு கேள்வி கேட்கிறேன். விடை சொல்லுங்கள்." "சந்திரன் மாமாவின் கேள்வியா? பார்ப்போம்.'' உற்சாகமானார்கள். "கேளுங்கள் சொல்கிறோம்." பதில்கள் பாய்ந்தன. "மலையில் வீதிகள் வளைந்து செல்வதேன்." கூறிவிட்டுத் தலையை அசைத்தார். கலா மாமியின் முகத்தில் சிரிப்பு. கலா மாமி எழுந்தார். சந்திரன் மாமாவைப் பார்த்தார். சற்று முன்னே வந்தார். கையை மேலே உயர்த்தினார். "நில்லுங்கள், நான் சொல்கிறேன். வளையாமல் எப்படிச் செல்ல முடியும்''? கலா மாமி எதிர்வினா போட்டார். சந்திரன் மாமா சிரித்தார். "அதைத்தான் நான் கேட்கிறேன். சொல்லுங்கள் பார்ப்போம்." மீண்டும் தலையை அசைத்தார்.

அனுசியன் மலைகளைப் பார்த்தான். "மலைகளைப் பாருங்கள். நேரே உயர்ந்து செல்கிறது. அதன் உச்சிக்கு நேரே ஏறமுடியுமா? ஏறுவது கடினம். மலையைச் சுற்றிச் சுற்றி ஏறலாம். அப்படி ஏறுவது இலகுவானது. அதனால்தான் வீதிகளை அப்படி அமைத்துள் ளார்கள்." அனுசியன் விளக்கினான். "அண்ணா இப்படியும் ஏறலாம் அல்லவா''? நிமேசிக்கா தொடர்ந்தாள்."எப்படி''? வினாவினான் நிசோ. "மலையின் .மென்சாய்வாகச் செல்லலாம். அதிலிருந்து மேல்நோக்கி மென்சாய்வாக நடக்கலாம். இப்படியே ஆங்கில "S" எஸ் வடிவத்தில் ஏறலாம்தானே. அது இலகுவான முறைதானே"? சந்திரன் மாமா சிரித்தார். அவர்களது சிந்தனையைப் பாராட்டினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''மலை மென்சாய்வைக் கொண்டிருக்கும். அதேபோல் குத்துச் சரிவையும் கொண்டிருக்கும். மென்சாய்வுகளைக் கண்டறிந்து வீதிகளை அமைத்துள்ளார்கள். அதனால்தான் வீதிகள் வளைந்து செல்கின்றன.'' அதிபர் விளக்கினார். எல்லோர் கண்களும் ஆர்வமாகப் பார்த்தன. வீதியினைக் கவனமாகப் பார்த்தனர். பேருந்தி இரைந்தவண்ணம் பயணித்தது. முருகேசு மிகவும் கெட்டிக்காரர். இடப்பக்கமாக வாகனத்தைத் திருப்பினார். பின் சடுதியாக வலப்பக்கம் திருப்பினார். யன்னல் ஊடாக எட்டிப் பார்த்தனர். தாங்கள் பயணித்த வீதி கீழே தெரிந்தது. வாகனம் இப்போது கீழ்நோக்கிப் பயணித்தது. "அங்கே பாருங்கள். நாம் வந்தவீதி மேலே தெரிகிறது''. அபிஷேக் சத்தமிட்டான். அனைவரும் ஆச்சரியத்துடன் பார்த்தவண்ணம் இருந்தனர்.

''மாமா நான் ஒன்று கூறட்டுமா''? ரதீபனின் குரல் ஒலித்தது. "தாராளமாக் கூறலாம்.'' சந்திரன் உற்சாகப்படுத்தினார். ரதீபனுக்கு ஆர்வம் கொடிகட்டியது. நமது பிரதேசங்களில் செக்பொயின்ற் ஏராளம். அங்கெல்லாம் பெரிய தார்போட்ட வரம்புகள் உண்டு சில இடங்களில் அணைக் கட்டுகளாகவும் இருக்கும். நேரே சைக்கிளில் போகலாமோ? போனால் என்ன நடக்கும். சைக்கிளைத் தூக்கி அடிக்கும். குப்புற விழவைக்கும். தூக்கி அடிக்காமல் இருக்க என்ன செய்யலாம்.? சொல்லுங்கள் பார்ப்போம்.'' "சைக்கிளை விட்டிறங்கி நடந்து செல்லலாம்.'' அபிஷேக் சட்டென்று சொன்னான். "கொல்'' என்று சிரித்தார்கள். சற்று யோசித்தார்கள். ஆளையாள் பார்த்துக் கொண்டார்கள். ரதீபனே தொடர்ந்தான். "குறுக்கு வெட்டாகக் கடப்பது ஆபத்தானது. பாக்கவாட்டில் போனால் ஏற்றம் தெரியாது. சைக்கிள் மெதுவாக ஏறியிறங்கும்.'' ரதீபனது விளக்கத்தைக் கேட்டார்கள். "சரியான விளக்கத்தை ரதீபன் தந்தார். அவருக்கு எங்கள் பாராட்டுக்கள். இரவு உணவு வேளையில் அவர் பாராட்டப் படுவார். அவருக்கு என்ன பரிசு வழங்கலாம்.''? மனோ ரீச்சர் சத்த மிட்டார். "இரண்டு இடியப்பம் மேலதிகமாக் கொடுபடும்''. செந்தில் ரீச்சர் எழுந்து அறிவித்தார். வாகனம் சிரிப்பொலியையும் சேர்த்துக் கொண்டது. இரைந்து சென்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரயாணம் கலகலத்தது. ஒரு குலுக்கலோடு வாகனம் நின்றது. "சரி இறங்கலாம்." அதிபரின் கட்டளை வாகனத்தை நிறைத்தது. "கலஹா வந்து விட்டதா"?. நிமேசிக்கா கேட்டாள். "கலஹா வரவில்லை. நாங்கள்தான் கலஹாவுக்கு வந்துவிட்டோம்." நிசோ கூறிக் கொண்டு இறங்கினான். அனைவரும் முருகேசுவுக்கு நன்றி கூறினார்கள். அவர் புன்னகையோடு அவற்றை ஏற்றுக் கொண்டார். பாடசாலைக்குள் புகுந்து கொண்டனர்.

களைப்பைப் போக்கக் குளித்தார்கள். சுடச்சுடத் தேநீர் வந்தது. குடித்தார்கள். கூடியிருந்து கதை பேசி மகிழ்ந்தார்கள். சிலர் வீடு களுக்குச் சென்று வந்தார்கள். சந்தோசம் அங்கு குடிகொண்டது. மனம் நிறைந்து மகிழ்ந்து இருந்தார்கள். மேற்கு மலைகளில் சூரியன் விளையாடியது. சிறுபிள்ளைகள் போல் வானைக் குழப்பியது. வண்ணக் கலவைகளை அள்ளி வீசியது. அங்குமிங்கு மாக மேகக் கூட்டம் அலைந்தது. அவற்றுக்கெல்லாம் நிறந்தீட்டிப் பார்த்தது. பகற்பொழுதில் சூரியநிறங்கள் தெரிவதில்லை. ஆனால் மாலையானதும் இந்நிறங்கள் எங்கிருந்து வருகின்றன.?

எத்தனை வண்ணக் கலவைகள். எத்தனை கோடி இன்பம் புதைந்துள்ளது. சூரியன் அற்புதமான கலைஞன். அவனது ஒளிபட்ட இடமெல்லாம் சொர்க்கம்தான். மாலைப் பொழுதைப்போல் அற்புதம் இவ்வையகத்தில் இல்லை. மலைமுகடுகளில் மேகக் குஞ்சுகளின் கெஞ்சல்கள். அவை ஓடுவதும் மறைவதும் அற்புதம். முகடுகளைத் தழுவுவதும் விலகுவதும் அழகானது. அவற்றைப் பார்த்தவாறு ரசித்தார்கள். பாரதியின் மாலை வர்ணிப்பை வியந் தார்கள். எல்லோரது கண்களும் மேற்கு வானில் குத்திட்டு நின்றன. அடிக்கடி நிறங்கள் மாறும் விந்தை என்ன? உருவங்கள் உருவாகி மறைவதென்ன?. மேகத்தைப் பிடித்து நிறங்களைப் பூசுவதார்? கண நேரத்துள் உருவங்களை மாற்றுவது யார்? அவர் களது மனங்களில் ஆயிரம் கேள்விகள். இயற்கையின் அற்புதத்தை எண்ணி அயர்ந்தார்கள். நினைந்து இறும்பூதித்தார்கள். பாடல் உள்ளத்தில் ஊற்றெடுத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தி வானம் அழகானது
அமைதி பொங்கும் இடமானது
எந்த மனதும் பனியாகிடும்
இனிமை வந்து கூத்தாடிடும்.

நிமேசிக்கா மெல்ல அடியெடுத்தாள். அழகாகப் பாடினாள். ஏனை யோர் தாளம் போட்டுச் சேர்ந்து பாடினார்கள்.

மலைகள் சேர்ந்து கதைகூறிடும்
மலர்கள் கூடி மணம்சேர்த்திடும்
கலையும் காற்று இசைகூட்டிடும்
கண்ட மனங்கள் சேர்ந்தாடிடும்.

இந்த உலகம் நமதாகிடும்
இளமைக் கனவு நிஜமாகிடும்
சொந்தம் வந்து கைகூடிடும்
சொர்க்கம் இதுதான் மனம்பாடிடும்

சேர்ந்து பாடி மகிழ்ந்தார்கள். கைகளைத் தட்டி ஆரவாரம் செய்தார்கள். நேரம் போனதே தெரியவில்லை. பாடலின் பின் அமைதி நிலவியது. அமைதியைக் கலைப்பவன் அபிஷேக்தான். "எனக்குச் சரியான குழப்பமாக உள்ளது. சூரியன் இங்கே மலை களில் தானே உதிக்கிறது. சூரியன் மேற்கில் மலைகளில் மறை கிறது. ஆனால் திருகோணமலையில் கிழக்கில் கடலில் அல்லவா உதிக்கிறது. மாலையில் மலைகளில் மறைவதாகத் தெரிகிறது. கொழும்பில் கடலில் மறைகிறது. அது ஏன்."? அபிஷேக் நெற்றி யைத் தேய்த்தவாறு கேட்டான். "நாம் இப்போது மலை நாட்டில் இருக்கிறோம். இங்கு சூரியன் மலையில் உதிப்பதாகத் தெரியும். மாலையிலும் மலையில் மறைவதாகத் தான் தெரியும். திருகோண மலை கடல்சூழ்ந்த பிரதேசம். எனவே கடலில் உதிப்பதாகத் தெரிகிறது. சூரியன் கடலிலோ, அல்லது மலையிலோ உதிப்ப தில்லை. அதேபோல் மலையிலோ அல்லது கடலிலோ மறைவ தில்லை. நாம்தான் அப்படித் தவறுதலாக நினைக்கிறோம்". அதிபர் விளக்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சூரியன் பூமியிலிருந்து வெகுதூரத்தில் சூழல்கிறது. பூமி தன்னைத் தானே சுற்றுகிறது. சூரியனைச் சுற்றி வருகிறது. பூமி கோளவடிவானது. பூமியைச் சுற்றி வளிமண்டலம் உண்டு. வளியும் தூசித் துணிக்கைகளும் அதிகம். பகலில் சூரிய ஒளி நேராக விழு கிறது. தூரமும் குறைவு. காலையிலும் மாலையிலும் ஒளி சாய்வாக விழுகிறது. தூரம் அதிகமாக உள்ளது. தூசி துணிக்கைகள் ஊடாக சூரியஒளி பாய்ந்து செல்கிறது. அவை சூரியஒளியை வடித்து அனுப்புகிறது. அப்போது சூரியகதிரின் நிறங்கள் துல்லியமா கின்றன. நமது கண்களுக்குப் புலனாகின்றன. அவை நமக்கு ரசனையை ஊட்டுகின்றன. இதுதான் உண்மை.'' ஆனந்த பாஸ்கரன் விளக்கமாக எடுத்துரைத்தார்.

குளிர் காற்று சில்லிட்டது. மலைகளில் இருள் பரந்து போர்த்தது. தூரத்து மலைகள் மின்விளக்கால் மின்னின. மல்லிகையும் நைற்குயீன் மலர்களும் போட்டியிட்டன. நறுமணம் குப்பென்று எங்கும் பரவியது. இருளில் கலந்து வரும் பாடல் இனித்தது. மின்மினிப் பூச்சிகள் ஆரத்தியெடுத்தன. எங்கும் அவைகளின் ஆட்சி பவனிவந்தன. இருளில் பளிச் பளிச் என மின்னின. அதிபரை நாடிப் பலர் வந்து கொண்டிருந்தனர். சோர்வின்றி அனைவருடனும் அளவளாவினார்.

மனோ வெளியில் வந்தார். "பசிக்கவில்லையா"? கேள்வியோடு காத்திருந்தார். ''இதோ வருகிறோம்.'' ஏகோபித்த பதில்கள் புறப்பட்டன. எழுந்து சென்றனர். உணவு தயாராய் இருந்தது.

உண்டார்கள். "இன்று வாழ்க்கையில் மறக்க முடியாத நாள். இல்லையா அண்ணா?'' நிமேசிக்கா சாப்பிட்டுக் கொண்டே கேட்டாள். ''அதுதானே. மறந்து விட்டோமே.'' கூறிக்கொண்டே செந்தில் ரீச்சர் ஓடோடி வந்தார். அனைவரும் அதிசயமாகப் பார்த்தார்கள். இரண்டு இடியப்பத்தைத் தூக்கினார். ''இதோ இரண்டு இடியப்பம். பரிசாகக் கிடைக்கிறது.'' கூறிக்கொண்டு ரதீபனது உணவுத் தட்டில் வைத்தார். சிரிப்பொலி வானை அடைத்தது. வாய்க்குச் சுவையான உணவு. வயிறார உண்டனர். உணவின் பின் ஓய்வெடுத்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 19

அந்த ஆசிரிய விடுதிகள் அழகாகத் தெரிந்தன. அவை விடுதிகள் இல்லை. தற்காலிகமாக அமைக்கப்பட்டவை. ஆசிரியர்களது பயணச் சுமையை அவை இல்லாதாக்கின. அவர்களுக்குப் புதுத்தென்பை ஊட்டின. சுறுசுறுப்பாக இயங்க வைத்தன. அனைவரதும் முயற்சியினால் புதுப் பொலிவைப் பெற்றிருந்தன. அதிபர் தனது குடும்பத்துடன் இருந்தார். ஆசிரியர்களும் அந்தச் சூழலிலேயே வாழ்ந்தனர். அவர்களுக்குள் ஒரு ஒற்றுமை இருந்தது. அவர்களின் சிந்தனை மலையகச் சிறார்கள் பற்றியதே. அவர்களுக்குச் சேவைசெய்வதே நோக்கம். அதற்காகவே உழைக்கத் தொடங்கி விட்டார்கள்.

பாடசாலை நாட்கள் விரைந்து ஓடும். லீவு நாட்கள் அவர்களுக்கு இல்லை. பாடசாலை இருபத்து நான்கு மணித்தியாலங்களும் இயங்கும். பாடசாலையில் கரிசனையற்றவர்களும் விழித்துக் கொண்டார்கள். பாடசாலைக்காக உழைக்க வந்துவிட்டார்கள். பாடங்கள் ஒழுங்காக நடைபெறும். மாலைநேரம் விளையாட்டுத் திடல் குதூகலிக்கும். கலைநிகழ்வுகள் மேடையேறும். பொது மக்கள் வந்து செல்வார்கள். பெற்றாரின் சந்திப்புக்கள் நடைபெறும். ஆசிரியர்கள் மாணவர்களது வீடுகளுக்குச் சென்றுவருவார்கள். ஆசிரியர் மாணவரிடையே ஒரு பிணைப்பு இருந்தது. ஆசிரியர்களது முயற்சியைப் பாராட்டினார்கள். அதிபர் சிறந்த வழிகாட்டியாக விளங்கினார்.

''இதனை இதனால் இவன் முடிப்பன்'' என்பதை அதிபர் புரிந்து கொண்டார். அதிபர் ஆசிரியர்களது தொடர்பு இறுக்கமாக இருந்தது. பெற்றோரும் பிள்ளைகளும் ஆசிரியர்களை நேசித்தனர். அதிபர் பெற்றோரை நன்கு அறிந்திருந்தார். பெற்றோரின் முயற்சி அளப்பரியது. அவர்களது உதவியினால் விடுதிகள் எழுந்தன. ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதி பொதுவாக இருந்தது. கலந்துரையாடலுக்குப் பயன்பட்டது. அனைவரும் அங்கு கூடினார்கள். பெரியவர்கள் ஒருபுறம் இருந்தனர்.

அன்றைய நிகழ்வுகள் அசைபோடப்பட்டன. பயணம் பற்றிய செய்திகள் பரிமாறப்பட்டன. அங்கு கண்ட அனுபவங்கள் உலா வந்தன. நிமேசிக்கா அண்ணன்மாரோடு ஆலோசனை நடத்தினாள். பல பிள்ளைகளுக்குப் பாதணிகள் இல்லை. அவர்களை நினைத்தாள். அதனைச் சுட்டிக்காட்டினாள். சீருடைத் துணி வழங்கப்படுகிறது. அதனைத் தைப்பதற்கும் இவர்களிடம் வசதியில்லை. ''பாவம் அண்ணா. நாங்கள் ஏதாவது செய்ய வேண்டும். அவர்களுக்குப் பாதணிகள் பெற்றுக் கொடுப்போமா? ஆர்வத்துடன் நிமேசிக்கா வினாவினாள். ''நல்ல யோசனை தான். எப்படிச் செயற்படுத்தலாம். பணம் வேண்டுமே?'' சிந்தனை விரிந்தது.

கேள்விகள் கேட்கப்பட்டன. கேள்விகள் எழுந்தால் விடைகள் தோன்றும். வழிகள் திறக்கும். ஆளுக்காள் மண்டையைப் போட்டுக் குழப்பினர். வீடு திரும்புமுன் தீர்வுகாண வேண்டும். இன்னும் சில நாட்கள் இருக்கின்றன. அதற்குள் செய்து முடிக்கலாம். தீர்மானம் எடுத்தாகி விட்டது. சற்றுநேரம் உரையாடினார்கள். விவாதித் தார்கள். அனுசியன் கொப்பியில் குறிப்பெடுத்தான். திட்ட வரைபு கண்முன் காட்சியாகியது. எப்படி செயற்படுவது என்று அலசி னார்கள். அதற்கும் விடை கிடைத்து விட்டது. உற்சாகம் பிறந்து விட்டது. அவர்களை நோக்கி ஆனந்தபாஸ்கரன் வந்தார். அருகில் போய் அமர்ந்தார். ''என்ன மகாநாடு நடக்கிறது? மெதுவாகக் கேட்டார். தங்கள் திட்டத்தை விளக்கினார்கள். அவருக்கு மெய் சிலிர்த்தது. இந்த இளம் வயதிலேயே கருணை உள்ளமா? அவருக்கு வியப்பாக இருந்தது. அவ்விடத்தில் அனைவரும் கூடிவிட்டனர். ஆனந்தபாஸ்கரன் பிள்ளைகளது திட்டத்தைக் கூறினார். அனைவருக்கும் ஆச்சரியம். முரளி அவர்களைத் தட்டிக் கொடுத்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அது சரி.. நல்ல திட்டந்தான். வரவேற்கிறேன். எப்படி நடைமுறைப் படுத்துவீர்கள்."? முரளி சிந்திக்க வைத்தார். "சித்தப்பா அதற்கும் திட்டம் இருக்கிறது. முயற்சி உயர்ச்சி தரும். இல்லையா"?. ரதீபன் கூறினான். "அப்படியா?. சந்தோசம்." முரளி கூறிச் சிரித்தார். அவருக்கு விளையாட்டாகவே பட்டது. அவரது முகக்குறிப்பை அனுசியன் அவதானித்தான். தனது குறிப்புப் புத்தகத்தை எடுத்தான். திட்டவரைபை வாசித்தான். சந்திரன் கைதட்டினார். ஏகோபித்த வரவேற்பைக் கண்டனர். பிள்ளைகளது செயற்திறனை வியந்தனர். அவர்களது முயற்சியைப் பாராட்டினர்.

கலா மாமியின் கண்கள் பனித்திருந்தன. எழுந்து பிள்ளை களிடம் வந்தார். அவர்களை அணைத்தார். நிமேசிக்காவின் கைகளைப் பிடித்தார். கைகளுக்குள் எதையோ திணித்தார். "இதோ எனது பங்கு" என்றார். நிமேசிக்கா கைகளை விரித்தாள். அவளது கண்கள் விரிந்தன. கைகளுக்குள் ஆயிரம் ரூபாய். எட்டிப் பார்த்துச் சிரித்தது. பிள்ளைகளது கண்களிலே ஆனந்தக் கண்ணீர். அதிசயித்து விட்டனர். கலா மாமியைக் கட்டிப் பிடித்தனர். அவர் பாசத்தால் உருகிப் போனார். தங்களது திட்டத்துக்கு ஆசிர்வாதம் கிடைத்து விட்டது. அது வெற்றியடையும். அவர்களது மனங்களிலே உறுதி உருவாகியது. தெளிவான குறிக்கோளே வெற்றியின் தொடக்கமாகும். இதனைப் புரிந்து கொண்டார்கள்.

கலா மாமி கைராசிக்காறி. அவர் தொட்டதெல்லாம் பொன் னாகும். நல்ல குணம் கொண்டவர். எல்லோருக்கும் உதவுபவர். சந்திரன் மாமா சிரித்தார். கலா மாமியின் செயல் அவரையும் உருக்கியது. அவரது கண்களும் பனித்திருந்தன. மெதுவாகக் கண்களைத் துடைத்தார். சுலக்சிக்கா முன்னே வந்தாள். தனது இடுப்பில் துணியைச் செருகினாள். அதனை விரித்தாள். இரு கைகளிலும் பிடித்தாள். அது மடிபோல் இருந்தது. மடியை சந்திரன் மாமாமுன் நீட்டினாள். அவர் சிரித்தார். "மாமா என்ன சிரிப்பு. சிரிப்பதற்கு இதுவா நேரம்".? அவளது மழலையில் மயங்கினார்கள். மாமா சிரிப்பை அடக்கினார். "சின்னதின் சண்டித்தனத்தைப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாருங்கள்.'' பின்னால் இருந்தவர்கள் முணுமுணுத்தனர். வாய் விட்டுச் சிரித்தார்கள். சந்திரன் ஒரு தாளை மடியினுள் போட்டார். அது ஐந்நுறு ரூபாய் நோட்டு. அவளை பலர் சூழ்ந்து கொண்டனர். மடி நிறைந்து விட்டது. விளையாட்டு வினையாகி விட்டது.

அதிபர் அங்கே வந்தார். நடக்கும் புதினத்தை அவர் அறிய வில்லை. விசாரித்தார். ஆனந்த பாஸ்கரன் பிள்ளைகளது திட்டத்தை விளக்கினார். அவருக்குத் தூக்கிவாரிப் போட்டது. அவரது மெய்சிலிர்த்தது. நெக்குருகி கண்கள் பனித்தன. பிள்ளை களைக் கட்டி அணைத்தார். தலைகளைத் தடவிக் கொடுத்தார். ஆசிரியர்கள் சூழ்ந்து கொண்டனர். திட்டத்தைக் கேட்டு மகிழ்ந் தார்கள். அங்கு சேர்ந்த தொகையை கணக்கிட்டனர். ஐயாயிரம் சேர்ந்து விட்டது. பிள்ளைகள் மகிழ்ச்சியில் ஆழ்ந்தனர். மேற்கொண்டு செய்வதென்ன? ஆராய்ந்தார்கள்.

பிள்ளைகளை விட்டுச் சென்றனர். மண்டபத்தின் ஒதுக்குப் புறத்தில் குழுமினார்கள். வழமைபோல் பாடசாலையின் நிலை ஆராயப்பட்டது. திருகோணமலையில் இருந்து வந்தவர்களும் கலந்து கொண்டார்கள். அடிப்படை வசதியில்லாத பிள்ளைகளை ஆராய்ந்தனர். அரைவாசிப் பேர் அதில் அடங்குவார்கள். "மலைக் காடுகள் ஊடாக நடந்து வருவோர் ஏராளம். உணவின்றி வருவோர் அதிகம். பாதணிகள் இல்லாதோர் மிக அதிகம். மதிய உணவு வழங்கப்படுகிறது. ஆனால் அது போதாது. எனினும் சமாளிக் கிறோம். பாதணிகள் கட்டாயம் தேவை. நம் பிள்ளைகளுக்கு நல்ல எண்ணம் தோன்றியுள்ளது. அவர்கள் நன்றிக்குரியவர்கள். அவர்களை உற்சாகப்படுத்துவோம்.'' அதிபர் தெரிவித்தார்.

"அவர்களோடு நாங்களும் சேர்ந்து பாடுபடுவோம்.'' ஆசிரியர்கள் சூழுரைத்தார்கள். நேரம் போய்க் கொண்டிருந்தது. பிரயாணக் களைப்பு வந்து விட்டது. உடல் அசதியாகக் காணப்பட்டது. சற்று நேரம் அமைதி குடிகொண்டது. "களைத்து விட்டோம். ஓய்வெடுப் போமா"? சந்திரன் நிமிர்ந்தவாறே கூறினார். "களைப்பைப் போக்கத் தேநீர் தயார். குடிப்போமா.? வாருங்கள்.'' மனோகரியின் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைத்தது. எல்லோரும் எழுந்தனர். பிள்ளைகளுக்கு அலுப்பாய் இருந்தது. அவர்களுக்கும் தேநீர் தேவை. ருக்கு ரீச்சர் கைகளில் தேநீர் இருந்தது. பூமணி எடுத்து வழங்கினார். செந்தில் குடித்த வாறே பரிமாறினார். கலகலப்பாக இருந்தது.

"சரி எல்லோரும் உறங்கச் செல்வோம். உடலுக்கு ஓய்வு தேவை. அப்போதுதான் சாதனைகள் புரியலாம். உடல் நலத்தைப் பேணுவதுதான் பெரிய சாதனையாகும். நாளை வேலை அதிகமுண்டு." அதிபரின் குரல் ஒலித்தது. மனமில்லாது உறங்கச் சென்றார்கள். பிள்ளைகளது மனங்களில் பாதணிகள் வட்டமிட்டன. தமது திட்டம் வெற்றி பெறத் தியானித்தனர். தியானம் வலிமை மிக்கது. அது வெற்றியைத் தரும். தங்கள் திட்டத்தை அசை போட்டவாறு உறங்கினார்கள். அதனை அடைவது உறுதி.

## 20

விடியற் கோழிகள் ஆரவாரித்தன. குருவிகள் பாடத் தொடங்கி விட்டன. மின்மினிகள் ஓய்வெடுத்துக் கொண்டன. சூரியன் ஒளிவீசி வந்து விட்டான். இருள் மெல்ல விலகிக் கொண்டது. அவை மலை யடிவாரத்தில் பதுங்கிக் கொண்டன. பனித்துளிகள் மினுங்கின. வானுயர்ந்த மலைமுகடுகளை மேகங்கள் தழுவின. புகார்ப் படலங்கள் திரைபோட்டு அசைந்தன. வண்ண மலர்கள் விரிந்து அலங்கரித்தன. வண்டுகள் ரீங்காரமிட்டன. மலையகம் பூரித்துப் புரண்டது.

கலஹா மதர்த்து விழித்துக் கொண்டது. தூரத்து மலையடிவாரம் விடியலில் பளிச்சிட்டது. பிள்ளைகள் விழித்து விட்டார்கள். படுக்கையை விட்டெழ மனமில்லை. குளிர்காற்று வீசியது. படுக்கை சுகமாக இருந்தது. கண்களை மூடியபடி சுருண்டு கிடந்தனர். கதவு தட்டும் சத்தம் கேட்டது. "பொழுது புலர்ந்தது. மெல்லென எழுவீர்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடலைத் தொடர்ந்து செந்தில் ரீச்சரின் தரிசனம். தட்டில் தேநீரைச் சுமந்த வண்ணம் நின்றார். வாயை அலம்பிக் கொண்டு ஓடி வந்தார்கள். தேநீர் கோப்பைகளை எடுத்தார்கள். ரீச்சருக்கு நன்றி சொன்னார்கள். தேநீர் இனிமையாகச் சுவைத்தது. குளிரை விரட்டும் மருந்தாகியது. காலைப் பொழுதும் இனித்தது.

"இன்றைய நிகழ்ச்சிகளை மறந்து விட்டீர்களா"? ரீச்சர் நினை வூட்டினார். "ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணிருக்கும். மறப்போமா? ரீச்சர் இன்றைக்குப் பெரிய திட்டமிருக்கு. நாங்கள் ரெடி. நீங்கள் ரெடியா"? நிமேசிக்கா ஒரு போடு போட்டாள். செந்திலுக்குச் சிரிப்பாக வந்தது. அவளை ஏற இறங்கப் பார்த்தார். "ஏய் வாண்டு சவால் விடுகிறாயா"?. கிண்டலோடு கேட்டார்.

"நேரமாகிறது. விரைவாகப் புறப்படுவோம். சரியா?. இப்போது எட்டரை மணி." அனுசியனின் குரல் ஒலித்தது. பம்பரமாகச் சுழன் றார்கள். அரை மணித்தியாலத்தில் அனைவரும் கூடிவிட்டார்கள். அதிபர் வந்திருந்தார். "என்ன திட்டம்" என்றார். "நகர்வலம் வரவிருக்கிறோம்." ரதீபன் சட்டெனப் பதிலளித்தான். "ஒன்பதரை மணிக்குச் செல்வோம். நானும் வருகிறேன்." அதிபர் கூறினார். "ஏன்? இப்பொழுதே சென்றால் நல்லதுதானே. அதுவரையும் காத்திருக்க முடியாது." நிமேசிக்கா வாதாடினாள்.

"இல்லையம்மா. கடைகள் திறந்து யாவாரம் தொடங்கட்டும். சனங்கள் கூடட்டும். பத்து மணிபோல்தான் நகரம் சுறுசுறுப்பாகும். பணமும் சேரும்." அதிபர் விளக்கினார். "எனக்குக் கொஞ்சம் வேலையிருக்கு. பிறகு வருகிறேன்." கூறிக் கொண்டு சென்று விட்டார். ரீச்சர்மார் பக்கத்தில் வந்தனர். நிலமையை அவர்களும் விளக்கினார்கள். "அதுவரை என்ன செய்வது"?. நிமேசிக்கா சிணுங்கினாள். "இன்னும் சாப்பிடவே இல்லை. சாப்பாடு தயார். சாப்பிட்டு முடிய நேரம் சரியாகிவிடும்". செந்தில் ரீச்சர் சாப்பாட்டில் கவனம். நேரத்துக்குச் சாப்பிட வேண்டும். உடலைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். என்பதில் அக்கறை உள்ளவர். "வாருங்கள் சாப்பிடுவோம்." அழைத்தார். எழுந்து சாப்பாட்டு அறைக்குள் நுழைந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலை உணவின்பின் மீண்டும் கூடினார்கள். ருக்மணி ரீச்சர் ரோஜாநிற உடையில் ஜொலித்தார். செந்தில் ரீச்சருக்கு எல்லா நிறங்களும் பொருந்தும். மனோகரிக்குச் செம்மஞ்சள் மெருகூட்டும். பூமணி ரீச்சருக்கு ஊதா அழகூட்டும். பெண்கள் எப்படி அழகாக இருக்கிறார்கள்.? ஆடைகளால் அழகு பெற்றனரா? அவர்களால் ஆடைகள் அழகு பெற்றனவா? நிமேசிக்காவின் மனதில் சிந்தனை துளிர் விட்டது. அவளுக்கு விசித்திரமான எண்ணம் தோன்றியது. ரீச்சர்களது மனநிலையை அறியும் ஆர்வம் பிறந்தது.

புன்னகையுடன் நிற்கும் ருக்மணியிடம் சென்றாள். "ரீச்சர் இந்த உடையில் அழகாக இருக்கிறீர்கள்" மெதுவாகக் காதில் போட்டாள். ரீச்சரை நாணம் தழுவிக் கொண்டது. மனோகரியிடம் சென்றாள். அருகில் நின்றாள். சொன்னதையே அவரிடமும் சொன்னாள். மனோகரி வெற்றிப் புன்னகையை வீசினார். தனது கணவரைப் பார்த்தார். அவருக்குப் பெருமிதமாக இருந்தது. மெல்லப் பூமணி யிடம் நகர்ந்தாள். இதையே கூறினாள். பூமணி நெளிந்தார். அடக்க மாகப் புன்னகைத்தார். செந்தில் ரீச்சர் சற்று வித்தியாசமானவர். அவரிடம் சென்றாள். திருப்பி அதனையே சொன்னாள். அவர் விழுந்து விழுந்து சிரித்தார். "பேய்க் குஞ்சு. நான் வடிவோ? பொம்மைக்குச் சேலை கட்டியமாதிரி இருக்குதாம். சனங்கள் கேலி செய்கிறார்கள்." சொல்லியவாறு கலகலத்துச் சிரித்தார். நிமேசிக்கா வுக்குச் சங்கடமாக இருந்தது. மெல்ல நழுவிச்சென்றாள். சிரிப்பொலி வானைத் தொட்டது.

"சரி தொடர்ந்து என்ன செய்வது?" மனோ ரீச்சர் அமைதியைக் கலைத்தார். "மாமா வந்ததும் முடிவெடுப்போம்." ரதீபன் பதிலளித் தான். இப்போது நேரம் என்ன? நிமேசிக்கா வினவினாள். அனுசியன் நேரத்தைப் பார்த்தான். "சரியாக ஒன்பதரை மணி." நேரே பார்த்தான். மாமா வந்துகொண்டிருந்தார். "அதோ மாமா வந்து விட்டார்." அனுசியன் சத்தமிட்டான். "புறப்படுவோமா? ஆயத்தமா? இதோ வருகிறேன்." கூறிக்கொண்டு வந்தார். அறையினுள் நுழைந்தார். ஒரு கொப்பியுடன் வெளியில் வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சரி. வாருங்கள். முதலில் பெரிய முதலாளியிடம் செல்வோம்.". அழைப்புடன் முன்னால் நடந்தார். தொடர்ந்து பிள்ளைகள் நடந்தனர். பின்னால் ஆசிரியர்கள் வந்தார்கள். நீண்ட வரிசை அசைந்தது. கலஹா நகர் கலகலத்தது. சனங்கள் அதிசயமாகப் பார்ரத்தார்கள். "இவ்வளவு பேரும் எங்கே போகிறார்கள்". சனங்கள் வேடிக்கையாகப் பேசிக்கொண்டனர். அந்த வீதி படிப்படியாக உயர்ந்து சென்றது. வீதியின் இருமருங்கிலும் தெருவோரக் கடைகள். குறுக்கும் மறுக்கும் சனநடமாட்டம். பேரொலி காற்றில் கலந்தவண்ணம் இருந்தது. மூச்சிரைக்க நடந்தார்கள். பெரிய முதலாளியின் கடை தூரத்தில் தெரிந்தது.

கடை நெருங்கி விட்டது. பெரிய முதலாளி அப்போதுதான் வந்திருந்தார். அவர் சாந்தமாக வீற்றிருந்தார். சந்தனமும் குங்குமமும் கலந்த நெற்றி. வெற்றிலைச் சிவப்பு வாயை அலங்கரித் தது. அவரது முகத்தில் புன்முறுவல். எல்லோர் விழிகளும் வீதியில் விளையாடின. ''என்னப்பா கூட்டம்''? என்றவாறு வீதியில் பார்வையை எறிந்தார். கூட்டத்தைக் கண்டதும் அசந்து விட்டார். அதிபரைக் கண்டதும் கைகூப்பினார். எழுந்து வணக்கம் சொன்னார். கண்களால் கேள்வி கேட்டார். நிமேசிக்காவை அதிபர் பார்த்தார். நிமேசிக்கா முன்னால் வந்தாள்.

பெரிய முதலாளியின் முன் நின்றாள். அவரைப் பார்த்துப் புன்னகைத்தாள். கைகூப்பி வணக்கம் சொன்னாள். பதிலுக்கு அவர் முறுவலித்தார். ''தங்கைச்சியின் பெயரென்ன''? கேட்டார். "நிமேசிக்கா" அவள் பதிலளித்தாள். அவர் பேசுவதற்கு இடமளிக்க வில்லை. கையில் இருந்த மனுவைக் கொடுத்தாள். பெற்றுக் கொண்டார். கண்ணாடியை அணிந்தார். அவரது கண்கள் மனுவை மேய்ந்தன. புருவங்கள் மேலுயர்ந்து பதிந்தன. தலையை அசைத்துக் கொண்டார். "இவர்களுக்குப் பெரிய மனதப்பா? எப்படி இந்த எண்ணம் வந்தது."? வினாவினார். அதிபர் விளக்கினார்.

கண்ணாடியைக் கழற்றினார். அதனை உறையினுள் திணித்தார். அவரது கண்கள் பனித்திருந்தன. துடைத்துக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டார். "நமக்கெல்லாம் தோன்றாத சிந்தனை. இந்தப் பிஞ்சுகளுக்குத் தோன்றியுள்ளது. மிகவும் நல்ல விடயம். இவர்களது முயற்சியைப் பாராட்டுவோம். அவர்களது விருப்பத்தை நிறை வேற்றுவோம்." பெரிய முதலாளி உருக்கமாகக் கூறினார். பிள்ளை களின் சந்தோசம் வானைப் பிளந்தது. நிமேசிக்கா கையிலிருந்ததை நீட்டினாள். அது ஒருசிறு அட்டைப் பெட்டி. அதனை அவர் பெற்றுக் கொண்டார். அதனைத் திறந்து பார்க்கக் கோரினாள். அவர் திறந்தார். அதிசயித்துப் போனார்.

"இது எங்கள் பங்கு. உங்கள் ஆசியோடு மிகுதியையும் சேர்க்கப் போகிறோம். உங்கள் ஆசி தேவை." நிமேசிக்கா சொல்லிக் கொண்டிருந்தாள். மகுடியிசை கேட்ட நாகம்போலானார். அப்படியே சிலையாக இருந்தார். தன்னைச் சுதாகரித்துக் கொண்டார். "எனது ஆசி உங்களுக்கு உண்டு." பெரிய முதலாளி புன்னகையோடு கூறினார். அட்டைப் பெட்டியைத் திருப்பிக் கொடுத்தார். அப்படியே வைக்கும்படி கேட்டுக் கொண்டாள். அதனை தனது அலுமாரி யினுள் வைத்தார். "அது சரி. உங்களது திட்டம் என்ன"? முதலாளி கேட்டார். "இருப்பவர்களிடம் பெறுவோம். இல்லாதவர்களுக்குக் கொடுப்போம்." சிரிப்போடு சொன்னாள். முதலாளியோடு அனைவரும் சிரித்தார்கள். "நல்லது. அருமையான திட்டம். தொடரட்டும் உங்கள் பணி." வாழ்த்தினார்.

பெரிய முதலாளி எழுந்தார். "வாருங்கள் போவோம்." என்று வீதிக்கு வந்து விட்டார். "முதலில் மாரியம்மன் சந்நிதிக்குப் போவோம். பிறகு முடிவெடுப்போம்." கூறிக்கொண்டு நடந்தார். அவர் அருகே அதிபர் நடந்தார். பிள்ளைகளும் ஆசிரியர்களும் பின்னால் தொடர்ந்தனர். நிமேசிக்கா அம்மனைப் பிரார்த்தித்தாள். எல்லோர் மனதிலும் மன்றாட்டம் நிகழ்ந்தது. திட்டம் நிறைவேற வேண்டிக் கொண்டனர். கலஹா நகர் கலகலத்தது. மக்களால் நிறைந்திருந் தது. எங்கும் சனக் கூட்டம். இது திருவிழாக் காலம். கோயிலில் திருவிழா நடந்து கொண்டிருந்தது. கோயிலினுள் நுழைந்தார்கள். நுழையும்போது கோயில் மணி ஒலித்தது. முதலாளி சால்வையை இடுப்பில் கட்டினார். அனைவரும் சேர்ந்து வழிபாடு செய்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுஜாவின் கண்கள் சுழன்று வந்தன. கலாவிடம் சுட்டிக் காட்டினார். இருவரும் குசுகுசுத்தார்கள். அவர்களது நடவடிக்கையை முரளி கவனித்தார். சுற்றிவரப் பார்த்தார். மூவின மக்களும் கலந்திருந்தனர். அதனைப் புரிந்து கொண்டார். நுகுமான் வாசலில் சனநெரிசலைச் சமாளித்தார். ரத்நாயக்கா குடும்பத்தோடு நின்றிருந்தார். அப்புகாமி சந்தனப் பொட்டுடன் சிரித்தார். வழிபாடு முடிந்தது. வெளியில் வந்தார்கள். "சரி சொல்லுங்கள். உங்களது அடுத்த திட்டம் என்ன"? வினவினார். "கடைகளுக்குச் செல்வோம். நிதி சேர்த்து உங்களிடம் தருவோம். பிள்ளைகளுக்குப் பாதணி வேண்டும். அவற்றைப் பெறவேண்டும். பெற்றுத் தருவது உங்களது பொறுப்பாகும்." நிமேசிக்கா விளக்கினாள். முதலாளியின் விழிகள் மலர்ந்தன. "புதுமையானது. அருமையான திட்டம். மற்றவர்களுக்காக வாழ்வதுதான் வாழ்க்கை. உங்கள் திட்டம் வெல்லும்." அவர்களது திட்டத்தைப் புகழ்ந்தார். "சேரும் தொகையைப் பார்ப்போம். மிகுதியை எனது கடை ஈடுசெய்யும். போதுமா?. உங்கள் முயற்சி வெல்லும். வாருங்கள். உங்களோடு நானும் வருகிறேன்." புன்னகையுடன் நடந்தார்.

கலஹா நகரின் கடைகள் மின்னின. கடைகளின் பெயர்கள் தமிழில் இருந்தன. அருகே சிங்கள மொழி இருந்தது. ஆங்கிலத்திலும் பெயர்கள் காட்சியாயின. மூன்று மொழிகளிலும் பெயர்ப் பலகைகள். கடைகளில் தமிழும் சிங்களமும் ஒலித்தன. தமிழர், சிங்களவர்கள், முஸ்லிம்கள் என மூவின மக்களும் உலா வந்தார்கள். "பொருளாதாரம் பெருக மூன்று மொழிகளும் வேண்டும். உறவாடி ஒற்றுமையாக வாழலாம். நாம் ஒருதாய் மக்களாக வாழ்வது எப்போது.? மொழிதானே பிரிவினையின் தூண்டுகோல். மூன்று மொழிகளும் நமக்கு வேண்டும். மூன்று மொழிகளும் போதனா மொழியாக வேண்டும். ஏன் எங்களது உரிமையை மறந்தார்கள். படிப்பது நாங்கள்தானே?" நிமேசிக்கா நடந்தவாறு சிந்தித்தாள். சிறுவயதிலேயே நல்ல எண்ணங்கள் வேரூன்றின.

முதலாளி ஒரு கடையை நோக்கி நடந்தார். உள்ளே நுழைந்தார். அவருக்கு நல்ல மரியாதை இருந்தது. அவரைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டதும் கடை முதலாளி எழுந்தார். வணக்கம் சொன்னார். இருக்கைகளை எடுத்துப் போட்டனர். ''இருக்க நேரமில்லை. பிள்ளைகள் ஏதோ உதவி கேட்கிறார்கள். கொடுப்போம். என்ன''? வினாவோடு பதிலையும் சேர்த்து வீசினார். ''நீங்கள் சொன்னால் சரி. கொடுப்பது நமது கடமை.'' நிமேசிக்காவின் கையில் பட்டியல் இருந்தது. பட்டியலைத் தனராஜ் தயாரித்திருந்தார். அதனைக் கடைமுதலாளியிடம் நீட்டினாள். அவர் அதனைப் பார்த்தார். அதில் கையெழுத்திட்டார். அவளிடம் பணத்தையும் கொடுத்தார். அவள் பெற்றுக் கொண்டாள். ''எங்கள் மனமார்ந்த நன்றி'' ஒரே குரலில் ஒலித்தனர். கைகூப்பி வணக்கம் கூறினார்கள். ஆசிரியர்கள் பின்னால் நின்றனர். புன்னகையோடு வெளியில் வந்தார்கள்.

''எனக்கு நிறைய வேலையிருக்கு. நான் வருகிறேன். சாயந்திரம் சந்திப்போம்.'' பெரிய முதலாளி கைகூப்பி வணக்கம் சொன்னார். விடைபெற்றுச் சென்றுவிட்டார். அவர் போவதையே பார்த்தபடி நின்றனர். நிமேசிக்காவின் கையில் பட்டியல் இருந்தது. அதனைச் செந்தில் ரீச்சர் வாங்கினார். உற்றுப் பார்த்தார். அவரது விழிகள் உருண்டன. ''நிமேசிக்காவின் கை ராசிதான். சுளையாக மூவாயிரம்.'' புன்னகையோடு நெளிந்தார். ''ரீச்சர் ஐஸ் வையாதீர்கள். நாங்கள் எல்லோரும்தானே பாடுபடுகிறோம். எல்லாம் உங்கள் அனைவரதும் ஆசிர்வாதம்தான். எல்லாப் புகழும் இறைவனுக்கே ''நிமேசிக்கா அமைதியாகப் பதிலளித்தாள். பட்டியலை அனைவரும் பார்த்தார்கள். அடுத்து எங்கே போவது? யோசித்தார்கள். ''என்ன யோசனை. நேரமாகிறது. விரைவாகச் செயற்பட வேண்டும்.'' அதிபர் வலியுறுத்தினார்.

உடனடியாக நான்கு குழுக்களாப் பிரிந்தார்கள். கலஹா நகரை நான்கு பகுதிகளாக்கினர். எல்லை வகுத்தனர். நான்கு திசையில் சென்றால் விரைவில் வேலை முடியும்.

ருக்மணியின் குழு ஒரு புறம் சென்றது.

மனோ ரீச்சரின் குழு இன்னொரு புறம்.

பூமணியின் குழு ஒரு புறம் நடந்தது.

நகராட்சி மன்றம் திருக்கோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்தில் ரீச்சரின் குழு ஒருபுறம் விரைந்தது. ஆசிரியர்களோடு பிள்ளைகளும் குழுக்களாகினர். நான்கு குழுக்களிலும் சேர்ந்து கொண்டார்கள். அனுஜா, வசந்தி, கலா அனைவரும் இணைந் தார்கள். சந்திரன், முரளி, ஆனந்தபாஸ்கரனும் சேர்தார்கள். எந்தக் கடைகளுக்குப் போவது?. தனராஜ் முன்னே வந்தார். கடைகளைக் குறிப்பிட்டு நெறிப்படுத்தினார். விளக்கம் கொடுத்தார். அந்தக் கடைகள்தான் முக்கியமானவை. அவற்றுக்கு மட்டும் ஏறியிறங் கினர். நண்பகல் வந்து விட்டது. பட்டியலைப் பார்த்தார்கள். சேர்ந்த நிதியைப் பார்த்தார்கள். அவர்களது உள்ளம் துள்ளியது. விடுதியை நோக்கி நடந்தனர்.

மலையக மக்கள் கண்ணியமானவர்கள். விருந்தோம்பும் பண்புள்ளவர்கள். அன்பு அவர்களிடம் இருந்தது. கலஹா மக்கள் மிகவும் பண்பானவர்கள். சென்ற கடைகள் இன்முகம் காட்டின. அவர்களை வரவேற்றன. நல்ல வரவேற்புக் கிடைத்தது. திட்டம் நிறை வேறுமா? வெற்றி விரைவில் கிடைக்குமா? என்று தவித்தவர்களுக்கு சந்தோசம். மலையக மக்களின் பண்பு மனங் களை நிறைத்தது. அவர்களது வரவேற்பு உற்சாகமூட்டியது. உள்ளவர்களிடம் இருந்து பெறுவோம். இல்லாதவர்களுக்குக் கொடுப்போம். நாம் வரும்போது ஒன்றும் கொண்டுவருவதில்லை. போகும்போதும் ஒன்றும் கொண்டு போவதுமில்லை.

## 21

அதிபர் குழுக்களை வரவேற்றார். இன்முகம் காட்டிப் புன்னகைத்தார். தங்களது அனுபவங்களைக் கூறினார்கள். "மாமா கடைகளுக்குச் சென்றோம். முதலாளிமார் எழுந்து வணக்கம் சொன்னார்கள். பட்டியலை நீட்டினோம். படித்தார்கள். கையெழுத் திட்டார்கள். கையில் பணத்தைத் திணித்தார்கள். தேநீரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தார்கள். உங்கள் முயற்சி வெல்லட்டும். என்று வாழ்த்தினார்கள். எங்களுக்கு அதிசயமாக இருந்தது.'' நிமேசிக்கா வியப்புடன் கூறினாள். "மலையகம் மலையகம்தான். அதற்கு ஈடு இல்லை." சந்திரன் புகழாரம் சூட்டினார். பட்டியலையும் பணத்தையும் அதிபரிடம் கொடுத்தனர்.

''சரி பசியாக இருக்கும். போய்ச் சாப்பிடுங்கள். நானும் வருகிறேன்.'' அதிபர் கூறிக்கொண்டே நடந்தார். பின் தொடர்ந்து சென்றனர். சமையலில் பலர் ஈடுபட்டிருந்தார்கள். அனைவரும் பழைய மாணவிகள். அனைவரும் மனோ மாமியிடம் கற்றவர்கள். மனோ மாமிக்கு உறைப்பு தண்ணிபட்டபாடு. சுவையாகச் சமைப்பார். ஆனால் காரம் அதிகம். கண்ணீர் ஊற்றெடுக்கும். அவ்வளவு உறைப்பாக இருக்கும். உணவு பரிமாறப்பட்டது. வயிறாற உண்டனர். ஐஸ்கிறீம் காத்திருந்தது. அது உறைப்பைப் போக்கியது. நாவுக்குச் சுவையாக இருந்தது. உணவின் பின் உரையாடல் தொடங்கியது.

அனைவரும் ஒன்று கூடினார்கள். குழுமி உரையாடினார்கள். அனுபவங்களைப் பகிர்ந்தார்கள். மிகுந்த மகிழ்ச்சியில் ஆழ்ந்திருந் தனர். "மாமா எல்லா மனிதர்களும் நல்லவர்கள்தானே? சிலர் உதவுகிறார்கள். ஏன் சிலர் உதவுவதில்லை.'' நிமேசிக்கா திடீரெனக் கேட்டாள். "ஏன் இந்தச் சந்தேகம்?" அதிபர் கேட்டார். "இல்லை. சிலர் முணுமுணுத்ததைக் கேட்டேன்."

"எப்படி முணுமுணுத்தார்கள்."?

"இவர்களுக்கு வேறு வேலையில்லையா? என்றார்கள்."

மாமா இடக்கையை விரித்தார். "இங்கே பாருங்கள். ஐந்து விரல்களும் ஒரே அளவுடையனவா? இல்லையே. ஆனால் ஐந்து விரல்களுமே தேவை. இவை இருந்தால்தான் ஒருவனுக்கு நிறைவு. ஒன்று குறைந்தாலும் பெருங்குறையாகும். முழுமையாக வேலை செய்வதற்கு ஐந்து விரல்களும் தேவை. நமது சமூகத்தில் அனைவரும் தேவை. ஏதோ ஒருவகையில் எல்லோரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவுவார்கள். முதலில் நாம் பிறரை மதிக்கவேண்டும். மனிதர் களாக மதிக்கப் பழகவேண்டும். அவர்கள் நம்மை மதிப்பார்கள். தங்களை மதிக்கவில்லை என்று சிலர் நினைக்கலாம். அவர்களை நாம் நேசிக்க வேண்டும். ''நான் எல்லாவற்றையும் நேசிக்கிறேன். அதனால் எல்லாவற்றையும் என்னால் புரிந்து கொள்ள முடிகிறது.'' என்று டால்ஸ்ராய் சொன்னார். எனவே நாமும் எல்லோரையும் நேசிப்போம்.'' மாமா அறிவுரை கூறினார். அவதானமாகக் கேட்டறிந்தார்கள்.

''இன்று மாலை மாவிளக்கு. கோயிலுக்குப் போகவேண்டும். ஐந்து மணிக்குப் புறப்பட வேண்டும்.'' மாமா கூறிவிட்டு எழுந்தார். ''நல்ல விஷேசமாக இருக்குமா''? அனுஜா வினாவினார். ''அற்புதமாக இருக்கும். நேரே பார்த்தால்தான் அனுபவிக்கலாம். ஐந்து மணிக்கு ஆயத்தமாகுங்கள். பிறகு வருகிறேன்.'' அவர் சென்று விட்டார். ஊர்ப் பிள்ளைகள் சேர்ந்து விட்டார்கள். அரட்டை அரங்கம் தொடர்ந்தது. நேரம் போனதே தெரியவில்லை.

''என்ன அரட்டை அரங்கம் முடியவில்லையா''? கலாமாமி கூறிக்கொண்டே வந்தார். ''இப்போது நேரம் ஐந்தாகிறது. கோயிலுக்குப் போகவேண்டும். வெளிக்கிடுவோம்.'' கட்டளை போல் குரல் தந்தார். கலைந்து சென்றார்கள். சற்று நேரத்தில் தோழிகள் குவிந்து விட்டார்கள். நிமேசிக்கா வெளியில் வந்தாள் அவளைக் காண்பதற்காகப் புதுத்தோழிகள் வந்தனர். சரோ, விஜி, சரஸ்வதி, செல்வி, இன்னும் பலர் வரிசையாக நின்றனர். அவளால் நம்ப முடியவில்லை. நீளப் பாவாடை சட்டை தாவணிகளோடு தோழிகள். அவ்வளவும் கனகாம்பரக் கதம்பங்கள். பூசைக்குரிய பொருட்களைக் கையிலேந்தி நின்றனர்.

கோயிலுக்குச் செல்வதற்குப் புறப்பட்டார்கள். கலஹா வீதி நெளிந்து படுத்திருந்தது. கரிய தார்வீதி அலங்கரிக்கப்பட்டிருந்தது. மாவிலை தோரணம் ஆடின. கலஹா அழகிய பூங்கொத்தாகக் காட்சியாகியது. இருபுறமும் பெண்கள். ஆசிரியைகள் முன்னால் சென்றனர். பின்னால் மாணவியர் கூட்டம். ஆசிரியர்களோடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்கள் சென்றனர். முத்துமாரியம்மன் ஆலயம் உயர்வான இடத்திலுள்ளது. பிரதான வீதியைப் புப்புரச வீதி தொட்டுக் கொண்டது. அது தொடும் சந்தி முக்கியமானது. சந்தியை அண்மித்துக் கோயில் அமைந்துள்ளது. கல்லூரியிலிருந்து ஒரு கிலோ மீற்றர் தூரம் செல்லவேண்டும். கோயிலுக்கு நான்கு வீதிகளாலும் வரலாம். படிக்கட்டுக்களில் ஏறி உட்செல்லலாம்.

மேற்கே, வானம் சூரியனை எதிர்பார்த்திருந்தது. அவனது வருகைக்காக அலங்காரம் கூட்டியது. பொன்மாலைப் பொழுது மெருகேற்றியது. சூரியனை மெல்ல மெல்ல மலைகள் மறைத்தன. இருள் படர்ந்து கொண்டது. வீதிகளின் இருமருங்கிலும் பெண்கள். வரிசையாக நின்றார்கள். பட்டுப் புடவைகள் மின்னின. பள்ளிப் பிள்ளைகள் பலநிறங்களில் பளிச்சிட்டனர். மல்லிகையும் கனகாம் பரமும் கூந்தலில் மகிழ்ந்தன. பூக்களால் கூந்தல் அழகானதா? கூந்தலால் பூக்கள் அழகானதா? இலக்கிய வினாக்கள் விரைந் தெழுந்தன. அவர்களது கைகளில் மாவிளக்குகள். நான்கு வீதி களிலும் மக்கள். வரிசை நீண்டிருந்தது. மெல்ல மெல்ல வரிசை அசையத் தொடங்கியது. ''அலங்கரித்த தேர்கள் காட்சிக்கு நிற்கின்றன.'' சந்திரன் புன்னகையோடு சொன்னார். மாணவியரின் முகங்கள் ஜொலித்தன.

அனுசியன் ரதீபனை அழைத்தான். ''ரதீஸ் அங்கே பார். எத்தனை அழகு.'' ரசனையோடு சொன்னான். ''நமது ஊரில் இப்படி இல்லை. ஒவ்வொரு ஊரிலும் ஒவ்வொரு மாதிரி என்ன''? நிரூசன் விளக்கினான். ஆனந்தபாஸ்கரன் அவர்களது உரையாடலைக் கேட்டார். ஒப்பிட்டுப் பார்க்கும் திறன் சிறுவர்களுக்குத் தேவை. அப்போதுதான் கற்பனை வளரும். சரியெது? பிழையெது? என்பது விளங்கும். தாங்களாகவே முடிவெடுக்கும் ஆற்றல் விருத்தியாகும். அவரது மனம் கூறிக்கொண்டது.

இருளை விரட்டும் அகல் விளக்குகளின் பிரகாசம். அவை அசைந்து ஊர்ந்த வண்ணம் இருந்தன. பக்தியும் பரவசமும் சங்கமித்த அற்புதம். கலாவுக்கும் அனுஜாவுக்கும் ஆச்சரியமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தது. இப்படியான காட்சியை அவர்கள் பார்த்ததில்லை. ருக்மணி ரீச்சர் நிசப்தத்தைக் கலைத்தார். "நிமேசிக்கா.. இப்படி திருக்கோணேஸ்வரத்தில் இருக்குமோ"? அவர் திருக்கோண மலை வந்திருக்கிறார். ஆனால் திருவிழாப் பார்த்ததில்லை. "இப்படி மாவிளக்குக் காட்சி இல்லை. இது அற்புதமாக இருக்கிறது." கோணேசர் ஊர்வலத்தை நினைவு கூர்ந்தனர். "திருகோண மலையில் நகரவீதிகள் சோடிக்கப்பட்டிருக்கும். விடியவிடிய நகரம் விழித்திருக்கும். பக்தி கலந்து பரவசமூட்டும். கோணேசர் ஊர்வலம் நடக்கும். அது ஒருவிதம் அழகானது. இங்கு மாவிளக்குக் காட்சி அற்புதமானது." மெதுவாகப் பேசிக் கொண்டனர்.

பனிகலந்த குளிர்காற்று சில்லிட்டது. முகத்தில் பாய்ந்து அறைந்தது. மேனியைச் சிலிர்க்க வைத்தது. அந்தக் குளிர் அவர்களை அசைக்க வில்லை. ஆண்கள் வேட்டி உடுத்திருந்தனர். மேற்சட்டை அணியவில்லை. சால்வையை இடுப்பில் கட்டியிருந் தனர். நாலு பக்கமிருந்தும் மாவிளக்குச் சென்றது. பெண்கள் உயர்ந்த படிகளில் ஏறினார்கள். அப்போது மாவிளக்கின் ஒளி உயர்ந்து செல்லும். கீழே நட்சத்திர வாலாகப் பதிந்து செல்லும். மின்மினிகள் மலையில் ஏறுகின்றனவா?. இருளில் மாவிளக்குகள் மின்னின. உயர்ந்தும் பதிந்தும் அசைந்தன. அந்த அசைவு அழகாக இருந்தது. மாவிளக்குகள் ஒரு இடத்தில் சங்கமித்தன. மாரியம்மன் ஆலயம் அழகாக ஒளிவீசியது. அவ்வொளி நாலாபக்கமும் விசிறி யது. "முத்துமாரியம்மன் திருவிழா அற்புதம்." அனுஜா வியந்தார்.

கோயிலினுள் நுழைந்தார்கள். அழகான பெரிய மண்டபம் காட்சியாகியது. பெரிய முதலாளி கம்பீரமாக நின்றார். அவரைப் புடைசூழ்து ஊர்மக்கள். அவருக்கு இவ்வூர் மக்கள் மரியாதை செலுத்தினர். பூசகர் மந்திரம் ஜெபித்தார். பெரிய மாலையை அணிவித்தார். தலைப்பாகையைக் கையில் எடுத்தார். முதலாளி யின் தலையில் சூடினார். மேளதாள வாத்தியம் முழங்கியது. பூசகர் காளாஞ்சியைக் கையில் கொடுத்தார். அதனை வணங்கிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றார். மக்கள் அனைவரும் முகம் மலர்ந்தனர். அது ஊர் மக்கள் அளித்த மரியாதை. அதனை ஏற்றுக்கொண்டார். அந்தக் கௌரவம் முடிந்தது. மக்கள் ஆரவாரித்தார்கள். தமிழகத்தில் பெருவாரியாக இப்பழக்கம் உண்டு.

இந்நிகழ்ச்சியினை படங்களில் பார்த்துள்ளனர். அதனை இங்கே நேரடியாகக் கண்டனர். இது ஆண்டான் அடிமைப் பேதம் இல்லை. பணத்திமிரும் இல்லை. இது பெருந்தன்மை. மக்களது மனப் பக்குவத்தை உணர்த்துவது. இது பெரியவர்களை மதிக்கும் பண்பின் அடையாளம்.

நிமேசிக்காவின் உள்ளத்தில் பெரும் பரபரப்பு. "மனிதர்கள் இப்படியே இருப்பார்களா? இருந்தால் அது அற்புதம்தான். இது தொடரவேண்டும். சொர்க்கம் என்பது இதுதான். மனிதகுலம் வாழ்வாங்கு வாழவேண்டும். அதற்குச் சிறுவர் உலகம் முயற்சிக்க வேண்டும். பெரியவர்கள் வழிகாட்ட வேண்டும்." அவளது உள்ளம் பூரித்தது. மலையக மக்களது மனப்பக்குவத்தை வியந்தாள். மனதினிலே இனிமையான கனவு. தன்னை மறந்தாள். பெரிய முதலாளியின் பக்கம் சென்றாள். மலர்கள் அவள் கைகளில் நிறைந் திருந்தன. அவற்றை அவரது கைகளில் திணித்தாள். கைகளைக் கூப்பினாள். குனிந்து வணங்கினாள். மெதுவாக அகன்றாள். தொடர்ந்து மற்றவர்களும் வணங்கினார்கள். பார்வையாளர்களுக்கு அதிர்ச்சி. இது என்றுமில்லாத புதிய நிகழ்வு. பெரிய முதலாளி நெக்குருகினார்.

This book is donated
The National Library and Documen

இது அரசியல் இல்லை. குருசங்கம வழிபாடு. சான்றோர் உள்ளத்தில் இறைவன் உறைகின்றான். அவனைப் பொறுத்தவரை அவர் சான்றோர்தான். மனிதர்களிடையே ஆயிரம் முரண்பாடுகள் இருக்கலாம். ஆனால் ஒற்றுமை இருக்க வேண்டும். பிறரை மதிக்கும் பண்பிருக்க வேண்டும். மனதில் மனிதம் வேண்டும். சான்றோர் என்பவர் யார்?. உள்ளத்தால் உயர்ந்தவர்தானே சான்றோர். சிறுவயதில் சான்றோர்களைப் பற்றியறிதல் நலம். அவர்களை மதித்து நடத்தல் சாலச் சிறந்தது. எங்கள் ஆசிரியர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிகாட்டியுள்ளார்கள். அவர்களுக்கு நன்றியுடையவர்களாக வாழ வேண்டும். மனித வாழ்க்கையின் லட்சியமும் அதுதான். மனதினிலே பலவற்றை எண்ணினாள்.

திருவிழா களைகட்டியது. கோயிலின் முகப்பில் நின்றனர். கலஹாவைப் பார்த்தனர். எங்கும் ஆரவாரம். ஆனந்தப் பரவசம். வீதியோரங்களில் பல்வேறு கடைகள். வேண்டிய பொருட்கள் விற்பனையாகின. இலக்கிய நூல்களைப் படித்திருந்தார்கள். சிலப்பதிகாரம் மனதில் எட்டிப்பார்த்தது. சிலப்பதிகாரம் ஒரு காப்பியம். கண்ணகி கோவலன் கதையைக் கூறுவது. அதிலே கடலாடு காதை அற்புதமானது. இந்திரவிழாவின் தகவல்களைக் காணலாம். பூம்புகார் கூறும் கடைத்தெருக்கள் நிழலாடின. அந்தக் கடைத் தெருக்களைக் கலஹாவில் காணலாம். ரசனையோடு ரசித்தார்கள். மெதுவாக வீதிக்கு வந்தனர்.

கடைத்தெரு நிரம்பி வழிந்தது. மக்கள் கூட்டம் முண்டியடித்தது. ருக்கு ரீச்சர் கண்சிமிட்டினார். நிமேசிக்கா அவரருகில் வந்தாள். இருவரும் குசுகுசுத்தனர். செய்தி பெண்கள் பக்கம் பரவியது. மெல்லக் கடைத்தெருப் பக்கம் வந்தனர். பெண்கள் கைகளில் வளையல்கள் விளையாடின. மௌலானா ஆசிரியர் பண்பானவர். அவர் லீலாரத்தினத்திடம் குசுகுசுத்தார். அவர் தலையாட்டிச் சிரித்தார். லீலாரத்தினம் ஆசிரியர் அன்பானவர். மாணவர்களை நேசிப்பவர். அவர் சிறுவர்களை அழைத்தார். அவர்களோடு குசுகுசுத்தார். அவர்கள் ஆண்கள் அல்லவா? கடைகளில் புகுந்து விளையாடி வந்தனர். தீன் பண்டங்கள் வயிறுகளை நிரப்பின. மனங்கள் மகிழ்ச்சியில் ஆழ்ந்தன.

"திருவிழா அற்புதம். அடுத்த வருசமும் வரவேண்டும்". கலாமாமி கூறிக் கொண்டார். நேரம் போனதே தெரியவில்லை. "பன்னிரெண்டு மணியாகிறது. களைத்து விட்டோம். போவோமா"? ஆனந்தபாஸ்கரன் சொன்னார். "எனக்கும் நடக்கேலாது. களைப்பாக இருக்கிறது." கலா மாமி அலுத்துக் கொண்டார். "அதுக்கென்ன. சரி புறப்படுவோம்" சந்திரன் ஒத்தூதினார். அதிபர் வந்து சேர்ந்தார். "நாளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலைகள் காத்திருக்கின்றன. எல்லோருக்கும் ஓய்வு வேண்டும். வாருங்கள் செல்வோம்." அழைத்தார். எல்லோரும் புறப்பட்டனர். விடியவிடிய சனங்கள் உலா வந்தனர். கலஹா உறங்கவில்லை. அது விழித்திருந்தது. ஒலிபெருக்கியில் அறிவித்தல்கள் பறந்தன. அதனை இவர்கள் கேட்கவில்லை.

விடுதியை நோக்கி நடந்தார்கள். பெரியதொரு கூட்டம் அசைந்தது. விடுதியை அண்மித்தார்கள். "மீண்டும் நாளை சந்திப்போம்." நண்பர்கள் பிரிய மனமில்லாது விடைபெற்றனர். பிரிந்து சென்று விட்டார்கள். இவர்கள் விடுதிக்கு வந்துவிட்டனர். அறைகள் அவர்களை இழுத்துக் கொண்டன. படுக்கைகள் காத்திருந்தன. அவற்றில் விழுந்தனர். திருவிழாக் காட்சிகள் இனித்தன. மாவிளக்கின் அணிவகுப்பு ஈர்த்தது. கண்கொள்ளாக் காட்சியாகப் பதிந்து கொண்டது. கனவுகளில் உலா வந்தனர். இருளைக் கலந்து குளிர்காற்று வீசியது. அவர்களைத் தாலாட்டி உறங்க வைத்தது. உரையாடியவாறே உறங்கி விட்டனர்.

## 22

மெல்லச் சூரியக் குஞ்சு எட்டிப்பார்த்தது. அதன் சுடர் பரந்தது. பனித்துளிகளில் பட்டுச் சிதறியது. பனிப் படலம் விலகிச் சென்றது. பூக்கள் மலர்ந்தன. வண்டுகள் சுற்றிச் சுற்றிப் பறந்தன. மலைச் சிகரங்கள் ஒளிகொண்டன. மேகக்கூட்டம் அசையத் தொடங்கின. நீலவானம் பிரகாசமாகியது. விண்மீன்கள் மறைந்து கொண்டன. கலஹா நகர் உறங்கவில்லை. அது எதற்காகவோ விழித்திருந்தது. விடுதிக் கதவுகள் தட்டப்பட்டன. " பொழுது புலர்ந்தது. மெல்லென எழுவீர். சுடச்சுடத் தேநீர் ஓடிவாருங்கள்." செந்தில் ரீச்சரின் குரல் கணீரென்றது. குளிர் தழுவியது. கட்டிலில் சுருண்டு கிடந்தார்கள். குரல் கேட்டுத் கண்விழித்தார்கள். போர்வையைத் தள்ளிவிட்டு எழுந்தார்கள். முண்டியடித்து ஓடிவந்தார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேநீர் குளிரை விரட்டியது. உடலில் சுறுசுறுப்புக் குடியேறியது. புத்தொளி ஏற்பட்டது. உற்சாகத்தோடு துள்ளினார்கள். உற்சாகம் நொடிப் பொழுதில் கலைந்தது. வீடு போகும் நினைவு வந்தது. "அண்ணா! இன்னும் இரண்டு நாட்கள்தான் உள்ளன. என்ன செய்வது."? நிமேசிக்கா அங்கலாய்ந்தாள். "அதுதானே. நாட்கள் காற்றாய்ப் பறந்து விட்டன." நிரூசன் அலுப்போடு சொன்னான். ரதீபன் வழிதேடினான். "அப்பாவிடம் கேட்போமா"?

"எப்படி?" அனுசியன் வினாவினான்.

"வீட்டுக்குப் போவதைத் தள்ளிப் போடுவோம். இன்னும் இரு நாட்கள் நீடிக்கக் கேட்போம்." ரதீபன் விளக்கினான். நிமேசிக்கா குறுக்கிட்டாள்.

"அப்பா சம்மதிப்பார். ஆனால் சந்திரன் மாமா சம்மதிப்பாரா? சித்தப்பா வேலைக்குப் போகவேண்டும். அப்பாவும் போகவேண்டும். பாடசாலைக்கு நாங்களும் போகவேண்டுமே? இரண்டு நாட்கள் தான் இருக்கின்றன. நமது திட்டம் என்னவாயிற்று?. அதனை நிறைவேற்ற வேண்டும். அதைப்பற்றி யோசிப்போம்." உரையாடி னார்கள். கலந்தாலோசனை நடைபெற்றது.

"என்ன மகாநாடு நடக்கிறது"? ருக்கு ரீச்சர் வந்து சேர்ந்து கொண்டார். "ரீச்சர் எங்களது திட்டம் நிறைவேறுமா"? ஒரே குரலில் கூறினார்கள். "கட்டாயம் நிறைவேறும். கவலைப்படவேண்டாம்." ருக்கு ரீச்சர் உற்சாகப்படுத்தினார். "கவலையில்லை ரீச்சர். இன்னும் இரண்டு நாட்கள் உள்ளன. பிறகு நாங்கள் போய் விடுவோம். அதுதான் யோசனை" வாடிய முகத்தோடு நிரூசன் கூறினான். "இதற்காகவா யோசனை. விரைவில் குளித்துவிட்டு வருவோம். பிறகு சாப்பாடு. அதன்பின் அதிபரோடு யோசிப்போம்." ஒரு சிரிப்போடு சொல்லிச் சென்றார்.

குளிப்பு என்றால் சந்தோசம்தான். அந்தப் பீலியை மறக்க முடியுமா? ஓடிவரும் தண்ணீரின் அழகே தனியழகுதான். தண்ணீர் விழும்போது ஒலியெழும்பும். அதிலேயும் ஒரு தாளம் இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பீலியை நோக்கி ஓடினார்கள். தோழர்களும் தோழியர்களும் சேர்ந்து கொண்டனர். ஆசிரியர்கள் பின் தொடர்ந்தார்கள். ஆண்கள் தமக்குரிய பக்கம் சென்றார்கள். பெண்கள் தங்களுக்கு ஒதுக்கிய பக்கம் சென்றார்கள். தண்ணீரைத் தொட்டார்கள். அது சில்லிட்டது. குளிர்ந்த நீர் நடுக்கியது. தண்ணீரை அள்ளி விசிறினார்கள். கும்மாளம் கொடிகட்டியது. தண்ணீர் படுமட்டும்தான் குளிர். நனைந்ததும் குளிர் விட்டோடியது. சுகமாக இருந்தது. சோப் (சவர்க்காரம்) போடும்போது இதமாக இருந்தது.

"இந்த நீர் எங்கிருந்து வருகிறது.? வற்றாத ஜீவநதியாகப் பாய்கிறதே. திருகோணமலையில் இந்த வசதியில்லையே.?" அங்கலாய்ந்தார்கள். "திருகோணமலையில் மகாவலி சங்கமிக் கிறது. கன்னியாய் வெந்நீரூற்று அங்கிருக்கிறது. அது இங்கில்லை. ஒன்றிருந்தால் ஒன்றிருக்காது. இது இயற்கையின் நியதி." செந்தில் ரீச்சர் விளக்கினார். நன்றாக நீராடினார்கள். "அதிபர் தேடுகிறார். உடனே வருமாறு அழைத்தார்." கூறிக் கொண்டு மணி ஓடோடி வந்தான்.

"மணி என்ன விசயம். அதிபர் ஏன் தேடுகிறார்.? ருக்கு ரீச்சர் வினவினார். "தெரியாது ரீச்சர். வரச்சொன்னார்." கூறிவிட்டு மறு பக்கம் ஓடினான். லீலாரத்தினம் மௌலானாவோடு நின்றிருந்தார். சிறுவர்கள் நீராடினார்கள். மணி அவர்களிடம் சென்றான். செய்தி யைக் கூறினான். கூறியதும் மணி பறந்து விட்டான். லீலாரத்தினம் கட்டளை இட்டார். சிறுவர்கள் வெளியில் வந்தார்கள். உடைகளை மாற்றிக் கொண்டனர். கொண்டுவந்த பொருட்களை எடுத்தார்கள். ஒருவர் பின் ஒருவராக சேர்ந்தார்கள். முன்னால் சிறுவர்கள் நடந்தனர். பின்னால் சிறுமிகள் தொடர்ந்தனர். வரிசையாக விடுதியை நோக்கி நடந்தார்கள். நீண்டகொடி அசைவது போல் தெரிந்தது. சிரிப்பும் குறும்பும் தொடர்ந்தன. வழியெல்லாம் பல நிறங்களில் மலர்கள். அவற்றின் கண்சிமிட்டல்கள். குருவிகளின் பாடல்கள். இளஞ்சூரிய கதிர்களின் இங்கிதம். குளிருக்கு இதம் சேர்த்தது. விடுதியினுள் சென்றார்கள். அலங்காரம் முடிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவு தயாராக இருந்தது. மேசையில் குந்தினார்கள். சுடச்சுட இட்டலி காத்திருந்தது. சுவைத்து உண்டார்கள்.

தங்கள் வீட்டுச் சமையலை நினைந்தார்கள். அங்கும் சுவையான உணவுதான். ஆனால் இயந்திர கதியில் உண்ணவேண்டும். பள்ளிக்கூடம் ஓடவேண்டும். ரியூசன் ஒருபுறம். போட்டி இன்னோரு புறம். வாழ்க்கையே போட்டியாகி விட்டது. கல்வி வாழ்வதற்காகத் தான். ஆனால் இன்றைய கல்வி சுமையாகி விட்டது. கற்றலை அனுபவித்துக் கற்கவேண்டும். முயன்று தேடிக் கற்கவேண்டும். ஆசிரியர்கள் தேடிக்கற்கிறார்கள். அவற்றைக் குறிப்பாகத் தருகிறார்கள். அதனையே ஒப்புவிக்க வேண்டும். பிள்ளைகள் தாம் விரும்பித் தேடிக் கற்கவேண்டும். கற்பனா சக்தியைப் பெருக்க வேண்டும். சிந்திக்க வழிகாட்ட வேண்டும். அதுதான் பயனள்ளது. அல்லது வெறும் ஒலிப்பெட்டி நாடாவாகிவிடும். உணவு முடிந்தது. அதிபரின் அழைப்பு வந்தது. மண்டபத்தை நோக்கிச் சென்றார்கள்.

மண்டபத்தில் ஆசிரியர்களும் பெற்றோர்களும் இருந்தனர். பெற்றார் ஆசிரிய சங்கப் பிரதிநிதிகள் கூடியிருந்தனர். மாணவர் பலரும் குழுமிருந்தனர். மாணவத் தலைவர்களும் வந்திருந்தனர். அதிபர் எழுந்தார். அனைவருக்கும் வணக்கம் கூறினார். "இன்று மாலை மூன்று மணிக்குப் பொதுக்கூட்டம். பாடசாலை மண்டபத் தில் நடைபெறும். அனைவரும் வரவேண்டும். பெற்றார்களுக்கு அறிவித்து விட்டேன். அவர்கள் பிள்ளைகளோடு வருவார்கள். சில முக்கியமான நிகழ்ச்சிகள் நடைபெறும். ஒழுங்குகள் தயார். எல்லோருக்கும் அறிவியுங்கள். நமது பிள்ளைகளின் குறைகள் தீரும்." அறிவித்தார். ஒருவருக்கும் ஒன்றும் புரியவில்லை. ஆனால் சிலருக்குத் தெரியும். அவர்கள் பேசாது இருந்தனர். தனராஜ் அதிபரின் முகத்தைப் பார்த்தார். அதிபரது உள்ளம் நிறைந் திருந்தது. முகத்தில் மகிழ்ச்சி இருந்தது. ரீச்சர் நிமேசிக்காவைப் பார்த்தார். ஒரு புன்னகையை வீசினார். அதில் ஆயிரம் அர்த்தங்கள் துளிர்விட்டன. அதிபர் தனராஜை அழைத்தார். அவருடன் சென்று விட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னால் ஆசிரியர்களும் தொடர்ந்தார்கள். புதிய கட்டிடத்தை நோக்கிச் சென்றார்கள். இந்து இளைஞர் மன்றம் காத்திருந்தது. இந்து இளைஞர்கள் சுறுசுறுப்பானவர்கள். அவர்கள் பம்பரமாகச் சுழன்றனர். புதிய கட்டிடம் விழாக்கோலம் பூண்டது. பெரிய முதலாளி வந்தார். "வாருங்கள்" அவரை அன்புடன் வரவேற் றார்கள். "என்னப்பா.. எல்லாம் ஆயத்தமா? முதலாளி விசாரித்தார். "ஆமாம் ஆயத்தம். எங்கள் வேலைகள் முடிந்துவிட்டன." சுந்த ரேசன் பதிலிறுத்தார். அவர்தான் இந்து இளைஞர் மன்றச் செயலாளர். அதிபர் வந்தார். வணக்கம் சொன்னார். "சரி திருகோண மலைக்கு எப்போது போகிறார்கள்"? ஒரு புன்னகையோடு விசாரித்தார். அனைவரும் ஆச்சரியமாகப் பார்த்தார்கள். "நாளை அல்லது மறுநாள் போவார்கள்" அதிபர் பதிலிறுத்தார்.

கட்டிடத்தைப் பார்த்தார். முதலாளி அதனைச் சுற்றி வந்தார். "பரவாயில்லை. வேலைகள் எல்லாம் முடிந்து விட்டதே. மனித முயற்சி அற்புதமானது. நல்ல முயற்சிகள் வீண்போவதில்லை. மாலை பிள்ளைகள் எல்லாரும் வருவார்கள்தானே? எத்தனை பிள்ளைகள் படிக்கிறார்கள்? முதலாளி தொடர்ந்தார். "எல்லாரும் வருவார்கள். ஆயிரத்து எண்ணூறு பிள்ளைகள் உள்ளனர். எல்லோருக்கும் தேவையில்லை. எங்களுக்கு ஆயிரமாவது தேவைப்படும்." அதிபர் விளக்கினார். "வேறு என்ன தேவை." முதலாளி தொடர்ந்தார். "எழுது பொருட்கள். பாடசாலைப் பொருட்கள். அவற்றை வைக்கும் பைகளும் தேவை. அவற்றைப் பிறகு பார்க்கலாம்." அதிபர் அடுக்கிக் கொண்டு போனார்.

"சரி அவ்வளவுதானே. பார்க்கலாம். பிள்ளைகள் அனைவரை யும் அழையுங்கள். நான் எத்தனை மணிக்கு வரவேண்டும்?." முதலாளி கூறிக் கொண்டு புறப்பட்டார். "மூன்று மணிக்கே வந்து விடுங்கள்" கூறினார்கள். "இரண்டு மணிக்கு லொறிகளில் பொருட்கள் வரும். நமது ஆட்களும் வருவார்கள். அவர்கள் இறக்கு வார்கள். வைக்கும் இடத்தைக் காட்டுங்கள். மிச்ச ஒழுங்குகளைக் கவனியுங்கள். நான் வருகிறேன்." முதலாளி சொல்லிக் கொண்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடந்தார். அதிபரும் ஆசிரியர்களும் பின்தொடர்ந்தனர். பாடசாலைப் படலைவரை வந்தனர். வழியனுப்பி வைத்தனர்.

ரதீபன் பக்கத்தில் உள்ள பலாவைக் கண்டான். பலாக்கனிகள் தொங்கின. சில பழங்கள் மரத்தின் கீழே கிடந்தன. நண்பர்களை அழைத்தான். பழங்களைப் பறித்தனர். விடுதிக்கு எடுத்துச் சென்றனர். மணி கெட்டிக்காரன். பழங்களைக் கீறிச் சுளைகளை வேறாக்கினான். பலா விதைகளையும் வேறாக்கினான். தட்டுக் களில் பலாச்சுளைகள் மின்னின. பலாவின் நறுமணம் மூக்கைத் துளைத்தது. முத்தமிழ் போல் முக்கனிகள் உண்டு. மா, பலா, வாழைதான் அவை. பலா முக்கனிகளுள் ஒன்று. அதன் சுவை இனிமையானது. தோல் முட்கள் நிறைந்தது. வெட்டிப் பிளந்தால் சுளை எட்டிப் பார்க்கும். தங்கநிறத்தில் சிரிக்கும். பலாப்பழம் என்றதும் ஓடிவந்தார்கள். சுவைத்து உண்டார்கள்.

## 22

புதிய கட்டிடம் நிமிர்ந்து நின்றது. இரவு பகலாக வேலைகள் நடந்தன. வெள்ளையடிப்பதில் பழைய மாணவர்கள் நின்றனர். சோடிப்பதில் மாணவியர்கள் செயற்பட்டனர். அனைவரது வாய் களிலும் பலாச்சுளை. தேனாக இனித்தது. வேலை செய்பவர்கள் வாய்களிலும் பலாச்சுளை. நிமேசிக்காவும் தோழிகளும் பரிமாறி னார்கள். குறுகிய நாட்களுள் மாபெரும் செயல். கட்டிடமாக நிமிர்ந் துள்ளது. எத்தனை மக்களது அரிய முயற்சியிது. இரவிரவாக அனைவருக்கும் அறிவித்தாகி விட்டது. வேலையாக இல்லாது விளையாட்டாகச் செய்தனர். இதுதான் திருவிளையாடலோ? முரளி சிந்தித்தார். சந்திரன் பிரமித்தார். "அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு. அற்புதமான பழமொழி. மக்கள் ஒன்றுபட்டால் சாதனை படைக்கலாம்." அனுஜா வாய்விட்டுக் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கூடி வாழ்ந்தால் கோடி நன்மை." கலாவும் தன் பங்கை முன் வைத்தார். "கலா மாமிக்கும் பழமொழி தெரியும். கேட்டீர்களா"? சந்திரன் மாமா சீண்டிவிட்டார். கலா மாமிக்கு மூக்கின்மேல் கோபம். "எனக்கு இதைவிடவும் தெரியும். நீங்கள் பேசாதிருங்கள்." கையைக் காட்டிச் சொன்னார். அனைவரும் விழுந்து சிரித்தார்கள்.

நேரமாகிறது. மூன்று மணிக்குக் கூட்டம். இரண்டரை மணிக்கு மண்டபத்தில் இருக்க வேண்டும். அறிவித்தல் வந்தது. பம்பரமாகச் சுழன்றார்கள். பேசவும் நேரமில்லை. ஒதுங்கி யாரும் இருக்க வில்லை. அனைவரும் செயலில் ஈடுபட்டனர். ஒன்றரை மணி. உணவை அந்த இடத்திலேயே உண்டார்கள். இரண்டு மணிக்கு வேலைகள் முடிந்து விட்டன. விடுதிக்கு ஓடினார்கள். உடலைக் கழுவி உடைகளை மாற்றினார்கள். அலங்காரம் முடிந்தது. புறப்பட்டார்கள்.

பல லொறிகளில் பொருட்கள் வந்தன. சில லொறிகளில் பாதணிகள். சிலவற்றில் எழுதுபொருட்கள். எழுதுபொருட்கள் பாடசாலைப் பொதிகளில் இருந்தன. அதிபர் பிரமித்து விட்டார். அவர் ஆனந்தக் கூத்தாடினார். தனராஜ் பொருட்களை இறக்கு வதற்கு உதவினார். ஒழுங்காக அடுக்க மௌலானா உதவினார். லீலாரத்தினம் மேடையில் அழகாக அடுக்குவதில் பொறுப்பாக இருந்தார். இன்றுதான் மகிழ்ச்சியான நாள். கட்டிடம் கட்டியாகி விட்டது. பிள்ளைகளுக்கு பாதணிகள் கிடைத்து விட்டன. புத்தகப் பைகள் வந்து விட்டன. அவருக்கு ஒரே கொண்டாட்டம். ஆசிரியர்கள் சந்தோசித்தார்கள். ஆனந்தபாஸ்கரன் அதிசயித்தார். அவர்கள் அனைவருக்கும் ஆச்சரியம். தமது பிள்ளைகளின் திட்டம் நிறைவேறியது. அவர்களது துணிச்சலைப் பாராட்டினார்.

மண்டபம் கலகலத்தது. புதிய கட்டிடம் கொடிகளை அசைத்தது. தோரணங்கள் காற்றில் ஆடின. கலஹா வீதிகள் மாறியிருந்தன. எங்கும் அலங்காரம். வண்ணச் சோடினைகள். மக்கள் குழுமி விட்டனர். மாரியம்மன் ஆலயத்தில் பூசை நடைபெற்றது. அங்கிருந்து ஊர்வலம் புறப்பட்டது. பாடசாலை பாண்ட் வாத்தியம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னால் நகர்ந்தது. நாதஸ்வரக் கலைஞர்களின் இன்னிசை பரவியது. பெரிய முதலாளி மாலையோடு காட்சியாகினார். அவரது பக்கத்தில் அதிபர். ஆசிரியர்கள். தொடர்ந்து பிள்ளைகள் நின்றார்கள். மெல்ல ஊர்வலம் நகர்ந்தது. பாடசாலை வளாகத்தை அடைந்தது. பிரமுகர்கள் வாசலில் வரவேற்றனர். கண்கொள்ளாக் காட்சி மலர்ந்தது. எல்லோரது உள்ளங்களும் மகிழ்ந்தன.

புதிய கட்டிடத்தின் திறப்பு விழா. மக்கள் குழுமி நின்றார்கள். ஆசிரியர்கள் பம்பரமாகச் சுழன்றார்கள். மாணவ மணிகள் நீண்ட வரிசையில் நின்றார்கள். முக்கிய பிரமுகர்கள் புடைசூழ்ந்து வந்தனர். செந்தில் ரீச்சரின் கையில் தட்டு. தட்டில் கத்தரிக்கோல். நாடாவை வெட்டித் திறக்க வேண்டும். முதலாளியின் முன்னால் தட்டை நீட்டினார். முதலாளி கத்தரிக்கோலை எடுத்தார். ஆரவாரம் எங்கும் பரவியது. வெட்டித் திறக்க ஆயத்தமானார். ஆனால் அவர் வெட்டவில்லை. இக்கட்டிடத்தைத் திறக்கத் தகுதியானவர் யார்? அவரது மனம் தடுமாறியது. யோசித்தார்.

சடுதியாகத் திரும்பினார். அவரது கண்கள் சுழன்று தேடின. பின்னால் பார்த்தார். தூரத்தே அவர் தேடிய உருவம் தெரிந்தது. அவரது உள்ளம் துள்ளியது. தகுதியான ஆள் கிடைத்த சந்தோசம். கையைக் காட்டினார். அங்கே நிமேசிக்கா நின்றிருந்தாள். அவளை அழைத்தார். நிமேசிக்கா முன்னால் வந்தாள். வணங்கினாள். ''கட்டிடத்தைத் திறக்கும் தகுதி என்னிடமில்லை. நாடாவை வெட்டுங்கள்.'' அவளது கையில் கத்தரிக்கோல் மாறியது.

நிமேசிக்கா ஆடிப்போனாள். “ஐயையோ.. என்னால் முடியாது. நீங்களே திறவுங்கள். பெரியவர்கள்தான் நாடாவை வெட்ட வேண்டும். வெட்டித் திறக்க வேண்டும்.'' மறுத்தாள். முதலாளி வற்புறுத்தினார். அவள் அப்பாவைப் பார்த்தாள். ஆனந்த பாஸ்கர னுக்கு அதிர்ச்சியான சந்தோசம். ஆனந்தபாஸ்கரன் தலையசைத் தார். ''நிமேசிக்கா நாடாவை வெட்டுங்கள். கட்டிடத்தைத் திறவுங்கள்.'' தோழிகள் குரல் எழுப்பினார்கள். தொடர்ந்து மாணவர்கள் அனைவரும் கைதட்டினார்கள். சனங்களின் ஒலியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காற்றில் விரிந்தது. நிமேசிக்கா செய்வதறியாது தவித்தாள். முதலாளி அவளது கையைப் பிடித்தார். இழுத்து நாடாவை வெட்டுவித்தார். கமராக்கள் "கிளிக்" செய்தன ஆனந்தப் பேரொலி வானைத் தொட்டது.

முதலாளி முதற்காலடியை வைத்தார். உள்ளே சென்றார். அவரைத் தொடர்ந்து அனைவரும் சென்றார்கள். மண்டபம் நிறைந்து வழிந்தது. எவ்வளவு சனக்கூட்டம். திருகோணமலையில் இருந்து வந்தவர்களுக்கு முன்வரிசை காத்திருந்தது. அவர்கள் மறுத்தார்கள். மக்கள் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. வற்புறுத்தலின் பேரில் அமர்ந்தார்கள். ஆனந்தபாஸ்கரன் அருகில் வசந்தி. அவர் நாணத்தால் வெயர்த்து விட்டார். முரளியின் பக்கம் அனுஜா. சந்திரன் அருகே கலாவும் அமர்ந்தார். பிள்ளைகள் அருகில் அமர்ந்தார்கள். சந்திரனின் மனம் நிறைந்திருந்தது. முரளி பூரித்துப் போனார். மலையக மக்களின் அன்பில் திளைத்தார்கள்.

அதிபர் தலைமை தாங்கினார். லீலாரத்தினம் அனைவரையும் வரவேற்றார். தனராஜ் வரவேற்புரையை நிகழ்த்தினார். அந்த உரை சபையோரது உள்ளங்களைத் தொட்டது. உணர்வுபூர்வமாக அமைந்தது. சபையோரின் கண்களில் பனித்துளிகள். அதிபர் தலைமை உரை நிகழ்த்தினார். "கலஹா மிகச் சிறந்த இடம். கலை தவழும் ஊர்தான் கலஹா. நல்ல மனங்கள் வாழுமிடம். மலையகம் விழித்தெழ வேண்டும். அதற்குக் கல்விதான் வழிகாட்டி. நமது முதலாளி மிக நல்லவர். அவருடைய தந்தை முத்துசாமிப் பிள்ளை. அவர் பாடசாலைக்கு நிலம் கொடுத்தார். சிறிய கட்டிடம் கொடுத்தார். முதலாளி கந்தசாமி பெரிய மனம் படைத்தவர். மலையகக் கல்வியில் நாட்டங் கொண்டவர். அவரைச் சரியாகப் பயன்படுத்த வேண்டும். அவரது ஒத்துழைப்பினால் இப்பள்ளி நிமிர்ந்துள்ளது. எமது ஆசிரியர்கள் கருமமே கண்ணாகியவர்கள். அவர்களது சேவை போற்றுதலுக்கு உரியது.

நமது மலையகச் சிறார்கள் புத்திசாலிகள். கொடுத்து வைத்தவர்கள். அவர்களது திறமையை புடம்போட வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களது குறைகளைக் களைய வேண்டும். இன்று பொன்னெழுத்துக்களால் பொறிக்கப் படவேண்டிய நாளாகும். இந்தப் பணியில் ஈடுபட்டவர்கள் நமது சிறுவர்கள். அவர்களது உழைப்பின் பரிசுதான் இந்தக் கல்விக்கூடம். இது அவர்களது சொத்து. இன்றையச் சிறுவர்கள் நாளையத் தலைவர்கள். மலையகத்தை மீட்டெடுக்க வந்த முன்னோடிகள். அவர்களை வாழ்த்துவோம். இன்று நான் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறேன்''. மெய்தானரும்பி விதிர்விதித்து உரைத்தார். உவகையால் உணர்ச்சி வசமானார். அவரது கண்களில் ஆனந்தக் கண்ணீர்.

''பெரிய முதலாளி கந்தசாமி அவர்களை அழைக்கிறோம்.'' ஒலிபெருக்கியில் குரல் முழங்கியது. முதலாளி எழுந்தார். குனிந்து கைகூப்பினார். வணக்கம் சொன்னார். கைதட்டல் வானை இடித்தது. நிமேசிக்காவை மேடைக்கு அழைத்தார். ''இந்தச் சிறுமியைப் பாருங்கள். இந்தச் சின்னஞ் சிறியவளுக்கு உள்ள மனம் பெரியது. நமக்குத் தென்படாத விடயம் பல உண்டு. நமது கடமையில் நாம் ஆழ்ந்து விடுகிறோம். கடினமாக உழைக்கிறோம். நம்மைப் பற்றித்தான் சிந்திக்கிறோம். ஆனால் குழந்தைகளின் தேவைகளை மறந்துவிடுகிறோம். நமது பிள்ளைகள் சளைத்தவர்கள் இல்லை. நகர்புறங்களில் கல்லூரிகள் இருக்கலாம். அங்கு கற்கும் பிள்ளைகளும் இதேபாடங்களைத்தான் கற்கிறார்கள். நமது குழந்தைகளுக்குக் கல்வி வசதிகள் இல்லை. பள்ளிக்கூட வசதிகளும் இல்லை. பாதியிலேயே பள்ளியை விட்டவர்கள் ஏராளம். நாம் சிந்திக்கவில்லை. இந்த அதிபரும் ஆசிரியர்களும் சிந்தித்தார்கள். அவர்களது கரைச்சலினால்தான் நானும் வந்தேன். நம்மிடம் உள்ளதை பிறருக்கும் கொடுப்போம். மலையகத்தில் எல்லாப் பிள்ளைகளும் கற்கவேண்டும்.''

கைதட்டலினால் மண்டபம் அதிர்ந்தது. அந்த ஒலி அடங்கும் வரை அமைதியானார். கைதட்டல் அடங்கியது. இங்கு படிக்கும் சிறார்களின் தேவை அதிகம். முக்கியமனது கட்டிடம். அதனைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்ட நீங்கள் உதவியுள்ளீர்கள். பிள்ளைகளுக்குப் பாதணிகள் இல்லை. அதனை உணர்த்தியவள் இச்சிறுமிதான். அவளும் தோழர்களும் வந்தார்கள். பிள்ளைகளுக்குப் பாதணிகள் இல்லை. உண்டியல் குலுக்கப் போகிறோம். உதவுவீர்களா? என்றார்கள். நான் விளையாட்டாகத்தான் எண்ணினேன். ஆனால் அந்த விளையாட்டு வினையாகிவிட்டது. ஆயிரத்து எண்ணூறு பிள்ளைகளுக்கும் பாதணிகள் கிடைத்து விட்டன. புத்தகப் பொதிகள் கிடைத்துள்ளன'' இதற்குக் காரணமானவர்கள் இந்தச் சிறுவர்கள் தான்.'' மண்டபம் மீண்டும் அதிர்ந்தது. ஆரவாரம் அடங்கியதும் தொடர்ந்தார்.

''அவர்கள் சேர்த்த பணம் உங்களுடையது. அது பிள்ளைகளுக்குப் புத்தகப் பைகளாக மாறியுள்ளன. இவர்களுக்கு எவ்வாறு நன்றி தெரிவிப்பது. சிறுவர்கள் நினைத்தால் இந்தத் தேசம் சொர்க்கமாகும். அதற்கேற்றவாறு பிள்ளைகளை வளர்ப்போம். பிள்ளைகள் மேல் அன்பு செலுத்துங்கள். அரவணையுங்கள். ஆதரியுங்கள். பாதுகாப்புக் கொடுங்கள். தட்டிக் கொடுத்து உற்சாகப்படுத்துங்கள். அவர்கள் மனதில் உறுதியை வளருங்கள். நல்ல நூல்களைப் படிக்கும்படி கூறுங்கள். நூல்களை வாங்கிக் கொடுங்கள். எல்லாப் பிள்ளைகளையும் நேசியுங்கள்.'' மண்டபம் அமைதியாகக் கேட்டது. அவர் தொடர்ந்து பேசினார்.

''நிமேசிக்காவையும் அவரது சகோதரர்களையும் வாழ்த்துகிறேன். அவர்களது பெற்றோர்கள் புண்ணியம் செய்தவர்கள். இந்தக் காலகட்டம் முக்கியமானது. இங்கு சேவையாற்றும் ஆசிரியர்கள் நன்றிக்குரியவர்கள். வாழ்க அனைவரும்.'' நிமேசிக்காவை அழைத்தார். கையைப் பற்றினார். கைகுலுக்கினார். சபையோரைப் பார்த்தார். கைகூப்பி வணங்கினார். இருக்கையில் அமர்ந்தார். சபையோர் அமைதியாக இருந்தனர். ஆசிரியர்கள் பரிசுப் பொருட்களைக் கொண்டுவந்தார்கள். முதலாளி அதிபரிடம் குசுகுசுத்தார். "உங்கள் விருப்பம்." கூறி அதிபர் சிரித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிமேசிக்காவும் சகோதரர்களும் மேடைக்கு அழைக்கப் பட்டார்கள். அவர்களை பாதணிகளை வழங்குமாறு கேட்டனர். ஒலிபெருக்கி முழங்கியது. தங்கள் பிள்ளைகளுக்கு இவ்வளவு கௌரவமா? பெற்றோருக்கு மெய்சிலிர்த்தது. முதலில் மறுத்தார்கள். பலரின் வற்புறுத்தலால் மேடையேறினார்கள். மேடையில் நின்றார்கள். பெற்றோர்கள் முண்டியடித்து வந்தனர். அவர்களது கைகள் நிறைந்து மாலைகள். ஒருவர்பின் ஒருவராக மாலைகளை அணிவித்தார்கள். பிள்ளைகளின் முகம் தெரிய வில்லை. மாலைகளால் முகங்கள் மறைந்தன. திக்குமுக்காடி விட்டார்கள். பார்வை யாளர்கள் மகிழ்ச்சியால் ஆரவாரித்தார்கள். மாலைகளைக் கழற்றினார்கள். சமாளித்தார்கள். மனோ பட்டியலை எடுத்தார். ருக்மணியும் லீலாரத்னமும் பாதணிகளைக் கொண்டு வந்தனர். செந்திலும் பூமணியும் புத்தகப் பைகளுடன் நின்றனர். பட்டியலுக்கேற்ப பிள்ளைகள் வரிசையானார்கள். கபிரியேல் ஒழுங்குகளைக் கவனித்தார். மௌலானா யாவற்றையும் மேற்பார்வை செய்தார். பத்மநாதன் பார்த்து ரசித்துக் கொண்டார்.

பெயர்கள் வாசிக்கப்பட்டன. பிள்ளைகள் வரிசையாக வந்தார்கள். ''நிமேசிக்கா தொடங்கி வைப்பார்.'' ஒலிபெருக்கி அலறியது. முதலாவது பொதியை நிமேசிக்கா வழங்கினாள். தொடர்ந்து அனுசியன், ரதீபன் என அனைவரையும் அழைத்தார்கள். பிள்ளைகள் முதலில் பாதணிகளைப் பெற்றனர். நகர்ந்து புத்தகப் பைகளையும் பெற்றார்கள். நிமேசிக்கா பிள்ளைகளது முகங்களில் சந்தோசத்தைக் கண்டாள். மண்டபம் களை கட்டியது. அதிபரும் ஏனைய பிரமுகர்களும் பொருட்களை வழங்கினார்கள். மக்கள் மகிழ்ந்து குலாவினார்கள். மலையகம் விழித்துக் கொண்டது. விழா முடிந்து அனைவரும் வெளியேறினார்கள். பெருந்திரளான மக்கள் வாழ்த்திச் சென்றனர். தோழர்கள் குழுமி நின்றார்கள். விடுமுறை நல்ல வழியில் முடிந்தது. வந்த வேலை பெரும் நன்மையில் முடிந்தது. எதிர்பார்க்காத வெற்றி அவர்களைத் தேடிவந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavahaham.org

# 24

இரவு ஓடி மறைந்தது. விடிந்து வந்தது. மலையகம் நிறைவு கொள்ள வேண்டும். தமிழ் மக்கள் தமது கடமையை உணர வேண்டும். மக்கள் தமது கடமையை எப்போது உணர்வார்கள். அப்போதுதான் வாழ்வு மலர்ச்சி அடையும். தமது தேவைகளைத் தாமே நிறைவு கொள்ளும் நாள் வரவேண்டும். போரும் வன்செயல்களும் இல்லாத நாள் வருமா?. கடமையும் இந்த நாளுமே நம்முடையவை. பயன்களும் எதிர்காலமும் இறைவனைச் சேர்ந்தவை. இறைவனுக்கு நன்றியைச் செலுத்துவோம். மனநிறைவோடு பிள்ளைகள் எழுந்தனர்.

பாடசாலை குதூகலித்தது. நண்பர்கள் பீலியை நோக்கி விரைந்தார்கள். அனுபவங்களைப் பகிர்ந்தார்கள். "நாளை முதல் குளிக்க மாட்டேன் தம்பி. இன்று மட்டும் குளிக்கப் போறேன் பாருங்கடா தம்பி" அனுசியன் அபிநயத்துடன் பாடினான். அவர்கள் உள்ளத்தில் பிரிவு தலைகாட்டியது. எனினும் அதனை வெளிக் காட்டவில்லை. தண்ணீரைப் பிசிறி அடித்தார்கள். சிரித்து மகிழ்ந்தார்கள். நேரம் போனது தெரியவில்லை. "குளித்தது போதும். புறப்படுங்கள்." முரளியின் குரல் ஒலித்தது. "இன்னும் கொஞ்சம் குளிப்போம். இனி எப்பொழுது இங்கு வருவோம். தெரியாது." அனுஜா குளித்துக் கொண்டே சத்தமிட்டார். "அடுத்த வருசம் கட்டாயம் வருவேன்." கலா மாமி பெலத்துச் சத்தமிட்டார். அவரது சத்தம் மலைகளில் எதிரொலித்தது.

குளியல் முடிந்தது. புறப்பட்டார்கள். ஒற்றையடிப் பாதை வழிகாட்டியது. வரிசையாகச் சென்றார்கள். விடுதியில் முதலாளி காவலிருந்தார். அவரை எதிர்பார்க்கவில்லை. எல்லோரும் சூழ்ந்து வணக்கம் கூறினார்கள். "உங்களுக்காகத்தான் காவல் இருக்கி றேன். சரி வாருங்கள். எங்கள் வீட்டுக்குப் போவோம்." எல்லோ ருக்கும் அதிசயமாக இருந்தது. அவர் நேரில் வந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைத்ததில்லை. விஷேசம் என்றால் சொல்லி விடுவார். யாராவது வந்து அழைப்பார்கள். பெரிய முதலாளியே வந்திருந்தார். அது அவர்களுக்கு ஆச்சரியமாக இருந்தது. "என்ன அப்படிப் பார்க் கிறீர்கள். காலை உணவு எங்கள் வீட்டில். தெரியாதா?" முதலாளி ஏற்கனவே அதிபரிடம் கூறியிருந்தார். அவர் மனோவிடம் மட்டும் சொல்லியிருந்தார். அதனால்தான் காலை உணவு தயாரிக்க வில்லை. அதிபர் புன்னகைத்தார். "இதோ வருகிறோம். நீங்கள் முன்னே செல்லுங்கள். நாங்கள் பின்னால் வருகிறோம்." அதிபர் பதிலளித்தார்.

"வந்து விடுங்கள். காத்திருக்கிறேன்." அவர் புறப்பட்டு விட்டார். விரைந்து புறப்பட்டார்கள். முதலாளியின் வீடு அழகானது. தேயிலைத் தோட்டம் விரிந்து கிடந்தது. அரண்மனை போன்ற தோற்றம். சூழவரப் பூந்தோட்டம். தூரத்தில் தோட்டக் குடியிருப்புக் கள். எப்போதும் சில்லென்ற குளிர்காற்று. வெண்பஞ்சு மேகங்களின் படையெடுப்பு. காலைக் கதிரவனின் பவனி. பனிகலந்த காற்றுக்கு வெப்பமேற்றியது. மெதுவாக வாகனம் சென்றது. பாதையை ரசித்து வந்தனர். ஒருபுறம் பள்ளத்தாக்கு. மறுபுறம் மலையடுக்கு. மென் சாய்வான தரையமைப்பு. வாசலில் முதலாளி நின்றிருந்தார். முகமலர்ந்து வரவேற்றார். குடும்பத்தவர்கள் அன்பானவர்கள். மோகனும், ரவியும் நன்றாக உபசரித்தார்கள். இட்டிலியும் சாம்பாரும் காத்திருந்தன.

அந்த வீட்டை அவதானித்தார்கள். பிரித்தானியர்கள் காலத்தில் கட்டிய மாளிகை. அது பிரித்தானிய முதலாளிக்குச் சொந்தமானது. அவர்களின் பின் இவர்களுக்குக் கைமாறியது. குளிர்காலத்தில் குளிர்காயும் அடுப்பு இருந்தது. சலவைக் கற்களாலான தரைய மைப்பு. அழகான விசாலமான அறைகள். யன்னல் கதவுகள் கருங்காலி மரத்தினாலானவை. தளபாடங்கள் தேக்கு மரத்தினால் ஆனவை. பிரித்தானியக் காலநிலை மலையகத்தில் நிலவுகிறது. தேயிலைப் பயிர்ச் செய்கைக்கு ஏற்றது. அதனால் மலையகத்தில் பிரித்தானிய முதலாளிகள் குடியேறினார்கள். பெருஞ்செல்வத்தைத் திரட்டினார்கள். தங்கள் தேசத்தை வாழவைத்தார்கள். அவர்களால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது நாடு அடிமைப்பட்டாலும் நன்மைகள் கிடைத்தன. மலையக மெங்கும் வீதிகள் உருவாகின. பெருந்தோட்டச் செய்கை வளம் பெற்றது. அந்நிய செலாவணி வந்தது.

"என்ன பசிக்கவில்லையா? வாருங்கள் சாப்பிடலாம்." முதலாளி அழைத்தார். சாப்பாட்டு மேசையில் அமர்ந்தார்கள். இட்டிலியும் சாம்பாரும் கமகமத்தது. உண்டார்கள். விருந்தோம்பும் பண்பு களைகட்டியது. இலங்கை இந்தியப் பண்பாடு சங்கமித்திருந்தது. முதலாளி இந்தியப் பரம்பரை. இலங்கையில் அவரது மூதாதையர் குடியேறினார்கள். அவர் இலங்கையில் பிறந்து வளர்ந்தவர். இலங்கையே அவரது தாய்நாடு. ஆனாலும் இந்திய உறவு தொடர் கிறது. அன்பான உபசரிப்பு உவகையூட்டியது. முதலாளி அளவாகவே உண்டார். "உணவில் கவனமாக இருக்க வேண்டும். உணவை அறிந்து உண்ணவேண்டும். உடல் நலமாக இருக்க வேண்டுமா?. உணவில் கவனமாக இரு. இது நமது முன்னோர் வாக்கு. அதனைப் பின்பற்றுகிறேன். நோயைத் தவிர்த்து வருகிறேன்." முதலாளி விளக்கமளித்தார்.

அவரது அறிவைப் பாராட்டினார்கள். நிமேசிக்கா புன்னகைத் தாள். சிறுவர்கள் வயிறு முட்ட உண்டார்கள். "வளரும் பருவம் முக்கியமானது. சிறுவயதில் நன்றாக உண்ணவேண்டும். அப்போதுதான் உடல் உறுதிபெறும்". அறிவுரை வழங்கினார். உணவு முடிந்தது. கூடத்தில் அமர்ந்தார்கள். அனுசியன் வெளியில் வந்தான். அவனைத் தொடர்ந்து சிறுவர்கள் வந்தார்கள். கலஹாவின் அழகை ரசித்தார்கள். இப்படியான இடத்தில்தான் வாழவேண்டும். இயற்கை அழகையெல்லாம் கொட்டி வைத்துள் ளது. அவர்களது கண்கள் சுழன்று ரசித்தன. கமரா கையில் இருந்தது. பல காட்சிகளைக் "கிளிக்" செய்தார்கள். புவியியல் கலந்துரையாடல் தொடர்ந்தது.

முதலாளியும் வெளியில் வந்தார். தொடர்ந்து அனைவரும் வந்தார்கள். படம் எடுத்துக் கொண்டார்கள். "சரி எத்தனை மணிக்குப் பயணம்."? முதலாளி கேட்டார். "பத்துமணிக்குப் புறப்பட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணம்''. ஆனந்தபாஸ்கரன் சொன்னார். ''நாங்களெல்லாம் நண்பர்களாகி விட்டோம். அதற்கு இந்த அதிபர்தான் காரணம். நமது பிள்ளைகள் நல்ல மனங்கொண்டவர்கள். அவர்களது மனதின் உறுதியைப் பாராட்ட வேண்டும். இந்த வயதிலேயே உதவுகின்ற பண்பைக் காணுகிறேன். அவர்களுக்கு எனது பாராட்டுக்கள்.'' சிறுவர்களுடன் கைகுலுக்கினார். அவர்களது கைகளில் சிறு பொதிகளைக் கொடுத்தார். நன்றியோடு பெற்றுக் கொண்டார்கள்.

"எங்கள் வீட்டுக்குக் கட்டாயம் வரவேண்டும்." அவரைச் சூழ்ந்து கொண்டு அழைத்தார்கள். "அடுத்த மாதம் கண்டிப்பாக வருவேன்." அவர் கூறினார். மலைகளையும் பள்ளத்தாக்குகளையும் பார்த்தார்கள். மலைகளைச் சுட்டிக் காட்டினார். விளக்கமளித்தார். வியந்தார்கள். ஆச்சரியப்பட்டார்கள். "தெல்தோட்டை நகரம் அந்த மலைக்கு அப்பால் உள்ளது. அதற்குப் பெயர் பட்டியகாமம். இப்போது தெல்தோட்டை என்றாகியது. மலையின் ஒருபகுதி கீழிறங்கி உள்ளது. பார்த்து விட்டுச் செல்லலாமே?'' ஆர்வத்தை ஊட்டிவிட்டார். அதிபரைப் பார்த்தார்கள். அவர் சந்திரனைப் பார்த்தார். சந்திரன் சம்மதம் தெரிவித்தார். "நாங்கள் வருகிறோம்." புறப்பட்டார்கள்.

முதலாளியின் கார் முன்னால் சென்றது. பின்னால் சந்திரன் வாகனத்தைச் செலுத்தினார். வளைந்து வளைந்து சென்றன. வானமும் மலைகளும் பேசிக்கொள்கின்றனவா?. வானை முட்டும் சிகரங்கள். முகிற்கூட்டம் தூது செல்கின்றன. நிரூசனின் குரல் நயத்தோடு வெளிவந்தது. இலக்கிய நயத்தோடு ரசித்தார்கள். "அங்கே பாருங்கள். மலையிடுக்குகளில் மேகம் அடைகாக்குது." சசாங்கன் நகைச்சுவையை வீசினான். ஒவ்வொருவரும் ஒவ்வொன்றை அள்ளி வீசினார்கள். ஒரு ஐந்து நிமிடங்கள் சென்றன. கார் நின்றது. சந்திரன் வாகனத்தை ஓரமாக நிறுத்தினார். முதலாளி இறங்கி வந்தார்.

எல்லோரும் இறங்கினார்கள். "இதோ பாருங்கள். இதுதான் அந்த இடம்." கையைக் காட்டி விளக்கினார். அந்த மலை நிமிர்ந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தது. அதனை உற்றுப் பாருங்கள். சடுதியான இறக்கம் உள்ளது. அந்த இறக்கம் பரந்திருந்தது. நன்றாகத் தெரிந்தது. கண்ணுக்கெட்டிய தூரம்வரை பரந்துள்ளது. எப்படி இது நடக்கும்.? சுற்றிப் பார்த்தார்கள். படம் எடுத்துக் கொண்டார்கள். முதலாளி யோடு பெரியவர்கள் கதைத்தார்கள். விடை பெற்றார்கள். கைகூப்பி வணக்கம் சொன்னார்கள். "வவுனியாவுக்கும் வாருங்கள்." கலா மாமி விடை கூறினார்.

வாகனங்கள் திரும்பின. கலஹா நோகிச் சென்றன. விடுதிக்கு வந்துவிட்டன. அவர்களுக்காக மாணவர் கூட்டம் காத்திருந்தது. நண்பர்கள் பேசிக்கொண்டனர். பொதிகள் வாகனத்துள் நுழைந்தன. நிமேசிக்காவைத் தோழிகள் கட்டியணைத்தனர். அவர்களது கண்கள் குளமாயின. தோழர்கள் உரையாடினர். அவர்களது கண்களிலும் கண்ணீர். "வீரர்கள் அழுவதில்லை. அடுத்த மாதம் வருவோம்." ஆனந்தபாஸ்கரன் ஆறுதல் கூறினார். உண்மையில் அவருக்கும் கவலைதான். எல்லாப் பிள்ளைகளும் அன்பான வர்கள். அவர் அவர்களுக்காக வருந்தினார்.

## 25

உலகம் யாருக்காகவும் காத்திருப்பதில்லை. அது சுழன்று கொண்டுதான் இருக்கும். சூரியன் உதிக்கும். மறையும். இரவு வரும். பகலும் வரும். பருவ காலங்கள் தோன்றும். நிமேசிக்கா எங்கே?. அவளைக் காணவில்லை. பிரிவுத்துயர் அவளைக் கோழையாக்கியது. வாகனத்தின் இருக்கையில் சுருண்டு கிடந்தாள். ரதீபன் கண்டு கொண்டான். அவன் அவளைத் தேற்றி னான். தோழிகள் வாகனத்தினுள் புகுந்தார்கள். நிமேசிக்காவை வெளியில் அழைத்து வந்தார்கள். சிரிக்க வைத்தார்கள். அன்பைப் பரிமாறினார்கள். "நீங்கள் அனைவரும் வந்தீர்கள். உங்களால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களுக்கு நன்மைகள் கிடைத்தன. நாங்கள் பலவற்றைக் கற்றுக் கொண்டோம். அடிக்கடி வரவேண்டும்." உற்சாகப்படுத்தினார்கள். வாகனம் இரைந்தது.

வாகனத்தைச் சூழ்ந்து பாடசாலையே நின்றது. விடை பெற்றனர். கலஹா பின்னோக்கிச் சென்றது. பிள்ளைகளின் கண்களில் குளம் தெரிந்தது. பெரியவர்களும் வாடித்தான் இருந்தார்கள். வாகனம் கலஹா வளைவில் புகுந்தது. "பாரதி ஏன் பாட்டுப் பாடினான்?" நிசோ குழப்பினான். அவனை எல்லோரும் திரும்பிப் பார்த்தார்கள். ரதீபனுக்கு ஆச்சரியம். "அதிசயம். அதிசயம். இரண்டு தலைகள் அதிகமாக உள்ளன." திடுக்கிட்டுப் பார்த்தார்கள். பெரியவர்கள் அலட்டிக் கொள்ளவில்லை. அது அவர்களுக்குத் தெரிந்த விடயம். பிள்ளைகள் எழுந்துவிட்டார்கள். சுலக்சிகா எழுந்தாள். இருக்கையை இறுகப் பற்றினாள். மெதுவாக நகர்ந்தாள். இரண்டு தலைகளையும் கண்டுவிட்டாள். ருக்கு ரீச்சர் சிரித்து விட்டார். செந்தில் மாரித்தவளைபோல் இருக்கைக்குள் குனிந்தார். கண்டு பிடித்து விட்டார்கள். ரீச்சர் இருவர் தங்களோடு வருவது ஆறுதலளித்தது.

நிமேசிக்கா அட்டகாசமாய்ச் சிரித்தாள். அனுசியன் எழுந்தான். "ரீச்சர்மாரைக் கண்டு பிடித்தவர் யார்?." கேள்வி கேட்டு நின்றான். "அவர் சுலக்சிக்காதான்." கலா மாமி விடையளித்தார். "சரியாகக் கண்டு பிடித்தார். அவருக்கு இதோ எனது பரிசு." கையிலிருந்த ரொபியைக் கொடுத்தான். அவள் சிரிப்புடன் வாங்கினாள். விபூசன் ரொபியைப் பறித்தான். அவன் கையில் ரொபி இருந்தது. ருக்கு ரீச்சர் கையில் ரொபிப் பொதியிருந்தது. இரண்டு ரொபிகளை சுலக்சிக்காவுக்கு நீட்டினார். அதனை அவள் பெற்றுக் கொண்டாள். கைதட்டல் தொடங்கியது. மெதுவாகக் கவலை மறைந்தது. கதையும் பாட்டுமாக மாறியது. உல்லாசப் பயணம் தொடங்கியது. மலையில் ஏறியதைக் கதைத்தார்கள். சறுக்கி விழுந்ததை நினைத்தார்கள். விழுந்து உருண்டு சிரித்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரதீபன் பாட்டொன்றை இயற்றினான். நிரூசன் மெட்டொன்றை இசைத்தான். அது வேடிக்கையாக இருந்தது. சேர்ந்து அனைவரும் பாடினார்கள்.

தானதன்னா தானதன்னா தன்னானே தானா
தானதன்னா தானதன்னா தன்னானே தானா
மலைநாடு பார்க்க வந்தோம்
தன்னானே தானே
மலையருவி குளித்து வந்தோம்.
தன்னானே தானே.
கலையாடும் கலஹாவை காணவந்தோமே
தன்னானே தானே.
கண்கொள்ளாக் காட்சி அப்பா
தன்னானே தானே.

பாடிப் பாடித் தாளம் போட்டனர். சந்திரன் கவனம் வாகனத்தில் இருந்தது. கலா மாமி கையசைத்து அபிநயித்தார். அனுஜா சேர்ந்து பாடி வந்தார். வாகனம் தம்புள்ளை வந்து விட்டது. "மாமா! விரைவாக வந்து விட்டோமே. எப்படி?" "நீங்கள்தான் சொல்ல வேணும்." கூறியபடியே வாகனத்தைச் செலுத்தினார். நான் சொல்லவா?. கலா மாமி கேட்டார். "சொல்லுங்கள்" முரளி கூறினார். "உங்கள் சந்திரன் மாமா கெட்டிக்காரர். விரைவாக வாகனத்தைச் செலுத்தி வந்தார். அதனால்தான் கெதியாக வந்து விட்டோம்." கலா விடையளித்தார். "கணவனே கண்கண்ட தெய்வம். கலா மாமிக்கு ஒரு சபாஷ்" ரதீபன் சொல்லிச் சிரித்தான். எல்லோரும் விழுந்து விழுந்து சிரித்தார்கள். கலா மாமியும் சேர்ந்து சிரித்தார்.

வாகனத்தில் சிற்றுண்டிப் பொதிகள் இருந்தன. அது முதலாளியின் ஏற்பாடு. அவரது பெருந்தன்மையை நினைந்து வியந்தார்கள். ஹபரணையில் முரளியின் நண்பர் இருந்தார். அவர் முரளியை அழைத்திருந்தார். முரளி சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டார். டாக்டர் பிரசாந்தவுடன் தொலைபேசியில் பேசினார். முரளியோடு பல்கலைக்கழகத்தில் படித்தவர். கொழும்பில் ஒன்றாக வேலை செய்தவர். ஒரே விடுதியில் குடும்பத்தோடு இருந்தவர். அதனை சந்திரனிடம் குசுகுசுத்தார். வாகனம் சந்தியில் திரும்பியது.

''ஹபரணை பொல்லாத இடமல்லவா? இனவன்செயல் சந்தியில் நடந்தது. பேசாமல் போவோம்.'' கலா சத்தமிட்டார். முரளி சிரித்தார். வாகனம் ஆஸ்பத்திரி வளாகத்தில் நுழைந்தது. ஆஸ்பத்திரி விடுதியில் டாக்டர் காத்திருந்தார். வெளியே வந்தார். பக்கத்தில் அவரது மனைவி சுஜாத்தா. இருவரும் வரவேற்றார்கள். முரளி அனைவரையும் அறிமுகம் செய்தார். அனுஜாவை சுஜாத்தா கண்டார். கண்டதும் மகிழ்ந்தார். இருவரும் தோழிகள். அனை வரும் உள்ளே சென்றனர். வரவேற்பு தடபுடலாக இருந்தது. நல்ல உள்ளம் கொண்ட தம்பதிகள். தமிழ் தெரிந்தவர்கள். குசலம் விசாரித்தார்கள்.

முரளி கலஹாவில் நடந்தனவற்றை விளக்கினார். சுஜாத்தா பிரமித்து விட்டார். நிமேசிக்காவையும் சுலக்சிக்காவையும் கட்டி முத்தமிட்டார். தனது இரு பிள்ளைகளையும் அழைத்தார். "அஜித்! மீரா! மே எண்ட". சுஜாத்தா சிங்களத்தில் குரல் கொடுத்தார். "இதோ வந்துவிட்டோம்." தமிழில் பதில்வந்தது. எல்லோருக்கும் ஆச்சரியம். அண்ணனும் தங்கையும் ஓடி வந்தார்கள். சுஜாத்தா அவர்களை அறிமுகம் செய்தார். பிள்ளைகள் தமிழில் உரையாடினார்கள். ஆங்கிலத்திலும் கதைத்தார்கள். தமக்குத் தெரிந்த சிங்களத்திலும் உரையாடினார்கள். கொஞ்ச நேரத்தில் நண்பர்கள் ஆகி விட்டார்கள். ஆஸ்பத்திரி விடுதி பிள்ளைகளின் விளையாட்டு மைதானமாகியது.

பிரசாந்த தம்பதியர் மூன்று மொழிகளும் தெரிந்தவர்கள். "இலங்கையருக்கு மூன்று மொழிகளும் தெரிந்திருக்க வேண்டும். அப்போதுதான் சமாதானம் தலைநிமிரும். ஒருவரை ஒருவர் புரிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழலாம். ஒருதாய் மக்களாய் வாழலாம். தன்பிள்ளைகளுக்கு மூன்று மொழிகளும் தெரியவேண்டும். அவர்கள் இனமத பேதம் அற்றவர்களாக வாழவேண்டும்.'' இது பிரசாந்த தம்பதியரின் நம்பிக்கை. வீட்டில் பிள்ளைகள் தமிழ் படிக்கிறார்கள். கலாவுக்கு ஆச்சரியம். இப்படியும் சிங்கள மக்கள் இருப்பார்களா?. கலா இன வன்செயலினால் பாதிக்கப்பட்டவர். அதனால் சிங்களவர்கள் என்றால் ஒரு பயம். நன்மதிப்பில்லை. கலாவோடு சுஜாதா அன்பானார். கலாவின் இதயத்தில் இடம்பிடித்துவிட்டார். கலாவுக்குச் சிங்களம் தெரியவில்லை. இது கலாவுக்குக் கவலையளித்தது.

சிற்றுண்டிப் பொதிகள் வந்தன. பிள்ளைகளும் வந்து கூடினார்கள். வசந்தி சிற்றுண்டிப் பொதிகளைப் பிரித்தார். செந்தில் ரீச்சரும் ருக்மணியும் பகிர்ந்தார்கள். சுஜாத்தாவுக்கு மகிழ்ச்சி. டாக்டர் குடும்பத்தார் விரும்பியுண்டார்கள். சந்தோசம் மீண்டும் வந்தது. சுவைத்துச் சிற்றுண்டியை உண்டார்கள். பலவற்றை அலசினார்கள். ஆராய்ந்தார்கள். 'சாதாரண மக்கள் யாவரும் அன்பானவர்கள். அப்பாவிகள். மக்களை நேசிப்பவர்கள். அவர்களைப் பல கும்பல்கள் குழப்புகின்றன. இதனால் சாதாரண பொது மக்களுக்குத்தான் துன்பம். இது அவர்களுக்கு ஒரு கலையாகி விட்டது. தமது சுகபோக வாழ்வுக்காகச் செய்கிறார்கள்.' நிமேசிக்காவின் மனம் பேசியது. சமையல் பகுதிக்குள் பெண்கள் நுழைந்து விட்டனர். சிறுவர்கள் கலைந்து சென்றார்கள். கிரிகட்டைத் தொடங்கி விட்டார்கள். சிறுமிகள் பேசி மகிழ்ந்தார்கள்.

நேரம் போனதே தெரியவில்லை. உணவு தயாராகி விட்டது. நண்பர்கள் உரையாடலில் ஆழ்ந்து இருந்தார்கள். சிறுவர்கள் விளையாட்டில் ஆர்வமாக இருந்தார்கள். "உணவு தயார். சாப்பிடுவோமா"? சுஜாத்தாவின் அன்பான அழைப்பு. சாப்பிடச் சென்றனர். ஒன்றாக மேசையில் இருந்தார்கள். உண்டு களித்தார்கள். பார்ப்பதற்குச் சந்தோசமாக இருந்தது. அங்கு இனமத மொழிபேதம் இல்லை. நட்பும் மனித நேயமும் இருந்தது. அனுசியன் அஜித்தின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கத்; இ நந்தான். மறுபக்கம் ரதீபன். நிமேசிக்கா பக்கத்தில் மீரா இட ள. சுலக்சிகா மறுபக்கம் இருந்தாள். கலந்து அமர்ந்தி ருந்தார்கள். "எல்லா மனிதர்களும் ஒற்றுமையாக வாழ்வார்களா?" நிரூசன் ஏங்கினான். அவனது பிஞ்சு உள்ளம் அமைதிக்காக ஏங்கியது. விளையாட்டுத் தொடர்ந்தது.

விடைபெறும் நேரம் வந்தது. வாகனம் புறப்பட ஆயத்தமாகியது. அனைவரும் ஏறிக்கொண்டனர். அஜித்தும் மீராவும் கையசைத் தனர். வாசல்வரை வந்து வழியனுப்பினார்கள். மீண்டும் வருவதா கக் கூறினார்கள். திருகோணமலைக்கு வரும்படி அழைத்தார்கள். வாகனம் இரைந்து புறப்பட்டது. ஹபரணையைக் கடந்து வாகனம் சென்றது. பாதை சற்று வளைந்து சென்றது. நேரம் ஐந்து மணியைத் தாண்டி விட்டது. யன்னல்களைத் திறந்தார்கள். "நமது நண்பர்கள் நிற்பார்கள். பார்க்கலாம்." அவர்களது பார்வை காட்டுப் பக்கம் இருந்தது. கண்கள் வலை வீசின. நிமேசிக்கா கண்டு விட்டாள்.

"அதோ நமது நண்பர்கள்." சத்தமிட்டாள். "எங்கே?..எங்கே.." வினாக்கள் வந்தன. அனைவரும் கண்டு கொண்டார்கள். தூரத்தே யானைக் கூட்டம். ஒன்றோடு ஒன்று உரசி விளையாடின. குட்டிகள் ஓடித்திரிந்தன. சந்திரன் வாகனத்தை நிறுத்தினார். "யானை துரத்தாதா?" அபிஷேக் பயத்துடன் கேட்டான். யானைகள் கூட்டமாக நிற்கின்றன. "துரத்தாது. தனியாக நின்றால் பயம்தான்." சந்திரன் விளக்கினார். வானத்தில் முகிற்கூட்டம். தூரத்தே மின்னியது. சாடையான மழைத்தூறல் சிந்தியது. யானைகள் வீதியைக் குறுக்கறுக்க முனைந்தன. பெரிய யானை துதிக்கையை உயர்த்தியது. முன்னே நடந்தது. வீதியில் நின்று பார்த்தது. பின்னர் நடந்து ஓரமாக நின்றது. தொடர்ந்து மற்ற யானைகள் சென்றன. அவை ஆடியாடி நடந்தன. அவர்களுக்கு அழகான காட்சி கிடைத்தது. பார்த்து ரசித்தார்கள். ஒரு நொடிப் பொழுதுதான். பெரியதொரு லொறி வானைக் கடந்து விரைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''தடார்'' என்றொரு சத்தம். பலமாகக் கேட்டது. எட்டிப் பார்த்தார்கள். யானைகள் குறுக்கும் மறுக்கும் ஓடின. அவை பலமாகப் பிளிறின. குட்டியொன்று லொறியில் மோதுண்டது. அது விழுந்து கிடந்தது. ''ஐயோ பாவம்.'' நிமேசிக்கா அனுதாபப்பட்டாள். அனைவரது மனங்களும் வருந்தின. பல யானைகள் குட்டியைச் சூழ்ந்து கொண்டன. பலமாக அடிபடவில்லை. அது எழும்ப முயற்சித்தது. தாய் யானை குட்டிக்கு உதவியது.

சந்திரன் வாகனத்தைப் பின்னால் செலுத்தினார். பல யானைகள் வீதியில் நின்றன. அட்டகாசம் புரிந்தன. வீதி நேராக இருந்தது. முன்னால் நடப்பது நன்றாகத் தெரிந்தது. வாகனங்கள் அப்படியே நின்றன. சற்றுத் தூரத்தில் இராணுவ முகாம் இருந்தது. செய்தி பறந்தது. பொலிஸ் அதிகாரிகள் வந்தார்கள். இராணுவத்தினரும் உதவிக்கு வந்தார்கள்.

வாகனங்களை யானைகள் தடுத்தன. வாகனங்களின் பின்னால் துரத்தின. குட்டி எழுந்து நடக்கும் வரை யானைகள் காவல் செய்தன. குட்டி மெதுவாக எழுந்தது. மெல்ல மெல்ல அடிவைத்தது. நடந்து சென்றது. பின்னால் யானைகள் சென்று மறைந்தன. பொலிஸார் வீதியைப் பார்வையிட்டனர். போவதற்கு அனுமதி கிடைத்தது. வாகனம் மெல்ல நகர்ந்தது. யானைக் குட்டி விழுந்த இடத்தைப் பார்த்தனர். அடையாளம் தெரியவில்லை. ''பாவம் யானைக் குட்டி'' சுலக்சிக்கா மெல்லச் சொன்னாள். எல்லோரும் அனுதாபப்பட்டார்கள். பயம் மனதைப் பற்றிக் கொண்டது. வாகனம் விரைந்து புறப்பட்டது. சற்று அமைதி நிலவியது.

''இந்த விடுமுறையில் நல்ல அனுபவங்கள். இல்லையா அண்ணா?'' நிமேசிக்கா அமைதியைக் குலைத்தாள். சத்தம் கேட்டு சுயநினைவு பெற்றார்கள். ''ஏய் சந்தோசமாக இருங்கள். மனதை உறுதியாக வையுங்கள். பாடுவோமா''? ''என்ன பாட்டு?'' ஒரே குரலில் வினாக்கள் வந்தன. ''நமது பாரதியின் பாட்டுத்தான்.''

''சரி பாடுவோம்.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மனதில் உறுதி வேண்டும்.
வாக்கினிலே இனிமை வேண்டும்.
நினைவு நல்லது வேண்டும்.
நெருங்கிய பொருள் கைப்படவேண்டும்."


சேர்ந்து அனைவரும் பாடினார்கள். பாடிப் பாடி மகிழ்ந்தார்கள். வாகனம் வீடு நோக்கிப் போய்க் கொண்டிருந்தது.

நிறைவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



Trincomalee Public Library
020796

ISBN 955-97106-6-4
9 789559 710660

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org